உ

சிவமயம்.

பூகிமுனி சாஸ்திரம்.

வைத்தியநூல்

கரிசில் - பூரணம் - மதிவெண்பா -
வாதவைத்திய விளக்கம் - வாதாங்க தீக்ஷை
விதி - உலா. ஆக ஆறு புத்தகங்கள்
அடங்கியிருக்கின்றன.

இவை

மயிலை-அழகப்ப முதலியாரால்
சிவஞானபோத யந்த்ரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டன.

மூன்றும் பாகம்.

ஐயாமுதலியார் வீதி ந௫-வது, இலக்க வீடு
சென்னை - சிந்தாதிரிப்பேட்டை
கலி-௫0கள - இ இராக்ஷச - ஹூ ஆடி-மீ
முதற்பதிப்பு.

(Registered Copy-right)

உ

சிவமயம்.

யூகிமுனி கரிசில்—௱௫௰.

உமையவள்பதமல ரடியிணைசிரமேற்
றமியனுமநுதின நினைவினில்நினைவாம். ௧
காமனையெரிசெய்த வாமனை நினைவில்
சோமன்பதமல ரிணைநீதுதியே. ௨
மூவைந்துகைவகை முனியருளியசொல்
பாவைச்சுருதியிற் பதியருளியதே. ௩
வாதமுமனுதினம் வகையதுபாராய்
நீதிசேர்ஞானமு மிலைபடுமுன்னே. ௪

நூற்பாயிரம்—அகவல்.

உடலுறுகருவியி லுதித்தவியாதிகள்
இடமதாயகல விளங்கொளியவிழ்தம்
யாவையும்விளக்க வவிழ்தபாகமும்
கோவையாய்மொழிகள் குணமுளமுனிவர்
பகர்ந்ததுஜைமினி பகரவேசுருக்கி
முழுவதி
முனிவ ரருளியமூவறு மொழியே
குணகடல்குமரி குடகம்வேங்கட
மெனு நான்கெல்லையி னிருந்தமிழ் யாவரு
முணர்ந்தோர்

தொகைவகைவிரியிலருள்கெனத் துன்னா
ரிகலறமுன்னூற்
பெருகவேசுருக்கிப் பிலமுளநூலாய்
தன்மதவாரணந்
திசைதொறுநிறுவிய திறலுறுதொல்சீர்
கருங்கடல்வெண்குடைக் கார்நிகர்பொதிகைத்
திருந்தியசெங்கோற்சீயக
னருங்கலைவினோதமார்பன்
மொழிந்தனனாக முன்னோர்நூலின்
வழியேவைத்தியத் திந்நூற்சூத்திரம்
பெயரெனவகுத்தனன்
பொன்மணிபொதிகை மஹாமுனியருளிய
கரிசிலின்முன்னூற்
சுருக்கியேகுருமுனி சொன்னதுசூத்திரம்
ஜெகதலமானுடர் செய்யும்வைத்தியம்
தொகைவகையாகத் துரிதமதுரைத்த
மகாவிதசூத்திர மறப்பையுந்துரந்து
ஜெகமூதுரைபோற் றெளிந்திடனன்றே.

சற்சீடரியல்பு.

பாலுடன்கலந்த நீரதைப்பிரித்துக்
குடித்ததுபோல வன்னமாணாக்கர்
ஆவுதண்ணீ ருண்டதுபோல
எவல்மாணாக்க ரிருக்கவுநன்றே.

அசற்சீடரியல்பு.

இளிபோற்பேசும் சீடராகா
தூறினிலுடைந்த குடநீர்போல
சிறியசிஷன் சிந்தையுமாகா
எருமைகுழப்பி நீரதுகுடிக்கு
மமையாச்சீட னவனுமேயாகா
சிரித்தல்சோம்பல் மானமாய்ச்சொல்லல்
காமிகள்வன் பிணியனேழை
பிணக்கன்சினத்தன் றுயில்வோன்மந்தன்
தறுகணன்சாத்திரந் தடுமாறுளத்தன்
கேட்டான்பாவி புறட்டனின்னோர்க்கு
காட்டார்சாத்திரங் கொடுக்கார்நூலே.

இந்நூலிற் கூறியபொருள்.

களங்கம்பஸ்பம் செந்தூரலேகிய
மூளங்கொளுமெழுகு முறுதியாந்தைலம்
சுன்னம்கிருதம் பதங்கம்திராவக
நன்னயமாக நவின்றனர்முனியே.

மாரசம்ஜயரச மயமானசாரசம்
யோரசம்சண்ட ரசமதுசொல்லல்
பாதரசமும் பகர்வீரரசமும்
சாதனையரசம் சரக்கிலேசேர்க்கலே.

மந்திரம்.

ஸ்ரீசமிலக்குமி பீசநமாவென
வியாதிநாசாஞ்சனி பிணிகள்நாசனீ

யோகினிவேதாஞ்சனி யுருத்திரநாசனி
சத்துருநாசனி சங்கிலியுமென்
வித்தையிலாஞ்சனி விடுத்திடப்போகும்
சிந்தையில்நினைத்த தெல்லாந்தந்தருள்
விந்தையாம் லோகமாதாவென்ன
முந்தவுரைத்திட மருந்துகள்சித்தி
அஷ்டதந்திர அஷ்டவித்தைகளும்
சிஷ்டர்புரிந்தால் ஜெயசித்தியாகுமே. ௫

ரசங்கட்டும்வகை.

அரன்பிசங்கட்ட வறைகுவேன்கேளு
திரமானவிரதம் ஜெகஜாலவித்தை
யாகுமேகட்டி லருளாயவானந்தம்
சோகுமேமணியே துப்பறவாகச்
செய்தாற்பலனும் ஜெயமாகவித்தை
யையவேகேளு பலிப்பதாமந்திரம்
மருந்துகள்சித்தி மஹாவிதமாகும்
அருந்தவேஜெபித்தா லடைவாய்ச்சித்தி
ஆமேசொல்வே னடைவுடன்கேளு
மதிபலமுருக்கி வகையாய்க்குகையில்
அதியவேயிலுப்பைநெய் யடைவாகவிட்டு
யெரிகையில்ரத மின்பமாமதியின்
த்ரிசினமாக சிக்கவேயிட்டுப்
பத்தியெரியப் பதமாகஇட்டு
சித்தியாய்ரசமதி சேர்ந்துமேயுருகும்

பெருங்குகையாக பிலக்கவேயிட்டு
வருங்குகைதன்னில் வளமாய்நெய்யை
யிலுப்பைநெய்யை யிதமாய்விட்டு
பருகவேதுரிசை பதமாக்கரியில்
ஊதிடநீறு முறுதியாயெண்ணெயில்
நீதியாய்க்களஞ்சு நேருளகுகையில்
போட்டுமேகடையில் போக்கோடெடுத்து
நீட்டுமேவுண்டையாய் நேராயிடவும்
மிச்சம்பழத்துளே மிதமாய்ச்செலுத்தி
நச்சரவாக நாடியேநூறு
புடமிடஇறுகும் போக்கொடுகேளு
நடமிடபுடமிடு நாட்டியேவிசைவிசை
யொவ்வொருபழத்தி லூதுமேயொருதரம்
கவ்வவேபுடமிடு காட்டநாலெருவில்
கரியிலுருக்கு கன்முளமணியாய்ப்
பரியவேயிருபத் தொருமணிசெய்து
தமரதுஇட்டுத் தாழ்வடங்கோர்த்து
அமரவேஜபங்க ளாதியாய்ச்செய்து
அக்ஷரம்ஜபிக்க ஆதியாய்ச்சித்தி
நிச்சயமாக நீடூழிகால
மிருந்திடச்சித்தி யியல்பாய்க்கேளு
பொருந்துவினைகள் போக்கோடேகும்
எல்லாஞ்சித்தியா மியல்புடனன்று
சொல்லால்முனிவர் சொன்னதுருத்தி

மெல்லையில்வாழு மின்பமாமனிதர்
செய்துமேவைத்தியந் திரமுடன்வாழ்வீர்
பையவேமாமுனி பகர்ந்தகரிசிலின்
முன்னூற்றறுபது நாலுசூத்திரத்தை
சின்னூலாகத் தெளிந்திடப்பாடி
வாதவயித்தியம் வகையுடன்பாரே
நாதனார்சொன்ன நன்மாமுனியே. ௭

வீரரசபதங்கமு மதில்தீரும் வியாதியும்.—வண்ணம்.

வீரரச மேயொருசேரெடு நீதழ
லுப்பொடு செங்கல்லிட்டெரிகிடமதில்
பருவந்தனிலெடு பணவிடைமதுவிடு
திரிவமனுளத் திரிதனில்வெகுநோய்
அழிகுணநயமிது வபயம்நோயறு
மதிவெகுபுண்புரை வயர்வலிகூரும்
படுவரையாப்பு பரிகெடும்வெகுரணம்
அதிசயக்ஷயமிளை யாதியாநோயறும்
பதிவலிமேகம் படுமுறைதிரிநாள்
கடல்புகுநோய்கள் கதிபெறுரசமதில்
ஈறது கட்டில் கருவே
லறுகுமுளகுட னதில்வெகுகியாழமாய்
வைத்திடுகொப்பிளி வீறதுஅடிபடும்
செயசயபுளிபுகை யிலையதுவகல
நயமுளபாத ரசமதுபற்பங்
குருமுனியருளிய மொழியதுபாரே. ௮

அயக்காந்த சிந்தூரம்.

காந்தமும்,அரப்பொடிநேரிடு அலைவறுசிந்தையி
ணினிபுகை நீர் தனிலணாவறு
மூந்தவேகிறமது பவளமதாமினி
சிந்தையிலெடுமினி செய்வனநீறதி
லிடையிடுவாலை நீரதிலரை
திரிநே ரடையிடு
இடுகிடமதிலெடு யிடுமுத்தீயெரி
யிடுவதுவடிதனில் விடுமதையரைபுகைநீ
ரரைகிடமரையடை யெரியிடுதிரிநேர்
அடிதனிலுருகிடு மதையெடுபணவிடை
திரிகடுவாளம் நேர்கரிக்கிடு
வெருகடிதனிலிடு மதுவிடுகுழையுண்
நாலேழிருபொழு துண்டிரு
புளிபுகையிலை தள்ளிடில்பிளவைகள்
ரணமினி துளமிளிர்கூர்மம்
படுவரையாப்புக ளடுபிணிக்குட்டம்
கபமுடனீளைக ளெலிகடியதுவற
வலிவுடனிசுவுகள் வாதம்பொடிபட
நொடிபடுபித்தம் மெடுபடுநோவுகள்
தவிடது பொடிபோ
லடிபடும்பிணிக ளிடிவிழப்பொடிபடும்
முனிசொலவருளிய பெருவழிதனைவி
லதையறியூசிக் காந்தயம்பவளமே. ௫

இரசபஸ்பம்.

ஈராறுரசமிதெட்டு யினிதானபண்ணை
யிதிலானபாதி இடவேரசத்தையடைவாய்
காறுபுகைநீர்தன்னை கடிதாகவூற்றி
கனிவாகவேகக் கல்மானகல்வமதிலே
வாறுரவியில் வளமாகவைக்க
வடிவாகநீறும் வகையானபண்ணை நேரே.
சாறுவரைத்துயில்லை சரியானசட்டி
தனிவிட்டுவப்பு தனிஞலுபடிவிடுகவே. ௧௦
விடவேவறுத்து விதமானதாயில்
விடுபூவுவிட்டு விடமேலைவில்லைவைத்து
திடமாகமூடி திருவானசீலை
இரிநேருசெய்து திடமாயெரிப்பு நூறு
படவேயெரித்து பதமாகவிட்டு
பதியாயெடுக்க மதிபோ
லடைவானநெய்யி லதிலிட்டுவுண்ண
அகமான வியாதிபோமே. ௧௧
போமேகமேகும் புழுவானவெட்டு
புகழானவெட்டை விரணம்
தாமேகுமெல்லாந் தனியானகுட்டந்
தயவான காசமேகம்
காமேகுநோய்கள் கடலிட்டுபுக்குங்
கனிவாக புகையிலைதரு
வாமேயுனக்கு வலுவுள்ளநோய்கள்
வகையாரமுனி பகர்வதே. ௧௨

பேதி அயக்காந்தம்.

அயக்காந்தநேரே யளவாய்நிறுத்து
அதிற்கையாநீரை யடைவாகவிட்டுவரைநேர்
பயுமாகவில்லை பதியாயுலர்த்தி
பரிவானநூறு பதிவாகவெருவில்போடு
நயமாகஇட்டு நலமாயெடுத்து
நகையானசெக்க ரடியானதாணிறமதாம்
தயவாயெடுத்து தசமாகஆறு
தனியேநிறுத்து ததியாய்நறுக்கிபொடியே ௧௩
பொடிசெய்துசூதம் புலனுகநாலு
புதிதானகெந்தி புதிவாகமுன்னிரையிடு
வடிவானநேரே வகையாயரைக்க
வளமாய்கறுக்கும் வகையானஜாமமேகம்
துடியாயரைத்து துகையானவாளம்
துரையாயிரண்டு துடியாய்நிறுத்துஅரைநேர்
படியானசுக்கு பதமாவிரண்டு
பதமானமிளகு பதம்ரண்டுதானரையிடே. ௧௪
இடவேகடுக்கா யிதிற்பத்துஆறு
இதில்நெல்விமுள்ளி இனிதானபத்துஆறு
திடமாகவிட்டு திரமாயரைத்து
திரியானகையான் திரமானநீரிலரைநேர்
படமாகதானே பதிவாகவெண்ணெய்
பரிவாயரைத்து பதமாகதானுலரவே
வடமாகமூன்று விரலாலெடுத்து
வகையானதேனில் வழியோடுகொள்ளுமெனவே.

எனவேகமூன்று இதமானநாளி
வினிகொள்ளநோய்க ளிதமானபுளிபுகையிலை
தனவேகமாக தனியாகதள்ளு
தயவானநோய்கள் தடையில்லைசோகைபோகும்
வனவேகமேக காமாலைபோகும்
வடிவானபாண்டு வகையோடுவாதமேகும்
கனமானபித்தங் கனிவானமாலை
கடலானசூலை கதமானபித்தமறுமே. ௧௬

சுரத்திற்கு மலங்கழிய மாத்திரை.

நாத்தமூந்தானிரத நல்லநாடியேநாலுபலம்
அரைக்கிறவிசிலமதனை யெனஅரைநேர்
பாத்துமேதான்கடுக்காய் நெல்லிமுள்ளிபு
முன்னிடைசேர உடைபோம்பாடு இதில்முன்னிட
தாணியிநேர்
சாத்திடவாளமூன்று உடைதானேபருப்பெடுநீ
அதையதில்பொடிபட இடஅரையெனநேர்
வாத்தியேவாளமூன்று இதில்வாக்கானதோலெடுநீ
உடைபோடுதொடியிடு சிறுபயரளவாய் [வே
நேத்தியாயிஞ்சிதனிவிதை நேருண்டை யொன்றிட
சுரமறுங்கபம்வீடு மெனநினைநினையே
சித்தமாய்வாதசுரந் துளசிதன்னிலேதானிடவே
அதம்விதம்பதம் அறுபத்துநாலுசுரம்போம்
நத்தியேசீதசுரமிதில் நாடியேயோடிவிடு
முனியருள் திருவருள் முறையெனவறியே. ௧௭

இலிங்கரச வயக்காந்த சிந்தூரம்.

சகதலம்விளங்கும் ஜைமுனிசொன்ன
நகைமகிழுலகர் நாடியேபார்த்தெடு
அயமுடன்காந்த மதிதநயமென
நயமுடன்பாக நவின்றசிந்தூரம்
வாதமுமாகும் வியாதிகள்நயமாம்
சேதம்வராது தெரிந்துகொள்வயித்தியர்.

அயச்சிந்தூரம்.

அயமதுஏக மதிவிடுவீரம்
நய்மதாயையரை நாடியேயிட்டு
திராவகமதனால் திட்டமாயரைத்து
பராமுகமாகப் பதியவேவறுக்கப்
பவழமதாகும் பதமாயெடுத்து
தவடிதாய்ப்பரம தந்திடவைத்து

காந்தசிந்தூரம்.

ஓட்டுக்காந்த முண்மையாயேகந்
தாட்டிகமாகத் தடையறநிறுத்துக்
காணக்கியாழம் கடிதாகவிட்டுத்
தோணவேயரைத்துத் தொக்கவேபுடமிட
அருணநிறமதா மடைவுடனெடுத்து

அயக்காந்த மிரண்டுஞ்சேர்த்தல்.

தருணமாய்முன்னிடை பயத்தினிற்சேரு
அரைத்துமேயிரண்டையு மடைவாகவில்லை
நிரைத்துமேயொன்றாய் நிலவரமாகவே

வில்லையாய்த்தட்டி விதமானகுக்கிடத்
தெல்லையிற்போட்டு திரமாயெடுக்கப்
பவழமதாகும் பதியவேவைத்து
கவலையைச்சொல்வேன் கருத்துடன்கேளு

லிங்கரசமெடுத்தல்.

லிங்கமுஞ்சரியாய் நேராய்நிறுத்துத்
துங்கமாய்திராவகத் தாலேயரைத்து
உமிநெருப்பிட்டு உண்மையாய்க்காய்ச்சி
சுமியவேயொட்டத் தவமாயுதிர்த்து
கிடமதில்விட்டு கடமதால்மூடி
நடமதிலுளுந்து சீலைசெய்துடனே
எரியிடுதசமா மிணிதுடன்கேளு
தரிப்பதாய்மலரும் தாஷ்டிகமாக
விருப்புடன்புட்டு விதமாய்ப்பார்த்திட
சிறப்பதாய்மேலே சேர்ந்தேநிற்கும்
(கரிபோற்கறுத்து கனக்கவேமேலே)
நிற்குமதனை நேர்மயிற்குச்சால்
தக்கவேயெடுக்க தயவாய்ச்சுரண்டு
எடுத்துபீங்காணி லியல்பெறவிட்டு
அடுத்துமேதேய்த்திட வடைவானவாலே
ரசமதுவாகும் நலமுளரசத்தில்
பிசக்கிலாதிராவகம் பிலக்கவேவிட்டு
வைக்கவேரவியில் வளமாய்நீறும்
நீறதுஉபயம் நிஸ்வரமாகவே

பார்த்துமுன்னம் பகர்ந்தசிந்தூர
மிடைக்கிடைசேரு இன்பமாய்த்திராவக
நடைபெறவிட்டு நலமாயரைத்து
கிடத்தினிலிட்டுக் கிடமேற்கிடமுங்
திடமதாய்க்கவிழ்த்து திட்டமாயுளுந்தால்
நடமிடகவச நலமாய்ச்செய்து
எரித்திடுவக மின்பமாயுள்ளே
வரித்தியேதீயெரி வளமாயிரத
மேலேயிருக்கும் விருப்பமாய்த்தேய்க்கக்
காலாகவெதான் கடிதானபாத
ரசமதுவாச்சு நலியவேகேளு
பிசகிலாதிராவகம் பிலக்கவேயூற்றி
விட்டுமேரவியில் விருப்பமாய்வைக்க
கட்டுமேகாளான் போலதுநீரும்
நீற்றையெடுத்து நேராங்கிடத்தில்
வார்த்தையாய்ப்படியில் வளமாஞ்சிந்தூரம்
சிந்தூரந்தனை சிறக்கவேரவியி
லவிந்திடஇருபதி லொன்றிடத்தங்கம்
தங்கமதாகுந் தடையில்லைபாரு
உங்கட்கிரங்கி யுறுதியாய்ச்சொன்னேன்
விற்றுச்செலவுசெய் திட்டுமேஞானம்
சித்துகள்யோகம் சிறப்புடன்செய்யவே
சொன்னேன்ரசத்தை சுயம்பெறக்கொல்ல
நன்னயமாகு நாடியேபாரு
முன்னமேசெய்து முடிக்கப்பலனும்

கன்னல்போலாகும் கனிவானவாதம்
சொன்னபடிக்குச் சுயமாய்ச்செய்து
இந்நிலந்தன்னி லின்பமாய்ப்பித்தியங்
தனியேசெய்து தாக்கிடச்சித்தி
லிங்கரசவயக் காந்தசிந்தூர
முங்கள்குலத்தி லொருபணவிடையிடு
மண்டலங்கொள்ள மகாவெகுநோய்போம்

இதற்கு அனுபானமும் தீரும் வியாதிகளும்.

திரிகடுதனிலிடு ஜெயமாம்பித்தமுந்
துரியமாய்நாற்பத் தெட்டுமொழிந்திடும்
பபித்தியங்கைப்புப் பதையாமல்தள்ளு
சித்தியாந்திரேகஞ் ஜெயமாய்நின்றிடும்
சுக்குமிளகு வாளமிரண்டு
மிக்கவேகடுக்காய் தானிரண்டாகும்
நெல்லிமுள்ளி நேர்பதினாறு
எல்லாம்பொடித்து இன்பமாய்க்கேளு
கரிப்பானீரால் காணவரைத்து
தரிப்பாரவியில் தானிடுகாயம்
வைத்துப்பொடித்து வளமாய்வெருகடி
கைத்துஎடுத்துக் கனிவாயுளங்கை
நடுவிலேவைத்து நலமாம்சிந்தூரம்
கடுகவேபணவிடை காட்டியேயுண்ண
வுண்டிடும்போது ஊறவாம்வியாதிகள்
நன்னயமாக நவிலுவேன்கேளு
வாதமும்வாயுவும் வளமாய்த்தானறுஞ்

சேதமாய்மேகவாய்வுகள்போகும்
கால்கைக்குடைச்சல் கனமாம்பீனிசந்
தூலமாய்தந்த வாய்வுகள்போகும்
மேகரணமும் விடுபடுங்குன்மமும்
தாகமொழியுந் தனியானவஷ்ட
குன்மமும்போகுங் குணமுளவவிழ்தம்
சூலைவிப்பிருதி தொலையும்பெரும்பாடு
வாலையைப்போலே மகத்தானதிரேகமாம்
கிராணிகழிச்சல் கலமாகநின்றிடும்
வராணிமகோதிரம் வடிவாய்ப்போய்விடும்
சகலத்துக்கநுபானஞ் சாற்றவேகேளு
பயத்துடன்தூது வளையின்புஷ்பம்
பூவையெடுத்து பெரியகிடத்தி
லாவலாய்ப்பாணி யதிலிடுகாலாய்
தேவையாய்வாயில் திட்டமாய்சீலை
கட்டியேமேலிடு கனமாம்பூவை
திட்டமாயதன்மேல் திடமாய்ச்சட்டியை
மூடியேயெரிமேன் முக்கியமாக
தேடியேபுட்டாய் திடமாயவித்து
நாடியேபிழிந்து நலமாய்ச்சொல்வேன்
பணவிடைசிந்தூரம் பதியவேயிட்டு
குணமதாய்க்கொடுக்க குணமுளகாசம்
அதமதாய்ப்போகு மதுபனிரண்டுங்
கிராக்குட்டந் தீர்ந்திடக்கேளு

நிமிரதுளட்டி மரமுடன்ரேலே
சிவியேபொடியாய் திட்டமாய்ரவியில்
காயவேபொடித்து கனமாய்வைத்திடு
நோய்க்குவெருகடி நுகரவேயிட்டு
சிந்தூரம்பணவிடை செப்பமாயிட்டு
விந்தையாய்வெந்நீர் விருப்பமாயிட்டு
குழைத்துணுமண்டலங் குறைநோய்குட்டம்
பிழைத்துமேயோடும் பிலமாநலெண்ணெய்
ஆகாதென்று வரைந்தனர்முனிவர்
தாகமாயண்டம் பௌத்திரந்தீரும்
ஈளையிருமலெலிகடி தீரும்
கோளைநீரிழிவு குடிகெடும்போகும்
விந்துவிறுகும் விறுப்பமாய்சித்தி
சேர்ந்திடப்பெண்களை செயலானபோகம்
ஊற்றதுபோல ஆறுமேகாமம்
சேர்த்திடவடைப்பு மலசலம்பிடுங்கும்
வாதமெண்பதும் வகைதொகைநாசமாம்
சேமவளியஃது சேர்த்திடப்போகும்
பொதிகைமலையில் பொருந்தவேயிருந்து
வதிசயமான கரிசிலைப்பாடி
இதையுஞ்சுருக்கி யிதைமுப்பத்தாருய்
விதமுடன்பாடினேன் விருப்பமாய்ப்பாரு
மாமுனியருளிய மாலிங்கரசஅய
கோமுனிகாந்த சிந்தூரமிதனுமே. கஅ

நாகபஸ்பம்.

நாகமதுபலமேக நாடிகிடமிட்டு
நலமாயுருக்குமுகந் தனிலுபயமிளகு
வேகமாயுருக்குமுகந் தன்னிலேதாவு
வித்தகமாய்நீறியது முத்துபோலாகும்
ஆகுமதுநாகமதை யளவாய்நிறுத்து
ஆதியினிரசமதனை திரியேகம்விட்டு
சோகமெனவெடியுப்பு திநீரைவிட்டு
சுத்தரவிதனில்வைக்க பூர்க்குமதுபாரே. கசு
பூர்த்தரசந்தன்னிலிடை நாகபற்பநிறுத்து
போரானதிராவகத்தா லரைகிடந்தன்னில்
சேர்த்துமேயெரித்திடவே ஜெயமாகவேறும்
ஜெயவேதையேறினதை வழித்துபுகைநீரால்
பார்த்துமேநீர்விட்டு ரவிதனில்வைக்க
பதிவானரசநீறி பக்குவமதாகும்
கார்த்துமேயடிநின்ற வாசுகிபற்பத்தில்
கனிவாகசேர்த்தரைத்து கிடமதனிலெரியே.
எரித்திடவேயிப்படியெ ஐந்துதரஞ்செய்ய
இயல்பாகரசந்தானு மடியிலேநிற்கும்
வருத்திடவேசெம்புதனில் நூறொன்றுஇடவே
வகையானவாணிக்கி யெட்டரையேகாணும்
தரித்திடவேயிதைவைத்து ஞானவழிபாரு
தருவானசுழுமுனையில் வலுவாகநில்லு
கருத்திடவேகைபாகந் தப்பினலாகா
கருணைபெறபாகமாய் செய்திடவேசித்தி. உக

இதற்குத் திரும்வியாதிகள்.

சித்தியாம்பணவிடைதா நித்தமண்டலமே
சிதருதவலிகுன்மம் பித்தமுதல்போகும்
நத்தியேகாசமுதல் வாதமுதல்திரு
நலமானமேகரணம் மேகவாய்வெல்லாம்
முத்தியேபெருவயறு தந்தமுதல்வலியு
முனையானமகோதரமு முதிரவலிதீரும்
சத்தியமாமிம்மொழிக ளாகுமதுபாகந்
தவறுமல்செய்திடவே மாமுனிகள்சொல்லே.

தாம்ர ரசசிந்தூரம்.

பொடிரவிராசனன்னை போமரைமூன்றுநேரே
யிருவனசங்கநீறு யிதையரைவில்லைசெய்து யினி [ரவிகாயவைத்து
நடைபிடிபுடமதாக நவிலவெபவழமாகு
மதையெடுஏகமாக வன்னிபும்பாகமாகும்
வலுவளபுகைநிறுத்து வருநிலப்புகையுமாகு
முன்னியே கிடமுமிட்டு முறுதிபிலெரிக்கவேறு [முன்மையும்வாலையாகும்
உறுதியாப்பீங்கானிட்டு வுறுபுகைநீரையூற்றி
வுகமதில்நிறமதாகும்
வருமெனகிடமுமிட்டு வகையதாயெரிக்கவேறும்
வழியதுஎடுத்துமைந்தா
நலமுடன்ரசமதாகு நவிலவெபுகைநீறாற்று
நயமுடனீயில்தந்தம் கலமதில்ரவிசிந்தூரங் கடு [கவேயனாத்துவில்லை

கனமதாய்கிடமுமிட்டு வளமதாயிதுபோலேந்து
வகையதாயெரித்துப்பாரு
ஜெகதலம்பவளமாகுஞ் சேருமேரவிநூறென்றில்
அகமதுபத்துமாற்று அதிசயபுடமிறங்கும்
அலம்வரும்ஞானயோக மதில்வெகுநயமதாகு
மணுகிடில்மேகவாயு வதுபொடிகாமமெல்லா
மலம்வரும்வாதமேக மதில்வருபித்தமேகந்
தணலதுமேனியாகுந் தணிமகோதரமுமேகுந்
தகைபெறுகாசம்போகுந் தடையிலைகாயசித்தி
கனல்ரவியிரதமான கடியதொர்சிந்தூரந்தான்
கதிபெறுமாமுனிவர் கனிந்துதானுரைத்தசொ
[ல்லே. ௨௩

வாளபேதிமாத்திரை

ஆதிமாமுனி யருளியகரிசில்
நீதியாய்முன்னூற் றறுபதிற்சுருக்கி
வேதபாராயண முப்பத்தாறும்
காதலாய்ப்பாகம் கைமுறைசரியாய்
சொன்னதிற்சூத்திரஞ் சுருக்கம்பெருநூல்
நன்னயமாக நவின்றெத்துப்பார்த்து
செய்திடச்சித்தி ஜெகமுறைவயித்தியம்
பையவேபேதி வகையாகச்சொன்னதில்
பச்சையென்பது பதிவானவாளமாம்
இச்சையாய்வறுக்கச் சொன்னதுவாளம்
இதுவிரண்டொன்று இனியரசவாதிகேள்
பதிவாய்க்கையின் பாகமதயிநீ

அறிந்திடப்பாக மடைவதுகேளு
பிரிந்திடச்சொல்வேன் பிசக்கறவயித்தியா
வேர்க்கொம்புதிப்பிலி மிளகிஞ்டிைந்து
தேர்கடுகுரோகணி சிவதையோடெருக்கும்
பார்வன்னியொன்று பதமாயெட்டிற்கும்
சேர்சரிவாளஞ் ஜெயமாயரைக்க
காழ்பழச்சாறு கடியவோர்ஜாமம்
விட்டுஅரைத்திடு விதமாய்நாளுங்
கட்டுமேகுண்டுமணியின்விரையா
யுருட்டிரவியி லுண்மையாய்வைத்து
வருட்டியேமுழுசாய் வாகாயுண்டிட
உள்ளேசென்று உண்மையாயுண்டை
கரைந்துகரைந்து கனிவாய்பேதியாம்
உண்டிடுவண்ண் முறுதியாய்பேதி
கண்டிதமான நெஞ்செரியாது
வாந்திபண்ணுது வகையாய்மலஜலம்
சேர்ந்துமேவழுகும் ஜெயமானபேதியாம்
பேதிபுமிரம்ப பொராதசரீரம்
ஆதியாய்பாலிற் கஞ்சியுங்கூட்டு
கூட்டவேநிற்குஞ் சுரங்குளிர்சூலைபோம்
ஆட்டவேவாத மெண்பத்துநாலறும்
பெருநூல்கரிசில் பிரபலமாகவே
சிறுநூல்சொன்னேன் சுருக்கத்திற்சுருக்கி
பாடினேன்முப்பத் தாறுடன்சுருக்கம்
பெருநூல்சிறுநூ லிரண்டையுஞ்சோதி

திருவானபாகஞ் செய்திடச்சித்தியே

சிங்கமுகத் திராவகம்.

சித்தியாய்திராவகஞ் செய்திடக்கேளு
முத்திசேர்துருசு முடிவதாய்நிற்கும்
பெருநூல்திராவகம் பேதமாயொளித்ததில்
சிறுநூல்சுருக்கஞ் செயலறப்பார்த்து
திராவகம்வைத்து திட்டமாயுபரசம்
பராமுகமாகப் பதையாமல்நீற்று
சிங்கமுகத்திராவகம் திரமாய்ச்சொல்வேன்
உங்கள்குலங்க ளுறுதியாய்வாழ
ரசமதுவகம் நவிலவேசேரு
பிசகிலாவுப்பு பெரிதாயரைத்து
செங்கல்மாநாலுக் கொன்றுசேர்த்து
துங்கவேயரைத்துத் துப்பறவாக
சட்டியிலிட்டு சதிபெறவதன்மே
லிட்டமாய்ரசத்தை யினியவேயிட்டு
மேலதுமூடி விருப்பமாயுளுந்து
சீலைசெய்யேழு ஜெயமாயடுப்பில்
வைத்துமேயெரித்திடு வாகாய்ப்பனிரண்டு
செத்துமேயேறும் ஜெயமுளபஸ்பமாம்
எடுத்துமேவழித்து இன்பமாய்க்கேளு
அடுத்துமேவெடித்தச மன்பாய்நிறுத்து
ரசமாவுப்பையு நவிலவேநிறுத்து
பிசகிலாசீன மிருபத்தைந்து

மூன்றையுமொன்றாய் முடியவேபிடித்து
தோன்றவேசக்கர வாலையிலடியில்
போட்டுமேயரைகிடம் பொருந்தவேமூடி
காட்டுமேதீபங் கமலங்காடாக்னி
உளுந்துசிலை யுறுதியாய்ச்செய்து
அழுந்தவேவாலை மூக்கினிலரக்குக்
குப்பியையுள்ளே செலுத்தியெரித்திடு
திராவகமிரங்குந் தடைமுன்னீரும்
பராமுகமாகப் பதியவேவெள்ளையாம்
ஊற்றிடேன மூற்றிப்பின்னீரை
யேற்றியேயெடுத் தினியகணபதியை
தோத்திரஞ்செய்து தொகையதுகேளு
பாத்திரமாகும் பதியவேயேமமாம்
அகமதிலிருந்து அன்புடன்பூசி
ஜெகமதில் லோகமெல்லாநீறும்
வகையதாய்திராவகம் வைத்திடச்சித்தி
தொகைவகையாகுந் தொல்லுலகுள்ள
உபரசமெல்லா முறுதியாய்நிற்கும்
பலமான திராவகமிதுதான்
கும்பமுனிதான் கூறினதிராவக
மன்பதாய்வைத்திடச் சித்தியாமே. ௨௧

வீரரசம் அதன்பஸ்பம் அதன்சிந்தூரம்

வீரரசத்தை விருப்பமாய்க்கேளு
கோரமாய்வியாதி குடிவிட்டோடும்

வாதமுமாகும் வசியமுமாகும்
சேதம்வராது ஜெகதலம் விளங்கும்
அரைக்கையில்வீர ரசமதெடுக்க
முறைப்படிசொல்வேன் முக்கியமாகும்
வீரந்தசமெடு விருப்பமாய்த்தானே
தாரமாய்த் தண்டவாளமுமிரண்டு
உடையரையிரண்டு முறுதியாய்ரசமாம்
தடையதுபடாமல் தானேகக்கிடுங்
கக்கினரசத்தைக் கருணையாயெடுத்து
மிக்கவேவுப்பி லெரித்திடவேறி
வெள்ளையாய்நீறும் விதமாய்ச்சுரண்டி
துள்ளவேபணவிடை தூக்கிவெல்லத்தி
லிட்டிடநோய்க ளெல்லாம்போகும்
துட்டரிடத்தில் சொல்லவேவேண்டாம்
வைத்தியநல்ல முறையிதுசத்தியம்
பயத்தினுற்செய்தால் பலிக்குமவிழ்தம்
வீரபஸ்பத்தில் விதமானதிராவகங்
காரமாயூற்று கருத்தாய்க்காய்ச்சி
மேருவிலிட்டு விதமாயெரித்திட
பாருமேபவழம் பதியவேயாகிடு
மண்டலமுண்டால் மகாரோகம்போகிடும்
தொண்டருக்கருளின் தொல்லுலகுள்ளோர்
ரவிநாழென்றில் நாட்டிடத்தங்கமாம்
கவியவேயிந்தக் கணக்கையும்பாரு
வீரசிந்தூரம் வித்தையிலதிகம்

பாரமாய்ப்பார்க்கப் பதியவேசித்தி
வடநூல்கிரந்தம் வகையுடன்பார்த்து
திடமாய்த்தமிழால் திட்டமாயெடுத்து
சொன்னேன்மாமுனி சுருதிபுலத்தியர்
நன்னயமாக நவின்றசிந்தூரமே
ஏமமோர்நிறை யின்பமாய்த்தான்ரவி
வாமமாகவே வாகாயுருக்கிநீ
காமநாகமுங் காட்டிடுவீரமும்
தோமம்வேதையாந் தொக்கவேபாருமே

வீரத் திராவகம்.

வீரத்திராவகம் வித்தையினிசொல்வேன்
காரமாத்தானே கடிசெலாநீறும்
வெடிபலம்நூறு விதமணிசினம்
படிபோல்நிறுத்துப் பகரிடைசரியாய்
வீரமுமிருபத் தஞ்சுடன்போட்டு
காரமாய்ப்பொடித்துக் கணக்கதுகேளு
வாலையிலிட்டு வகையாய்க்கிடமரை
பாலையடுப்பிற் பரியவேயிட்டு
வடித்திடுதிராவகம் வகையாய்முன்போல்
துடியாயெடுத்துத் தூக்கிடஅரக்குக்
குப்பியிலிட்டுக் குரூரமாய்க்கேளு
தப்பியேபோகா தானதுபாகமாய்
சரக்கெலாங்கட்டுந் தானதுநீறும்
பார்க்கவேபெருமை பகர்தல்முடியா

பாஷாணம்மெலாம் பதையாமல்நீறும்
தேளாமுபரசந் தென்பாய்நீறும்
திராவகம்போலே தாக்கிடச்சித்தியாம்
பராமுகமிலாமற் பதமாய்ச்செய்திடு
எல்லாமுங்கட்டு மினிதுபுலத்தியர்
சொல்லாற்பெரியோர் சொன்னதுபுத்தி
உப்பினாலே யுறுதியாய்வாதமாம்
தப்பிதமில்லை தான்சத்தியமாம்
முக்கியமாக முன்னேவைத்திடு
மிக்கவேயெல்லாம் விரும்பியேயாகுந்
திடமாய்த்திராவகந் திட்டமாமூலிகை
வடமசாறு வகையானமூன்றுநா
ளிட்டுமேபிழிந் தினிதான்சரக்கை
தொட்டிடக்கட்டுந் துடிப்புடன்வேதை
யாகுமேபாரு அதில்வருஞ்சித்தியாம்
துரிசின்போக்குத் தொகையாய்க்கேளு
பரிசினவேதை பார்க்கவேசொல்வேன்
துரிசையிந்நீரில் துடிப்பறத்தோய்த்து
வரிசையாயெட்டு நாளதுபோட்டிடும்
பொருமியேநீறும் பொருந்தவேவங்க
மருமையாய்ச்சுன்ன மடைவதுகட்டும்
குக்கிடபுடமிடு கொரேமாஞ்சுன்ன
மிக்கதோர்சூத மிகநல்லேவல்
கேட்குமேகட்டும் கெவனமாங்குளிகை

தனக்குமேபணிவிடை தந்துவாய்போக்கும்
நவலோகமொன்பது நாடியேதங்கமாம்
தவபலனுகுந் தர்க்கம்பேசாதே
தாளகந்துவைத்திடு தாக்கவேயெட்டு
வாளகம்போலே வலுவாய்நீறும்
செம்புநூறுென்றில் சேர்த்திடத்தங்கமாம்
வம்புசெய்யாமல் வகையுடன்பாரு
கெந்தகம்வீரங் கெடியானபூரமும்
தந்திடுமனேசிலை தக்கதோர்வெள்ளையு
மிப்படிநீற்றிட இன்பமாயேமமாம்
தப்பிதமில்லை தானேநீற்றிடும்
வாழ்வுமுனக்கு வகையாய்நின்றிடும்
தாழ்வுவராது தாழ்ச்சியுமில்லை
தங்கமுநாகமுந் தானறிவங்கமு
மிங்கிதமாக இயல்பாய்க்கரும்பொன்
செம்புமிப்படி ஜெயமாய்நீறிடும்
நம்பியேவாத நாடியேநின்றிடுஞ்
சுழுமுனை தன்னில் சொக்கியேநின்றிடும்
பணிவொடுபாரு மதத்தால்கெடாதே
வாதிவாதி வளமாய்ப்பேரெடு
ஊதியூதி யுறங்கவேவேண்டாம்
திராவகத்தாலே சகலமுமாகும்
பராமுகமாகப் பலிக்காதென்று
நாவினுற்சொல்லி நவிலவேண்டாம்

மாமுனியகஸ்தியர் வடமொழிகிரந்தம்
கோமுனிசொன்ன கொடியபுகைநீரே.

ரச சிந்தூரம்.

சேர்திரசந்தனையே சுத்திசெய்து
தூசணிபிங்கா ணிடுபலந்தசம் [மது
கோட்டையிடிக்கும் படைராசன்பத்துங் கூட்டிடுசீன
ஐயஞ்சுபலந்தான் பொடிபண்ணிவாலைசட்டியிடு
சக்கரமேல்கவிழ்த்து உளுந்தாலே யுண்ணவேசீலைசெ
உறுதியா யுண்டெரிதீகமலம் [ய்து
புகைவரும்வெள்ளைப் புகையைத்தள்ளி
நடுநீரைவித் தகமாய்ப்பிரித்து
கடைநீருகாரந் தானீரையெடு
ரசமீதிட்டு ரவியில்வைக்கத்
தானதுபற்ப மாகுமெடுத்துப்பின் [ல்லாம்
நீர்தன்னைவிட்டுவைக்க நீறியிடும் பின்னெடுபற்பமெ
குப்பியடை மீதிடு தான்கிடத்தில்—உப்பு,
இடுநால்விரல்செலுத்தி இதின்பேரில் தான்குப்பி
தானடுவில் வைத்துமேலே தான்கிடமேல்கவிழ்த்து
உழுந்துமண்கெட்டி யாய்த்தான்கவசம்
பிலக்கவேசெய்திடு ஆறுநாளுயரவேதானெரி
மேல்சட்டியில் பிடித்திடுங்
கையினால்தான்சுரண்டி குப்பியடையதனில்
சிவந்திருந்தமருந்ததனை சேர்த்துஅரைத்திடுநீ
புகைநீரைவிட்டு ரவிதனிலேகாயவைத்துதானெரி

முன்போலேயாறு தினந் திட்டமாய்த்தா னெரிக்க
சிவந்திடுமிப்படி யஞ்சுதிறம்
பாகமாகவிங்பமாய்த் தானெரிக்க [னே.
கடைசியில்சிந்தூரந்தா னெட்டுக்கொன்று தங்கந்தா
உருக்கியிடுநாகமொன்று சேர்த்திட வெள்ளையாகுஞ்
சிந்தூரத்தில்தானினி சேத்தரைத்துக்குப்பியிட்டு
தானேயெரித்திடுநீ பவழமாம்
பாகமாய்மண்டலஞ் செயரசஞ்சாகும் [கா
நாயுமார்கற்பனையை யொருவனுல்நாம்மதிக்கப்போ
புவிதனிலொன்பது லோகத்திடு
தனித்தனிகொடுத்துமே நூறொன்றில்தங்கமாகும்
இங்கிதமாக வெடுரசவாதம் சித்தியே.
ஏவல்கேட்கும் புலத்தியா [யசித்தாம்
உண்டிடுமண்டலம் தின்பணவிடை யுண்டையாய்கா
கதிர்மேனி செங்கதிர்போல்நிறமாம்
வலிகுன்மம் திட்டமாங்
காசமுதல் தலைவலி
வாதமெண்பதும்போம் பித்தமுதல்
வாகானதந்தவாய்வு அண்டவாய்வுபோகுமே.
ஜன்னிமுதல்திரும்மேனி மாந்தளிர்போல்நிறமாம்
ஜகதலமுன்னே வணங்கியிடும் இதுரசந்தானே. [ல்
திராவகத்தால்மடிந்திட்ட தானெனச்செம்பில்பட்டா
நொடிதனி லேமமுமாகிவிடும்
இதுநலங்கைப்புப் புளிப்புதள்ளு

இதையுண்ணு காயமும்கல்தாணும்
விந்துகட்டும் மானுடர்புத்தியில்லார்
பாகமாகசெய்திட மாட்டாமலே
சூத்திரம்பொய்யென்று சொல்லுவார்பார்
வாதம்பொய்போனல் சொல்லக்கேளு
உலகத்தில்தான் சிவந்தான் பரமும்பொய்யாகும்
வேதமும் சொற்பொய்யாம்
குருமுனிமாமுனி சொன்னதுதான்
சூத்திரத்தில் தான்மொழிசத்தியம்.

வேறு,-ரசத் திராவகம்.

நலமதாயெல்லாம்
பிசக்கிலாநீர் பெருமையைக்கேளு
எல்லாம்ரவிதனி லின்பமாய்நீறும்
சொல்லாற் பெரியவர்சித்தாம்
ரசத்திராவகம் பகர்ந்தாரதுகேளு
பராமுகமாகப் பதியவேபாரு
வெடிதசநிறுத்து விதமாய்சீனம்
படியையைந்து பாய்ச்சிநிறுத்திடு
வாலையிலரைக்கிட மாகவேபொடித்து
பாலையிற்போட்டுக் கனிவாயுளுந்துமண்
சீலையுஞ்செய்து சிறுகவேதீயெரி
பாலையின்மூக்கால் வடிந்திடும்வெள்ளைநீ
ரெடுத்துமேதள்ளி யிதமானமஞ்சள்நீர்
அடுத்துமேபிடித்து ஆண்மையைக்கேளு

சுத்தரசமது ஏகமுநிறுத்துப்
பத்தியாய்ப்பிடித்துப் புகைநீரெல்லா
மூற்றியேமூன்றுநா ளுண்மையாய்க்கிழவி
லேற்றியேவைத்திட பிதமாய்க்கரைந்து
தண்ணீர்போலாந் தாக்கவேகேளு
மண்ணியேமறுதிரம் வாகாய்வெடியும்
தசமதுநிறுத்துத் தாக்கிடச்சினம்
பிசகிலாயிருபத் தைந்துடன்பொடித்து
கிடமதிலுருக்கு கிளரவேவெள்ளைநீர்
விடமதாய்ப்போக விட்டுமேபாரு
மஞ்சள்புகைவரும் வருகிறவப்போ
துஞ்சவேயெடுத்து ஆரவேவைத்து
ஊற்றிடமுன்புகை நீரதையதிலே
யேற்றிடுஅடுப்பினி லினியதோர்வாலை
சட்டியைமூடி சலுதியாயுளுந்துமண்
கெட்டியாய்ச்செய்து கிருபையாயெரித்திடு
வாலைமூக்கில் வளமாய்க்குப்பியை
வேலையாயிட்டு வைத்திடுவைத்தால்
புகையும்படாமல் புதிதிருமேனியி
லெசவாயிருத்திடு யின்பரசவாதி
பட்டால்புகையும் பக்ஷம்விரிந்திடும்
கெட்டுமேபோகாக் கிருந்திடுயிப்படி
அஞ்சுதிரமது வெவ்வேறாக
சொற்படியாகச் சுருக்கமாயுருக்கி
முன்புகைபோக முடிவாமஞ்சள்

தென்பதாய்க்கண்டு திட்டமாய்முன்ரசத்
திராவகமூற்றி ஜலுதியாய்வடிநீர்
திருவருள்பெற்ற திராவகமாகும்
பிரமாவிஷ்ணு ருத்திரனாகும்
ஆகுமேதிராவக மடைவதுஞ்சொல்வேன்
அரக்குக்குப்பியில் வைத்துமேவைத்து
சிரக்கவேகேளு திட்டமாய்வேகம்
தங்கங்காரியந் தயவுள்ளபித்தளை
யிங்கிதமான செம்பதுநீறும்
ஒன்பதுலோகமு முண்மையாய்ரவியில்
தென்புடநீறுந் திருநடமாகும்
புகைநீர்வைத்துப் பொருந்தவேநீற்று
தகையாதுசெல்வந் தானென்னவருகுமே
மூலிகைதன்னில் முடிவுடநீற்றல்
கேலியாய்பொய்யாம் கிருபையுமில்லை
தாம்ரந்தன்னை தண்மையாய்மூலிகை
வம்பாய்நீற்றல் வருகாதப்பா
அண்டச்சுன்ன மடைவுடன்பண்ணி
தெண்டமாய்தாம்ரப் பொடியில்சேர்த்து
அரைத்துமே வெண்கருவாலேவில்லைசெய்
விரைந்துமேயூத வெள்ளையாயிருக்கும்
சுன்னமிதுதான் சுருக்கமாய்ச்சொல்வார்
கன்னயமாக நாடியேபணத்தைப்
பிடுங்குவார்பாரு புத்தியாயிருநீ

திடங்காணின்ஞெருதாம்ரஞ்சொல்வேன்
அடமதுசொல்லி வடவாய்வங்கக்
குகையதுபண்ணி யுள்ளேசெலுத்தி
வகையாய்ப்புடமிடு வாகாய்தூக்கி
காட்டுவர்வெள்ளையாய் கண்மயங்காதே
தேடேனென்பார் திருடுவர்வாதி
ரவியதுநீற்றி நலமுடனுபாயங்
கவியவேசொல்வேன் கணக்காய்க்காய்ச்சி
தோய்ச்சிடவெட்டையாய் தொக்கவேசெய்து
பாச்சிதுசுன்னம் பதிவுடன்கட்டினல்
நீறதுவாகும் நினைவுடன்சோதனை
பார்த்திடவிதனில் பலமாயாகும்
இப்படியாக வியல்பெறச்செயாமல்
தப்பிதமாகத் தான்மேல்கட்டினல்
எப்படிநீறு மினிரசவாதிகாள்

அப்ரக சிந்தூரம்.

அப்பிரகத்தை யடைவுடன்வாதி
தப்பிதமாக தான்மூலிகையி
லரைத்துநூறு புடமிடப்பவளமாம்
நிரைத்துமேயுருக்க நிச்சயம்தளுக்காம்
இருக்குமேயின்னி யினிதாம்சோதனை
பெருக்கவேகாட்டுவர் பிரட்டுரசவாதி
சத்துருசரக்கால் தகித்தால்தளுக்கிலே
மித்துருக்கூட்டில் வியாதிகள்போகும்

இப்படியிருக்க இதமாம்பாகம்
தப்பறமூலிகை தன்னால்அப்ரக
மெப்படிச்சாகு மினிதுபுலத்தியர்
பெருநூல்தோறும் பெரிதாமூலிகை
பெரிதெனச்சொன்னேன் பிலமாநம்பாதே

காசிபர் காதை.

காசிபருஷியுங் கனக்கவேவங்கம்
வாசினியாக வளமாநீற்று
தூரிசின்மேற்கட்டி துடிப்பறநீற்று
வரிசையாய்கவனம் வடிவாய்ரசத்தை
கட்டியேகவனம் கனிவாயோடயில்
திட்டமாய்ப்பொதிகை கடந்துமேயப்பால்
தேவனும்பட்டணம் தெருவுகளதிகம்
ஆவலாய்மறையோர் அறுநூறுவீதி
இப்படியிருக்கும் தெருவொருவீதி
தப்பிதமில்லா தானொருபிராமணன்
வீட்டிலேசென்று விரும்பியேபேச
தாட்டிகநூல்களாய் தர்க்கவாதிகள்
வெகுநூல்பார்த்து விருப்பமாய்ச்சரக்கு
தகுமாசுண்ணம் தடையறவைப்பவ
ரவரிடங்காசிப ருஷிசொலும் வித்தை
ரசத்தைநீற்றல் வெண்மையாய்ச்சொல்ல
பிசகறதாம்பரம் சுன்னமும்வைப்பே
னென்றுமேசொன்ன ரிணையடிதொழமறை

யென்றுமேபிராமணன் அப்படிநம்பக்
காசிபர்வங்கச் சுன்னத்தைக்கையில்
வீசியேயடக்கமாய் வைத்துமேசென்று
வாக்கினில்வந்த மூலிகைகொண்டா
என்றுமேசொன்னார் இதைநன்றாய் நம்பி
கொண்டுவந்தார்மறை யோர்களுமப்போ.
பண்டுமேவங்கஞ் சுன்னங்காணமல்
மூலிகைதன்னை முடிவறவாங்கி
கேலியாய்வங்கச் சுன்னத்தையிட்டு
பிழிந்துமேசெம்பு துரிசில்கலக்கவே
நீர்வடிந்ததுமே வகையறியாமல்
மூலிகைதன்னில் நீறுஞ்செம்பு
என்றுமேநினைத்து இசைவாய்தெரிந்து
போச்சுதேயென்று போனபின்மூலிகை
வாச்சுதேபிரிய வாக்கானசெம்பு
நீறவேயில்லை நினைவுதடுமாறி
யேங்கியேதிரிந்தா ரிதமாய்ப்புலம்பி
தாங்கியேகண்டது பொய்யோயில்லை
நாய்தான்கடித்த வெள்ளெலும்பதுபோல்
பேய்போலலைந்து பிதற்றித்திரியாதே
தாயகமாகத் தர்க்கிக்காதப்பா
வாதத்தைநிறுத்த வண்மையாய்க்கேளு
வெடிசுன்னவுப்பினல் வங்கத்தைநீற்று
ஆதரவாக வப்புறந்துரிசை
நீதமாய்நீற்று நிலவரமாக

அப்புறம்ரசத்தை யடைவுடன்கட்டு
துப்பறகவனங் தோன்றியேநாட்டு
என்றுமேமெய்போ லிசைவாய்ப்பெரியோர்
நன்றுமேமலையிடம் நலமாம்வங்கம்
சுன்னமுஞ்செய்வார் சுருக்காய்மானுடர்
எங்கவேமூலிகை யிட்டுமேபிழிவார்
தாங்கவேமானுடர் தலைதெரியாமல்
வனமூலிகையில் வகையறநீற
கனமாய்ச்சொல்வர் கருத்தைநம்பாதே
நம்பவேயென்ன வென்றதுகேளு
உப்புத்திராவக முண்மையாய்நீறில்
அப்பினில்வேதையா மளவுகொள்ளாது
உப்பினில்வேதை யுயருமேபாரு
தப்பியேயுப்பை விட்டாலவன்கயி
லொன்றுமேயில்லை யுறுதியாயெனவே
கொண்டுமேபாரு குணமிலாவாதி
அகண்டபூரண மடுத்துமேநோக்கு
திகண்டகம்பாரு நிலவரமாகும்
அடுக்குமாறு தலத்திலேநிற்கும்
தடுக்கவேயக்ஷரஞ் சுருதியைப்பாரு
சித்தருரையுஞ் சிதம்பரந்தன்னில்
பத்தனீ போகி முனிவரைக்காணு
சிற்சபைதன்னை சிறக்கவேதெரிசி
மாமுனிசொன்ன வாகானகரிசிலில்
கோமுனிருத்திரக் கணக்கையும்பாரே.

தாம்ர பஸ்பம்.

செம்புயேகஞுங் தானெடுதகடடி
வம்புலாவியே வெடிபடிகையுமுடன்
கம்பியேதிரியரை வளிகத்தநீராலே
வம்புலாவிய நீரதுதன்னிலே
தென்பதாகவே தான்கரிவோட்டி
லெம்பிரானருள் காய்ச்சியேதோய்ச்சிட
வெட்டைபோலாம்
துன்பமாகவே சினமுழுதிடு
நன்பதாகவே நீறியேசுன்னமாம்
வன்பதாகவே நாலினி லொன்றைதான்
வீரம்போடு
வன்புபோலவே தான்குழைரவிதனில்
தென்பதாகவேமேலிடு கவசமாம்
நன்மையாகவே புடமிடு கடைபுடம்
சங்குபோலாம்
ஆதியாகவே தானெடுபணவிடை
சோதியானதோர் பணமதில்விடவது
வேதியாகவே யுருகிடுமதுபனங்
காய்போலாகும்
காதியானதோர் பணவிடைரசமதில்
சேதியாகவே யிட்டிடரசமது
நாதியாகவே கட்டிடும்ரசமணி
கவனமாகும்

வேதிபேதியாந் தங்கமதாயிடு
மாதிமாமுனி யருளியகரிசலில்
நீதியாகவே பாகமாய்வைத்திட
• குருவதாமே.
அண்டோடு சுன்னம் படிகாரசுன்னம் வெள்ளிய
ரசங்களைச்செய்து வேதையாட.
அண்டோடு வரைத்திடுவெண்கருவால்
கண்டேகரி தன்னிலெயூதிட
வென்றேயினி தானதுநீறிடுந்
தந்தம்போலாம்
சென்றேயெடு சினமுமேகமென்
அன்றேபொரி தானதுநீறும்
கண்டேயரைவெண்கரு தனிலதை
வடிவாகக்
கண்டேயதை கரிதனிலூதிட
தொண்டேயது தான்கடுஞ்சுன்னமாம்
யண்டோடுதநீறுடனே
யிடைசேரு
தானேஅரை வெண்கருதன்னிலே
மானேயொரு வில்லையாயூதிடு
தானேயதுநீறிடும் தான்கடுமை
நலமாக
கோனேயிதில் பொட்டலேதானிடைசேர்
கானேயரை வெண்கருநீறிலேதான்

மானேயிதை வில்லேயாயூகிடவே
கொடிதாகும்
தேனேயிடை வெள்ளியந்தானுருக
மானேயிதையுருகிட வீந்திடநீ
கானேரசஞ்சேர்த்துமே யந்திடையே
கனிவாக
சீனம் வெடியோடதுதான் திரிநேர்
கானல்படல் தானதுவங்கரசம்
தானல்புடல் தான்சரிநேரிடுநீ
யரைஜாமம்
கோனேயெனதானது வில்லேயுநேரே
யானேயதை ரவிதனில்காய்த்திடு
வானேயிதை யஞ்சது சுன்னமுளே
பதிமூடு
௨௯ணேயதை தானதுகுக்கிடமும்
காணப்புடம்போட்டிட தான்சிவக்கிஸ்
வேணப்படிமுன் முறைசுன்னமிடு
வெள்ளேபோலாம்
காணேயதைக்கண்டிட கலியதுதான்
வேணப்படியாகுமே நீல்நீறும்
பொன்ரசங் கட்டிடும்
கவனமேமமாகும்
அனுபவம்தானது தங்கமாகும்காணுமே
லோகமுநீறிவிடும் தானுஞ்சொற்பார்த்திட
பாகமதுசெம்புநீறும்

பாகமதுஇருநூறு அஞ்சுதனில்
யோகம் பரிபாஷையாய் சொல்லிடவே
தாகம்ரசவாதிகள் பாகமது செயமாட்டாது
• ஆகமுனிமாதவர் சொன்னநீதி
வேகம்பட வைத்திடபிரதமுமே
யோகம்வரும் ஞானமுமோதிடுமே
கிரிகையாமே. ௨௫

வியாதிகளுக்கு இலிங்கரச பஸ்பத்திற் கநுபானம்.

இலிங்கபற்பத்தை நினைவாய்க்கொடுக்க
துங்கமாய்ச்சொல்வேன் சூஸ்திரந்தன்னில்
பேதியேயானால் பெருமையாய்வெல்லத்தில்
நீதியதாக நிமிஷத்திற்பணவிடை
மூன்றுமேகொடுக்க முதிருமேஜன்னி
தோன்றியேபோகும் துயரமாய்ப்பாரு
சூசிகாவாய்வு சுகமதாய்ப்போகும்
ஆசையாய்மலஜலம் விடாதேபோனால்
வன்னிபஸ்பத்தில் வகையாம்வாளமும்
உன்னியேபத்திற் கிரண்டுமேசேரு
அரைத்துமேபொடியா யதுபணவிடையாய்
நிரைத்துமேகொடுநீ நிஜமதாய்த்தீரும்
சூசிகாவாயுவில் சுருக்கமாய்மலஜலம்
ஆசியாப்போனால் அடைவுடன்வாளம்
சேர்த்துகொடாதே சும்மாகொடுநீ
பார்த்திடும்பண்டிதம் கட்டவும்விடவும்

செய்துமேமருந்துவெவ் வேறுசெய்திடு
உடலுளும்வியாதி யுற்றுமேபோகும்
திடமாய்மலஜலம் திட்டமாய்விடுகில்
வியாதிகள்போகு மலஜலம்விடாதால்
வாய்வுகளுள்ளே மருவியேநின்று
தாயாதியாக சத்துருபண்ணும்
சோகைதந்த வாய்வுகள்போக
ஆசையினாலே யடைவுடன்கேளு
அயச்சிந்தூர மறிவுடனிடைக்கி
நயமாய்ச்சேர்த்து நலமாயுரைக்க
எட்டுக்கொன்று இன்பமாய்வாளம்
தொட்டுமேயரைத்துத் துயரமாய்க்கொடுநீ
சோகையுந்தீரும் சொஸ்தமாய்ப்போகும்
ஆசையினாலே யறிவுடன்பாரு
சோகையில்மலஜலம் விட்டாலவர்க்குப்
பாகமாய்வாளம் பகரல்சேராதே
காமாலைபோகக் கடுகவேகேளு
நேமமாய்கீழா நெல்லியின்சாரு
ஆமமாய்காற்படி யாவின்பால்கால்
சேர்த்துமேயிடைக்கிடை ஜெயமுளவன்னி
பார்த்துமேபஸ்பம் பணவிடையிடவும்
ஜாதியா மஞ்சள் காமாலைபோகும்
வாதகாமாலை வகையுடனவிழ்தம்
திராளம்பஸ்ப மெட்டிலொன்று

வாளமுஞ்சேரு வகையாய்ப்பொடித்து
திரிகடுபொடியிடு திட்டமாய்ப்போகும்
அறிவுடன்வயித்திய மன்பாய்ப்பாரு
ஊதுகாமாலை புண்மையாயவிழ்தம்
பேதமாயயக் காந்தசிந்தூர மெட்டிலொன்று
வாளமும்பொடித்து வகையுடன்கொடுநீ
தூளாய்வியாதி துப்பறப்போகும்
பித்தபாண்டு பிரியமாய்ப்போகச்
சித்தமாய்ச்சொல்லேன் ஜெயமாங்காந்த
சிந்தூரமெட்டிலொன்று ஜெயமாம்வாளம்
சிந்தனையாகப் பொடித்துமேகொடுநீ
மலஜலமிரண்டும் வகையாய்ப்போகும்
விலக்குமேவியாதி விருப்பமாய்ப்பாரு
மகோதரந்தனக்கு வகையாங்குமட்டி
துகையாய்லேக்ய மிரத்தினச்சுருக்கம்
அதிலேபாகமாய் அன்புடன்வன்னி
சதியாய்வைத்துபற் பத்தையுண்டிட
மகோதரம்போகு மயக்கமுமில்லை
தொகையாய்ப்பாரு சூத்திரந்தன்னில்
அட்டகுன்மத்துக் கறிவிப்பேன்பார்
இட்டமாய்வன்னி பற்பம்பணவிடை
தூக்கியேவெடிசுன் னத்தில்வெல்லம்
பாக்கியமாகப் பதியக்கொடுநேர்
அன்னஞ்சாப்பிட வரைகிறேன்கேளு
பின்னொருபாகம் பிசகாசொல்வேன்

பசுவின்மோருபயம் படியவேகிடத்தில்
வஜ்ஜிகரமாக வகையாயூற்று
சுக்குடன்பலமும் சுகமாய்நறுக்கு
மிக்கவேகருவேப் பிலேபிடியாக
இட்டுமேயுப்பு இனமாய்க்கொஞ்சம்
பட்டுமேயிட்டுப் பதிவாய்க்கேளு
ரவிதனிலிட்டு நலமாயரிசி
கவியவேபொங்கிச் சாப்பிடநன்று
பத்துநாள்பொங்கி பதியவேயுண்டிடு
சொந்தமுமாகும் சுகமாய்புலத்தியா
புளுக்கைபல்குன்மம் போகவேகேளு
தளுக்கவேவெடியின் தான்கடுஞ்சுன்னம்
வன்னிபற்பம் வகையுடன்பத்து
வெடியின்சுன்னம் வகையாயிடைசரி
சேர்த்துமேயெட்டுக் கொவ்விடவாளம்
பார்த்துமேசேர்த்து வகையாய்ப்பொடித்துக்
கொடுத்திடபுழுக்கை குன்மம்போகும்
அடுத்துமேசோறு பொங்கியேயுண்டிடு
அட்டகுன்மமு மாபிரவாயுகள்
இட்டமாய்ப்போகுங் கிருவாம்புலத்தியா
உதிரவாய்வுக ளுண்மையாய்ப்போக
பதியாய்த்திரிகடு பதியவேபொடித்து
கொடுத்திடுமண்டலங் குடிவிட்டேகும்
அடுத்துமேவன்னி பற்பம்பணவிடை

உண்டிடவுதிர வலியதுந்திரும்
கண்டபேருடனே கனிந்துரையாதே
இடுப்புவலித்திடி லின்பமாய்க்கேளு
முழங்கால்முழங்கை முதிரவேவலித்தல்
சூலைகுடைச்சல் சுத்தமாய்ப்போக
வாதக்கடுப்பு வகையுடன்தீர
சினம்பலமைந்து சித்தமாய்க்கேளு
அன்பாய்ப்பொடித்து அதிலிடுமருந்து
கேள்திரிகடுவகை திட்டமாயிளவறு
அறிவுடனதிலிடு வாகாயொன்றாய்
வெருகடியெடுத்து விதமாயுளங்கை
தனிலிடுநெய்யிடு தக்கதோர்வன்னி
பற்பம்பணவிடை பதிபவேவைத்து
தாபரமாகத் தாகமாய்ப்பத்துநாள்
உண்டிடுஇருநீ யுண்மைபாயிலேத்து
கண்டிடுவுடல்தான் கனத்துமேயாகும்
பத்தியங்கேளு பழஞ்சோறுகும்
சத்தியாய்நலெண்ணெய் தானேயாகும்
வாய்வுத்தினி வசமாய்த்தள்ளு
கசப்புமாகா கத்திரிகூட்டு
இசைவாய்ப்பாரு இருந்திடம்விட்டுப்
போகுமேவலிகள்போக் கோடேபாரு
கரணந்தப்பினல் மரணம்வந்திடும்
தருணமாய்ப்பாரு. தர்க்கஞ்செயாமல்

மலமடைப்புக்கு ஆகவேமுன்சொன
பிலமதைப்பாரு பிரட்டுசெய்யாதே
கிராணிக்கெல்லாங் கபாடமுஞ்சொன்னேன்
கிராணியால்வனிபற் பத்தில்லைத்துச்
சாப்பிடக்கிராணிபோந் தடையறப்பாரு
மூலமுளைகள் முதிரவேவெளிதனில்
வாலமாய்க்கண்டால் வகையுடன்சொலக்கேள்
எண்ணிரசத்தை வகையாயெடுத்து
எண்ணியேதிராவக மதிலிடுவெண்ணெயாம்
வெண்ணெயைகுண்டு மணிபோற்குச்சில்
நன்னயமாக வழித்துமேகேளு
முளைகளுள்ள மூலக்காரனை
தலையாய்முடுக்கச் சொல்லவுங்கேளு
வெளிதனில்முளைகள் விட்டுவந்திடும்
கலையாயதிலே கனிவாய்க்கொஞ்சம்
பூசிடபாகமாய் பிரிந்துமேயொருகொடி
ஆசிடக்கரையு மதுநலப்பாகம்
கரைந்துமேபோனால் கனிவாயெருமை
விரைந்துமேதயிரை யூற்றியேபிசைந்து
கட்டநீறுங் கனமாய்ப்பாகமாய்
திட்டமாய்ச்செய்து திடமாய்ப்பாரு

சண்டரச பஸ்பம்.

சண்டரசபஸ்பந் தகுந்தபேரேது
பண்டாய்ச்சொல்வேன் பதிவுடன்புத்தியாய்

லிங்கவாலை ரசமதுவாக்கி
துங்கமாயுப்பி லெரித்திடபற்பம்
இதுதான்சண்டரச பற்பமாகும்
எதுவிதுவென்று ஏங்கியிராதே
வியாதிகளறிந்து வினவியேசெய்து
பலாபலமாகப் பகர்ந்துரைபுலத்தியா
குறிப்புடன்பாரு குணமாம்வியாதி
தெறிப்பாய்ச்சொல்லித் திட்டித்திரியாதே
லிங்கத்தைப்பாரு நினைவாயுனக்கு
துங்கமாய்ச்செலவுக்குத் தருவார்சிவனும்
வயித்தியசிரோமணி வாகாய்ப்பேர்வரும்
தயித்தியர்போல தர்க்கம்பேசாதே
தென்பொதிகையினில் திட்டமாய்வாசமாய்
அன்பதாய்க்கரிசிலை யாராய்ந்தெடுத்து
பாகமநுமதி பாகமுமிடைவகை
தாகமாய்ச்சொன்னது சரிகாணிதுகலம்
முனியருளியதை மூடிவறப்பாரு
தனிகைபாகமாய்த் தடையறச்செய்வதே. (௨௬)

தங்கரச சிந்தூரம்.

ஜெயவணிரசமெடு செப்பத்திராவகம்
நயமாய்விட்டு நலமதாய்மூன்றுநாள்
வைத்திடப்பூர்க்கும் வளமாய்க்கேளு
நைந்துமேபூர்த்த வெள்ளையுமேகம்
ரேக்குத்தகடது கிரையாயேகம்

தாக்குமேயிரண்டுந் தடையறவரைத்து
வாக்கதாய்ஜாம வகைபனிரண்டு
யுருட்டியேவெற்றிலை யுள்ளேவைத்து
நெருக்கியேயுண்டை ரவிபடவுண்டையை
பெரிக்கியேமேலே வெற்றிலையுள்ளே
பொதிந்துமேலது சலங்கைமண்ணை
யெடுத்துக்கல்நடு வைத்துகனக்கவே
யுண்டைமேலிடு மண்ணைவிருப்பமாய்
கொட்டியதன்மேற் புடமிடுகொஞ்சம்
தாக்கக்கதிபெற கனமாமஞ்சளாம்
எடுத்துமேகணபதி பூஜையும்பண்ணு
தடுத்துமேஓம்நம சிவாயமெனச்சொல்
என்றுமேநூறு உருவதுஜெபித்து
நன்றுமேரவியில் நாற்பதிரண்டரை
கொடுத்திடச்செம்பு குணமாயெட்டரை
அடுத்துமேநின்று ஆடியேநிற்கும்
எடுத்துச்செலவுசெய் யின்பமாய்ப்பாரு
அடுத்துமேஞானம் யோகம்பலித்திடும்
தங்கமும்பண்ணு ரசமதுவித்தை
யிங்கிதமாகு மினியபுலத்தியா
உப்புகாவிக் கோடாபூடமும்
தப்பியேபோகா தனைவழிபாரு
சிந்துரங்குன்றி யிடையிடுஉடலில்
இங்கதாய்மேனி சிறக்கவேகற்றூண்

ஆகுமேகண்தா னல்லிப்பூப்போல்
ஏகுமேமேனி யினியசுந்தரம்பூ
மேலதுமாந்தளிர் போலமேனியாம்
காலதுவயிரங் கனகம்போலாம்
கற்றாணுகுங் கனகசிந்தூரம்
கைப்பும்புளிப்புங் கனமாய்த்தள்ளு
மெய்ப்புடன்மண்டலம் மெய்மையாயுண்ணு
ஆவின்பால்சே ரடைவாய்நெய்யும்
ஓயாமற்சே ருகாந்தவரையில்
மாயாதேகம் வலுவாய்நிற்கும்
வாசியிறுகு மாமதஞ்சிந்தும்
ஓசையாயொளியு முடலிலேயாகும்
தின்மிடக்கற்ப மதியாதிரேகம்
விண்ணிடவானோர் விருப்பமாய்ச்செய்வார்
கண்டுமேயுற்றுக் கருணையாய்ச்செய்ய
பண்டுமேசித்தி பதிவாம்கிரையாம்
கிரையாம்தங்கம் நேராம்லிங்க
மரையாதுசெய்தா லதுபலனுகும்
காயமிறுகும் கல்லதுபோலாம்
மாயமாய்ச்சொன்னல் மயக்கம்வந்திடும்
இப்படிச்சித்த ரியல்பாயுண்டு
தப்பிதமாய்தான் மூலியுண்டெனு
வென்றுமேபொய்க ளிதம்பெறச்சொல்வார்
நன்றுமேசிஷர் மூலிகைதேடி
அலைந்துஅலைந்து யதையுண்டென்று

குலைந்துமேதேகம் கெட்டதுபோகும்
பொய்ச்சொலிவிட்டால் பேதமாய்வந்திடும்
மெய்யிதுசுருக்கம் வினவினேன் பாரு
சித்தியாயோகத் திருக்கவேசொன்னேன்
பத்தியாய்த்தங்கம் லிங்கம்பாரு
ஆப்பிடாவிட்டா லதுவேதென்றால்
கூப்பிட்டயத்தை கொடியசிந்தூரமாய்
பண்ணியேயுண்ணு பதிவுடனப்படி
யெண்ணமாய்த்தேக மினிதாம்பாரு
லிங்கரசத்தை நினைவுடனெடுத்து
தங்கமுஞ்சேர்த்து சாத்திடில்சிந்தூரம்
செம்பதுபழுக்குஞ் ஜெயமுளபுலத்தியா
ஏமமுமில்லா தெளியவனால்
காந்தமுமயமும் கருணையாய்சேற்றிடை
சேர்த்துமேபவழ மாக்கிடுலிங்கம்
வாலரசமெடு வாகாய்திராவகம்
கோலமாய்விட்டு ஊறிடச்சேர்த்தரை
சிந்தூரஞ்செய் சாப்பிடுமுன்போல்
முந்தவேசொன்ன திரேகமுமாகும்
மாமுனிபொதிகை வாழ்முனியுண்டது
பாதகம்போல்வடி வானதிரேகமாம்
சிந்தூரமாகும் ஜெயமுளபாதை
தங்கம்போல்வேதை தாக்கிடவயமும்
இங்கிதமாக வரைந்தனர்மாதவ
முனியருளியசொல் முடிவதாய்ச்செய்யே. ௨௭

சௌகாரம்.

ஆதிசிவனருள் பெற்றவம்மைக்குச்
சேதிய தாக ஜெயசௌகாரம்
வரையரையாக வகுத்துமேசொன்னது
உரையாயம்மை யுறுதியாய்நந்திக்கு
முரையோடேசொல முடிவாய்நந்தி
அகத்தியர்க்கருள அகத்தியர்புலத்தியர்க்
ககத்துடன்சொல்ல தக்கபுலத்தியர்
திருமூலர்க்குத்திரு மூலர்கொங்கணர்க்கு
அருளவேகொங்கண ரன்பாய்போகரும்
திருவாய்கேட்டு திரமாகிகண்டாய்
பாடியேகுகையில் பதிவாய்வைத்திட
தேடியேமச்ச முனியெடுத்தப்புறம்
நவமாசித்தர் நலமாய்ப்பார்த்து
கவனமாய்ப்படித்து கருதிடவாயிரத்
தெழுநூறதனிற் பாடிப்படிக்க
தயிலங்களங்குசிங் தாரமும்பார்த்து
அயிலமாமெழுகு அடைவடன்கண்டு
திட்டமாயிருக்கும் ஸ்திரமாம்வேதை
இருக்குதுவென்று இன்பமாய்ப்பார்த்து
சௌக்காரமட்டும் சரியாய்க்கிளையும்
என்றுமேவகத்திய ரின்பமாய்ச்சொன்னார்
கண்டுமேமச்ச முனியவர்களித்துமே
எண்ணையைவிட்டு வாங்கவேபாடி
கோர்த்திடப்புத்தகங் குணமுளசித்கர்

யாவருமமுரி யெண்ணெயைப்பாடவும்
தலைகாலாகப் பாடியேகோர்த்தார்
சூத்திரந்தன்னிற் சுயம்பெறச்சொல்லேன்
பார்த்துமேசவுகாரம் பண்புடன்பாரு
பூநீர்விளையும் பொட்டில்பாரு
தானதுவடியிற் கல்லுகள்மெத்த
உண்டுமேவெட்டி யுண்மையாயெடுத்து
கண்டுமேச்முத்திர நீரதில்விட்டு
எரித்திடச்சுத்தி யினியதோர்கவலை
சரித்துடனெடுத்துதா னைந்துமரக்கால்
பெரியதோர்காள வாயிலேவைத்து
விரிபெறநீற்றி விதமுளபாணியை
விட்டுமேமண்டலம் விதமாய்வைத்து
கெட்டியாய்மேலே தெளிவையும்பார்க்க
அடைபோலுப்பாம் அதைவழிபிங்கான்
கோடையிலிட்டு குணமாய்ரவியில்வை
காய்ந்துஎண்ணெயுங் கக்குமேபாரு
கல்லுப்புசொல்லேன் கருத்துடன்கேளு
நல்லொத்தவாருதி நாதமுமாச்சு
கடல்நுரைகல்லுங் காணவெடுத்து
இட்டமாய்ச்சுக்கான்போல் நீற்றியேயெடுத்து
கல்லுப்பந்திடை கணக்காயளந்து
வெல்லுமேயிரண்டையும் விருப்பமாயரைத்து
புடம்பெரிதாகப் போட்டெடுத்திட

மாதாபாணியால் கரைத்துமேபிங்கான்
இட்டிடவப்பா மினியபுலத்தியா
கெட்டியாயெடுத்துக் கிருபையாய்க்கேளு
சினமூதி சிறப்புடன்சுன்னமாய்
வானமீன்போல சுன்னமுமாகும்

எடுத்துமேயப்புற மினிரசவாதிகேள்
அடுத்துமேயெல்லாஞ் சேர்க்கிறபாகம்
கேளுமேசுக்கானீ றுப்புநாலு
வாளுமேகடல்நுரை யுப்புமேயொன்று
சினச்சுன்னஞ் சிறப்புடனொன்று

தானமாய்மூன்று மூப்பூவாச்சு
எடுத்துமேபிங்கானி லியல்பெறவிட்டு
அடுத்துதிராவகமது மூன்றுஞ்சேர்த்ததில்
ஒன்றுக்குநாலு திராவகம்விடவும்
கண்டுமேகேளு கருத்துடன்பாரு

வெடியுப்புத்தசம் விருப்பமாய்சீனம்
கடிசேரிருபைத் தஞ்சுமேசேரு
கிடமதிலிட்டு கிளரவேதிராவகம்
வடித்துமுப்பூவில் வாகாயிட்டு
கொதியிடப்பொங்காமல் குணமாய்க்காய்ச்சி

அடியாய்க்குளம்பா மப்பருவத்தில்
சாம்பலைப்பரத்தி ஜலுதியாய்மேலே
துணிவிரித்ததன்மேல் துடியாயூற்றி
உண்டையாப்பண்ணி யுறுதிபுலத்தியா

ரவியிலேகாய நலமாய்வைத்து
அஞ்சுசுன்னத்தி லடைவுடனெட்டு
புடமிடுகோழி பின்புளெடுத்து
முப்புஇடையாய் மூன்ரசபஸ்பம்
நப்புடன்சேர்த்து நலமாய்ப்புகைநீர்
விட்டு அரைத்து வில்லையாய்ப்பண்ணி
கட்டுமேஅஞ்சுசுன் னத்தில்வைத்து
லகுபுடமிடுபே ரானவழலையாம்
திடமதாய்குருவாம் திட்டமாய்முப்பாம்
திருசௌகாரமாந் திருநடமாதியாம்
ஆதியாய்முடியா மாதிநடுவாம்
சாத்திரந்தன்னிற் சனிப்புடன்மறைத்து
சூத்திரந்தன்னிற் றுரந்துநான்சொல்வேன்
சித்தரெல்லாம் சிறப்பாய்மறைத்தார்
பூநீர்வாரி புதுப்பாண்டத்தில்
இட்டுகரைத்து இதமாய்நல்லெண்ணெய்
விட்டுமேவாங்கச் சொன்னார்பாரு
வாதிகள்கரைத்து வகையாய்நல்லெண்ணெ
யூற்றிக்குழப்பி யெண்ணெயை வாங்க
வாராததனால் வகையிலாவழலை
சேராப்பேருடன் சேர்ந்துமேபின்னே
யெடுத்துவந்து இதமாய்மண்டையை
யிட்டுமேவழலை பிரபலமாகவே
யிதுதான்வழலை யெனச்சொல்வார்வாதி

ஒன்றையொன்றாய்நினைத் துருகுவார்வாதி
கண்டுமேசித்தர் கருவைமறைத்தார்
வழலையிதல்லவா காலாமுனியே
சொன்னதைப்பாரு சுயபாஷாண
மெல்லாநீறு மின்பமாயுபரசம்
வெல்லவேநீறும் விருப்பமாயுப்பு
இருபத்தைந்து மின்பமாய்நீறும்
துருசதுநீற தொகையதுகேளு
வரிசையாய்துரிசு பலம்பத்தேகம்
நிறுத்துமேவைத்து நினைவுடன்கேளு
விருத்துசெளகாரம் புகைநீர்விட்டு
குழைத்துமேலே தடவுநீயும்
கட்டுமேநீறுங் கவரதுகோடி
வெள்ளீயம்மேல் விருப்பமாய்தொட்டு
துள்ளியேதொட்டு போடவேநீறும்
வெங்கலநீறும் விதமினியென்சொல்வேன்
தங்கமுநீறுந் தானேபாஷாணம்
இங்கிதமாக வியல்புடநீறும்
அடியுமுடியு மநாதியுமிதுதான்
வழலைச்சுனம்பொய் யென்பர்லோகர்
நிழல்போற்றெரியு நேராம்பாகம்
முத்தியாய்ச்செய்து முனியதுபாரு
சித்தர்கள்மறைத்த திறமையிதுதான்
சுருக்கைப்பார்த்து சுருக்கமாய்ப்பாரு
இப்படிச்செய்தால் வழலைமுடியும்

முடிந்ததுவழலை முநன்மையாய்ப்பாரு
முன்னேயயத்தை முடிவாய்ச்செம்புபண்
பின்னேசெலவு பிரித்துடனெடுத்து
சௌகாரம்பணு ஜலுதியாய்வங்கம்
நலமாய்நீற்று நல்லதோர் துருசை
பாகமாய்நீற்றி பதியவேரசத்தை
யோகமாய்க்கட்ட வொக்கவேநீறும்
ஒன்பதுலோக மொக்கவேபாய்ச்சு
இங்கிதமாக ஆகிடுந்தங்கம்
இதுதான்பாதை யிப்படிசெகுவிதம்
முதிரவேயொன்று முடித்துவடுத்திடு
தென்பொதிகையில்வளர் சிறந்ததமிழ்முனி
இன்னவகோடிசித் தர்க்கறிவித்ததே. ௨௮

அடச்செம்பு.

சுத்தியதயப்பொடியு மேகதிறையாருஞ்
சுகமானவெண்காரி பாதியெனலாகும்
மத்தினியசெவ்வல்லி சாற்றிலரையுருக்கு
மணிசிறியபயரளவு மணியாயிறங்கும்
சிக்கெனவெடுத்துநிரை பாதிரிடுகாரி
ஜெயமாயரைத்துமே யைந்துதரமுருக்கு
மைக்கினியகருமணிபோ லுருகுமதுமணியாய்
மயமானவிபரமினி சொல்லுவதுகேளே. ௨௯
கேளுமேகால்வாசி வீரமதுகூட்டு
கெடியானபுகைநீரி லரைத்துவிலைபண்ணு

தாளுமேபுடம்போடு எடுத்துஅரையுண்டை
தானேதான்ரவியிலிடு காயவைமேலே
காளுமேகெந்தியது முக்காலும்பண்ணு
கனிவாகஅரைநீரா லரைஜாமமேகம்
வாளுமேயுண்டைமேற் கவசமதுகட்டு
வகையானசுண்ணம்பு மேலிடவேகேளே. ௯0
கேளுமேமண்கவச மதின்பேரிலிட்டு
கெடியானரவிதனிலே காயவேவைத்து
தாளுமேபொடியாக பெருவதனைப்பொடித்து
தக்கதொருபுடம்பெரிதாய் போட்டுமேயெடுநீ
வாளுமேமூசைதனி லுருக்கிடவேகேளு
வகையானரவியெடுநீ பாருமேமேலும்
தாளுமேமதியெட்டில் கொடுத்திடவெகேளு
தக்கவயதாகுமே சொன்னரவிபாரே. ௯௧
பாருமேயிதைவைத்து செலவுதான்செய்து
பண்பாகமகத்தோர்க்கு தொண்டுமேபண்ணு
சேருமேமலைகளிலே சஞ்சரித்துப்பார்
ஜெயமானசித்தர்களை வணங்கிநீகேளு
சாருமேவெகுவித்தை வந்திடுஞ்சித்தி
சதகோடிவிதிகோடி சத்துமஹாகோடி
ஏருமேவழுதாலோ வெள்ளாண்மையாகு
மிதமானரசவாதம் செய்துமேபாரே. ௯௨

கெந்தக சுத்திமாத்திரை.

கெந்தகசுத்தி கிருபையாய்க்கேளு
நந்திசொன்னதை நாடியேபாரு

நாத்தந்தசமெடு நாடியேயரைக்க
பார்த்துமேசீனம் பதினாறுபலமிடி
யுரைத்துமேசட்டியி லுண்மையாயரையிடு
படைத்துமேவாலை பதியவேமூடி
உருந்துமண்சிலை யுண்டையாய்ச்செய்து
அழுத்தவேதிராவகம் அடைவுடனிறங்கும்
வெள்ளைநீராகும் வெண்ஜலம்வருகும்
கள்ளமாயெடுத்து கனமாய்க்குப்பியில்
அடைத்துமேவைத்து அடைவதுகேளு
துடைத்துமேகெந்தி விட்டுமேயரைரவி
காயவேவைத்து கனிவாய்க்கேளு
தாயகமாகதாக் காவின்பாலை
வாய்ப்பாயரையிடு வகையாய்மேலே
தூசணிவித்துத் துப்பறவாக
பாசமாயதன்மேற் பரப்பியேகெந்தியை
மேலேகிடத்தை விருப்பமாய்மூடி
எரித்திடப்புட்டா யின்பமாய்க்கேளு
பரித்தவடியிற் பரிவாய்த்தியெரி
எரித்திடமணியா யின்பமாயிறங்கும்
பாகமாயெடுத்துப் பதிவாய்முன்போல்
ஏகமாயிப்படி ஐந்துதரமும்
பண்ணிடச்சுத்தி பவழமதாகும்
எடுத்துமேரசமிடை யின்பமாய்ச்சேர்த்து
அடித்துஅரைக்க வதுகரியாகும்

களங்கமுமாகுங் கரியையெரியாதே
வளங்காண்வியாதி வடிவுடன்கேளு
இரண்டுமேநின்ற நிறைக்குமேவாளம்
கண்டுமேயரைக்கால் கனிவுடன்சேரு
அரைத்துமேகளங்காயதிலொருபணவிடை
நிரைத்துமேதேனில் நிர்ணயமாகவே
யுண்டிடமண்டல முற்றுமேவியாதிகள்
கண்டுமேயொளிக்குங் கவலைபடாதே
எவ்வெவ்வியாதி கணக்கதுகேளு
சுந்தரமான வாதமெண்பது
போக்குமேமுனிவர் பொருந்தியேசொன்னார்
பித்தமுநாற்பது பேர்ந்துமேபோகும்
சிலேர்ப்பனமெல்லாந் திட்டமாய்ப்போகும்
வாதமும்பித்தமும் பருவவேபோகும்
தாசைபோலவிழ்தந் தந்திடநோவு
தவிடுபொடியாந் தக்கதோர்பத்தியம்
சுவதேதேகம் கணக்கதுகேளு
சூலைவிப்பிருதி தோன்றியேயொளிந்திடும்
வாலைபுமாவார் வடிவதுமெத்த
குஷ்டபத்தெட்டுங் குறைநோய்போய்விடும்
திட்டமாய்ஜன்னி போகுமேயொருநொடி
கண்கள்செவ்வலரிப் பூவதுபோலாம்
புண்கொள்வியாதி காட்டப்போய்விடும்
எங்கள்குலத்துக் கிதுதானவிழ்தம்

தங்கம்போலாம் தக்கதோர்மேனி
யிளையெளிக்கடி யேகவேகேளு

தாளக சிந்தூரம்.

காளைபோல்தாளகங் கனிவாய்ப்பொடித்து
மூன்ரசகெந்தியில் முக்கியமாக
தன்மையாயுருக்கித் தாளகமோடு
கிண்டிடுகுப்பியில் கிருபையாய்ப்பவழமாம்
தொண்டுசேர்பணவிடை திரிகடுதனிலிடு
க்ஷயமுதலெல்லாஞ் சலிப்புடன்போகும்
பயமிலாதிரினாள் பத்தியமாக
செலுத்திடக்ஷயமும் திட்டமாய்ப்போகும்
வலித்திடுநோய்கள் வலிப்புடன்போகும்
எலிகடிநீங்கு மெண்பதுவாய்வரும்
மண்டலிகடிகள் வலிப்புடன்போகும்
கண்டபொழுதே கருணையாய்நீங்கும்
இப்படிக்களங்கி லிதமாய்வெகுநோய்
அப்படித்தீரு மதுபலனாகும்
பவுத்திரமெல்லாம் பதைப்பற்றோடிடும்
கவுத்துவம்போல கருணையுமாகும்
போகமுமாகு மிருந்திடந்தனிலே
பாகமாய்ச்சோரு பதைப்பறவந்திடும்
ரவியில்நாறு கொண்டிடச்சொன்ன
கவியவேபோக ரேழரைசொன்னார்
அதையறிந்திட்டா லதுரவிபழுக்கும்

சிதையரிமேனி செங்கதிராகும்
வகையாய்கரிபோ லாச்சுதேயென்று
தொகையாய்சொல்லி சோம்பித்திரியாதே
சிவனுடவிந்து ரசத்தைக்கூப்பிடு
அழைத்துத்தவமா யென்னைரக்ஷிபுமென்று
தேவியேகெந்தியே திட்டமாயெனக்கு
ஆவலாயருள வென்றுமேகேளு
சகலமுங்கொடுக்குஞ் சமுசயமில்லை
மூலக்கிராணி சோகையுநீங்கும்
வாலையாய்மேனி வடிவுறவாகும்
தங்கமாவர்தவம் புரிந்திடுமுனி
உங்களுக்காக வுறுதியாய்ச்சொன்னதே. ௩௩

அயச்செம்பு தங்க நாகஞ்சேர்த்து சிந்தூரம்.

அயத்தின்செம்புதானெடுத்து ஆனநாலுபகமதா
மாதியொன்றுதங்கநாக மானநேரளவிடை
தயத்தின்ரெண்டுசொக்கவேயுந்தானெபிட்டுவெள்ளை [யாம்
தக்கபிட்டைதானெடுத்து தானேமூன்ரவிதனில்
கயத்தினேருருக்கியே காணநாலுக்கொன்றுமே
காதலாயுருக்குசேர் காதலாயுடைத்துமே
பயத்தினேருரசமொடு பாகமாககெந்திநேர்
பக்குவமதாய்நிறுத்து பாகமாயெடுத்திடே. ௩௪
எடுத்துமேயரைந்திடு கரிசில்தன்னில்சொன்னது
ஏகமாயரைத்துரவி தன்னிலேபவழமாம்

அடுத்துநாறுசெம்புதன்னி லாண்மையாயுருக்கியே
யாதியொன்றுதாக்கிட வணைத்திடவேதங்கமா[ம்
தொடுத்துரசவாதமது தொன்மைபெற நன்மையாம்
சோதியாதி பேதியாஞ்சுகந்தவர்ண மாற்றுமே
கடுத்துமே யகத்தியர் கனிந்துஅயச்செம்பதை
காதலாய்புலத்தியர் கனிந்துஅறிவித்ததே. ௫

அயபஸ்பம்.

வேம்படிதன்னில். விரும்பியேசொல்ல
வம்மையுநந்திக் கருளியவாதம்
செம்மையாய்வயித்தியந் தீர்க்கமாய்ச்சொல்ல
நந்தியுமசுவனி தேவருக்கருளி
புந்தியாயசுவனி புத்தியதாக
தன்மந்திரிக்குதன் வந்திரிதானும்
வன்மமாயகஸ்திய வடிவாமுனிக்கி
நன்மையாய்ச்சொல்லிட நாடியேயகஸ்தியர்
புலத்தியர்க்கருளின பெரியகரிசிலில்
சூத்திரமாக முப்பத்தாறில்
அயபற்பந்தனை யறிவுடன்கேளு
நயமதாய்தந்த ஜடநீராலே
மூன்றுநாளூற முக்கியமாகவே
நன்றாய்ப்பாணியால் நலம்பெறவரைத்து
கரைத்துமேகேளு காணவேகேளு
யரைத்திடப்பண்ணை யதிலரையிடுநீ
நிரைத்துமேவிழி வேர்த்தோல்பட்டை

சிவியேயிடித்துச் சிறக்கவேபிழிந்து
ஆவலாயரைத்து யதிலிடுபுடமும்
திரிநேரிட்டு திட்டமாயெடுத்து
அறிவுடனயத்தி லரைவாசிவீரம்
சேத்துமேவிழிப் பட்டைநீராலே
பார்த்துஅரைத்துப் பதிவுடனெட்டுப்
புடமிடுநீறும் பெரிதாயயமுந்
திடமதாய்வெள்ளையாய் திட்டமாய்ப்போடு
வெள்ளையாக மட்டுமேபுடமிடு
கள்ளமில்லாமல் கனிவாய்ப்புடமிடு
வல்லமையில் லாதேபோனால்
நடமதாய்கரியில் வைத்துமேயூதிடு
வெள்ளையாய்நீறும் விருப்பமாயிப்படி
துள்ளவேசெய்தால் துடியாய்நீறும்
தங்கமுமிப்படி தானவலோகமு
மிங்கிதமாக இட்டிடவெள்ளையாம்
பாடதுபடாமற் போனால்நீறு
ஏடதுபொய்யா மினிரசவாதிகேள்
முடிவினிற்சொன்னேன் முக்கியமாக
துடிகொளயநீர் பணவிடைமண்டலங்
கொடுக்கவியாதிகள் குறைநோய்குட்டம்
அடுத்துமேபோகும் பாகமாய்ச்செய்து
இப்படிசெயிலய மியல்பாய்நீறும்
தப்பியேபோனால் தானென்செயலாம்
சாத்திரம்பொய்யாம் சவுங்கவேகேளு

பாத்திரமாக ப்ரிவாய்செய்தால்
விருப்பமாய்வேலேசெய் வேலேகள்வாதமாம்
ஆலேகள்போலவே யலேந்தால்பயனென்
அயமதுபற்பம் ரவியினிலிட்டிட
கனியவேயெட்டரை கனிவாயாணியாம்
வரிக்கிவரிநான் சொல்லமுடியா
புத்தியாய்ச்சாத்திரம் பொறுமையாய்ப்பாரு
சத்தியமாக சாற்றினேன்கரிசிலில்
மூப்புவிபரம் விதமாயிதுதான்
ஏருவுழுந்தா விதமாய்ப்பயிராம்
தார்கோல்போட்டால் தாக்காய்காளே
நடக்கும்பாரு நலமாய்சாத்திரம்
வடநூல்கிரந்தம் வண்மையாய்ப்பார்த்து
கரிசிலில்சொன்ன கணக்கையும்பார்த்து
செய்தால்பலனும் சித்தமாய்ப்பாரு
வையகந்தன்னில் வகையாய்ப்பிழைநீ
பையவேசெய்து பதிவுடனில்லு
பாக்மாய்நிரைகள் பக்குவந்தப்பினல்
யாகமாய்ப்போகு மெடுத்துமேபாரு
எதனுல்பார்த்தா லெரிபுடந்தப்பும்
மெத்தவேசொன்னேன் முறைபோல்பாரு
வாளமில்லாமல் மருந்துகள்செய்தால்
தேளாம்வியாதிகள் திட்டமாயேகா
பாகத்துடனே பதியவேநிறையாய்

யோகமாய்ச்செய்தா லொழுங்கதுவாகும்
சித்தர்மறைத்தச் சிறப்பையுஞ்சொன்னேன்
சாதனையாகத் தர்க்கம்பணாமல்
போதனையாக புத்தியாய்விசாரி
எப்படியெல்லா மின்பமாய்வருகும்
சொற்படிதப்பினால் சுருக்கமும்பொய்யாம்
நற்கடலதனை நலமாய்க்குடங்கையில்
ஏர்க்கவேயுண்ட யினியமகாமுனி

சொன்னதுசூத்திரம் சுருக்கமாய்ப்பாரு
இங்கிலந்தன்னி லெடுத்துரைப்போரே
பாடினேன்பாகம் பரிவுடன்பார்த்து
தேடியேநின்றால் திறமுடன்செய்தால்
பலக்குமேவயித்தியம் பண்பாய்ஜீவனம்
வலுத்துமேயாகும் வடமொழிகிரந்தம்
பார்த்துமேபடித்து பதிவுடன்சொன்னேன்
சேத்துமேபாரு திட்டமாய்வாதமாம்
அயத்தையேகூப்பிடு அடியேனேழை
தயவாய்ச்சொல்லு தவப்பலங்கொடுக்கும்
ரசத்தையுமுழைத்தே நயமுடன்வாதம்
பிசக்கறக்கொடுக்கும் பிரபலமாக

வுப்பையுமுந்த வுண்மையாய்ப்பாரு
அப்பினாலுப்பையு மடைவாய்க்கட்டு
உப்புச்சுன்ன முண்மையாய்ப்பண்ணு
மெய்ப்புடன்மூலிகை தன்னிலேயிட்டு

கைப்பிடியாக கரகாதுகட்டும்
வேறுமூலிகையில் விரும்பிநில்லாதே
தறுதுரும்பனைப்போல் தர்க்கம்பேசாதே
நாய்கள்வெள்ளெலும்பு நலங்கியேகடித்தால்
மாயமாய்த்தன்கடை வாயிலிருந்து
ரத்தம்வருகும் நினைவுடனக்கும்
மெத்தவேயெலும்பி லிருந்தவாரதுபோல்
சித்தமாய்நினைக்கும் தெருநாயதுதான்
அப்படிபோல வாகுமேமூலிகை
சொற்படிபோல துரிதமாயுப்பை
முந்தியேசுன்னம் பண்ணியேமூலிகை
சிந்தனையாக சிறப்புடனிட்டு
பிழிந்திடச்சாற்றில் பொருமையாய்சரக்கை
கழிந்திடக்கட்டு லோகந்தங்கமாம்
உப்பைவிட்டா லுண்மையாய்மூலியில்
தப்பாய்ப்பார்த்தால் தானேயுதைநீ
திட்டாந்தஞ்சொல்வேன் செல்வபுலத்தியா
முட்டவேகாய முறுதிகாணுப்பு
இதையறிமனத்தி லின்பமாய்ப்பாரு
அதுஇதுவென்று அலையவேவேண்டாம்
உபதேசமாக வுண்மையாய்ச்சொன்னேன்
நிஜமாய்சூத்திரம் நிண்ணயம்பாரு
தட்டான்வைத்த தாயார்தன்னை
யிட்டமாயுறுதியா யின்பமாய்நினைநீ
வாதத்தைமுன்னே வகையுடன்பண்ணு

நீதமாய்ப்பசுக்கள் நிச்சயமாகும்
செய்துமேமோக்ஷ கதியடைநாளும்
பையவேதிரேகம் பதிவாய்கற்பமாம்
உண்டிடநிறுத்து முண்மையாய்நீற்றும்
கண்டபேருடனே கருச்சொல்லாதே
துரிசதுநீருல் துகைரசங்கட்டு
வரிசையாக கவனவழியது
வாதம்செய்தால் வரிசையாய் தங்கம்
பாதையாய்ச்செய்தால் பலனதுஉண்டாம்
அயத்தின்செம்பை யடைவுடனெடுத்து
பிசக்கிலாஜீவனம் பண்ணியேயெல்லாம்
நயமதாய்ப்பாரு நாடிபுலத்தியா
தனியேயிருந்து தாட்டிகவாதம்
பாரினி லென்சொல்வேன்
இதுநல்லபுத்தி யென்னுடசாத்திரம்
இயல்பாய்ரொம்ப தண்மையாய்சுருக்கி
கரிசிலைப் பாடினேன்

இதையுஞ்சுருக்கி யினமுப்பத்தாறும்
சுதையாய்ப்பாடினேன் சூத்திரம்பாரு
சாத்திரமெல்லாந் தடையறப்பாரு
சூத்திரமகப்படுஞ் சுருதிபுலத்தியா
கேள்வியினலே கெடிபெறச்சுட்டு
தாழ்வாய்ப்போக தப்பிநினையாதே
மனிதர்களெல்லா மாயாமலத்தர்

தனியேசர்த்திரந் தடையறப்பார்த்து
சுட்டாலபிக்குஞ் சுடாட்டால்வருமோ
கட்டாயமாக கனிந்துமேசாத்திரம்
தேடியேபாரு செல்வநிலைத்திடுங்
கூடியேசரக்கில் குறிப்பையறிநீ
எல்லாமறிந்து இன்பமாய்ச்சோதி
சொல்லாற்பெரியோர் சொன்னதுபுத்தி
சமுத்திரந்தன்னைத் தான்குடங்கையில்
அனைத்துமேவாங்கி யதையுண்மாமுனி
சொன்னதுசூத்திர முப்பத்தாறுமே
நன்னயமாக நவிலவேபாரே. ௩௬

கரிசில் சூத்திர முப்பத்தாறும்
முற்றிற்று.

உ

சிவமயம்.

யூகிமுனி கரிசில்—௫௬.

விஷயம்.	பக்கம்.
நூறபாயிரம்—அகவல்.	௧
சற்சீடரியல்பு.	௨
இந்நூலிற்கூறியபொருள்.	௩
மந்திரம்.	,,
ரசங்கட்டும்வகை.	௪
வீரரசபதங்கமுமதில் தீரும்வியாதியும் வண்ணம்.	௬
அயக்காந்த சிந்தூரம்.	௭
இரசபஸ்பம்.	௮
பேதிஅயக்காந்தம்.	௯
சூரத்திற்கு மலங்கழியமாத்திரை.	௧௦
இலிங்கரச வயக்காந்தசிந்தூரம்	௧௧
அயச்சிந்தூரம்	,,
காந்தசிந்தூரம்	,,
அயக்காந்த மிரண்டுஞ் சேர்த்தல்.	,,
லிங்கரசமெடுத்தல்.	௧௨
இதற்கு அனுபானமும் தீரும் வியாதிகளும்.	௧௪
நாகபஸ்பம்.	௧௭
இதற்குத் தீரும்வியாதிகள்.	௧௮
தாம்ரரசசிந்தூரம்.	,,
வாளபேதி மாத்திரை.	௧௯
சிங்கமுகத் திராவகம்.	௨௧
வீரரசம் அதன்பஸ்பம் அதன்சிந்தூரம்.	௨௨
வீரத்திராவகம்.	௨௪
ரச சிந்தூரம்.	௨௭
வேறு-ரசத் திராவகம்.	௨௯

விஷயம்.	பக்கம்.	விஷயம்.	பக்கம்
அப்ரக சிந்தூரம்.	௩௨	சண்டரச பஸ்பம்.	௪௪
காசிபர் காதை.	௩௩	தங்கரச சிந்தூரம்.	௪௫
தாம்ரபஸ்பம்.	௩௬	சௌகாரம்.	௪௯
அண்டோடு சுன்னம் படிகார சுன்னம் வெள்ளிய ரசங்களைச் செய்து வேதையாட.	௩௭	அயச்செம்பு.	௫௪
வியாதிகளுக்கு இலிங்கரச பஸ்பத்திற் கநுபானம்.	௩௯	கெந்தகசுத்திமாத்திரை.	௫௫
		தாளகசிந்தூரம்.	௫௮
		அயச்செம்பு தங்கநாகஞ்சேர்த்த சிந்தூரம்.	௫௯
		அயபஸ்பம்.	௬0

முற்றிற்று.

உ

சிவமயம்.

யூகிமுனி

பூரணம் — ௧௦௦.

காப்பு.

ஒத்தையாங் கொம்புடைய கணேசன்பாதம்
ஓதறிய சிவனுடைய பாதம்போற்றி
நித்தியமாய் நிறைந்தவுமை பாதம்போற்றி
நினைவில்லைத் தனுதினமுந் துதியேசெய்து
சித்திபெற்றோர் நாதாக்கள் பாதம்போற்றி
சித்தருட அடிதனையே சிறக்கவாழ்த்தி
நத்தியே பூரணத்தைச் சுருக்கமாக
நலமாக நானுகப் பாடினேனே. ௧

நூலுபதேசக்கிரமம்.

பாடினேன் சிவன் [illegible]வும் அம்மைக்குச்சொல்ல
பதிவான [illegible]மைமன மகிழ்ந்துநோக்கி
வாடியே அசுவனிக்குச் சொன்னபோது
வடிவான அசுவனியுங் கேட்டுத்தானே
நாடியே விசுவனிக்குச் சொன்னாரையா
நலமாக விசுவனியுஞ் சந்தோஷித்துத்
தேடியே நந்திக்குச் சொன்னபோது
திடமாக நந்திமன மகிழ்ந்தவாறே. ௨

வாறுகேள் நந்தியவர் மகிழ்ந்துநோக்கி
வடிவான தன்மந்திரி களிக்கச்சொன்னார்
கூறுகேள் தன்மந்திரி மனமகிழ்ந்து
குணமாக அகஸ்தியர்க்குக் கருவைச்சொன்னார்
நாறுகேள் அகஸ்தியரு மனமகிழ்ந்து

நலமான புலத்தியர்க்கு நன்மைசொன்னார்
நீறுகேள் புலத்தியருந் தேர்ந்துபார்த்து
நிஜமாகத் தேரையர்க்குச் சொன்னார்தானே. ௩

வழலை.

தானென்ற தேரையருஞ் சந்தோஷித்துத்
தாட்டிகமா பூகிமுனி தன்னைநோக்கி
வானென்ற ஆதியோ டந்தமாக
வரிசையாய்ச் சொல்லிவிட்டேன் பூகிதானும்
தேனென்ற தமிழ்க்கிரந்தந் தன்னைநோக்கித்
தெளிவாக ஆதியோ டந்தமாகப்
பானென்ற வழலைதனைச் சுருக்கமாகப்
பதிவாக நூறுகப் பாடினேனே. ௪

சவுக்கார வழலை.

பாடினேன் சவுக்கார வழலைகேளு
பதிவாகப் பெருநூலில் வ[illegible]ாகத்தைக்
கூடியே சொல்லவில்லை பூரணத்த[illegible]
குணமாக வழலைதன்னை விரிவா[illegible]ச்சொன்னேன்
தேடியே யிந்நூலைத் தெளிந்துபாரு
திடமாக வழலையென்ற பொருளுமாகும்
நாடியே கைபாக வரிசையாகும்
நாதாந்த வழலையிது நலமிதாமே. ௫

ஆமென்ற சவுக்கார வழலைதன்னை
அறைகிறே னுடலாங் கோடிவித்தை
நானென்ற பூநீறு பதக்குவாரி
நலமான சுண்ணம்பு பதக்குக்கூட்டிக்
கானென்ற அமரிபடி யெட்டுவூத்திக்
கலக்கியே மூன்றுநாள் காணவைத்துத்

தாமென்ற தெளிவிறுத்து நல்லெண்ணெய்தானுந்
தண்மையாய்ப் படியெட்டு கூடவாரே. ௬
வார்த்துமே சவுக்காரந் தன்னிலேதான்
வடிவாகக் காரமுதல் முறிந்துபோகும்
நாத்துமே காரத்தைக் கட்டக்கட்ட
நலமாக முறியமட்டுங் காரங்கூட்டு
பார்த்துமே பாலாக முறியமட்டும்
பதிவாக விட்டுநீ தெளிவிறுத்துக்
கூறுநீ காய்ச்சிடவே வெண்ணெயாகும்
குணமாக சவுக்கார வுண்டைபண்ணே ௭
உண்டைமே லஞ்சுசுன்னம் பதிவாய்க்கட்டி
யுலரவே ரவிதனிலே காயவைத்து
நண்ணியே பத்தெருவிற் புடத்தைப்போட்டு
நலமாக வெடுத்துப்பார் சவுக்காரந்தான்
உன்னியே கடுமையாய்ச் சுன்னமாகும்
உறுதிமெத்த சுன்னத்தால் வேதைகோடி
துன்னியே சவுக்காரம் பலமெடுத்துத்
துடியாகக் கலுவத்தி லிட்டுக்கேளே ௮

சவுக்காரச் சுன்னத்தைத் துருசுக்குக் கவசமிட்டுத்
துருசுச்சுன்னம்செய்து வேதையாட.

இட்டுமே வெண்கருவா லரைத்துத்தானும்
இதமாக வரைத்துமே துருசின்மேலே
கட்டியே கதிர்படவே காயவைத்துக்
கனிவாகக் குக்கிடத்திற் போடச்சுன்னம்
நட்டுமே சாருவருத் தழையிலிட்டு
நலமாகக் காய்ச்சியே பிழிந்துபாரு
வட்டுமே சாராகும் ஜலத்தைத்தானும்
வடிவாக விட்டுநீ கரண்டிதானே. ௯

சூதம்கட்டி வேதை.

தானேதான் கரண்டி தனி விட்டுநீயுந்
தாட்டிகமாய்ச் சூதத்தை விட்டுக்காச்சு
நானென்ற சூதமது கட்டிப்போகும்
நலமாக சரக்கெல்லா மிதிலேசாகும்
பானென்ற மெழுகாகும் சிந்தூரந்தான்
பாய்ச்சலா மொருகோடி வித்தையப்பா
வானென்ற வித்தையினல் தங்கங்கோடி
வடிவாக கைபாக மாகப்பாரே. கo

அயச்செம்பு, கெந்தகத்தயிலம்.

பார்க்கவே அயச்செம்பு சொல்லக்கேளு
பலகாலம் வைத்துநீ ஜீவனத்தை
ஏர்க்கவே செய்துநீ யுண்டுடுத்தி
யிதமாக ஞானவழி யடுத்துப்பாரு
கார்க்கவே சொல்லுகிறேன் கருணையாகக்
கனிவாக கைபாக வரிசையாக
வார்க்கவே வழலையது கைபாகந்தான்
வடிவாகச் சொல்லுகிறேன் வண்மையாமே. கக

வண்மையாய்ச் செவ்வல்லிப் பூச்சார்தானும்
வடிவாகப் படியொன்று சட்டியிட்டு
உண்மையாய் வெண்காரச் சுன்னம்பண்ணி
உரவாகப் பலமிரண்டு கூடக்கூட்டி
தண்மையாய்ச் செவ்வல்லிப் பூச்சார்விட்டுத்
தாட்டிகமாய்ப் போட்டுநீ கலக்கித்தானே
வெண்மையாய் பார்த்திடவே கரைந்துபோகும்
விருப்பமாய் நல்லெண்ணெய் கூடவிட்டே. கஉ
விட்டுநீ யெண்ணெயது முறியுமட்டும்
விதமாகப் பால்போலே முறிந்துதானல்

கட்டுமே கெந்திபது பலமும்நாலு
கனிவாகப் பாலிலே போட்டுநன்றாய்
விட்டுநீ பெரித்திடவே கெந்திதானும்
விதமாக முறிந்துதான் தயிலமாகும்
நட்டுமே தயிலத்தில் வேதைகோடி
நலமாக குருகோடி நடத்தைபாரே. ௧௩

பாருமே தயிலத்தை யிறுத்துக்கொண்டு
பதிவாகத் தயிலமது பலமுமஞ்சு
காருமே அரப்பொடியும் பலமுமஞ்சு
கணக்காகத் தயிலத்திற் போட்டுநன்றாய்
வாருமே கொதியிட்டு ஒட்டக்காய்ச்சி
வடிவாகக் குகையிலிட் டுருககினுக்கால்
சாருமே வெள்ளிபொன்போல் கண்விட்டாடும்
சரியாக வேதையிதிற் றண்மையாமே. ௧௪

ஆமேதா னயமுமது முருகித்தானு
லாடலாம் வேதையிதி லநேகங்கோடி
தாமேதா னயமுருகில் கெந்திசெம்பை
தானிழுக்கு மதுதானும் வழலையாலே
நாமேதான் சொல்லிவிட்டேன் பூரணத்தில்
நன்றாக வாதத்தைக் குறுக்கிநூலில்
வாமேதான் சுருக்கமா யிந்தநூலே
வடிவாகச் சவுக்கார வழலைதானே. ௧௫

தானென்ற விந்தநூல் தன்னிலேதான்
தப்பாமல் வழலைய தெண்ணெய்வாங்க
கானென்ற முன்னூலில் நானூர்தன்னில்
நலமாகச் சொல்லவில்லை யென்றுசொல்லி
கானென்ற விந்தநூல் நூறுதன்னிற்
கனிவாகச் சொல்லிவிட்டேன் கருணைபாரு

பானென்ற முன்னுருக்கு மயத்தைநீயும்
பதிவாகச் சேரொன்று நிறுத்துக்கொள்ளே. கசு

கொள்ளவே நிறுத்துநீ நூரவைத்து
குணமாகச் சொல்லுகிறேன் குவிந்துகேளு
மெள்ளவே பூரணத்திற் சொன்னமார்க்கம் [னேன்
மேன்மையாய்ச் செம்புதனைக் கொல்லச்சொன்
துள்ளவே செம்புதனைக் கொன்றெடுத்துத்
துட்டியாக முன்னுருக்கு மயத்திற்சேரு
நள்ளவே முன்தபில மதிலேவிட்டு
நலமாக வொட்டயெரி நடத்தைதானே. கஎ

மிருதார்சிங்கி சிந்தூரம்.

தானேதா னெரித்துமே பதமாகத்தான்
தாட்டிகமா யுருக்கிடவே சத்துமாகும்
பூணேதான் சத்துதன்னைப் புறம்பாய்வைத்துப்
புண்ணியமாய் மிருதார சிங்கியோடே
நானேதான் காரீய மிடையேசேர்த்து
நலமாக வரைத்துநீ யமுரியாலே
வானேதான் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
வட்டிவான துருசதுவு மிடையேசேரே. கஅ

சேர்த்துநீ யமுரியா விருஜாமந்தான்
செம்மைபட வாட்டியே வில்லைகட்டி
பார்த்துநீ ரவிதனிலே காயப்போடு
பதிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
கார்த்துநீ சிங்கியது வெட்டையாகுங்
கனிவாக முன்சத்தி லிடையேசேர்த்து
நாத்துநீ பத்தெருவிற் புடத்தைப்போடு
நலமாகச் சிவந்தநிற மாகுந்தானே. கசு

ஆகுமே விதையெடுத்துக் காரங்கூட்டி
அடைவாக வுருகிடவே செம்புமாகும்
ஏகுமே யிச்செம்பு தங்கம்போலாம்
இதமாக வெட்டிரண்டு வெள்ளிதன்னில்
பாகுபெறச் சேர்த்துருக்க மாத்துமெட்டு
பதிவாக விதைவித்துச் செலவுசெய்து
தாகுமே யுண்டுடுத்தி ஞானயோகந்
தப்பாதே பார்த்திடவே சித்தியாமே ௨0

வழலைவிபரம் வாதம்முதற்காண்டம்பார்,
காயசித்தியாகும்.

சித்திபெறச் சவுக்கார விபரமெல்லாஞ்
சின்மயத்தி னருளாலே இந்தநூலில்
முத்தியாய்ச் சொல்லிவிட்டேன் முதற்காண்டத்தில்
முனிவாகக் கொஞ்சந்தான் வழலைதன்னை
நத்தியே கைபாக வரிசைகண்டால்
நலமாக காயசித்தி நல்லதாகும்
புத்தியா யிவ்வுலகில் வாதமார்க்கம்
புகலரிய வெல்லாமும் பெருமையாமே. ௨௧

சவுக்கார எண்ணெயால் வர்ணமுண்டாகும்.

ஆமேதான் சவுக்காரத் துள்ளேயெண்ணெய்
அடைவாகப் புகுந்தாக்கா லநேகவித்தை
நாமேதான் வழலையில்லா வாதமெல்லாம்
நாடாது வர்ணமது ஏறிடாது
வாமேதா னெண்ணெயது வாதமாகும்
வடிவான சவுக்கார முறிந்துதானல்
தாமேதான் வர்ணமிக வாகும்பாரு
தாட்டிகமா யிதையறியச் சித்திதானே ௨௨

வாதியின்றன்மை.

காணவே வழலைவிட்டோன் வாதியல்லக்
கனிவாகக் கைபாகங் கண்டோன்வாதி
ஊணவே வுருவாக வொன்றுமில்லை
உத்தமமே பார்த்திடவே சித்திசித்தி
பேணவே பெண்ணாசை விட்டோன்வாதி
பிசகாதே வாதம்வரும் பிசகொன்றில்லை
தோணவே சாஸ்திரங்க ளெல்லாம்பார்த்தால்
தொல்லுலகில் சித்திதரும் தோற்றமாமே. உக

நூல்பார்க்க சகலமுஞ்சித்தி.

ஆமேதான் முன்னேதான் நூல்கற்றோர்க்கு
அடைவாக ஞானவழி யடுத்துக்கூடத்
தாமேதான் வாதசித்தி போகஞ்சித்தி
தப்பாமற் பண்டிதமுஞ் சித்தியாகும்
வாமேதா னிதையறிந்து வல்லோரெல்லாம்
வகைஞானம் பேசுவார் மார்க்கமாக
நாமேதான் சொல்லிவிட்டே னிந்நூல்தன்னில்
நலமாகச் சொயஞ்சோதி யாகும்பாரே. உச

அப்ரேகச்செம்பு.

ஆகுமே அப்பிரகச் செம்புகேளு
ஆதியாங் கைபாக வரிசையாகப்
பாகுபேர் வழலையினால் செம்புமாகும்
பதிவாகச் செம்பைவிட்டால் செம்பேயில்லை
தாகுமே வடிவான தங்கமார்க்கந்
தாட்டிகமாய்ச் சொல்லுகிறே னூற்றுக்கேளு
வாகுமே யெல்லாமுஞ் சித்தியாகும்
வடிவாக விந்நூலை மருவிப்பாரே. உரு

பாவொன்ற அப்பிரேகஞ் சேருவொன்று
பதிவாக அரப்பொடியாய்ச் செய்துநீயுந்
தானென்ற தாளகமுஞ் சேருவொன்று
தாட்டிகமாய்த் துருசதுவுஞ் சுட்டநீறு
வாமெனன்ற கல்வத்தி விட்டுத்தானே
வடிவாக விருஜாமம் பாணியாலே
நானென்று ஆட்டியே கதிரிலிட்டு
நலமாகப் பாகமதை நவிலக்கேளு. ௨௬

நவிலவே நல்லெண்ணெய் சேருவொன்று
நலமான வெடியுப்பு சுன்னமொன்று
கவிலவே நல்லதண்ணீர் சேருமொன்று
கனிவாகத் தண்ணீரை விட்டுச்சுன்னம்
பயிலவே கடைந்துநீ இறுத்துத்தானே
பதிவாக நல்லெண்ணெய் தனிலேவிட்டு
தவிலவே முறியமட்டும் பாலதாகத்
தாட்டிகமாய் முறிந்துநீ பின்புகேளே. ௨௭

கேளுமே முன்னுரைத்த அப்ரகத்தை
கெடியாக முறித்தவொரு பாலிலிட்டு
வாளுமே கொதிபிட்டு பொங்காமற்றான்
வடிவாக வெண்காரம் பொரித்துப்போட்டு
நாளுமே யொட்டியெரி குகையிலிட்டு
நன்றாக வுரிக்கிடவே மணியுமாகும்
பாலுமே வெள்ளிபொன்போற் கண்விட்டாடும்
பதிவாகக் கல்வத்தி லிட்டிடாயே. ௨௮

இட்டுமே காரமது சேருவொன்று
இதமாக விட்டுமே பழச்சாற்றாலே

கட்டுமே விட்டரைத் துண்டைபண்ணி
நலமாகக் குகைப்பிலிட் டுருக்கித்சிரு
பட்டுமே வெள்ளிபொன்போல் கண்விட்டாடும்
பதிவாக அப்பிரகச் சத்துமாச்சு
வட்டுமே சத்தெடுத்துப் புறம்பாய்வைத்து
வடிவாகச் சிங்கியது பலமுங்கேளே. உ௯

அப்ரேகச் சத்துடன் மிருதார்சிங்கிசேர்ந்த சிந்தூரம்.

கேளுமே மிருதார சிங்கிதானும்
கெடியாகப் பலமதுதான் சேருமொன்று
வாளுமே சிங்கியிடை துருகசேரு
வடிவாக விதுரண்டுங் கல்வத்திட்டு
நாளுமே இருஜாம மரைத்துவில்லை
நலமாகக் கட்டியே கதிரிலிட்டு
பாளுமே போகாது புடமும்போடப்
பதிவாகப் புடம்போட் டெடுத்துப்பாரோ. ௩0
எடுத்துமே சிங்கிபது சிந்தூரமாகும்
இதமாக அப்பிரகச் சத்ததோடே
அடுத்துநீ சேர்த்துஅரை அமுரியாலே
அடைவாக யிருஜாமஞ் சென்றபின்பு
கடுத்துநீ வில்லைகட்டிக் காயப்போடு
கனிவாகப் பெரியபுடம் போட்டெடுக்க
நடத்துநீ சிந்தூர முருக்கம்பூவாம்
நலமாக வேதையிலே ரொம்பக்கேளே. ௩௧

ஷை வேதை.

கேளுமே வெள்ளியது யெட்டுதானுங்
கெடியாக ரண்டுமது சேர்த்துத்தானே

ஆளுமே யுருக்கிடவே தங்கமாகும்
அடைவாகத் தங்கமது பத்துமாத்து
ஏலுமே யருகுகட்டி யிரக்கும்பாரு
இதமாக யிதைவித்து ஜீவனத்தை
நாலுமே யுண்டுநீ ரேசகும்பம்
நலமான வாசியதைச் செய்திடாயே கஉ

செய்திடவே அப்பிரகச் செம்பைப்போலே
செகத்திலே கிடையாது சித்தியாகும்
நய்திடவே சத்தியுட நாதமாச்சு
நலமான பொருளாச்சு நல்சித்தாதி
கைதிடவே வாதவெள்ளக் கிணறுமாச்சுக்
கனிவாக சிந்தூரம் பண்ணியுண்ண
பைதிடவே நரைதிரைக ளற்றுப்போச்சுப்
பதிவான விதியாளி காணுவானே கக

வெள்ளிவித்தை சூதபாஷாணக்களங்கு.

காணவே பூரணத்தில் வெள்ளிவித்தை
கனிவாகச் சொல்லிவிட்டேன் கனிந்துபாரு
ஊணவே சூத்திரத்திற் சுருக்கமாக
உறுதியாய்ச் சொல்லுகிறே னூற்றுக்கேளு
வாணவே சூதத்தின் பதங்கந்தானும்
வடிவாக பலம்பத்து நிறுத்துக்கல்வம்
மாணவே பாஷாணஞ் சேருஒன்று
அடைவாகப் பொடித்துநீ கிடத்திற்போடேசு

போட்டுமே மேல்மூடி சீலைசெய்து
பொதிவாக வடுப்பேத்தி யெரித்துப்பாரு
நாட்டுமே வெள்ளையென்ற பாஷாணத்தில்
நலமாக விருந்தளண்ணெய் தீயோயேறும்

காட்டுமே பதங்கமது மிடையேசேர்த்துக்
கனிவாக அரைத்திடவே வேண்டும்பாரு
வாட்டுநீ யிதையரைக்கப் புகைநீர்கேளு
வடிவான சீனமது சேருஒன்றே. ௬௫

சீனத்திராவகம்.

ஒன்றாக இட்டுநீ பொடித்துத்தானும்
உருவாக வாலேயென்ற சட்டிமூடி
நன்றாக விருஜாம மெரித்திட்டாக்கால்
நலமான புளிப்பான புகைநீராகும்
வன்றான யிந்நீரி ைலேபாட்டி
வடிவாக வுண்டைபண்ணிக் காயவைத்துக்
கன்றாக வப்பிலிட் டெரிக்கநீயுங்
கனிவாக வோடாம லிருக்கும்பாரே. ௬௬

ஷையால் வெள்ளீயநீர்வாங்க
அண்டோடு சிளிஞ்சல்சேர்த்த சுன்னம்.

ஆச்சப்பா களங்காக விருக்கும்பாரு
அருள்பெருகும் பூரணத்தை நோக்கித்தானே
வாச்சப்பா வெள்ளீயம் நீரைவாங்க
வடிவாகச் சொல்லுகிறேன் வண்மைகேளு
பாச்சப்பா அண்டோடு சேருபத்து
பதிவாகக் கிளிஞ்சியென்ற ஓடுபத்து
நாச்சப்பா வுவர்மண்ணுஞ் சுண்ணம்புநேரோ
நலமாகப் படியொன்று கறைத்திடாயே ௬௭

கரைத்துமே பாணிவிட்டுத் திரிநாள்வைத்துக்
கனிவாகத் தெளிவிறுத்துப் பின்புகேளு
நரைத்துமே அண்டோடு கிளிஞ்சிபோட்டு
நலமாக வொட்டயெரி கட்டிப்போகும்

முறைத்துநீ பாண்டத்தி லோட்டிலெண்ணெய்
முனிவாகக் கழன்றுபோ மிதையெடுத்து
பறைத்துமே தழுவியே காயப்போட்டுப்
பதிவாக வுரலிலிட் டிடித்திடாயே. ௧௮

இடித்துநீ பொடியாக்கி பெட்டுக்கொன்று
இதமாகச் சீனத்தைப் பொடித்துப்போடு
நடித்துமே கலந்துநீ நினைவதாக
நலமான சுட்டகுகை தனையெடுத்து
வடித்துமே மாவதனைப் பாதிஇட்டு
வடிவாக வெள்ளியங் குகைபிலிட்டு
படித்துநீ யதன்மேலே மாவைக்கொட்டி
பதிவாக வுலையில்வைத் தூதிடாயே. ௧௯

ஊதிடவே வெள்ளியம் நீர்களெல்லாம்
ஊதவே விஷநீர்க ளற்றுப்போகும்
காதிடவே வெள்ளிபோல் நிறமுமாகுங்
கனிவாக வோசையது காணுநன்றாய்
வாதிடவே யிந்தவெள் ளீயந்தன்னில்
வடிவாக நூத்துக் கொன்றுதானும்
மாதிடவே முன்சொன்ன களங்கந்தன்னை
மயமாகக் கொடுத்துருக்கி மாத்துப்பாரே. ௨0

மாத்தாகும் வெள்ளிதான் பத்துமாத்து
மயமாக வங்கத்தைக் கொடுத்தூத
கூத்தாடி யோடாது பத்துமாத்துக்
குணமாக விந்தவெள்ளி நல்லதாகும்
வாத்தாடி யிதைவித்து ஜீவனத்தை
வடிவாகச் செய்திடவே வடிவுமெத்த

நாத்தாகக் கண்டுகொள்ளு நாடிப்பாரு
நல்லசித்தா மாகுமது நம்பிப்பாரே. சக

பாருநீ யிந்தவெள்ளி வித்தைதானும்
பதிவாக வித்துநீ வாசியோகந்
தாருநீ பார்த்திடவே சகலசித்துந்
தானாகும் வேதைகுரு தாண்டியோடும்
வாருநீ சூத்திரத்தில் சுருக்கிச்சொன்னேன்
வடிவாக இதுரண்டு மொத்துப்பாரு
காருநீ வைத்திடவே சித்தியாகும்
கருணையாய் ஞானத்தைப் பார்த்திடாயே. சஉ

கண்டிடவே வேணுமென்றால் சொல்லக்கேளு
கனமாக வெள்ளீயம் நீரைவாங்கி
முண்டிடவே யிதைவித்து ஜீவனத்தை
முடிவாகப் பண்ணிவிட முத்திமுத்தி
பண்டிபழங் கதையைநீ பேசவேண்டாம்
பதிவாகக் கைபாகங் கண்டெடுத்துத்
தொண்டுநீ செய்தாலோ சகலசித்துந்
துடியாக வெல்லாமுஞ் சித்தியாமே. சங

வெடியுப்புச் சுன்னம்.

சித்தியே யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பாக விந்நூலில் சொன்னசொல்லை
முத்தியா யதைப்பிரித்து சூஸ்திரத்தில்
முனிவாகச் சொல்லுகிறேன் முனிந்துகேளு
நத்தியே வெடியுப்பு ஐந்தாங்காச்சல்
நலமாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
சத்தியே பழம்புளிதான் பலமோரைந்து
நலமாக ரண்டுமொன்றாய்ச் சேர்த்திடீரே சச

சேத்துநீ வுலக்கையா லிடித்துநைய
　செம்மையாய் மூன்றுநாள் கதிரிலிட்டு
பாத்துநீ புதுச்சட்டி யடுப்பிலிட்டுப்
　பரிவாக எரியிட்டுப் பார்க்கத்தானும்
வார்த்துமே யெரிந்துமே யுருகிநிற்கும்
　வடிவாகக் கடுஞ்சுன்ன மாகக்காணும்
ஊத்துமே வழித்துநீ புரமேவைத்து
　உறுதியா யிந்திடைக்குப் பாதிதானே. ௭௫

பாதியாய்ச் சுடர்க்கொடியோன் பாதியிட்டுப்
　பாகமா யெலுமிச்சம் பழச்சாருட்டி
நாதியாய் வில்லைகட்டிக் காயப்போடு
　நலமாகச் சுண்ணும்புக் குள்ளேயிட்டு
சேதியாப் பத்தெருவிற் புடத்தைப்போடு
　ஜெயமாகச் சுன்னமது கசிவுநீங்கி
கோதியா யிருக்குமது பின்புகேளு
　குணமாகக் கைபாக வரிசைகேளே. ௭௬

வரிசையாய்ச் சுன்னத்தி னிடைபேசினம்
　வடிவாகச் சேர்த்துஅரை பழச்சாற்றுலே
கரிசையா யிருஜாம மரைத்துத்தானே
　கனிவாக வில்லைகட்டிக் கதிரிலிட்டுப்
பரிசையாய் கரியில்வைத் தூதிப்போடு
　பதிவாக வெடியுப்புச் சுன்னமாச்சு
நரிசையாய்ச் சுன்னத்தில் பனியில்வைக்க
　நலமாகப் பலபலென ஜயநீராச்சே. ௭௭

வெடியுப்பு ஜயநீரால் தாளகச்சுன்னம்.

ஆச்சென்ற ஜெயநீரா யிருத்துக்கொண்டு
　அடைவாக வதன்பின்பு தாளகத்தை

நாச்சென்ற அங்கிதனைக் கட்டக்கேளு
        நலமான வளையலுப் பொட்டிரெட்டி
பாச்சென்ற பாணிவிட் டரைத்துக்கொண்டு
        பதிவாகத் தாளகத்தின் மேலேகட்டி
காச்சென்ற கரியோட்டில் குமுறவாட்டிக்
        குணமாகத் தண்ணீரில் போட்டிடாயே. சஅ

போட்டிடவே வுப்பெல்லாங் கரைந்துபோகும்
        புகழாகத் தாளகந்தான் சிவந்துநிற்குங்
காட்டிடவே யதையெடுத்துக் குறட்டிலேதான்
        கனிவாகப் பிடித்துநீ ஜயநீர்தன்னில்
வாட்டிடவே துவைத்துநீ பாகமாக
        வடிவாக வாட்டிப்பார் கட்டிதானும்
மூட்டிடவே சிவந்துநிற்குந் தாளகந்தான்
        முனிவாகக் கவசமது மொழியக்கேளே சகூ

கேளுமே வெடியுப்பு ஜயநீர்முன்னே
        கெடியாகச் சுண்ணாம்பைக் கல்வத்திட்டு
நாளுமே யொட்டிரொட்டி பழச்சாத்தாலே
        நலமாக விருஜாம மரைத்துதானே
வாளுமே தாளகத்தின் மேலேகட்டு
        வடிவாகக் கதிரிலிட்டுக் காயவைத்து
பாளுமே போகாது புடத்தைப்போடு
        பதிவாகக் கட்டியைத்தா னுடைத்திடாயே. ருO

ஷ தாளகச் சுன்னத்தால் துருசுச்சுன்னம்.

உடைத்துப்பார் தந்தம்போல் சுன்னமாகுங்
        கொடியான சுன்னத்தின் பெருமைதன்னை
விடைத்துநீ சிவனாலும் சொல்லப்போமோ
        விதமாக வதையெடுத்துக் கல்வத்திட்டு

படைத்துநீ மூன்ஐயநீர் தன்னாலாட்டிப்
பதிவாகத் துருசின்மேற் கவசங்கட்டு
நடைத்துநீ கதிரிலிட்டுக் காயப்போடு
நலமாகப் பத்தெருவிற் புடத்தைப்போடே. ௫௧

ஷீதுருசால் தாளகச்சுன்னம்-வேதை.

போடவே தீயாறி யெடுத்துப்பாரு
பொலிவாகத் துருசதுவுஞ் சுன்னமாகும்
ஆடவே துருசதுவுஞ் சுன்னமானால்
அண்டரண்டந் துளைத்தாடு மநேகவேதை
கூடவே தாளகத்தின் மேலேதானே
குணமாகக் கட்டியதைத் துவைத்துவாட்ட
நாடவே தாளகந்தான் சுன்னமாகும்
நலமான நவலோகம் நூற்றுக்கொன்றே. ௫௨

கண்டாலும் பேசார்கள் சித்தர்மார்க்கங்
கனிந்தகனி போலாகுந் தாளகந்தான்
நன்றாகச் சொல்லிவிட்டேன் சூத்திரத்தில்
நானறிந்த படிபாரு நன்மையாகும்
முண்டாகச் சொல்லாதே முனிந்துபாரு
மூவுலகும் படைத்தசிவன் மொழிந்திட்டாரே.

தாளகத்தங்கத்தால் கணபதிசெய்து பூஜிக்க.

மொழியவே தாளகத்தின் தங்கத்தாலே
முனிந்துநீ கணபதியைப் பண்ணிநீயும்
அழியவே வைத்துநீ யெட்டெழுத்தை
அடைவாகப் பூசிப்பாய் பூசைசெய்து
தழியவே சிவபூஜை பண்ணிக்கொண்டு
தாட்டிகமா யுண்டுடுத்தி கமனம்பாரு
நடியவே கமனவழி யோட்டிப்பாரு
நாதாந்த மெய்ப்பொருளும் நாட்டம்பாரே. ௫௪

தாளகச் சுன்னத்தால் தாம்பர சுன்னம்-வேதை.

நாட்டமாந் தாளகத்தின் சுன்னந்தன்னை
நலமாகக் கல்வத்தி லிட்டுதானே
வாட்டமா யரைத்துநீ தாம்பரத்தில்
வடிவாகக் கட்டியே காபவைத்து
ஓட்டமாய்ப் பத்தெருவு அடுக்கிப்போடு
உற்றுமே தாம்பரமுஞ் சுன்னமாகுங்
கூட்டமாய் ரசப்பதங்சுஞ் சேர்த்துநீயுங்
குணமாக விடைசமனுப்ச் சேர்த்திடாயே. ருரு

சேர்த்துநீ யிடைசமனுப்ச் சேர்த்துக்கொண்டு
துடியான வெடியுப்பு ஜயநீராலே
பார்த்துநீ யரைத்துமே வில்லைகட்டிப்
பதிவாகப் பத்தெருவு அடுக்கிப்போடு
சாத்துமே யிடைபோகா சுன்னமாகும்
சரியான வாதமிதி லடங்கிப்போகும்
காத்துமே நவலோகம் நூற்றுக்கொன்று
கனிவாக யிட்டுருக்கு மாத்துபத்தே. ருசு

பத்தான மாத்துள்ள பொன்னைவித்துப்
படியாக வுண்டுடுத்தி வழியைக்கேளு
நத்தான வழிதேடு நல்லயோகம்
நலமாகப் பார்த்திடவே சித்திசித்தி
முத்தான யோகமிது பண்ணவேண்டாம்
முனிவான சிவயோக மொழிந்துகூடு
வித்தான விவேகத்தைக் கண்டுதேறு
விதமாக வெல்லாமு மொழிந்துபாரே. ருஎ

தாளகச்சுன்னத்தால் தங்கசுன்னம்-வேதை.

மொழியவே தாளகத்தின் சுன்னந்தன்னை
மோகமாய்க் கல்வத்தி லிட்டுக்கேளு

நழியவே வெடியுப்பு ஜயநீராலே
நலமாகக் கடிகையே யதுதானுழி
விழியவே யரைத்துத் தங்கத்தின்மேலே
விதமாகக் கட்டியே காயவைத்து
சுழியவே பத்தெருவிற் புடத்தைப்போடு
சூரித்துத் தீயாத்தி யெடுத்திடாயே. ௫அ

எடுத்துநீ பார்த்தவுடன் தங்கச்சுன்னம்
இதமாக விருந்துவிடும் தங்கநீற்றை
அடுத்துமே நவலோகம் நூற்றுக்கொன்று
அடைவாக யிட்டுருக்குப் பத்துமாத்து
நடுத்துமே தாம்பரத்தின் ஜல்லிநூறு
நலமாகச் சட்டிதனி லிட்டுத்தானே
கடுத்துமே வருத்துநீ தங்கச்சுன்னங்
கனிவாகப் பணவிடைதான் போட்டிடாயே. ௫௯

போட்டுவரு தாம்பரமும் பத்துமாத்துப்
புகலரிய உப்புக்குங் காவிக்கப்பா
நாட்டுமே யோடாது நல்லவித்தை
நாதாந்த சாரமது நாட்டுள்ளோர்க்கு
வீட்டுமே திரியாதே தங்கநீற்றை
விதமாகப் பணவித முண்டுதேறு
தேட்டுமே யிதுரொம்பத் தேட்டமாகுஞ்
சிவயோக வழிதானே செல்வமாயே.. ௬0

ஷை தங்கசுன்ன பலன்.

ஆமேதா னந்திசந்தி பணமவ்விதம்
அடைவாக வுண்டுவர நோய்கள்போகும்
நாமேதா னரைதிரைக ளற்றுப்போகும்
நாதாந்தப் பேரொளியி னடத்தைகாணுஞ்

சாமேதான் சாவில்லை நோய்கள்தீரும்
 நாட்டிகமாய் கவனவழி திர்க்கமாகுங்
காமேதான் கனகமீது பாருபாரு
 காதலுட னெல்லாமுங் கண்டுபாரே. சுக

கண்டுபார் நாளகத்தின் சுன்னந்தன்னைக்
 கனிவாகக் கல்வத்தி லிட்டுத்தானே
முண்டுபார் வெடியுப்பு ஜயநீராலே
 முனிவாக விட்டுநீ முடியஆட்டி
கண்டுபா ரயத்தகடு மேலேகட்டு
 கனிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
தொண்டுபா ரயமதுவும் நீறிப்போகுந்
 துடியாக வெடுத்துநீ தொன்மைகேளே. சுஉ

கேளுமே நவலோகம் நூற்றுக்கொன்று
 கெடியாக யிட்டுருக்கு மாத்துஎட்டு
வாளுமே வுப்புக்குங் காவிக்கப்பா
 வடிவாக வோடாது வொழிந்திடாது
நாளுமே யந்திசந்தி பணமவ்வீதம்
 நலமாக வுண்டுவரத் தீரும்நோய்கள்
தாளுமே விந்திறுகு மண்டவாதந்
 தப்பாமல் ஓடுமது நடத்தைதானே. சுங

தானென்ற நரைதிரைக ளற்றுப்போகுந்
 தாட்டிகமாய்ப் பசுநரம்பு தானேமின்னுந்
நானேதான் சொல்லிவிட்டேன் சூத்திரத்தில்
 நலமாக வாதசித்தி க்ஷணத்திலாகும்
வானேது விண்ணேது நிரைந்ததங்கம்
 வடிவாக வெல்லாமுன் கைக்குளாகும்
ஊனேது வுடலிறுகு மயத்தின்போக்கு
 உற்றுநீ பார்த்திடவே வுண்மையாமே. சுச

வாதிமுறைமை.

உண்மையாய் வழலைதொட்டு வாதம்பாரு
உற்றுநீ அயத்தினுட போக்குமெத்த
கண்டபேர் தனக்குமே சொல்லவேண்டாம்
கனிவாக வழலையென்ற பேரைத்தானும்
முண்டைநாய் ஞானிகள்போல் பிதற்றுவார்கள்
முக்கியமாய் மருந்துகளைப் பார்த்தேனென்பார்
சண்டாள ரிவர்முகத்தைப் பார்க்காதேபார்
தனித்துமே வாதிக்கு முறையிதாமே. ௯௬

ஆமேதா னூலில்லா வாதிமார்க
ளடைவாகப் புலம்பிநூல் பார்த்தேனென்று
நாமேதான் நூல்வளமை தெரியாதாலே
நலமாகச் சாஸ்திரத்தைப் பொய்யென்பார்கள்
வாமேதான் பூசிமுனி நூலெல்லாம்பார்
வடிவாக சாஸ்திரத்தை மருவிப்பாரு
காமேதான் பண்டிதத்தின் சித்திபாரு
கருவான பூரணத்தி னிலையைப்பாரே. ௯௯

பூசிமுனி சாஸ்திரக்கோவை பார்த்தால் சகலமுஞ்சித்தி.

பாருமே வாதகாண் டத்தைப்பாரு
பதிவான கும்மியெல்லாம் பழக்கம்பாரு
நாருமே முன்காண்டம் பின்காண்டம்பார்
நலமான வாதவுலா தன்னைப்பாரு
காருமே பள்ளெல்லாம் விரித்துப்பாரு [ணும்
கருக்கிடையும் குறுக்கிடையும் கருவாய்த்தோ
ஏருமே வழுததுபோல் நூல்களாகும்
இதமான நூலெல்லாம் பாருபாரே. ௯௭

பார்த்திடவே நூல்களெல்லாஞ் சித்திதோணும்
பதிவாகச் சத்துருவு மித்துருந்தோணுங்

கார்த்திடவே நூல்களிட வர்மந்தோணுங்
கனிவாகச் சித்திதருங் கண்டுபாரு
நாத்திடவே யெல்லாமுஞ் சித்தியாகும்
நாடினு லென்னூலே நயந்துபாரு
வாத்திடவே சகலசித்தி யுடனேயாகும்
வடிவான சாஸ்திரத்தை யடுத்துப்பாரே. ௬அ

பாருமேயுலகத்தில் வாதம் பொய்யோ
பரிவான வழலேபொய்யோ பரிந்துகேளு
நாருமே சரக்குகள்தான் பொய்யோவென்பார்
நலமான போகமென்ன பொய்யோவென்பார்
தாருமே கைபாகம் தெரியாதாலே
தண்மையாய்ச் சாஸ்திரங்கள் பொய்யென்பார்கள்
ஏருமே விழுதாலே யிதக்கப்பட்டு
இதமாகச் சேருகு மின்பமாமே. ௬௯

ஆமேதான் சரக்குகளை வைத்துவைத்து
அடைவாகக் கைபாக மறியாதாலே
வாமேதான் மயங்கியே யுலேந்துலேந்து
வடிவாக நல்வழி காணுதாலே
போமேதான் புலம்பியே மாய்ந்துமாய்ந்து
பொல்லாத துரோகியாய் வைவாரப்பா
தாமேதான் தவித்துமே யேங்கிநொந்து
தாட்டிகமாய் வைவார்கள் வாதியோரே. ௭0

வாதிகள் ரசங்கட்டில் சகலமுஞ் சித்தி.

வாதிதனக் காகவே யின்னமொன்று
வடிவாகச் சொல்லுகிறேன் வண்மைகேளு
நீதியாயிரதமது நெருப்பில் நின்றால்
நிலைக்குமே காயமது காயந்தானும்

நாதியாய் நிலைக்குமது காயந்தானும்
நலமாக நரைதிரைகளற்றுப்போகும்
பாதிகேள் சடைமுடியர் போலேயாகும்
பதிவாகப் பார்த்திடவே பலனுமாமே. எக
ஆமேதா னெல்லாமும் பார்த்துத்தேறி
யாடலாங் கோடிவித்தை யண்டந்தன்னில்
வாமேதா னுடலாங் கோடாகோடி
வடிவாக வித்தையிதில் வடிவுகாணும்
நாடுமே சுருக்கத்தி லெல்லாஞ்சொன்னேன்
நலமாக பூகிமுனி நூலைப்பாரு
தாமேதா னெல்லாமு நூலிலாகுந்
தாட்டிகமாய் பார்த்துணர வெல்லாஞ்சித்தே.

வேறு - வழலை.

சித்தாக வின்னமொரு வழலைமார்க்கஞ்
செப்புகிறே னுலகத்தில் தேர்ந்துபாரு
முத்தான வழலையது சுட்டசாம்பல்
முனிவாக படிநாலு அளந்துவிட்டு
நத்தாக பாணியது எட்டுவிட்டு
நலமாக பாணிதனில் கரைத்து நீயும்
வித்தாக நல்லெண்ணை படியிலேதான்
விதமாக விட்டுநீ வைத்திடாயே. எ௩

ஷை வழலையில் அபவசைச்சத்து.

வைத்திடுவாய் பாலாக முறியமட்டும்
வடிவாக முறிந்தபின்பு மார்க்கங்கேளு
நைத்திடுவாய் கவுரியென்ற பாஷாணந்தான
நலமாக பலம்பத்து கரைத்துவிட்டு
கைத்துமே கொதிக்கவைத்து பின்புகேளு
கனிவாக அரப்பொடியும் பலமும் பத்து

நைத்துநீ வழலையிலே கொதிக்கவைத்து
நலமாக வொட்டவே காச்சிடாயே. ௭௪

காச்சிட்டு பின்புதான் குகைபிலிட்டுக்
கனிவாக வுருக்கிடவே யுருகியாடும்
வாச்சிட்டு வெள்ளிபொன்போல் கண்விட்டாடும்
வடிவாக செம்புதா னிடையேசேர்த்து
பாச்சிட்டு உருக்கிடவே யுருகியாடும்
பரிவாகக் கல்வத்தி லுடைத்துப்பின்பு
நாச்சிட்டு கெந்தியது முக்காலிட்டு
நலமாகப் பொடித்துநீ பின்புகேளே. ௭௫

கேளுமே வழலையென்ற தைலந்தன்னில்
கெடியாக பொடித்துநீ போட்டுக்காய்ச்சி
நாளுமே ஒட்டவெரி குகைபிலிட்டு
நலமாக வுருக்கிடவே சத்துமாகும்
வாளுமே வெண்காரம் பாதிசேர்த்து
வடிவாகக் கல்வத்தி லிட்டரைத்து
பாளுமே வில்லைகட்டிக் காயப்போட்டுப்
பதிவாக புடம்போட்டு எடுத்திடாயே. ௭௬

ஷெ அயவகைசத்தில் மிருதார்சிங்கி சேர்ந்த சிந்தூரம் வேதை.

எடுத்துமே குகைபிலிட் டுருக்கித்திரு
இதமாக வெள்ளிபொன்போல் கண்விட்டாடும்
அடுத்துநீ புறம்பாக வைத்துக்கொண்டு
அடைவாக மிருதார சிங்கிதானும்
மடுத்துமே பலம்பத்து நருக்கிக்கொண்டு
மயமாக அந்நிடைக்கி துருசிகூட்டி
நடுத்துமே யமுரிவிட் டரைத்துநீயும்
நலமாக வில்லைகட்டிக் காயப்போடே ௭௭

போடவே பத்தெருவில் புடத்தைப்போடு
பொலிவாக வெடுத்துநீ சொல்லக்கேளு
ஆடவே முன்னுருக்கு மயத்திலேதா
னடைவாக யிடைசமமாய்ச் சேர்த்துக்கொண்டு
கூடவே யமுரியா லரைத்துவில்லை
குணமாக செய்துநீ காயப்போடு
வாடவே பெரியபுடம் போட்டெடுக்க
வடிவாகச் சிந்தூர மாகுந்தானே. எஅ

ஆடவே சிந்தூர முருக்கம்பூப்போல்
அடைவாகத் தானிருக்குங் குகையிலிட்டு
வாகுமே காரத்தைக் கூட்டுருக்கு
வடிவாகச் செம்பாகும் மார்க்கமெத்த
பாருமே செம்பொன்னு யிருக்கும்பாரு
பதிவாக இச்செம்பில் வேதைகோடி
தாருமே வெள்ளிதனில் நூற்றுக்கொன்று
தாக்கிடவே மாத்தாகுந் தண்மைபாரே. எகூ

பாருமே வழலைபினு லெல்லாமாச்சுப்
பதிவான கைபாகத் தாலேயாச்சு
நீருமே வழலையென்ற வெண்ணைவிட்டா
னிதமாக வொன்றுமில்லை யின்பமாக
தாருமே தவிக்காதே காரம்பாரு
தாட்டிகமாய் வாதசித்தி சூட்சத்திலாச்சு
வாருமே வாதவெள்ளக் கேணியாச்சு
வளமான நூலறிய வெளிதிலாமே. அ0

அப்பிரகசிந்தூரம்.

ஆமேதா னின்னமொன்று அப்பிரகந்தா
னுதியாய் தளுக்கில்லா சொல்லக்கேளு

நாமேதா னப்பிரகம் பலமும்பத்து
நலமாக நவநீதம் பண்ணக்கேளு
வாமேதான் வீரமது பாதிபிட்டு
வளமாக விருஜாம மரைத்துப்பின்பு
சாமேதான் வெண்ணெய்போ லாகும்பாரு
சரியாகக் கலையத்தி லிட்டிடாயே. அக

இட்டுநீ மேல்மூடி சீலைசெய்து
இதமாக சூட்டடுப்பி லெரித்துநல்லாய்
கட்டுநீ பார்த்திடவே யுயரவேறுங்
கனிவாகப் பதங்கமெல்லாஞ் சுரண்டிவாங்கி
நட்டுமே தூரவைத் தடியில்நின்ற
நலமான அப்பிரகந் தனையெடுத்து
மட்டுமே கல்வத்தி லிட்டுநன்றாய்
மதியாக வெடியுப்பு மிடையேசேரே. அஉ

சேத்துநீ யிருஜாமம் வாழைப்பாலால்
சிறப்பாக வரைத்துநீ வில்லைகட்டி
பாத்துநீ பெரியபுடம் போட்டெடுத்துப்
பதிவாகத் திரும்பவுமே வெடியுப்புத்தான்
காத்துநீ வெடியுப்பு சமனாய்சேர்த்துக்
கனிவாக முன்பாலா லரைத்துக்கொண்டு
வாத்துநீ வில்லைகட்டிக் காயப்போடு
வடிவாகப் பெரியபுடம் போட்டிடாயே அரு

போட்டுநீ கல்வத்தி லிட்டுத்தானே
பொலிவாகப் பாணியது படிரண்டுக்குள்
பாட்டுமே விட்டுநீ யரைக்கத்தானும்
பதிவாக அப்பிரகம் தனுக்குஅற்று
காட்டுநீ அப்பிரகம் தன்னைப்பாரு
கனிவாக யிருக்குமது கண்டுபாரு

மூட்டுநீ தெளியவைத்தா னிறுத்துப்போட்டு
முனிவாக அப்பிரக மெடுத்துக்கொள்ளே. ௮௪

எடுத்துநீ வாழையென்ற பாலினாலே
இதமாக அரைத்துநீ வில்லைகட்டி
அடுத்துமே பெரியபுடம் போட்டெடுத்து
அடைவாக யெடுத்திட்டு ஆண்மைகேளு
நடுத்துமே ஆலமரம் பழம்போலாகும்
நலமாக வெடுத்துநீ தூரவைத்து
படுத்துமே யின்னமொன்று சொல்லக்கேளு
பதிவாக வெடியுப்புப் பலமும்பத்தே. ௮௫

வெடியுப்பு திராவகம்செய்த ரசம்பூர்க்கவைத்து
ஷெ அப்ரேகத்தைச் சேர்த்து சிந்துரம்.

பத்தாக நிறுத்துநீ சீனந்தானும்
பதிவாக பலமிருபத் தைந்துமாகும்
கொத்தாக வீதுரண்டும் பொடித்துவாலை
கனிவாக யிட்டுநீ வாலைமூடி
நத்தாக நீயெரிக்க முன்னீர்விழும்
நலமாக வந்தநீர் தன்னைத்தள்ளு
வித்தாகப் பின்னீரை வாங்கிமைந்தா
விதமாக வைத்துநீ விரும்பிடாயே. ௮௬

விரும்பியே சூதமது சேரொன்று
விதமாக பீங்கானி லிட்டுக்கேளு
அரும்பியே புகைநீரை சூதத்திட்டு
அடைவாகக் கதிர்தனிலே வைத்துப்போடு
நரும்பியே வெண்ணைபோ லாகும்பாரு
நலமாக வெண்ணையெல்லா மெடுத்துக்கொண்டு
திரும்பியே புகைநீரைக் கொஞ்சக்குத்துத்
துடியாக சூதமெல்லாம் பூத்துவாங்கே. ௮எ

வாங்கியே யெடுத்துநீ சேரோயொன்று
வடிவாக முன்செய்த அப்பிரகந்தான்
தாங்கியே சேரொன்று நிறுத்துக்கல்வந்
தாட்டிகமா யிட்டுநீ புகைநீர்குத்தி
பாங்கியே யரைத்துநீ யுமிநெருப்பில்
பதிவாக வறுத்துநீ பாகங்கேளு
தாங்கியே யிடத்திலிட்டு மேலேமூடி
தண்மையா யடுப்புதனி லேத்திடாயே. அஅ

எத்தியே கமலம்போல் தீயைமூட்டு
இதமாக விருஜாம மெரித்துத்திரு
நாத்தியே தீயாத்தி யெடுத்துநன்றாய்
நலமாக பிங்கானி லிட்டுக்கேளு
வாத்தியே புகைநீரா யதிலேயூத்தி
வடிவாக யுமிநெருப்பில் வறுத்துப்போடு
சாத்தியே முருக்கம்பூ போலேயாகுஞ்
சரியாக முன்புபோ லெரித்திடாயே. அகூ

எரித்திட்டு எடுத்துப்பார் முருக்கம்பூவாம்
இதமாக வயிரவர்க்குப் பூசைபண்ணி
நருத்திட்டு செம்புதான் பத்துருக்கு
நலமாக வொன்றுகொடு தாக்கிநீயும்
வடித்துநீ பாத்திடவே தங்கம்போலாம்
வடிவாகச் செம்பொன்னு யிருக்கும்பாரோ
உருக்கிநீ வெள்ளிதனை யூதிநீயு
முறுதியாய் நூலாறு சேர்த்துக்கொள்ளே. கூ0

சேத்துநீ யுருக்கியே மாத்தைப்பாரு
செழுஞ்சுடராந் திருமேனி சிவனைப்போலாம்
பாத்துநீ யெடுத்துப்பார் தங்கமாகும்
பதிவாக வுப்புக்கும் காவிக்கப்பா

நாத்துமே யிரங்கிவிடும் இதனைவித்து
நலமான வழியைநீ யடுத்துக்கூடு
மாத்துமே அப்பிரகந் தனில்பிறந்த
மதபானே சத்தியுட நாதந்தானே. ௬௧

சத்தியுட நாதமது அப்ரோகந்தான்
சரியான செம்பதுவுங் கட்டிப்போகும்
புத்தியாய் அப்ரேகச் சிந்தூரத்தை
புக்கிநீ வைத்துரசந் தன்னைக்கட்டி
நத்தியே வாதத்தைப் பார்த்துத்தேறு
நலமாக சொல்லிவிட்டேன் சிவனுக்கோப்பாய்
முத்தியா யிந்தநூல் தன்னைக்கண்டால்
முக்கியமாய் வாதமது யேவல்தானே. ௬௨

தானென்ற அப்ரேக சிந்தூரத்தை
தண்மைபா யமுர் தசர்க் கரையில்தானே
வானென்று வுண்டிடவே காயசித்தி
வடிவாக மேகநீ ரெல்லாம்போகும்
கானென்ற பித்தமுதல் வாதமெல்லாங்
கடல்புக்கும் க்ஷயரோக மனைத்தும்போகும்
நானென்ற மகோதரமும் போகும்பாரு
நலமாக வெல்லாமுஞ் சித்தியாமே. ௬௩

அரிதாரச்சுன்னம்.

ஆமேதான் வெகுசுருக் கரிதாரச்சுன்னம்
அடைவாக சொல்லுகிறோம் அறிவுள்ளோர்க்கு
வாமேதான் வெடியுப்புப் பலமும்பத்து
வடிவாக பழம்புளியும் பலமுமஞ்சு
நாமேதா னிரண்டுமொன்று யிடித்துநைய
நலமாக வில்லைகட்டி யடுப்பிலிட்டு

வாமேதான் எரித்திடவே தீபிடித்து
வடிவாக யெரித்துப்பார் சுன்னமாமே. ௬௪
ஆமேதான் சுன்னத்தை கல்வத்திட்டு
அடைவாக வரைத்துநீ பனியில்வைக்க
சாமேதான் பலபலென ஜயநீராகுஞ்
சரியாக நீரொல்லா மிறுத்துக்கொண்டு
பாமேதான் தாளகமும் பலமும்பத்து
பதிவாக வளையலுப்பைக் கவசங்கட்டி
நாமேதான் கரியோட்டில் குமுறவாட்டி
நாட்டியே தண்ணீரிற் போட்டிடாயே. ௬௫
போட்டுமே பார்த்திடவே வளையலுப்புப்
பொருமியே கரைந்துவிடும் தாளகத்தை
நாட்டுநீ பார்த்திடவே சிந்தூரம்போல்
நலமாக விருக்குமது கல்வத்திட்டு
கூட்டுநீ வெடியுப்பு ஜயநீராலே
குமுறஅரை ஜாமமது நாலுமாகும்
வாட்டுநீ வில்லைகட்டிக் காயப்போடு
வடிவாகக் கற்சுன்னம் சட்டியிட்டே. ௬௬
இட்டுநீ வில்லைதனை யுள்ளேயிட்டு
இதமாக விருஜாமந் தயெரித்து
முட்டுநீ பிரித்தெடுத்து கல்வத்திட்டு
முனிவாக வெடியுப்பு ஜயநீராலே
கட்டுநீ வில்லைதனை யரைத்துக்கட்டிக்
கனிவாகச் சுண்ணும்புக் குள்ளேயிட்டு
பட்டுநீ புடம்போடு வில்லைதானும்
பதிவாகக் கறுப்பாக விருக்கும்பாரே. ௬௭
இருக்குமே வில்லைதனைக் கல்வத்திட்டு
இதமாக வெடியுப்பு ஜயநீராலே

பெருக்கவே யிருஜாம மரைத்துயில்லை
பிசகாதே பிடித்துநீ காயவைத்து
நெருக்கவே யகல்தனிலே சுன்னமிட்டு
நேர்படவே வைத்துநீ புடத்தைப்போடு
பெருக்கவே தாளகந்தான் சுன்னமாகும்
பேரான சுன்னத்தின் பெருமைகேளே. ௯௮

கேளுமே துருசதுவும் நீறிப்போகும்
கெடியான சரக்கெல்லாம் குன்னமாகும்
பாருமே போகாது தொந்தமேறும்
பதிவான சகலசரக் கதனைக்கட்டும்
வாளுமே யெல்லாமுங் கண்டுதேறு
வடிவாக வெல்லாமுஞ் சித்திமெத்த
தாளுமே தூக்கவே யெல்லாநூலுந்
தாட்டிகமாய்ப் பார்த்துநீ தண்மைதானே. ௯௯

காணவே நோயெல்லாந் தீர்ந்துபோகும்
கனிவாக தாளகத்தின் சுன்னத்தாலே
வாணவே வகைவிவர மாகவைத்து
வடிவாக யோகசித்தி வாதசித்தி
நாணவே நானூறு மறுனூறும்பார்
நலமாக சூத்திரத்தை நவின்றுபார்த்துத்
தோணவே கைபாக மாகச்செய்தால்
தொல்லுலகில் ரசவாதம் சித்திதானே. ௧00

யூகிமுனி பூரணசூத்திரம் - ௧00

முற்றிற்று.

உ

சிவமயம்.

யூகிமுனி பூரணம்.

விஷயம்.	பக்கம்.
காப்பு	க
நூலுபதேசக்கிரமம்	,,
வழலை	உ
சவுக்காரவழலை	,,
சவுக்காரச்சுன்னத்தைத் துருசுக்குக் கவசமிட்டுத் துருசுச்சுன்னம்செய்து வேதையாட	௩
சூதம்கட்டிவேதை	ச
அயச்செம்பு கெந்தகத்தைலம்	,,
மிருதார்சிங்கி சிந்தூரம்	சு
வழலைவிபரம் வாதம் முதற்காண்டம்பார் காயசித்தியாகும்	எ
சவுக்கார எண்ணெயால் வர்ணமுண்டாகும்	,,
வாதியின்றன்மை	அ
நூல்பார்க்க சகலமுஞ் சித்தி	அ
அட்ரேகச்செம்பு	,,
அப்ரேகச்சத்துடன் மிருதார்சிங்கிசேர்ந்த சிந்தூரம்	க0
ஷை வேதை	,,
வெள்ளிவித்தை சூத பாஷாணக்களங்கு	கக
சீனத்திராவகம்	கஉ
ஷையால் வெள்ளீய நீர் வாங்க அண்டோடு கிளிஞ்சல்சேர்ந்த சுன்னம்	,,
வெடியுப்புச்சுன்னம்	கச
வெடியுப்பு ஜயநீரால் தாளகச்சுன்னம்	கரு
ஷை தாளகச் சுன்னத்தால் துருசுச்சுன்னம்	கசு
ஷை துருசால் தாளகச் சுனனம்-வேதை	கஎ

விஷயம்.	பக்கம்.	விஷயம்.	பக்கம்.
தாளகத்தங்கத்தால்கணபதிசெய்து பூஜிக்க	௧௭	வாதிகள் ரசங்கட்டில் சகலமுஞ்சித்தி	௨௨
தாளகச் சுன்னத்தால் தாம்பரசுன்னம்வேதை	௧௮	வேறு-வழலை	௨௩
தாளகச் சுன்னத்தால் தங்கச்சுன்னம்-வேதை	,,	ஷை வழலையில் அயவகைச்சத்து	,,
ஷை தங்கச்சுன்ன பலலன்	௧௯	ஷை அயவகை சத்தில் மிருதார்சிங்கி சேர்ந்தசிந்தூரவேதை	௨௪
வாதிமுறைமை	௨௧	அப்ரகசிந்தூரம்	௨௫
யூகிமுனி சாஸ்திரக்கோவையும் அதன் சித்தியும்	,,	வெடியுப்பு திராவகஞ்செய்து ரசம் பூர்கக வைத்து ஷை அட்ரேகர்தைச் சேர்த்தசிந்தூரம்	௨௭
		அரிதாரச்சுன்னம்	௨௯

யூகிமுனி பூரணம்

முற்றிற்று.

பூசிறு.

வேறு.

மார்க்கமாம் பர வானத்தின் விந்துவால்
திர்க்கமாயுவ ருப்புச் சனித்திடும்
பார்க்கும் யோக பரம்பர வாதிக்கு
யேற்கமாமுப் பீதென் றுரைத்திடே. ௧0

உண்ணு மங்கையர் கர்ப்பக் குழிக்குளே
பெண்ணு மாணும் பிறந்தது போலவே
விண்ணி லாடி விளங்கு மழைத்துளி
கண்ணிலே தருங் காரமுஞ் சாரமே. ௧௧

காரமே சில சாரம தாய்விடும்
சாரமே சில காரம தாய்விடும்
பூரமே யுற வாகவும் புக்கினல்
வீரமேவி விளங்கிடும் வேதையே. ௧௨

அஞ்சு பூதம தாகிய வுப்பது
பிஞ்சு தீக்கி வெறுங்குகை யாய்விடும்
தஞ்சமாஞ் சிவ சத்தியின் தீக்ஷைபால்
தஞ்சிடாதது தோஷமு மில்லையே. ௧௩

கல்லுப்புக் கட்டு.

ஓது பூரணச் சந்தர னுப்பினல்
வாது சூரிய னுப்பு வசப்படும்
போது வானத் தெழுந்திடும் பூவினல்
சூதமாமணி யாசூத் தலங்குமே. ௧௪

ரசமணிச்சிந்தூரம்.

சூதமா மணி யோடுறு கெந்தியும்
தாது தாளகம் வங்கமு நாகமும்
நாத வேமமு மேருவில் நண்ணினல்
தீதிலாத சிந்தூரமுஞ் சித்தியே. கரு

தூக்கும் பூமியைத் தானறிந் தாலல்லோ
வாய்க்கு மீசன் மகிமையுப் பாமது
காய்க்குங் காலத்தில் கண்டிடா வாதியே
யேய்க்கு மேய்க்கு மிறக்கு முடலிதே. கசு

கல்லுப்பு-அதைக்கட்டவும்

அலையிலே வழிந் தாடி யசைந்தது
சிலையதாய் மதி யாகத் திரண்டது
மலையிலே வரு மங்கை மருத்துவம்
தலையிலேசிவ சத்தியின் தீக்ஷையே. கஎ

ரசபதங்கமும் அதைகல்பமாகக்கொள்ளவும்.

அண்ட வன்னியி னல்ரசஞ் சிக்கிடும்
கண்ட போதினில் கற்பம தாயிடும்
உண்ட போதினிற் காய முறுதியாம்
பண்டையீசன் பகர்ந்த முறையிதே. கஅ

இன்னருச்கு யோகமும் சூதமும் சித்தியாகும்.

வன்னியுண்டு ரசஞ்சய மாகினல்
மன்னியோர் பொருள் பேசவும் வேண்டுமோ
தன்னையே யுணர்ந் தார்தமக் கல்லவோ
சொன்ன யோகமுஞ் சூதமுஞ் சித்தியே கசு

தருசுகொல்லவும் அரிதாரபஸ்பமும்.

உப்பிலே களிம் பேறுந் துருசுதான்
அப்பி லேதுவைத் தாலல்ல வோவறுஞ்
செப்பினுற் கடும் சினச் சுண்ணும்பினுல்
தப்பிலா தரி தாரஞ் சலவையே. ௨௦
அகார மென்றறி யார்முடி அக்கினி
உகார மென்றறி யார்புவி யூசரம்
சிகார மென்றது கைக்குள்ளே சிக்கினுல்
வகார மென்றிட வாயு விளங்குமே. ௨௧
அண்ட மாவது கோழியின் முட்டையோ
பிண்ட மாவது தன்தலைப் பிள்ளையோ
வண்டோ யிது ரண்டையு மார்க்கமாய்
கண்ட போதல்லோ காண்பது சொர்ணமே. ௨௨
காக்கைபால் கூவும் கம்பித் திரப்படும்
காக்கையா லுவர் சாரமுங் கைக்குளாம்
காக்கையால் சவுக் காரமும் கட்டலாம்
காக்கை காக்கை நடுக்கடல் காக்கையே. ௨௩
ஆடி யாவணி யாழிதீ பிண்டத்தைத்
தேடினுல் வருமோ வந்த தேதியில்
பாடினுற் பல நூல்களிற் பாஷையா
யோடி யோடி யுழன்று தவிப்பரோ. ௨௪

ஜயநீர்காலம்.

தையுமாசி யென்றேசிலர் தான் சொன்னுற்
அய்யனே பனிக் காலமீ தல்லவோ

செய்ப கங்கையின் றிசைகூ யறிந்தபேர்
கையு மெய்யுமெய் யாகவுங் காண்பரே. உரு

சூன்னகாலம்.

மீன மேஷ மிரண்டையு மேவிதற்
கான காலமென் றேயறை வார்சிலர்
போன காலமும் புக்கின வேளையும்
ஞான தேசிக னற்சொல நண்ணுமே. உசு

தாரணையோகம்.

வேறு.

வாசிவாசி மூலவாசி வாய்வுமூல தாரையில்
மாறிமாறி பூதபான வாதையேது போய்விடும்
வீசிவீசி போடினும் வீடகார வீதியால்
மேவி பூது பிராணவாயு மேலவாச லேறிடும்.
நாசிநாசி கூர்மையான நாதவிந்து கேசரம்
நாடிபூது ஞானசாடி ராசயோக மாகுமாம்
காசிகாசி யேயுஞ்சுக வீணிலோடி மாய்கிறீர்
காலன்மூல வாசியாக கண்டுகொள்ள லாகுமே. உஎ
நூறிலேறு போதிலாறு கேணியாகும் விந்தடா
நூறுநூறு சேருமாகில் மாரிபெய்யு மாறடா
வேறுமீச னேதுஞான வீதியேறும் போதிலே
வேதனுரு மாயனுரு மீசனுரு மாயமாம்
கூறுநாவ தேதடாசொல் மூலநாடி பூதவே
கோணமாமு வாசலேற பாழுமீதி லேறடா

சாரடா கணேசர்பாதம் கேசனுதி மத்தியில்
சாருசேரு தாரகம் ஸதாசிவாய பிரம்மமே. உஅ

முப்புவின் சிறப்பு.

வேறு.

காரம்ஜல சாரம்சய நீராவது கட்டும்
வீரஞ்சில பூரங்களு மெழுகும் பலவிதமாய்
சேருஞ்சில குருவும்பல சிந்தூரமு முறவாம்
ஊருஞ்சில தயிலங்களும் உப்பாமென வுணாயே. உக
ஆகும்பெரு வெளிமேலுட லாகும்படி கமனம்
போகும்படி திடமாகிய பொருள்சேர் ரசமணியாம்
தேகஞ்சில நாள்நின்றிட வேசெய்திடு திறமாம்
யோகம்படு மென்றேசொலு முப்பாமென வுணாயே.

வேறு.

தாதுகொண்ட அண்டமீது தானெழுந்த அங்கியால்
சூதமுண்ட பேரிலேம தூதரண்டு வார்களோ
ஓதுகின்ற பூதமைந்து முள்ளடக்கி நிற்கவே
நாதமுண்ட யோகிதானும் ஞானகண்ட ராகுமே. ௩க
ஆழிதூள்க ளாகிமேரு அண்டம்வேறு கூறதாய்
ஊழிகால மானபோது யோகிசாவ தில்லையே
பாழிலே யெழுந்தவன்னி பாரில்வந் தடர்ந்ததால்
வாழிவாழி சூதமுண்ட மானுபாவர் வாழியே. ௩உ

உப்பினால் செம்புசாகும் அதை காரீயமெழுப்பும்.

வேறு.

உப்பினல் செம்பு தானே யிறந்திடும்
அப்பினாலே யது ரவி யாயிடும்

செப்பினேன் மதி தன்னிலே யிப்படி
தப்பித மில்லைத் தான்தங்க மாகுமே. ௩௩

சினச்சுன்னத்தில் வெடியுப்புகட்டும் அதனால்
அரிதாரம் சுன்னமாம் நாகமும்கட்டும்.

வான மீனச்சி வெள்ளிச்சி யுப்பினால்
காண லான விணங்கன் வசப்படுந்
தான மாகவே தாரமுஞ் சுன்னமாம்
ஆன நாகமுங் கட்டிடும் வேதைபே. ௩௪

செம்புக்குமுடிவி லீயம்சேர்த்தால்தான்
உயிர்வரும் வெள்ளி பொன்னாகும்.

உறுதி யில்லா உலுத்த ரசவாதி
அறுதிதான் பொருள் தோற்றிடு வார்களாம்
வறுதிதான் ரவி தானியங் கண்டவர்
பெறுவர் மோக்ஷம் பிணக்கில்லைத் தானுமே. ௩௫

செங்கல்லைப் பொன் னாக்கிய சுந்தரர்
உங்கள் புத்தி யுறுதியாய்ச் செய்திட
வங்கஞ் சேரிடில் தானுயி ராயிடும்
தங்க மாமதி தன்னிலே யிட்டிடே. ௩௬

கடல்நீரினால் உப்பைச்கட்டும், அந்தவுப்பில் ரசபஸ்பமாம்,
அதில் கெந்திசேர்த்து செம்புக்குக் கவசமிட்டு
கொன்று காரீயம் சேர்த்து ஊதித்
தங்கத்தில் சேர்த்து
வெள்ளியில்கொடுக்கவும்.

உப்பு உப்பு யென்றுசொல்லு மொன்றறியா மூடர்காள்
உப்புதினா நீரிலே உருத்தெரிக்கக்கட்டடா [ஞ்

முப்புமுப்பு மானதா முயன்று ரசபற்பமாம்
மூலமான கெந்திசேர்த்து மூலரவி மேவிட ௧௭
செய்புசெப்பி னுற்கரிய தாகியே யிருந்திடும்
சேதமில்லை யேயெடுத்து சித்திபெறக் கல்வத்தில்
அப்புதா னரையெ சேர்த்து ஆடக்கொஞ்சம் ஊதியே
ஆனவேமம் ஒன்றுசேர ஆனலோகமேமமே. ௧௮

இன்னதை யின்னது கட்டுமெனல்.

ஆதிஆதி சாரம்வேடி யுப்பிலே வசப்படும்
அநாதிவேடி யுப்பது படிகையில் சயமதாம்
நீதிநீதி யெல்லாங்கட்டு நீடுகாடு பொன்னதாம்
நேகநேக லோகமே நினைந்தவாறு யேமமாம்
சோதிசோதி கல்லுப்பை துருசுகட்டும் நீதியாய் [மே
சொற்பெரிய காரம்வெள்ளை தாதுவெல்லாங் கட்டு
வாதிவாதி கட்டிவேலை வாதுகூற வல்லிராய்
வானலோக மீதெலாமும் வானயேம மாகுமே. ௧௯

வேறு.

ஊணிப் பாரு அகார யெழுத்திடை
ஊவைச் சேர்க்க வுருப்படுஞ் சக்கரம்
பேணிப் பாரு மகார மவுனத்தை
பேசப் போகுமோ பேரிட் டழைக்கவும்.
தோணிப் பாரு அகங்கர நியாசத்தை
தொட்டுப்பார் சர்வ காரிய மிப்படி

காணிக் கானது கோடிக்கு மாகுமாம்
காட்டுங் காட்டுங் கிரிகையுங் காட்டுமே. ௪0

செம்புக்கரி சேர்த்த சிங்கி.

செம்பு தன்னைப் புளியிலைப் போலத்
சித்தருபி நேர் சூதமும் சேர்த்திடு
நம்பு மேலைக் கவசமு நாடிடு
நாடித்தானே புடம் ரொம்பப் போட்டெடு
தெம்பு லாவிய தான்கரி யாயிடுப்
திட்டமாய்ச் சிங்கி தானிடை சேர்த்தரை
நம்பு வார்கள் புடமொன்று போட்டெடு
நாடி பூதிட நல்லசித் தாகுமே. ௪௧

வெள்ளியில் சேர்ந்தவேதை.

சித்தி செய்திட மாடொன்று சேர்த்திடு
சிக்கென மதி யெட்டுக் கிரண்டிடு
பத்தி யாகவே பூதி யெடுத்திடு
பாக மாடு பதியுடன் பத்துமாம்
நித்தியம் வாசி தாரையிலூதிடு
நீதமாம் ராஜ யோகமு மாகிடு
முத்தி நாசி நுனியிலே கூர்மைபார்
மூலவாசியைக் கண்டு பிடித்திடே. ௪௨

பித்தளைச்செம்பு.

காகமானது பித்தளை யோர்பலம்
காரமிட்டு உருக்கி யெடுத்திடு

பாக மாகவே அஞ்சு தரத்தினில்
  பஞ்ச மித்திரந் தன்னிலே சாய்த்திடு
கோகமாக புகைநீர் கடைநீரில்
  கொட்டி யேரவி தன்னிலே வைத்திடு
தாகமாகவே தானே கரைந்துபோம்
  தாக்க நீரிடை டங்கணஞ் செய்திடே. சங

சேர்த்துமே அரை சாமமும் பாண்டத்தில்
  சிக்குபில்லை ரவிதனில் காபவை
பார்த்துமே கஜந் தான்புட மிட்டிடு
  பாகமாகவே் தான்குரு வாகிடும்
கார்த்துமே மதி யெட்டுக் கிரண்டிடு
  கார மிட்டுமே யேம மிரண்டிடு
சாற்றுவீ ரிதை ஊதி யெடுத்திட
  சத்தியமாகத் தானேமு மாகுமே. சச

ரசபதங்கம்.

ஆகவே நாக மேயொரு சேரெடு
  ஆதியான வி லுப்பெணெய் சுத்தியாம்
யேகமே யொரு கிண்ண மடித்திடு
  இன்பமா யடித் தானயக் கிண்ணமாம்
யோகமாகவே கிண்ண மடிதனில்
  யோகக் கல்லுப்பு செங்கன்மா சேர்த்திடு
பாக மாகவே தானயக் கிண்ணத்தில்
  பாதி போட்டுநீ சூதம் நடுவிடே. சரு

விட்டுமே நாக கிண்ணியை மேல்மூடி
வீரமாக உளுந்துமண் செய்திடு
கட்டுமேகம லாக்கினி தானெரி
காரமாகவே யேறிப் பதங்கமாம்
பொட்டுமே யெட்டு செம்பி லிரண்டிடு
போகமாகவே பொன்னுணி யாகுமாம்
தொட்டுமே நீ பணவிடை யுள்ளிடு
துட்டமாபிணி தானும் விலகுமே ௬௬

வெடியுப்புச் சுன்னம்.

வேறு.

காரம்வெடி யிடைநேரிடை புளியும்படி யிடிநீ
பாரம்ரவி யுலரவிடு புதுசட்டியி லிட்டு
நேரம்பட வெரியேயிட அன்னம் மதுவாகும்
கோரம்பட வீரங்களும் கூறும்மது சேரே. ௬௭

சாரக்கட்டு.

சேர்த்துஅரை முத்திகருத் தெளியச்சலந் தன்னல்
பாத்துவிட சாரம்பட பதிவாலென வங்கி
நாத்துப்பட விட்டேபெடு நலமாகவே யுருகும்
காத்தேயெடு கரியில்லிடு கனகமது வாமே. ௬௮

அயக்களங்கு.

ஆதியான தானயம் வீரமனா சேரடா
அநாதியான வேதநீர் விட்டு அரைசாமமாம்
சோதிசோதி யேமுருக்கம் பூவதுபோ லாகுமாம்
சுத்தியே கிடத்திலிட்டுத் தானெரிக்க வேறுமாம்

வாதிவாதி கீழுமேலு மேபிருந்து தான்விடும்
வாதையாக வொன்றுசேர்த்து வாதவில்லை யாகவே
கோதிகோதி தானரைத்து இப்படிக் கிடத்திலே
கொள்கவே அரைத்தெடுத்து கூறுநீலன் நேரொடே.

நீலநீலன் நேரொடுத்து நேரதாக முன்னயம்
நீடுதானே தான்வெடியின் நீரைவிட்டுத் தானரை
காலகாலன் தான்கிடத்தில் கட்டிநே ரொரியடா
காரமாக வேயெடு கல்வமதி லிட்டுமே.

சாலசால மாகவில்லை தாக்கியே கசபுடம்
சரதமாக வேபுநேரும் காரமொக்க வேகுகை
தாலமாக விட்டிருக்கத் தாகமா ரவியதாந்
தந்துமதி தன்னிலிட தாரமணி யாகுமே. ருo

திராவகம்.

வெண்பா.

பொட்டலையி னுப்புப் போராம் பலம்பத்து
இட்டமுடன் சீன மிருபதுதான்—கட்டளையா
அஞ்சுடனே சேர்த்து அடைவாக் கிடமரைதான்
விஞ்சை கடைநீரா விரும்பு. ருக

வேறு மிதனாலே வேண்டினதோர் வாதமாம்
கூறு மிதன்பெருமை கூர்மைபாம்—சீராக
உப்புவிட்டுப் பார்த்துகெட்டு வோடிமன மேயுமன்று
தப்பிதனால் பொய்யென்பார் தான். ருஉ

உப்புக்கட்டு.

வேறு.

அஞ்சு பூதம தாகிய உப்பஞ்சு
தஞ்சமாகப் புளியஞ்சு தான்சேர
விஞ்சையாகவே தீக்ஷைசெய் திட்டக்கால்
தஞ்சமாகக் கரிதனி லாடுமே. ௫௩

ஓதும் பூரண உப்புப் புளியினால்
வாத வுப்பெல்லாம் சுன்னம தாகிடும்
நீதியாக சரக்கெல்லாம் கட்டிடும்
வாது செம்பெல்லாம் ஹேமம தாகுமே. ௫௪

சூத மாமணி யாகக் கரிதனில்
வேத மாகவே நின்று விளையாட
நாத னிலனை நீத்தினால் கட்டிடும்
வேதஞ் சொன்னது கல்லுப்புக் கட்டிடே. ௫௫

கட்டினால் சூதம் பொன்னுண்டு வாதிகேள்
துட்ட வாதிகேள் கட்டாட்டால் பொன்னிலை
கொட்டினா லது தேளாகும் பாருங்காண்
மட்டி புத்தியி னால்வரும் துன்பமே. ௫௬

கல்லுப்பு ரசமணி சிந்தூரம்.

சூதம் கட்டிக் கரிதனி லாடினால்
தாது நேரதாய்.கெந்தியைச் சேர்த்திடு
வாது குப்பியில் போட்டு உருக்கியே
நாத மாகவே தாளகம் சேர்த்திடே. ௫௭

சேத்துமே அயந் தானே சிலாகைபால்
பாத்துமே கிண்டிப் பதிய வலப்பக்கல்
காத்துமே மூடித் தானே யெடுத்திடு
நீத்துமே சிவப் பாகுமே லோகமே. ருஅ

லோகந் தன்னிலே நூற்றுக்கு வொன்றிடு
பாகமாகப் பதினறு மாற்றுமாம்
யோகம்ஞான முறுதியு மாகிடும்
பாகமானதைப் பார்த்து எடுத்திடே. ருகூ

வேறு.

முத்தியான புத்தியுள்ள வாதியே யறியடா
அத்தியாகச் சுட்டுகெட்ட யுப்பிலே வசப்படும்
முத்தியாக நூலறிந்த நீதியாள னேசொலாய்
வெத்தியால் கடற்குருவி உப்பிலே வசப்படும். கூ0

சோதியான லோகமெல்லாம் சொல்லுமுன்னே தங்கமாம், சோதிநீதி யேமஞ்சியில் சொர்ணமாகும் யேமமாம், வாதிவாதி யென்றுசொல்லி வீணிலே கரிச்சுட்டு, வண்மைசொன்னல் நூல்கள்பொய்யோ வாதுசொல்லு மூடரே. கூக

வெண்பா.

மூடரொன்று சொன்னல் மோசமாய்க் கோபம்வரும்
ஆடவர்போல் நீயலைந்தா லாகுமோ—தேடி
ரசவாதம் செய்தால் நாடு நமக்குண்டு
பிசகாறு லொன்றுமில்லை போ. கூஉ

வேறு.

அமுரி யெண்ணெ முரித்திட வாதிகேள்
குமரி சக்கரம் தன்னிலே யிட்டிடு
நமரி யாகவே தான்சுத்தி நீரதாம்
வமரியாகமு யெண்ணெயும் வாங்குமே. கூ௫

வாங்கு மெண்ணெயை வாகாகப் பூநீறில்
தாங்கியே சவுக் காரமு மாகிடும்
வாங்கிட எண்ணெ வங்கமு நீறிடும்
பாங்கி யாகவே நீலனும் நீறுமே. கூ௬

நீறி நின்ற துரிசு பணவிடை
நித்த ராக வெடுத்து விராலியில்
ஆறுகின்ற தெடுத்துப் பிழிந்திட
ஆனசாறது ரொம்பவும் வந்திடும்
கோறுகின்ற அயக்கரண் டிதனில்
கொட்டிச் சாறுடன் கூட்டிடு சூதமும்
வாதுகின்ற ரசமணி யாகிடும்
வாதம் வந்து நிலைத்திடும் வாதிகேள். கூ௭

வங்கசிந்தூரம்.

வங்கம் பாரு குமரிபால் விட்டரை
வாகா அஞ்சு புடம்போட மஞ்சளாம்
சிங்கமாக யுருக்கிட வெட்டையாம்
சீராய்ப் பூத்த ரசந்தன்னை சேர்த்திடை
துங்கமாகப் புகைநீரா விட்டரை
தூர்த்துக்காசிபின் மேரிடைத் தானெரி

தங்க மாகுமே நூற்றுக்கு ஒன்றிடு
  தாக்கிப் பார்த்திடு வங்கசிந் தூரமே. ௬௬

சிந்துரந் தனைத் தேனிலே யுண்டிடு
  தேகத்தில் வரும் துன்பமு மேகிடும்
விந்து கட்டி யிருக்குமே வாதிகேள்
  வீதமான ரசம்வந் திடத்திலே
சுந்தரம்மா யெரித்திட மேலேறும்
  சுரண்டியே யடி தன்னிலே சேர்த்தனை
முந்தவே அரை தான்புகை நீரினல்
  முக்கியம்மா யெரித்திடச் சித்தியே. ௬எ

வேறு.

சித்தியாக வங்கமொன்று சேரெடுத்து சுத்திகேள்
  சித்தமாகத் தானுவ ருப்பெடுத்துப் பாணியால்
பத்திநாலு கல்லுச்சுன்ன மேல்படி அளந்திடு
  பாகமாக மூடியோடு பதத்துட னெரித்திடு
நித்தியாகத் தானெரிக்க எண்ணைகக்கும் பாரடா
  நித்தமாக அண்டவோட்டை நேரதா யெடுத்திடு
முத்தியாக நாலிலொன்று சீனமது சேர்த்தனை
  மூடிபூதச் சுன்னமாகும் மூர்த்திகடுஞ் சுன்னமே.
சுன்னமே யெடுத்துருகை தன்னிலிடும் போதிலே
  ரூக்ஷவங்க மிட்டுமேலே சுன்னமிட்டு ஊதிடு
கன்னமாக விப்படிநீ யேழுதர மூதிட
  காடியேழு வங்கசுத்தி நாட்டிலே மதியநாம்

பின்னவங்க மேபிடைக்கிப் பிசம்விட் டிருக்கியே
பிட்டுப்போல வேபிருக்கும் பேதமான வாதிகேள்
கன்னல்வேலி கொல்லிசுன்னம் நீரிலே யெரித்திடு
காதலான புட்டுநே ரளயினை யெருக்குமே. ௬௯
எருக்கம்பாலில் விட்டரைத்து வில்லைகட்டித் தான்ரவி
யின்பமாக் கிடத்திலிட்டுத் தானெரித்துப் பாரடா
விருப்பமாக மேலெழேறும் வீதமா வழித்தடி
யிருந்தவில்லை தன்னிலோடேயோரினமாய்த்தானிடு
உருக்கமாகத் தானெருக்கம் பாலைவிட் டரைத்துமே
உண்மையாக அஞ்சுதர மாட்டியே யெரித்திடு
கருக்குமே யெடுத்துநீ கானரவி பத்துமே
காணவொன்று இட்டிட கனகவெள்ளி யாகுமே. ௭0

வேறு.

ஆகுமே வெள்ளி தானிடை சேர்த்திடு
அன்பதாக மதிபத்து மாகுமாம்
யோக மாகவே ஞானங்கள் பார்த்திடு
உற்ற வெள்ளியை விற்றுச் செலவுசெய்
யூக மாகவே நாசி நுனிதனில்
ஊதி யூதிடு தாரையி லப்படி
ஆன மாமர புதனில் நின்றிடு
ஆடகேசரம் அம்பர வீதியே. ௭௧

லிங்கக்கட்டு.

வேறு.

கடல்நுரையின் நீறுங்கரி யுப்புமது சேரடா
கானமூர்த்தி வெண்கருவில்தானேயரைவில்லைசெய்

உ

சிவமயம்.

முனியழகர்

என்னும்

யூகிமுனி - மதிவெண்பா.

கதிருஞ் சசியுங் கலந்து பிரிந்தநிலை
விதியுரு வங்குருநூல் விள்ளுமே—மதிவெண்பா
முழுது முறையறியா மூடர்களே யானாலும்
வழலையறி வாரென்ற வாறு. ௧

வண்ணான் பிறப்பறிய மாட்டாத வாதிகட்குச்
சுண்ணம் பிருக்குமிடந் தோணாதே—தண்ணீரி
லூருங் கருங்காக மூசரத்தைக் கொன்றதென்றால்
பேருமதி வெண்பாவிற் பேசு. ௨

உப்புந் திரைக்கடல்மே லூசரமு மண்மேலே
அப்புங் கனலிரண்டு மாகாசம்—இப்புவியில்
வாதிகளே சூத மடக்கறியீர் வீண்கரிசட்
டேதினா லுண்டோ வுயிர். ௩

காந்தள் மலருங் கடலுப் புறவானா
லேந்து தனமிரண்டிங் கெய்தாவோ—காந்தள்மலர்
காட்டிலே பூபூக்குங் கானலிலே காய்காய்க்கும்
நாட்டிலே கேட்டிருப்போ நாம். ௪

காரச் சுருக்கறியீர் கம்பிப்புப்பைக் கட்டறியீர்
பூரப் புகையடங்கப் பூசறியீர்—வீரம்
ஊனிட் டுருக்கறியீர் ஊசரத்தைக் கொல்லறியீர்
ஏனிப் படிதவிக்கி றீர். ரு

வாதி அறியவேண்டியவை.

ஆழி கடைந்தமுத மாக்கறியா ரச்சலத்தில்
ஊழிபர னுப்பெடுத்து ஊட்டறியார்—ஏழுசட்டை
வாங்கிரசங் கட்டறியார் வாதிகள்தான் வையகத்தில்
தூங்கிவிழு வாரெனவே சொல். சு

இடைபின்கலை சுழுமுனை.

பார்த்தால் விசுத்திப் பரத்தினடி யாசனத்தை
பேத்தாமல் விட்டா லிதமில்லை—காத்தாம்
பின்கலையா னூதப் பிடரிவழி புக்கியே
முன்கலையி லோடு முனை. எ

கமனகுளிகை.

சாயை மறையாதோ தன்னுடம்பு தன்னுக்கு
ளோயாமல் சுத்திநடு ஓடாதோ—காயம்
உயரப் பறவாதோ யுன்மனையைத் தாண்டாதோ
சுபகுளிகை யாமெனவே சொல். அ

சாற்றுங் குளிகைத் தமர்வாச லைத்திறந்து
யேற்றினு லேழுசபை யேருதோ—தோற்றும்
மனங்கடந்த பூரணத்தில் வாழாதோ காய
மினந்தெளிந்து கொள்ளாதே னீ. க

கடலையாகத் தானேகரி தன்னிலேநீ யூதிடு
நாடுமே கடுமையான சுன்னம்நேர் நிலைத்திடும்
விடலையாக யோகமே கடுமையான சுன்னத்தில்
வீதமாக வீரமிட்டு வீடுமூலி தானிடு
வடலையே பிழிந்திடவே வாதுநேர் ஜலமதாம்
வன்மையாய்அபக்கரண்டி தன்னிலிங்கம்வைத்திடே.

விங்கமெழுகு.

வைத்திடு சுருக்கிடு வாகுளோரு சாமமும்
வண்மையான லிங்கமே வடிவதான கட்டடா
உத்திடுயே மத்திலிடு வுண்மையான வீரம்நே
ருற்றுநே ரனைத்திடு சாமம்ரண்டும் வெண்மையாம்
கைத்திடுமேல் வன்னிமேலே கானஅங்கி தானிடு
கடியதோரு சூடன்தீபம் தன்னிலேநீ வாட்டிடு
பத்திடுமே வுள்ளேவாங்கும் பாரினில் மெழுகுமாம்
பாதியான லோகமிது பாச்சிடவே சொர்ணமே.

சமுத்திரநீர்முறிக்க.

வெண்பா.

வேலை யமுரிதனை விட்டு முரிக்கக்கேள்
ஆலைபோல் வாலை அடுப்பிலிட்டு—காலைபா
யேரிசுத்த நீராமே யின்ப ரசவாதி
மூரிவேதை யாக முடி. எச

வேறு.

தாம்பரத்திற்கு கெந்திசேர்க்கு மளவு.

கெந்தி ரொம்பவும் சேரிடில் செம்புதான்
கீர்த்தி யாகவே தான்கரி யாகிடும்

முந்தியே கெந்தி தான்ரவி முக்காலாம்
மூர்க்க மாகவே சேரிடில் தங்கமாம்
நந்தி கண்டது விம்முறை தானது
நாடிணு ெரணே தானே புலத்தியர்
சிந்திப் பாகவே சொன்னேனிவ் வேதையே
சித்தி யாகவே முத்திய தாகுமே. எரு

கார மிஞ்சினல் தானே கறுத்திடும்
கார மில்லாத யேமமுந் தானில்லை
பார முண்டானல் கப்பல் கவிழாது
பார மில்லாதால் தானே கவிழ்ந்திடும்
கோரமாக சரக்கில் உப்புப் புளி
கூட்டிணு விடை கொஞ்சமாய்க் கூட்டிடு
வீர மிட்டாலோ சுன்னமு மாகுமாம்
வேதை யாகவே தான்வீரங் கூட்டிடே. எசு

முத்தி யாகவே தான்ரவி தன்னுடே
மூலமாகவே நாற்றம் ரொம்பச் சேரில்
சத்திய மாக தானே கரியதாம்
சத்துமே ரவி தாணுக மாட்டாது
புத்தியாலே நீ கண்டு பிடித்திடு
போத மான சுழுமுனை பாரடா
சித்தி யாகச் செலுத்திறற் போலவே
சிக்கெனப் பிடி வாதத்தைக் கண்டுமே. எஎ

தருசுசெம்பு சிந்தூரம்.

வேறு.

ஆதியான தானெனீலன் அன்பது பலமெடு
அநாதியான காரநேர ஆடிநீ யுருக்கிடு
சோதியாகத் தானேரவி பத்துபலந் தானெடு
சூட்சமாக கெந்தியைகைத் தாழம்பாலை விட்டரை
நீதியாப் ரவியுருக்கித் தான்கிராசம் தானிடு
நித்தமாப் தகடடித்து நீதமாய் புகைநீரில்
வாதிபுகை தான்கடை நீரைவிட்டு மூன்றுநாள்
வைத்திடக் கரைந்துரவி நீலனைப்ப தாகுமே. எஅ

வேறு.

நீலன்புடை காரம்புகை நீர்சுண்டிட எரிநீ
ஆலம்மரை யெடுவில்லையும் ரவி தன்னிலே யிடுநீ
கோலம்பெரி புடமிட்டெடு குலிசக்குகை தனிலே
சாலம்பட வுருகும்படி யெனவேயெடு செம்பே. எகூ

அயமும்பல மெடுநீயரை வீரம்புகை விடுநீ
நயமும்மரை நாளிப்படி அரைநீகிட மடைநீ
நயமும்மெரி கிடமேல்தனி லேறும்வழி யடியில்
கயமுமரை புகைநீர்தனி லடையிப்படி யெரியே. அ0

படிநீயெரி திரமஞ்சினில் புகைநீர்விடு அரைநேர்
துடிவாணிடு பவழநிறம் ரவிமுன்னிலே அங்கி
வடிமேலிடு ரவியிற்படும் கசமாபுட மிடுநீ
கொடியாம்ரவி போலாகுமாமெனவேயெனவுரை யே.

வேறு.

ஊணியே மதி தன்னிலே யெட்டுக்கு
மொன்று இட்டிடி லேமமிரண்டிடு
பேணியே ஆணி ரண்டேகா லாகுமாம்
பேசப் போகுமோ யேமத்தை யென்சொல்வேன்
தோணி யப்பனா தானே நினைந்திடு
தோய்ந்த முத்திமை வாசி யிறுக்கிடு
சேணி லத்தினில் ஞானங்கள் பார்த்திடு
சித்தத்தில் மாய்கை தானே யொழித்திடே. அஉ

வேறு.

ஆழமே புணரிகட லுப்புநீரி லுப்படா
அநாதியான சூதந்தானே தானது வசப்படும்
வேழமே பெரியோர்தானும் வேதியருஞ் சாவரோ
வித்தக ரவிந்துரச பற்பம்வைக்க சித்தியாம்
தாழவே திரிந்தலைந்து சாஸ்திரங்கள் பொய்யென்பார்
சத்தசா கரமிருக்கத் தானலைய லாகுமோ
வாழிவாழி சூதமுண்ட பேர்களூ மதிவெண்பா
வாசிபார்த்த பேர்களூ மதியினிடம் வாழியே. அ௩

லிங்கரசபதங்கம்.

வேறு.

உப்பு நாலுக்குச் செங்கல்மா ஒன்றிடு
உன்னியே யடி சட்டியி லிட்டிடு
நப்பு மாகவே வன்னி ரசமிடு
நாடி யேமூடு சீலைமண் ணேழுசெய்

செப்பு வார்களே தானே யடுப்பினில்
சேர வைத்துமே பத்தெட்டுச் சாமமாம்
அப்புநேர் கம லாக்கினி தானெரி
ஆகியான பதங்கமு மாகுமே. ௮௪

நாகக்கிண்ணியில் லிங்க ரஸபதங்கம்.

ஆகுமே லிங்கந் தான்பதங் கத்தையும்
அன்ப தாகப் பிரித்து எடுத்திடு
தாகுமே ஒரு நால்பலங் தூக்கிடு
தக்கவே யின்னஞ் சேதியைக் கேளடா
பாகுசேர் அயக் கிண்ணத்தில் வைத்திடு
பார்த்திடில் நாகக் கிண்ணியை மூடியே
வாகு சுத்திலும் சீலையைச் செய்திடு
வண்மை யாகவே தானடுப் பேற்றிடே. ௮௫

ஏற்றியே யிலுப் பெண்ணை திரிப்போடு
யின்பமாக வெரித்திடு முச்சாமம்
பாத்துமே யெடு மேல்நாகக் கிண்ணியில்
பத்தி யேறியே தான்குரு வாகிடும்
சேத்துமே யெடு செம்புநா றென்றுக்கு
சேர்த்து வொன்றிடு ஆணிக்த ஒக்குமாம்
காற்றுமே புடங் தன்னி லிறங்குமாம்
கார மாகுமாம் கண்டு பிடித்திடே. ௮௬

துருசுச்செப்பு.

துருசு காலிடை வீரமும் சேர்த்திடு
தூக்கி மெள்ளக் குகைதனி லிட்டுமேல்

வரிசை யாக வுருக்க ரவியதாம்
வாட்டித் தானடித் தான்தக டாகவே
உருசை யாக ரவியிடை நாத்தமும்
உண்மை யாக ரசபதங் கஞ்சேரு
நரிசை யாகவே கைத்தாழம் பாலனா
நாடி மேலிடு தான்புட மூன்றுமே. அஎ

வேறு.

மூன்றுபுட மிட்டேயெடு மேலே நிறங்கறுப்பாம்
ஊன்றுகடை நீர்விட்டிடு ஊருமது ஏகம்
கான்றுதிரு நாளாம்நீலம் காணஅதை பிங்கான்
தோன்றும்உமி நெருப்பில்லினி சுகமாயதைக் காச்சே.
காச்சிக்குழம் பாகயெரி கார மிடைசேர
பாச்சுக்குகை தன்னிலிடு பாகம்பட வுருக்க
மூச்சுப்பட ரவியாம்மது மூலம்பர மதியில்
வாச்சிப்படி யெட்டொன்றிடு மலைப்பாம் வயதேழே.

வெள்ளிவித்தை.

காரம்மிடை பால்நேரிடை கள்ளியென அரைநேர்
பாரம்பட சாமம்மெடு பரிவானது வங்கம்
தூரம்படக் கிராசமிடு துடியாகவே வுடையும்
பாரம்பட விடைநேரிடு சாரம்மிடை சேரே. கூ0
இடைசேரிடை அரைநேர்பது தருகும்மரிச் சாற்றில்
படனால்திறம் சாரம்மதை சாய்த்து எடுகட்டு
இடைசேர்மதி இடைநேரிடு குணமாமதில் ரசமாம்
இடையீந்திட வெள்ளையிடு வெகுமாமதி யாமே. கூக

ஆமின்னிடை யெருக்கின்படி பாலாலனா சாமம்
தாமின்னிடை வில்லைரவி காயவெரித் திடவே
வாமின்னிடை மூடியெரி வலுவாகவே யேறும்
ஓமின்னிடை யைந்துதிற மெரிநேர்பட வெரியே.

வேறு.

எரிக்க விப்படி அஞ்சு தரமது
யேறி யேறி அடிதனில் நின்றிடும்
பருக்கவே யெடு வங்கம்தூர் தன்னிலே
பற்றியே யெடு ஒன்றுமே யிட்டிடு
நரிக்க வங்கமும் தான்மதி வெள்ளியாம்
நாடியே யெடு விற்றுச் செலவுசெய்
புரிக்க வாசிப் பிரியமாய்ப் பார்த்திடு
போத மில்லை பிணக்கில்லை வெள்ளியே. ௬௩

எண்ணிறந்த விதமான நூல்தனி
யின்பமாய் கண்ணி னுண்மணி போலவே
நண்ணினேன் மதி வெண்பா கழிநெடில்
நாடியே யிட்டு நூற்றுக்குள் தன்னிலே
புண்ணி யப்பெரும் சுன்னங்கள் சிந்தூரம்
புத்தி யுள்ளவர் கண்டு பிடிப்பவர்
பண்ணிய பாக மாகவே செய்பவர்
பாரிலே சுத்த சைதன்ய மாவரோ. ௬௪

ஆணியே முப்பு வெண்பாநூற் பாடினேன்
ஆதியான புலத்தியர்க் காகவே

பேணியே யொரு லக்ஷங் கிரந்தத்தில்
பேசினே னது செப்பிலே யென்றுமே
தூணிலே மதி வெண்பாவில் தன்னிலே
தோற்றவே முப்புச் சுன்னங்கள் சொல்லினேன்
ஊணிப் பார்த்தாக்கால் பாகமுந் தோன்றுமே
வுற்றுப்பாரு மதிவெண்பா நூற்றிலே. கூ௫

சினச்சுன்னம் அகனுல் தாரச்சுன்னம்.

வேறு.

சினம்ரண்டு தானெடுத்து சித்திபெற வூதிடு
மோனமாக நீறியேடு மோககார நீறவே
கானமூகை வெண்கருவைக் காதலாக விட்டுமே
ஞானமாகத் தானரைத்து ஊதிடுநீ நீறதே. கூசா

வேறு.

சினம்சய நீருபெடு வீரமிடு அரைநேர்
காரம்அரி நேராயிடு காரம்தனை அங்கி
வாரம்மெரி தாரம்மிடு வாகா பெருந்தாரம்
ஈ எம்பெறு லோகந்தனி லிடுமா மென வேமம். கூஎ

வேறு.

குருவைப் பாரு குருவிலாப் போனுலோ
குருனு லத்தனே மதிவெண்பா நூறிலே
திருவைப் பாரு ஒருவேதை செய்திடு
திட்ட மாகவே பாகமாய் வைத்திடு
கருவைப் பாரு கருகுரு தானது
காட்டவே மதி புத்தியு மாகுமாம்

உருவைப் பாரு வுருத்தெரி கண்ணது
உற்றுப் பாரு வுறுதியாய்ச் செய்திடே. கூஅ

தங்கம் செய்வது தானே அருமையாம்
தாக்கிப் பார்த்திட ரொம்ப லகுவது
உங்கள் புத்தியி னாலே மதிவெண்பா
வுற்றுப் பார்த்து அயச்செம்பு தானெடு
சங்கமா மதி தன்னிலே யிட்டிடு
சாற்றுவீ ரேமம் தானுணி ஆகுமாம்
துங்க மாமத ஞானமுண் டாகுமே
தூக்கியே வாசி யோகமும் பார்த்திடே. கூகூ

கொறுக்குவெள்ளி.

வேறு.

மதிசீரிடை காரியிடு மதியாகவே யூது
பதியேயெடு தகடாயடி யதின்மேலிடு கவசம்
நதியாவரிப் பாலைவிடு நாத்தமிடை அரைநேர்
புதியே யெடு தகடிட்டிடு புடமஞ்சிடு போடே. க00

போடெடு கரியாயெடு புகைநீர்விடு அரைநேர்
வாடுயில்லை ரவிபிலிடு வளமானது புடமாம்
காடுகரி தனிலிட்டிடு சரியானதோர் காரம்
மாடுவிடு ளோராகவே மயமாமென வுருக்கே. க0க

உருக்கியெடு மதிபோலவே யுன்மைத்தக டடிநீ
பெருக்கிநிற மாகக்கரும் பொன்னின்நிற மேழாம்

நருக்கிப்படி பழுக்கச்சுடு நயமாகவே நிறமாம்
பருக்கிப்படி வெள்ளிதனை பரிவாகவே செய்யே. ௧0௨

வேறு.

செய்ய வெள்ளியைச் சிராக விப்படி
சித்தி யாகவே போட்டெடு வாதிகேள்
பைய்ய நூலுக்கு சாயம்போ லாகுமாம்
பத்தி யிப்படிப் போட்டால் புடத்துக்கு
மெய்ய வுப்புக்குக் காவிக்கும் நிற்குமாம்
மேன்மை யாகவே வேதை முடியுமாம்
வைய்ய கத்தினில் வாழ்வு மிகவரும்
வாகையீர் மதிசெம்பொடு தானிடே. ௧0௩

வெண்பா.

இப்படிக்கி இட்ட வின்பவெள்ளி தானுருக்கி
முப்படி ஐயச்செம்பை முன்னிடுவாய்—அப்படியே
சேர்த்திடவே யேமம் சேருமிடை தானாத
மாத்தி திரமடர்க்கும் பார். ௧0௪

பாரீர் ரசவாதி பாகமதி வெள்ளியைத்தான்
சேரீ ரதன்பெருமை செப்பக்கேள்—வாரீ
ரெப்படியுந் தானொறுக்கி யீடுபடத் தானுருக்கி
மைப்படியு மேம வகை. ௧0௫

வகையாகும் வாதமா மாநிலத்தில் செட்டிகையில்
துகையாகும் ஆணிக்குத் தோலா—பகையில்லை

ஒக்கவெடுப் பான்பொன்னை ஊதியே பார்த்திடுநீ
கைக்குள் வசப்படுவான் காண். கo௬

காணீர் மடநெஞ்சே கைக்குள் ரசவாதம்
பேணியே சிக்கினல் பேறுண்டு—ஊணி
மனநிலைத்தால் வாதமாம் வாழ்ந்துண் டிருக்கலா
மினமாக வேமமதைச் சேர். கoஎ

சேருமதி வெண்பாவில் சேர்த்தாலோ தங்கமாம்
ஊரிநீ யென்று வுலையாதே—சாதகமாய்
சூதமது கட்டினல் சுகமாகப் பொன்னுண்டு
பூதமதை அறிந்து பேசு. கoஅ

பேசுவார் வாதம் பெரட்டா மதுவென்பார்
தோசிகள்தான் சொல்வார் துடியாக—வாசனையு
மில்லாத பூப்போல வேங்கியே தானலைவார்
செல்லா தவரிடத்தில் சொல். கoகூ

வழலைமுடிப் போமென்று வாய்வீணர் சொல்வார்
பழகவே முற்களங்கைப் பார்த்து—தழல்போ
லெடுத்து ரவிமதியி லின்பமாய்த் தாக்கி
அடுத்துமே யோக மறி. கக0

அறிந்துமே சத்துருவை அன்பாகத் தானறிந்து
பிறிந்துமே கொண்ணு பிழையார்க்கு—நரிந்து
எடுத்தால் ரவிதன்னை யின்பமாய்த் தான்மதியில்
கொடுத்தால் குருவாகும் கொள். ககக

வாழிவாழி தானேமதி வெண்பாநூறும் வாழியே
யூழிகால மாயிருந்த யூகியோகி வாழிகாண்
பாழிவாத சூதபஸ்பம் தன்னையுண்ட யோகியும்
ஆதியான நல்லவுப்பு ஆதிவெண்பா வாழியே. ககஉ

சீனச் சுன்னத்தி னல்வெடி யுப்புதான்
கானலாகக் கடுஞ்சுன்ன மாகுமாம்
ஈன மாகவே தான்ரசஞ் சுன்னமாம்
ஆனநாகமும் தான்கட்டும் பாருமே. ககங

முடிவாய் ரசத்துக்கு முக்கியமாய்ச் சட்டை
வடிவாக யேழுஅங்கி தானுண்டு—துடியாக
புகைநீளா விட்டு போதாவா தானளாக்க
துகையாக சட்டைக்குஞ் சொல். ககச

பித்தளைச்செம்பு.

காக்கைப் பொன்னினைச் சேறு நிறுத்திடு
கட்டியே துணி தானேயுருட்டியே
தாக்கவே முழந் தானே புடமதாம்
தாக்கியே யெடு தானே கறுப்புமாம்
பாக்கவே பீங்கான் தன்னிலே யிட்டிடு
பாக மாகக் கடைநீளா விட்டுமே
தூக்க மாகவே பார்த்திட நீலனும்
தொக்க வாகக் களாயவே வைத்திடே. ககரு

வைத்துமே யுமி தானே நெருப்பினில்
வண்மை யாகவே சுண்ட வெரித்திடு

நைத்துக் கல்வத்தில் நாறும்பூ ரண்டிடு
　நாடி வில்லை ரவிதனில் காயவை
சித்து ஆகவே ஓடதி விட்டுமே
　சித்தியே பெறத் தானே புடமிட
கைத்து மேலிடு காரமுங் காலிடு
　காரமாக உருக்கிட்டுப் பாருமே. ௧௧௬
பாரு மேரவி யாயிடு தானெடு
　பத்தி யாகக் குகைக்குள் தனிலிட்டு
காருமே பஞ்ச மித்திரஞ் சொல்லுவேன்
　கார நல்லெண்ணை தேங்காயும் பாலுமாம்
வாருமே யிலுப் பைப்பூச் சார்விடு
　வாகா ஆவினெய் தேனுமே கூட்டிடு
சாருமே வகை தேனது ஒன்றிடு
　சத்தியாக வெழுதிறஞ் சாய்த்திடே. ௧௧௭
உருக்கிச் சாய்த்திட உற்றுச் சிகப்பதாம்
　உண்மையா மாவி யெல்லாமுமிப்படி
பெருக்கிச் சாய்க்கவே யெல்லாம் பலப்படும்
　பேசப் போகுமோ தான்ரவிக் கூட்டதை
பருக்கித் தானே மதியெட்டுக் கொண்டிடு
　பாக மாக பரியது நேரிடு
வருக்கவே ஆணிக் கெட்டா யாகுமாம்
　வாகா வுப்புக்குக் காவிக் கிரங்குமே. ௧௧௮
இரங்கு கின்ற பரியதை வித்துமே
　யின்ப மாகச் செலவுமே செய்திடு

பாங்குமேல் நாசி நாலையுங் கட்டிடு
பார்த்துமே சுழி வாசலை நோக்கிடு
தூங்குமே ஊமை தன்னை யெழுத்துடன்
தூக்கியே ஊவை தன்னையு மிட்டிடு
சாங்குமே யெட்டை நாலுடன் சேத்திடு
சாத்தி ரத்தைநீ சோதித் தெடுத்திடே. ௧௧௯

வாழி நூல்மதி வெண்பாவும் வாழிகாண்
வாழி மாமுனி மாதவர் வாழிகாண்
காழி காண் புலத்தியர் வாழிகாண்
காதலான விரதமும் வாழிகாண்
தாழியானதோ ரேமமும் வாழிகாண்
தந்தமாம்வெடி கல்லுப்பு வாழிகாண்
தோழியானதோர் சூதமு முண்டவர்
தொன்மையாகவே வாழியெ வாழியே. ௧௨0

மதிவெண்பா
கழிநெடில்
முற்றிற்று.

சிவமயம்.

யூகிமுனி மதிவெண்பா.

விஷயம்.	பக்கம்.
மதிவெண்பாவிற் கூறியுள்ளவிபரம்	௧
வாதி அறியவேண்டியவை	௨
இடை பின் கலை சுழுமுனை	,,
கமனகுளிகை	,,
பூநீறு	௩
கல்லுப்புக்கட்டு	,,
ரசமணிச்சிந்தூரம்	௪
கல்லுப்பும் அதைக்கட்டுதலும்	,,
ரசபதங்கமும் அதைக் கர்ப்பமாகக் கொள்ளுதலும்	,,
ஜயகுதபஸ்பம் அல்லது சண்டரசபஸ்பம்	ச	சங்கத்திராவகம்	க0
தருசச்செம்பு	ரு-ருஅ-எ0	செம்புக்கரி	,,
நல்ல சிவப்புச் செம்பெடுத்து வெள்ளியிற் கொடுக்க	கூ	அயச்செம்பு	க0-உஉ-உகூ-ஙகூ-சஉ-சஎ-கூங
அயச்செம்புவேதை	,,	ரசசிந்தூரம்	கக
		தாம்ரக்கரி	,,

விஷயம்.	பக்கம்.
அயச்செம்பைக் கரிபண்ணி வெள்ளியித்கொடுக்க	௧௧
பேதிமருந்து	௧௨
கல்லுப்புச்சுன்னம்	,,
திராவகக் களங்கிறகு எண்ணெய்ச் சுருக்கு	,,
சுரத்திற்குப் பாஷாணமாத்திரை	௧௩
காமாலைக்குமருந்து	,,
திராவக காரியச்செம்பு	௧௪
திராவகச்சத்து	,,
மூடர்களின்செய்கை	௧௫
தங்கம் வாதத்திற்கு வித்து	,,
வெடியுப்புச்சுன்னம்	௧௫-௧௬
வாளசத்தி	௧௬
அயக்காந்தசிந்தூரம்	௧௬-௧௭
நீர்க்கட்டுக்கு வெங்காரபஸ்பம்	௧௭
கண்ணுக்குமை	,,
மகோதாதத்திற்குக்குடிநீர்	,,
திராவக அரிதாரச்செம்பு	௧௮
களங்குகட்டுப் புடமிறக்கூடாதெனல்	,,
தாதுவிர்த்திக்கு மருந்து	௧௮-௧௯
வெள்ளிவித்தை	௧௯
விக்கலுக்கு மருந்து	௨௰
கள்ளிக்குடுத்து மயக்கமுண்டாக	,,
தங்கச்சிந்தூரம்	,,
நாகச்சிந்தூரம்	௨௧
திராவகக்களங்கு	௨௧-௨௨
அயவருக்கு	௨௨
அயவருக்கும் திராவகம்சேர்க்க	௨௩
திராவகக் களங்கில் அயம் சேர்க்க	,,
அயச்சத்துப் பிரிக்க	௨௪
தாளகச்சத்து	௨௫
சயத்துக்குக் குடிநீர்	௨௬
அயச்சிந்தூரம்	௨௬-௨௭
நாகபஸ்பம்	௨௭ ௨௮-௨௯
வேதைமுடிவு	௨௯

விஷயம்.	பக்கம்.
நாகமும் செம்புமிசேர்ந்த களங்கு, அல்லது விங்கமும் செம்பும் சேர்த்துக் களிபண்ணி செம்பெடுத்து வேதைசெய்யச் சொல்லியது	௨௮
மலஜலமடைப்புக்குச் சூர்ணம்	,,
பேதி எண்ணெய்	,,
கற்பசூர்ணம்	௨௯
ஷை சூர்ணத்திற்கு உப்பு	,,
பித்தலைச்செம்பு	௩௰
குட்டத்திற்குச் சூர்ணம்	,,
சருக்களங்கு சத்துபிரிக்க	௩௧
க்ஷயதிற்குப்பொன்னாவரைக் குடிநீர்	,,
குட்டதிற்குப் பூரபஸ்பம்	௩௨
வாய்விற்குப் பிரண்டைமாவு	௩௩
அதிதாகத்திற்குக் குடிநீர்	௩௩
கஞ்சாநெய்	௩௪
குதகவாய்விற்குக் குழித்தயிலம்	,,
பக்க சூலைக்கு எண்ணெய்	௩௫
பஞ்ச தீபாக்கினிலேகியம்	,,
கிராணிக்குக் கொழுக்கட்டை	௩௬
வெட்டைக்குப்பால்	,,
மூலக்கிராணிக்கு	௩௭
பித்தவாய்விற்குக் குடிநீர்	,,
கிராணிக்குக் குடிநீர்	,,
ரசவாதம் தெரிந்த பெரியோர் செய்கை	௩௮
அருச பூரபஸ்பம்	௩௯
மூடஞானிகட்குப் புத்திகூறல்	௪௨
தாளகத்திற்குச் சுருக்கு	௪௪

விஷயம்.	பக்கம்.	விஷயம்.	பக்கம்.
தாளகசுத்தி	௪௬	மூலத்திற்கு நாகபஸ்பம்	௬௦
பூரத்திராவகம்	,,	துருசு அப்பக்களங்கு	௬௧
சத்துபிரிக்கும் வகை	௪௯	வாதருன்மத்திற்கு	,,
க்ஷயத்திற்கு வாந்திக்குக் கொடுக்க	௫௦	தாம்பூலம் தின்னக்கூடாதெனல்	,,
அயம் துருசுச் செம்பெடுக்கும் வழி	௫௨	செத்தசெம்பில் விட்டலைக்க ஜயநீர்,	
வங்கரச பஸ்பம்	௫௪	பச்சைநிறம் ஓடாதிருக்க	௬௩
நுரு கொடுக்கும் இடைபாக விபரம்	௫௫	வேட வாதிகள் புறட்டு	௬௪-௭௪
மூலத்திற்கு	௫௬	காக்கைவலிக்கெண்ணெய்	௬௫
கொறுக்குவெள்ளி	௫௭	லிங்கம்கட்ட ஜயநீர்	,,
கொறுக்கு வெள்ளிக்கு அயமும் துருசும் சேர்க்க	,,	தந்துவாய்விற்குக் குடிநீர்	௬௬
திமிர் குட்டத்திற்கு எண்ணெய்	,,	கண்ணிற்குக் களிம்பு	,,
செத்த செம்பு ஓடா விதம்	௫௯	நாகக்களங்கு	,,
காதடைப்புக்குத் தைலம	,,	செம்புக் களிசெய்து வெள்ளியிற்கொடுக்க	௬௭
வயற்று வலிக்குப் பஞ்சலவண பஸ்பம்	௬௦	நாகச்சுண்ணம்	,,
வலிருன்மத்திற்கு	,,	காரீயத்தால் துருசு சுத்தி	,,

விஷயம்.	பக்கம்.	விஷயம்.	பக்கம்.
துருசுச்சுன்னம்	௬௮	வாதவெள்ளிசெய்து ஊதிப்போட்டு பின்பு நொறுக்கி ஆயச்செம்பைக் கொடுக்கச் சொல்லியது	௭௨
தாளகக்கட்டு	,,	ஆயக்களங்கு	[illegible]
லிங்குக்கட்டு	௬௮-௭௦		
நாபிமாத்திரை	௬௮		
வாய்விற்குத் தைலம்	௭௦		
வெள்ளிசெய்யக் களிப்பாலால் பாஷாணக் கட்டு	௭௧		

முற்றிற்று.

உ

சிவமயம்.

யூகிமுனி வாதாங்கதீக்ஷைவிதி—௩00.

காப்பும்—நூற்பெயரும்.

சத்தியென்ற னுமையவள்தன் பாதம்போற்றி
 சதாசிவத்தின் மகன்பாதம் தலைமேற்சாற்றி
நித்தியமா யனுதினமும் போற்றிநின்று
 நினைவாக ஆயுர்வே தத்தைத்தானும்
பத்தியாய் வாதாங்க முன்னூருகப்
 பதிவான திக்ஷைவிதி சுருக்கமாக
சுத்தியே யாருய்ந்து எடுத்துச்சொல்வேன்
 சொருபமா யிதின்விரிவைப் பார்த்துத்தேறே.

வாதம் உபதேசித்த பரம்பரை.

தேறவே சிவன்சொல்ல அம்மைசொல்ல
 சிறப்பான அசுவனியும் சொல்லக்கேட்டு
ஆறவே விசுவனி நந்திக்குச்சொல்ல
 அடைவான நந்திதான் தன்மந்திரிக்கு
காறவே தன்மந்திரி அகஸ்தியர்க்கு
 களிகூர்ந்துஅகஸ்தியரும் புலத்தியர்க்கு
நாறவே புலத்தியரும் சந்தோஷித்து
 நலமாக தேரருக்குச் சொன்னவாறே. ௨

சொன்னதொரு தேரருமே மனதுகூர்ந்து
 சொற்பெரிய யூகிமுனிக் குபதேசித்தார்

நன்னயமா யூகிவட மொழியைப்பார்த்து
    நலமாகப் படித்துமே யுழைத்துத்தேறி
இன்னிலத்தி லாயுருவின் வேதமாக
    இன்பமா யுலகத்தோர் பிழைக்கவேண்டி
பின்னையொன்று மிணையில்லா வாதாங்கத்திற்
    பிரபலமாய் வாதத்தைச் சொன்னேன்பாரே. ௪
இந்நூலிற் கைபாகங்களெல்லா முடித்துச்சொன்னேன்.
பாருமே களங்குமுதற் சிந்தூரங்கள்
    பதிவான சவுக்கார மெழுகுதானும்
ஆருமே தூமமுதல் வேதைமார்க்க
    மடைவான கைபாகம் வரிசைதானும்
காருமே யெண்ணெய்முத லப்பாகேளு
    கருதியே வகைவிபர மாகச்சொல்லி
ஏருமே முன்னூறில் முடித்துச்சொன்னே
    னிதமான பொருளெல்லா மியல்பாய்க்கேளே.

சவுக்காரக் குழம்பினால் கல்லுப்பைச் சுன்னம்செய்து
    ஜயநீராக்கில் அதினால் சகலசாரக்கும் கட்டும்.
கேளுமே திசைகூவிதி தன்னில்தானுங்
    கெடியான நந்திசொன்ன சவுக்காரத்தை
ஆளுமே யதைவைத்துக் குழம்பினாலே
    அன்பான புழுகுடனே வீரங்காரம்
பாளுமே போகாமல் தெளிவிறுத்து
    பதிவாகச் சவுக்காரக் குழம்பில்பாரே. ௫
பாரோநீ சவுக்காரக் குழம்பைத்தானும்
    பதிவாகக் கல்லுப்பி லிட்டுஆட்டி

நாரோநீ புடம்போடப் பொங்கிநீறும்
நலமாகக் கடுஞ்சுன்ன மாகும்பாரு
வாரோநீ சாரத்தை யிடையேசேரு
வடிவாக நீராகும் மார்க்கமெத்த
தாரோநீ சகலசரக் கெல்லாங்கட்டுந்
தடையறவே சுருக்கிடவே யெல்லாங்கட்டே. ௬

கட்டியதோர் சரக்குகளில் வேதைகோடி
கசடற்ற களங்குசெம்பு கோடிகோடி
தொட்டியதோர் கட்டுவகை கோடாகோடி
துடியான சிங்குவகை களங்குகோடி
முட்டியதோர்ப் பழுக்கும்வகை கோடாகோடி
முத்திதருஞ் சிந்தூரங் குளிகைகோடி
பட்டியதோர் கொடுப்பு பழுப்பினங்கள்கோடி
பகரரிது முன்னூறும் பயின்றுபாரே. ௭

துருசுச்செம்பெடுக்கும் வழி.

பயின்றுபா ரின்னமொரு களங்குசொல்வேன்
பதிவான யூகிமுனி பயின்றவாறு
நயின்றுபா ரிதுசுளுவு முன்னேபாரு
நதியான செம்பெடுக்கும் வகையைக்கேளு
தயின்றுபா ரரப்பொடியும் பலமும்பத்து
தாட்டிகமா யெலுமிச்சம் பழச்சார்விட்டு
தயின்றுபார் மூன்றுநா ளூறவைத்துத்
தப்பாமல் மூன்றுநா ளிறுத்துக்கொள்ளே. ௮

கொள்ளவே சொல்லுகிறே னுற்றுக்கேளு
கெடியான துருசதுவும் பலமோபத்து
மெள்ளவே நாறும்பூ பலமும்பத்து
மேன்மையாய்க் கல்வத்தி லிதனைக்கொட்டி
துள்ளவே அயநீரா லரைத்துவில்லைத்
துடியாகக் காயவைத்துச் சொல்லக்கேளு
வள்ளலே கிளிஞ்சியென்ற சுன்னநேரோ
வகையாகக் கல்லுப்பைச் சேர்த்துக்கொள்ளே.
சேர்த்துமே யரைத்துநீ வில்லைக்குத்தான்
சிறப்பாக மேற்கவசம் கனமாய்ச்செய்து
பார்த்துமே கஜபுடமாய்ப் போட்டெடுக்கப்
பதிவான வில்லையது கறுத்திருக்கும்
வார்த்துமே கறுப்பதனை கல்வத்திட்டு
வகையான வெங்காரஞ் சேர்த்தரைத்து
மூர்த்துமே வில்லைபண்ணிக் காயவைத்து
முடிவான புடம்போட்டு எடுத்துப்பாரோ. ௧௰

இதற்கு வெடியுப்புத்திராவகம்.

எடுத்துமே பார்த்தவுடன் கறுப்புமாகும்
இதமான வில்லைதனை அப்பால்வைத்து
அடுத்துமே திராவகத்தைச் சொல்லக்கேளு
அடைவாக வெடியுப்புப் பலமோபத்து
நடுத்துமே சீனமது இருபத்தைந்து
நலமாக விரண்டுமே பொடித்துப்போடு
வடுத்துமே வாலையென்ற சட்டிமூடி
வகையான அடுப்பேற்றி யெரித்திடாயே. ௧௧

எரித்திடவே முன்னீர்தான் வெள்ளையாக
இதமாக வெள்ளையைத்தான் தள்ளிப்போடு
அரித்துமே புகைநீர்தான் மஞ்சளாக
அடைவாக விருக்குமந்த நீரைத்தள்ளு
கரித்துமே கடைநீர்தான் மஞ்சளாகக்
கனிவாகக் கடைநீர்தான் வாங்கிக்கொள்ளு
வரித்துமே அரக்கென்ற குப்பிதன்னில்
வடிவாகக் குப்பியடை வைத்துக்கொள்ளே. கஉ

வைத்துமே முன்வில்லைக் கல்வத்திட்டு
வகையாகக் கடைநீரா லரைத்துவில்லை
சித்துமே வில்லைகட்டி ரவியிற்போடு
சிறப்பாக முன்கவச மேலேகட்டி
நத்துமே கஜபுடமாய்ப் போட்டெடுத்து
நலமாகக் குகைபிட்டு உருக்கித்திரு
பத்துமே கசடற்றுச் செம்புமாகும்
பதிவான செம்பினுடப் பருவங்கேளே. கங

பருவமென்ன சொல்லுகிறேன் செம்புதானும்
பதிவான பொன்போலே கண்விட்டாடும்
துருவமாஞ் செவ்வலரிப் பூப்போலாகும்
துடிபுள்ள செம்புதான் வேதையாகும்
வடிவான பொருளாகும் செம்புதானும்
கருவமாஞ் செம்பொன்னு மிதுவேயாகும்
காயசித்தி லோகசித்தி கண்டுபாரே. கச

கண்டுபார் செம்பினுட பெருமைதன்னைக்
கர்த்தாவாற் சொல்லவே முடியாதையா
நண்டுபார் சித்தர்தா னிந்தச்செம்பை
நாதாக்க ளொளித்துமே மறைத்தசெம்பு
கொண்டுபார் பொன்னுக்கு இதுவேயாதி
கொள்கியே சித்திக்கு இதுவேமுத்தி
நிண்டுபா ரயச்செம்பு இதுவேயாச்சு
நீடூழி காலமெல்லாம் வாழலாமே. ௧௫

வாழலா மிச்செம்பைக் கண்டபோதே
வடிவான மதிபழுக்குந் தங்கமாகும்
தாழ்விலாக் குபேரனைப்போல் வாழ்வுண்டாமே
தாட்டிகமாய்ச் செல்வம்வருந் தானேகண்டு
தாழவே வாதங்கைக் கட்டிபோற்றி
தொல்லுலகி லரசாள துவக்கமாகும்
காழலாம் ஞானசித்தி கடிசிலாகும்
கனிவான தங்கமிது கடிசிலாமே. ௧௬

அயச்செம்பு.

கடிசாகப் போகாம லயத்தைத்தானும்
கருத்துறவே நீராக முறித்துக்கொள்ளு
படிசாகத் துருசுகெந்தி சேர்த்தரைத்துப்
பதிலாகப் புடம்போடக் கறுப்பதாகும்
வடிவாகப் பாகமாய் செய்துகொள்ளு
வளமான செம்பைமுந்தி வடிவமாக
கொடிசாக சாஸ்திரத்தை யுழைத்துப்பாரு
கோடியுகம் வாழலாம் குணமதாமே. ௧௭

குணமான அயச்செம்பை முன்னேபார்த்து
கூடியே சிவயோக வழியில்நில்லு
மணமாகச் செய்தாக்கால் மார்க்கமாகும்
மாண்டிறந்து போகாமற் சிந்தூரஞ்செய்
பிணமான வதுபோலே வாதஞ்சுட்டு
பிரட்டாகப் போய்ச்சுதென்பா ருலகவாதி
பணங்காண அயச்செம்பைக் கண்டபோது
பதிவான துயரமெல்லாம் போகுந்தானே. க அ

துயரமென்ன அயச்செம்பைக் கண்டபோதே
துடியான சிவயோகஞ் சூக்ஷமாகும்
அயரமென்ன ஆதியயங் கண்டபோதே
அடைவான சித்தியெல்லா மடைவுமாகும்
கயரமென்ன காயசித்தி யிதுவேயாகி
கடாக்ஷித்து யூகிமுனி கருணைகூர்ந்து
நயரமென்ன நால்வேதஞ் சொன்னநீதி
நாடியே பார்த்திடவே சித்தியாமே. க கூ

சித்தியா மயச்செம்பு பலமும்பத்து
சிறப்பான தங்கமது பலமும்பத்து
நத்தியே யீதிரண்டு முருக்கிக்கொண்டு
நலமாகத் தகடடித்து சொல்லக்கேளு
முத்தியே கெந்தியது இடையேசேர்த்து
முதன்மையாம் பாணியா லரைத்துக்கொண்டு
வித்தியே தகட்டின்மேற் பூசிபூசி
விதமாக ஐந்துபுடம் போட்டுக்கொள்ளே. உ0

போட்டிடவே அதருக நொருங்கிப்போகும்
போக்கோடே நிறமென்னக் கறுப்புமாகும்
ஆட்டிடவே கறுப்பென்று மயங்கவேண்டாம்
ஆதியாங் குருவாகு மறிந்துபாரு
வாட்டிடவே வெள்ளியது பலமும்பத்து
வகையாகத் தகடாக அடித்துக்கொண்டு
நாட்டிடவே புகைநீரில் மூன்றுநாளில்
நலமாகப் போட்டெடுத் துருக்கிடாயே. உக

உருக்கிடவே மாசற்று வெள்ளியாகும்
உத்தமனே யிருபதிற் கொன்றுசுய
நருக்கிடவே மாற்றென்ன ஏழுமாகும்
நலமான மாத்தைநீ விற்றுக்கொள்ளு
பெருக்கிடவே சிவனத்துக் கிடமேபண்ணி
பெலமான தேசங்க ளலைந்துசுத்தி
வருக்கிடவே குளிகைகட்டிப் பறந்துஏறு
வடிவான பொருளறிந்த வடிவுதானே. உஉ

வடிவான வுப்புக்குங் காவிக்கப்பா
வாகாகப் புடமிறங்கும் தங்கமாகும்
துடியான சொல்லறிந்தான் ஞானியாவான்
தொல்லுலகில் செம்பறிந்தோன் யோகியாவா[ன்
மடியான தரித்திரவா னறியமாட்டான்
மாயமாம் வாதியவ னறியமாட்டான்
குடியாகச் செய்தவனு மதியானப்பா
குணங்கெட்ட வாதியைநீ கூடத்தள்ளே. உங

தள்ளியே யொருமனதா யயத்தைநீயுந்
தடையறவே யெடுத்துமே சொல்லக்கேளு
முள்ளியே யெலுமிச்சம் பழச்சாறுள்ளே
மூக்கியமா யூறவைத்து நீரிறுத்து
கள்ளியே கழுவியதை வெளியாய்ப்பண்ணி
கனக்கவே புடமிட்டு எடுத்துக்கொள்ளு
அள்ளியே யுருக்கிடவே செம்புமாகும்
அடியான செம்பைநீ யெடுத்திடாயே. ௨௪

எடுத்துமே செம்பைத்தான் மதியிலீய்ந்து
இதமாகச் சிவனங்கள் பண்ணிக்கொள்ளு
அடுத்துமே யதின்பின்னே ஞானம்பாரு
அடைவான காயசித்தி யுடனேயாகும்
தடுத்துமே போகாமல் நூலைப்பாரு
தாட்டிகமாய் சகலமுந்தான் சித்தியாகும்
கொடுத்திடுமோ ரசவாதம் கொள்ளைகொள்ளை
கூகூகூ விதம்பெருமை கூறலாமே. ௨௫

கூறலா மேமமென்ற வித்தைக்கப்பா
குணமாக வயத்தைநீ குறிப்பாய்ப்பாரு
ஆறலாம் பொன்னென்ற வித்தையப்பா
அடைவான கெந்திதான் தாயுமாச்சு
மாறலாம் துரிசென்ற ராஜாவாலே
மதியான சத்தாச்சு வர்ணமாச்சு
பாறெலாம் புகைநீரா லெல்லாமாச்சு
பதிவான வாதிகளே கண்டுபாரே. ௨௬

தாளகச்செம்பு.

கண்டுகொள்ளு தாளகத்தின் செம்புசொல்வேன்
கனமான செம்புதான் பலமோபத்து
பண்டுகொள்ளு சுத்தியது சொல்லக்கேளு
பதிவான வெடியுடனே சீனக்கூட்டி
துண்டுமே கழுதையுட கத்தத்தாலே
துடியாக வரைத்துமே குழம்பாய்ப்பண்ணி
வண்டுகொள்ளு செம்பைநீ தகடடித்து
வகையாக வேழுதரங் காய்ச்சித்தோயே. ௨எ

இதற்குத் தாளகக்கட்டு.

தோய்க்கவே செம்புகட்டி நொறுங்கிப்போகுந்
தொல்லுலகில் செம்புசுத்தி நலமதாகும்
ஆய்க்கவே இச்செம்பு பலமோபத்து
அடைவாகக் குகையில்வைத் துருக்கிக்கொள்ளு
நாய்க்கவே தாளகமும் பலமோபத்து
நலமாக வெடுத்துமே சுக்காநீரில்
பாய்க்கவே யதில்வைத்து எரித்துப்போடு
பதிவாக யுருகியது சிவந்துபோமே. ௨அ
சிவக்குமே முருக்கம்பூ நிறமதாகும்
சிறப்பாக வெடுத்துமே யுடைத்துக்கொள்ளு
தவக்குமே முன்குகையில் ரவியில்தானும்
தடையறவே கிராசநீ யிடையேதானும்
அவக்குமே செம்புவெண் கலமாய்த்தோணு
மடைவாக யுடைத்திடவே யுடைந்துபோகும்

பவக்குமே யுடைந்தசெம்பைக் கல்வத்திட்டு
பதிவான புகைநீரா லரைத்திடாயே. ௪௯

அரைத்துமே வில்லைபண்ணிக் காயவைத்து
அடைவாக கஜபுடத்திற் போட்டுவாங்கிக்
கரைத்துமே யெடுத்துப்பார் களங்குமாகும்
கதிபெறவே வெண்கார மிட்டுருக்கி
பரைத்துமே செம்பாகு முருக்கம்பூப்போல்
பதிவாக வேதைபிது பலனுமாகும்
சரைத்துமே செம்பினது மகிமைசொல்லச்
சதாசிவனு முன்பின்னாய்த் தயங்கினாரே. ௫௦

தயங்கினா ரிச்செம்பைப் பார்த்துத்தானும்
தண்மையுடன் சித்தருமே தயங்கிப்போனார்
மயங்கினா ரிதனுடைய ஆட்டைப்பார்த்து
மயமான ருஷிதேவர் மயங்கினார்பார்
கயங்கினா ரளவற்ற வேதையாகும்
கடிதான தாளகந்தா னதிகவேதை
குயங்கினா ரிதனுடைய ஆட்டைத்தானும்
குணமாக முன்னூறில் கொட்டினேனே. ௫௧

கொட்டினேன் தாளகத்தின் செம்பிேனாடே
குணமான தங்கந்தான் சேர்த்துருக்கி
கட்டியே தகடாகத் தட்டிக்கொண்டு
காரியமாய் கெந்தியது இடையேசேர்த்து
பட்டியே யரைத்துமே தகட்டில்தானும்
பதிவாகத் தடவியே புடமூநாலு

வட்டியே போட்டிடவே நொறுங்கிப்போகும்
வாகாகக் கறுப்பாக விருக்குந்தானே. ௩௨

கறுப்பாக விருக்கிறது எல்லாந்தங்கம்
கருணைபெற வெடுத்துமே சொல்லக்கேளு
வெறுப்பாக வெண்ணாதே நினைத்திடாதே
வெருளாதே சொல்லுகிறே னின்றுக்கேளு
பொருப்பாக முன்மதியைப் போட்டுருக்கி
பிரபலமாய்க் கொடுத்திடவே தங்கமாகும்
முழுப்பார்வை தீக்ஷவிதி தன்னிற்சொன்னேன்
முன்னூறில் வாதாங்கம் முடிப்பாரே. ௩௩

பாருமே தாளகத்தால் வேதைகோடி
பதிவான கெந்திபினா லதிலுங்கோடி
தாருமே புங்கைநீரால் வேதைகோடி
பதிவான சவுக்காரக் குழம்பினாலே
வேருமே நீத்தனங்கள் கோடாகோடி
வெருளாதே துருசினா லதிலுங்கோடி
காருமே கைமுறையால் வேதையாகும்
கருத்துவைத்துச் செய்திடவே சித்தியாமே. ௩௪

சித்தியா யாகுமென்று யூகிசொன்னார்
ஜெகத்திலே வாதிமா ரறியாமற்றான்
பத்தியாய் கெந்தியைத்தா னன்பினோடு
பதிவாகக் கொடுத்துமே யெடுத்துப்பார்த்து
நத்தியாய்ச் சத்தாகிப் போச்சுதென்று
நலமாக வெடுத்தெறிவார் வாதிமார்கள்

சத்தியாய்ச் செம்பைத்தா னெடுக்காதாலே
சகலமுந்தான் சித்திபில்லை தகர்த்துச்சாடே. ௫௫
தகத்துமே சாடினல் தங்கமாகும்
°தாக்காட்டா லேமையில்லை தரணியோர்க்கு
இகத்துள்ளே வாதமில்லை சித்தியில்லை
யேங்கியே திரிந்திடுவா ருலுத்தர்வாதி
துகப்பாகச் சொற்கேட்டு சுட்டோர்கோடி
துகைபில்லா வகைகேட்டுத் திரிவாரப்பா
பகையாகச் சொல்லவில்லை யுற்றுப்பாரு
பதிவாக விதியாளிப் பார்ப்பான்பாரோ. ௫௬

இந்தச்செம்பிற்கு கிராசம்.

வேதைதா னிப்படிக்குப் பாரான்வாதி
விரைந்துமே வெள்ளிதன்னி லீயந்தன்னை
காதைதா னிட்டுமே பூதிபூதி
கடைகெட்டுத் திரிந்துமே வாதிமார்கள்
பாதைதான் பொய்யென்பார் புறட்டர்தானும்
பதிவான பதியறியார் மூடர்தானும்
வாதைதான் படாமலே செம்புகெந்தி
வடிவாகக் கிராசமதை போட்டிடாயே. ௫௭
போட்டிடவே செம்புதா னுறுங்கிப்போகும்
பேரான புகைநீரா லரைத்துவில்லை
தாட்டிகமாய் ரவியில்வைத்துக் காயப்போடு
தப்பாமற் புடமிட்டு உருக்கிப்பாரு
காட்டிடவே செம்பாகும் சிகப்புமெத்த
கருணைபுரி செம்பதனை யெடுத்துநீயும்

பாட்டிடவே மதிதனிலே கொடுத்தாயானல்
    பதிவான பொன்னுகும் பலனுமாமே. ௩௮
பலனுக வாதாங்க முன்னூறுள்ளே
    பார்த்திடவே யேமமாம் நியமமெத்த
பிலனுகப் பார்த்தாக்கா லெல்லாந்தோணும்
    பிறட்டாகச் சொன்னதனு லென்னலாயம்
கலனுகக் கலநறிந்தால் வாதியாவான்
    கருத்தில்லா வாதிதான் காணமாட்டான்
பிலவானு பிருந்ததினுல் முறடனுவான்
    பிறட்டுருட்டு செய்யாமல் வேதைபாரே. ௩௯
வேதைதான் வருகிறது அரிதுஅய்யா
    வித்தகனர் பத்தியுள்ள பேர்களுக்கு
போதைதான் போக்கோடே வருகும்பாரு
    பொல்லாதார் மதிமயங்கித் திரிகுவார்கள்
காதைதான் பட்டுமே பொய்யென்பார்கள்
    கருகினோர் தங்களுக்குப் புத்திசொல்லு
நாதைதா னில்லாமல் நல்லோருக்கு
    நலமான தாளகத்தின் செம்புசொல்லே. ௪௦

இன்ன தில்லாமலிது உதவாது.

சொல்லவே செம்புதனை விட்டானுகிற்
    சிறப்பான வாதமெல்லாம் பொய்யாய்ப்போகும்
பையவே சவுக்காரம் தன்னைவிட்டால்
    பதிவான நீத்தனங்க ளெல்லாம்போகும்
நையவே துருசதனை விட்டானுகில்
    நலமான சத்துவகை யெல்லாம்போகும்

கையவே தங்கத்தை விட்டானாகில்
கனகமது இல்லையிதைக் கருத்தாய்ப்பாரே. ௪௧

பாருமே கல்லுப்பு விட்டானாகிற்
பதிவான சரக்கெல்லாம் கட்டொண்ணாது
வாருமே கெந்திதனை விட்டானாகில்
வடிவான வாதமெல்லாம் விழலாய்ப்போகும்
சாருமே மனந்தனையே விட்டானாகில்
சரியான யோகமில்லை சித்தியில்லை
நாருமே துருசுக்குள் செம்பைவிட்டால்
நலமான ஏமமில்லை நடத்தைபாரே. ௪௨

நடத்தைப்பார் துரிசில்லாச் சத்தையெல்லாம்
நலமான ஊர்கட்க்கத் தள்ளிப்போடு
கடத்தைப்பார்த் தங்கமில்லாக் களங்கமெல்லாம்
காரியமா யப்பாலே யகற்றிப்போடு
விடத்தைப்பார் சிந்தூர மில்லாவேதை
விருப்பமாய்க் காயசித்தி முறையுமில்லை
திடத்தைப்பார் யூகிமுனி சாஸ்திரத்திற்
சிறப்பான கைபாகந் திறமைபாரே. ௪௩

திறமைபார் புகைநீரு மில்லாப்போனால்
சிறப்பான களங்கெல்லாம் வசப்படாது
வறமைபார் துரிசில்லாக் களங்கமெல்லாம்
வாசலிலே தள்ளிவிடு வலுமையில்லை
கறமைபா ருப்பில்லாக் கட்டதெல்லாம்
வாசலிலே போட்டவுடன் மிகவுநன்று

துறமைபார் புத்திபில்லா வாதியோர்க்கு
செய்தாலும் பொய்யாகும் திறமைபாரே. ௪௪

வெள்ளிசுத்தி.

திரமைபார் மதியைத்தா னெடுத்துநீயும்
திரமாக வங்கத்தைக் கொடுத்துஞூத
வரமைபார் கொடுத்தூத வேண்டாமையா
வடிவாக வூதிஞ லீயந்தானுங்
கரமைபார் போகாது சொல்லக்கேளு
காரணமாங் கருக்கவெள்ளி யிருந்தாலுந்தான்
கரமைபார் திராவகத்திற் போட்டாற்செம்பு
கசடற்றுத் திராவகத்திற் கிளம்புமாமே. ௪௫
கிளம்பிட்டு துரிசைப்போல் நிறமுமாகும்
கெடியாக வெள்ளியைத்தா னெடுத்துநீயும்
தளம்பிடவே வெங்காரங் கொடுத்துருக்குத்
தடையறவே யுருகியே சுத்தமாகும்
வளம்பிடவே யிப்படிக்குச் செய்யாவிட்டால்
வாதமென்ற சொல்லாய வழக்குமாடுங்
களம்பிடவே கைபாக மாகச்செய்து
கருதினல் ரசவாதங் கணக்குமாமே. ௪௬

களங்குகளெல்லாம் செம்பாக்கி ஈயவாடை போக்கி அந்தச்செம்பை வெள்ளியிற் கொடுத்தால் மதிபழுக்கும் மாத்தாகும் பொன்ஞூநும் எல்லாம் சித்தியாகும்.

கணக்காகக் களங்குவகை செய்தாயாகில்
காரணமாய்க் களங்குக்குள் செம்பைநீயுங்

துணக்காக வெடுத்துமே சொல்லக்கேளு
துடியாக மதிதனிலே தாக்கிப்பாரு
வணக்காக வூக்கொண்டு நுழையும்பாரு
வகையான பொன்னுகு மாற்றுமாகும்
திணக்கமா யெல்லாமுஞ் சித்தியாகுஞ்
சிறிதான லோகமெல்லாம் பழுக்கும்பாரே. ௪௭

பழுக்குமே கோர்த்தியஞ் செம்பில்நின்றால்
பதிவான வெள்ளிதனில் நுழைந்தபோது
தழுக்குமே யூதிடவே சிதறியோடுந்
தாக்காகப் பொருமியது தகர்ந்துபோகும்
கழுக்குமே யுருவமெல்லாங் காணுதோடும்
கனகமது இல்லையிது கருதிப்பாரு
வழுக்குமே வாதமென்ற செல்லும்பொய்யாம்
வடிவான பொருளில்லை மருவிப்பாரே. ௪௮

மருவவே சொல்லுகிறே னூற்றுக்கேளு
மனமொத்து வாதத்தைப் பாகமாக
நருவவே செய்துமே நவின்றுஉண்டு
நலமான துரிசைநீ நாடிப்பாரு
பருவவே யுன்னுடைய தரித்திரியமெல்லாம்
பதிவாக வோடியே பயந்துபோகும்
வருவதுவும் லாபம்வரும் வண்மையாகும்
வடிவான பொருளைநீ வகையாய்ப்பாரே. ௪௯

வகையென்னச் சொல்லுகிறே னூற்றுக்கேளு
வகையான வகையறிந்து களங்குதன்னை

துகையென்ன செய்துமே செம்புசெய்து
துடியாகப் பொன்செய்து கடையில்விற்று
முகையென்ன செம்புதா னுரும்பாரு
முடிவான களங்கதுவு முடிவுமாகும்
துகையாகப் பொருளறிந்து துறகம்பார்த்து
துப்பறவாய் செய்தாக்கா லெல்லாமாமே. ரு0

கௌரியால் அயமுருக்க.

ஆமேதா னிரும்புஅரப் பொடியும்பத்து
அலரவே கல்வத்தி லிட்டுக்கேளு
காமேதான் கௌரியது இடையேசேர்த்து
கலங்காம லுரிக்கிடவே யுருகும்பாரு
பூமேவு வெள்ளிமணி போலேயாகும்
புருவமா யிடைக்கிடைதான் துரிசுசெம்பு
நாமேதான் சேர்த்துமே யுருக்கிக்கொள்ளு
நலமாக வுடைத்துமே யுரிக்கிடாயே. ருக

அயச்செம்பு.

உருக்கிடவே யைந்துமுறை யிப்படிக்குச்செய்து
உண்மையா யுடைத்துமே சொல்லக்கேளு
நெருக்கிடவே புகைநீரா லரைத்துவில்லை
நேராக விருஜாம மரைத்துநீயும்
பருக்கிடவே வில்லைதட்டிக் காயப்போடு
பதிவாக பெரியபுடம் போட்டெடுக்க
கருக்கிடவே காரமிட்டு உருக்கித்திரு
கசடற்று ரவியாகுங் கண்டுகொள்ளே. ருஉ

கொள்ளவே செம்பாகுந் தங்கம்போலாம்
கொடுமையாய் மதிதனிலே யெட்டுக்கொன்று
கள்ளமாய் கொடுத்திடவே யேழுமாற்று
கணக்காகப் புடமிறங்கு மிந்தச்செம்பு
துள்ளவே யிச்செம்பு போலேபாரு
துடியாகச் சகலமுந்தா னிதுவேபோலே
தள்ளாடிப் பார்த்திடவே சித்தியாகுஞ்
சகலசித்தி யாடலாந் தாக்கிப்பாரே. ருங

தாக்கிடவே யிரும்பதுவுஞ் சொல்லக்கேளு
தாக்கிடவே புகைநீரால் செம்புதன்னை
வாக்கிடவே யெடுத்துமே சொல்லக்கேளு
வகையாகக் கைபாக மாகச்செய்து
நோக்கிடவே யிரும்மைவிட்டால் வேதையில்லை
நுணுக்கமா யெல்லாமுஞ் சித்தியாகும்
பாக்கிட்டால் பல்சிவக்கும் வேதைமார்க்கம்
பதிவாக வெல்லாமுஞ் சித்தியாமே. ருச

சித்தியே யாகவென்று லிரும்பைப்பாரு
செயமாகும் பொருளாகுந் தீர்க்கமாகும்
முத்தியா யாகவென்றால் மூலம்பாரு
முடியமட்டுங் களங்காக முடிக்கப்பாரு
நத்தியே திரிந்துநீ ஞானம்பாரு
நலமாக யோகசித்தி காயசித்தி
புத்திமா னாகவே யிருந்துநீயும்
பிரபலமா யுலகத்திற் புகழ்ந்துபாரே. ருரு

புகழ்ந்துபார் வாதத்தை செய்துக்கொள்ளு
புத்தியாய்ப் பொன்விற்று செலவுசெய்து
நகழ்ந்துபார் பொன்னில்லாப் போனாற்கேளு
நாடியே வெள்ளிவித்தை நலமாய்ப்பாரு
அகழ்ந்துபார் ஞானசித்தி யுடனேயாகும்
ஆருய்ந்து பார்த்தாக்கா லெல்லாஞ்சித்தி
துகழ்துபார் அரக்கில்நின்ற சாயம்போல
துடியாகப் பார்த்துமே செய்துகொள்ளே. ருசு

செய்திடவே வாதமெல்லாஞ் சித்தியாகுஞ்
சிறப்பான தீக்ஷவிதி தன்னில்தானும்
மெய்யாகக் களங்கு சௌகாரஞ்சொன்னேன்
மேன்மையாய் சௌகார குழம்புவைத்து
கைத்திடவே யுப்பெல்லாம் நீற்றச்சொன்னேன்
கலக்கமற்றுப் பார்த்திட்டு உழைத்துநீயும்
வையகத்தி லுழைத்துமே செய்துதேறு
வலுவாக வுழைத்தாக்கா லெல்லாமாமே. ருஎ

ஆமேதான் சவுக்காரக் குழம்பினாலே
ஆடலாம் வெகுகோடி வித்தைதானும்
வாமேதான் வித்தையது தெரிந்துபோனால்
வையகத்தில் சித்தர்போல் வாழ்விற்கானும்
பூமேவு நிலந்தனிலே யிருக்கவென்றால்
போக்கான சவுக்காரக் குழம்பைப்பாரு
நாமேதான் சொல்லிட்டேன் வாதாங்கத்தில்
நலமாகச் சித்தியிலே வன்மைதானே. ருஅ

கெந்திபஸ்பம் செய்யதிக்ஷை.

வண்மைதான் கெந்திதன் சுன்னந்தன்னை
வகையாகச் சொல்லுகிறேன் வாதாங்கத்தில்
கண்மைதான் கெந்தியது பலமோபத்து
கணக்காக எருக்கிலையின் பாலில்தானும்
தன்மைதான் தோய்த்துமே எட்டுநாளில்
தடையறவே போட்டுவரக் குடிக்கும்பாரு
உண்மைதான் குடித்ததொரு கெந்திதானு
முற்றுமே பார்த்திடவே வெள்ளையாமே. ௫௯

கெந்தகக்கட்டு.

வெள்ளையாம் கெந்திதான் மடிந்துபோகும்
வேளையாங் கெந்திக்கு இடையேசீனம்
தள்ளையாம் சுன்னத்தைச் செய்துகட்டு
தாக்கவே பெருங்கவசங் கட்டித்தானும்
பள்ளையாம் பெரியபுடம் போட்டெடுக்கப்
பதிவான கெந்தியது பஸ்பமாகும்
துள்ளையாம் பஸ்பத்திற் சவுக்காரக்குழம்பை
துடியாக விட்டுஇரு ஜாமமாட்டே. ௬0

கெந்திச்சுன்னம்.

அரைத்துமே பில்லைதட்டி ரவியிற்போட்டு
அன்பாகக் காயவைத்துச் சொல்லக்கேளு
நிரைத்துமே ஐந்துசுன்ன குகையில்வைத்து
நேராகப் புடம்போட கெந்திதானும்

பரைத்துமே கடுஞ்சுன்ன மாகும்பாரு
பதையாமற் சுன்னத்தை யெடுத்துக்கல்வம்
தரைத்துமே சவுக்காரக் குழம்பைவிட்டு
தாக்கியே யரைத்துவில்லை கட்டிடாயே. ௬௧

கட்டியே யைந்துமுறை யிப்படியேபோடு
கசடற்று கெந்திகடுஞ் சுன்னமாகும்
விட்டுமே கெந்தியது சுன்னமானால்
விதமான சூதந்தா னுடனேகட்டும்
பட்டுமே சூதமிடை கெந்திச்சுன்னம்
பதிவாகச் சேர்த்துமே புகைநீரால்தான்
தட்டுமே யரைத்திடவே வில்லைதட்டி
தாக்காகப் புடம்போட சூதநீறே. ௬௨

சூதமே நீறானாற் சொல்லக்கேளு
சுறுதியாய்ச் செம்புதான் தங்கமாகும்
பாதந்தான் பூமியிலே நடக்கவென்றால்
பதையாமல் கவனசித்தி யாகும்பாரு
வாதந்தான் கைகட்டி வாய்புதைத்து
வடிவாக யேவலாய்க் கேட்கும்பாரு
நாதந்தான் பொன்னாகும் வேதையாகும்
நலமான கருவதனை நாடிக்கேளே. ௬௩

நாடிப்பார் கெந்தியது சுன்னந்தன்னை
நலமாகச் செம்புரிக்கி நூறென்றிட்டால்
பாடிப்பார் தங்கமது உடனேயாகும்
பதிவான ஆட்டெல்லாம் கெந்தியாட்டு

காடிப்பார் கெந்தகந்தான் வேதைமெத்த
கனிவாக நடராசர் சமைத்தநேர்மை
வாடிப்பார் தங்கமது அதிகமாகும்
வடிவாக பெருமைதனை சொல்லொணுதே. ௬௪

ஒண்ணுதே கெந்தகத்தின் பெருமைதன்னை
யுற்றுமே முனிசித்த ராலேசொல்ல
கண்ணுக முடியாது பெருமைதானும்
காரணமாய்ச் சித்தர்கரு முறைமறைத்தார்
விண்ணேர்கள் பெரியோர்கள் சொல்லப்போகா
விதமான கெந்தகத்தி னூட்டுதன்னை
பண்ணுக நூல்தனிலே சொல்லிப்போட்டேன்
பதிவான யூகிமுனி பண்புள்ளோரே. ௬௫

துருசுடன் கெந்திசேர்த் துருக்கினுல் வெ
ங்கலம்போ லிருக்கும்.

பண்புள்ள யூகிமுனி சோதித்துத்தேறி
பதிவாக துரிசுடனே கெந்திசேர்த்தால்
நண்பாக வெங்கலம்போ லாகும்பாரு
நலமாக வெங்கலத்தை செம்பாய்ப்பண்ண
தண்பாக தெரியாத படியினுலே
தாக்கான வாதமெல்லாம் பொய்யாய்ப்போச்சு
வண்பாக சொன்னதினு லென்னலாபம்
வடிவான விதியறிந்தால் வாதமாமே. ௬௬

வாதமென்ன செய்தவர்க்கு உடனேசெம்பு
வடிவாகச் சேர்ந்துமே கெந்திதானும்

நீதமாய்ச் சேர்ந்தாக்கால் வெங்கலம்போலாகும்
நிலையாரு மிச்செம்பை யெடுத்தானால்
காதமென்ன மதியினிடங் குடுத்தபோது
கதிபெறவே பொன்னாங் கருணைமெத்த
சூதமென்ன கெந்தகத்தின் சுன்னஞ்சேர
சூக்ஷமாய் மாற்றாகுஞ் சூக்ஷமாமே. ௯௭

சூக்ஷமாய் கெந்தகத்தி னுழைந்துசெம்பை
சுரூபமாய்ப் பார்த்தாக்கால் தங்கந்தோணும்
ஆக்ஷமென்ன ஆயிரத்து எட்டுமாற்று
அருகுகட்டி புடத்திற்கு இரங்கும்பாரு
வாக்ஷமா யிவ்வேதை நிஜமதாகும்
வடிவாக பொருளறிந்த வாதிமானே
தீக்ஷமென்ன திசைவாய்வை கட்டநீயும்
தீக்ஷைவிதி தனிலேதான் சொல்லினேனே. ௯௮

மேற் கூறியதை இன்னின்ன நூல்களிற்பார்.

சொன்னதொரு மதிசிந்தா மணியும்பாரு
சொற்பெரிய வாதகாண்டம் மிரண்டும்
வன்னதொரு ஞானவுலா தன்னைப்பாரு
வடிவான ஞானத்தின் கொம்மிபாரு
நன்னயமாய்ப் பள்ளுதனில் துகையறிந்து
நாடாத சித்தியெல்லாம் நவிலப்பாரு
கன்னியமாய்ப் பொருளறிந்து கைபாகம்பார்
கணக்கறிந்தால் வேதைதான் கருதிப்பாரே. ௯௯

கருதியோர் தாளகத்தின் செம்புச்சொல்லேன்
கணக்காக அறிந்துமே சொல்லக்கேளு
நருதியோர் தாளகந்தான் பலமோபத்து
நலமாகக் கற்சுண்ண நீரில்தானும்
வருதியே நாள்மூன்று ஊறவைத்து
வடிவாக வெடுத்துமே சொல்லக்கேளு
கருதியே சோதித்து எடுத்துப்பாரு
தண்மையாய் வெள்ளையா யிருக்கும்பாரே. ௭௦

பார்த்ததொருவெள்ளையைத்தானெடுத்துக்கொள்ளு
பதிவாக சீனத்தின் சுண்ணமேலே
காருமே பெருங்கவச மாகக்கட்டு
கனிவாகக் காயவைத்து புடத்தைப்போடு
தாருமே தாளகந்தா னீறிப்போகும்
தாக்காக நீறினதை யெடுத்துக்கொள்ளு
பாருமே கல்வத்தி லிட்டுக்கேளு
பதிவான சவுக்காரக் குழம்பிலாட்டே. ௭௧

ஆட்டியே யில்லைதட்டிக் காயப்போட்டு
அன்பாக சீனத்தின் சுண்ணநேரே
பாட்டியே கவசமிட்டு புடமாய்ப்போடு
பதிவான தாளகந்தான் சுண்ணமாகும்
தேட்டென்ன இதற்கீடோ கண்டுபாரு
ஜெயமான தாளகத்தின் சுண்ணநேரே
வாட்டியே சூதபஸ்ப நிறுத்துக்கொண்டு
வகையாக சவுக்காரக் குழம்பிலாட்டே. ௭௨

குழம்பான சவுக்காரத் தாலேஆட்டி
கொள்ளவே யிப்படியே ஐந்துதொந்தம்
அழும்பாகப் போட்டுமே சொல்லக்கேளு
அடைவாக தானுமது கட்டிப்போகும்
நழும்பான செம்புருக்கு நூறிலொன்று
நாடிடவே திசைமாற்றும் நவின்றுபாரு
கழும்பான உப்புக்குங் காவிக்குத்தான்
காரியமாய்ப் புடமிறங்குந் தங்கந்தானே. எரு

தாக்கான சதாசிவனும் முடியாதப்பா
தயவான இப்பொன்னின் நேர்மைதன்னை
வானேதான் தாளகத்தின் வேதைதன்னை
வாய்திறந்து சொல்லவுமே சொல்லப்போகா
வானேதான் அரிதான பொன்னுக்கப்பா
நலமாகமாற்றில்லை ஆணியில்லை
கானேதான் அகஸ்த்தியர்தான் சொன்னநேர்மை
கனிவாக யான்கொண்டு சொல்லினேனே. எச

சொல்லினேன் திசைக்ஷவிதி முன்னூறுந்தான்
சுயமாக வில்லையென்று வாதாங்கத்தில்
நல்லவே சொல்லிவிட்டே னிந்தநூலை
நலமாகப் பார்த்துமே செய்துக்கொள்ளு
கல்லவே வாதாங்க முடிவுமாகும் [கும்
கருத்துறைந்தாற் பொன்னெல்லா முடனேயா
நல்லவே யிதைய றிந்து செய்தாகில்
நாடாத சித்தியெல்லாம் நாடும்பாரே. எரு

நாடுமே கெந்தகத்தை விட்டால்வன்னம்
நலமாகச் சித்தியில்லே நாட்டம்பாரு
பாடுமே தாளகத்தை விட்டால்தங்கம்
பதமாகச் சித்தியில்லேப் பதிவுமெத்த
காடுமே தங்கத்தை விட்டால்வன்னம்
கலனுகும் காடுபுக்கும் வர்ணமில்லே
பாடுமே பாஷாணம் விட்டால்வெள்ளி
பலனில்லே யென்றுமே பரிந்துபாரே. எசு

பரிந்துபார் வாதாங்கந் தன்னில்தானும்
பதிவாக செம்பினது நேர்மைதன்னே
அரிந்துபார் கைபாக மாகச்செய்து
அடைவாகச் செய்தாக்கால் பலனுமாகும்.
செரிந்துபார் தாரத்தை யிப்படியேபண்ணு
தெரியாத வாதிக்குத் தெரிந்துபோகும்
கரிந்துபார் புகைநீரு இல்லாவேதை
கனிவாகச் சொல்லெல்லாம் வீணுய்ப்போமே.

வீணுகப் போகாமல் சவுக்காரத்தை
விருப்பமாய்ப் போகாமல் வைத்துத்தேறு
நாணுக மனந்தன்னே நோகப்பண்ணி
நாட்டிலே சொல்லாமல் மனதுளனு
காணுகப் போகாமல் கெந்திதன்னே
கலக்கமற்று நீற்றியே கருணைகூர்ந்து
வாணுலே வாங்காமல் தாளகத்தை
வகையாக வைத்திடவே சித்தியாமே. எஅ

சித்தியாஞ் சவுக்கார மில்லாச்சுன்னஞ்
　　சிறப்பாக லோகத்திற் பழுக்காபாரு
பத்தியாம் தங்கமில்லாக் களங்கமெல்லாம்
　　பதிவான மட்டமில்லை யறிவுபாரு
சத்தியா யுபரசங்க ளில்லாச்செம்பு
　　சதிராக வொன்றுமில்லை தன்மைபாரு
வித்தியாய் கைபாக மில்லாவேதை
　　விடிவில்லை யெல்லாமு முத்தியாமே. எசு

துருசுக் களங்கு.

முத்தியாம் வேதையொன்று சொல்லக்கேளு
　　விருப்பமாய் அயம்பலமு மொன்றுபோடு
சித்தியாய் துரிசுபத்துப் பலமும்போடு
　　சிறப்பாக கெந்தியது பலமுமூன்று
நத்தியே யிதுமூன்று மரைத்துக்கேளு
　　நலமான புகைநீரா லரைத்துஉண்டை
சத்தியாய் ரவியில்வைத்துக் காயப்போடு
　　சரியாக வெடுத்துமே சொல்லக்கேளே. அ

வெட்டையாயிருக்கும் செம்பை பஞ்சமித்
ரத்தி லுரிக்கிச் சாய்க்கவும்

சொல்லவே புடம்போட்டு எடுத்துக்கொண்டு
　　சிறப்பாக குகையில்வைத் துருகித்திரு
நல்லவோ ரவிபோலச் செம்புமாகும்
　　நலமாகச் செம்பெல்லாம் வெட்டைபோலாம்

பல்லமே பஞ்சமித்ரத்தில் சாய்த்தால்
    பதிவான செம்பெல்லாந் தங்கம்போலாம்
கல்லமே செம்பெடுத்து மதியில்பத்து
    கனமாகக் கொடுத்திடவே சொல்லக்கேளே. அக
கேளுமே மாற்றென்ன ஐந்துமாகும்
    கெடியாக இடைக்கிடைதான் தங்கஞ்சேர்க்க
ஆகுமே மாற்றென்ன எட்டுமாகும்
    அருகுகட்டிப் புடத்திற்கு இறங்கும்பாரு
நாளுமே இச்செம்பைப் பண்ணித்தேர்ந்து
    நலமாக ஜீவனத்திற் கிடமாய்ப்பாரு
வாளுமே செம்பைத்தான் முதன்மையாக
    வடிவாகப் பண்ணவே சித்தியாமே. அஉ

இன்னின்னதை முறையே பார்க்கவேண்டும்.

சித்தியா மயச்செம்பை முன்னேபாரு
    சிறப்பாக வதன்பின்னே கெந்திபாரு
முத்தியா மதன்பின்னே சவுக்காரம்பார்
    முடிவுவந்த இடமெல்லாம் சினம்பாரு
நத்தியா யதன்பின்னே தாளகத்தை
    நலமாக வதன்பின்னே பாகம்பாரு
கத்தியே திரியாமற் செம்புதன்னை
    கருத்துவைத்தா லெல்லாமுஞ் சித்தியாமே. அங.

சாரக்கட்டு.

சித்யே யாகவென்றால் சொல்லக்கேளு
    சிறப்பாகச் சாரத்தைக் கசிவெடுக்க

முத்தியாய்க் கற்சுன்ன நடுவேவைத்து
முக்கியமா யிருஜாம மெரித்துப்போட
பத்தியாய்ச் சாரமது கசிவுபோகும்
பண்பாக வின்னமொரு பாகங்கேளு
நத்தியாய்ச் சீனமது சேரதொன்று
நலமாகப் பொரித்துமே சொல்லக்கேளே. அச

சீனச்சுன்னம்செய்து சாரத்தின்மேற் கவசம்கட்ட.

கேளுமே வெண்கருவுங் கூடவிட்டு
கெடியாக வரைசீனம் பில்லைதட்டி
நாளுமே காயவைத்துப் புடத்தைப்போடு
நலமாகக் கடுஞ்சுன்னம் சீனச்சுன்னம்
பாளுமே போகாமல் சுன்னந்தன்னை
பதிவாக வெண்கருவா லரைத்துச்சாரம்
வாளுமே கட்டியே காயவைத்து
வடிவாகச் சொல்லுகிறேன் வண்மைகேளே.

சாரச்சுன்னம்.

வண்மையாய்க் கிளிஞ்சிநீர்க் குள்ளேவைத்து
வடிவாகத் தீயெரிப்பாய் நாலுஜாமம்
நண்மையா யெடுத்துப்பார் தங்கம்போலாம்
நலமான சாரத்தைச் சுன்னஞ்செய்ய
கண்மையாய்ச் சீனமது சுன்னஞ்சேர்த்து
கடுமையா யரைத்திடவே பூதிப்போடு
நண்மையாஞ் சாரமது சுன்னமாகு
நலமான வேதையெல்லாஞ் சாரந்தானே. அகூ

சாரஜபநீர்.

சாரத்தில் சாரமிட ஜயநீராகும்
　　க்ஷணத்திலே நாகமது கட்டிப்போகும்
பாரமில்லே செம்புதான் பழுக்கும்பாரு
　　பக்குவமா யெண்ணெய்போ லாகும்பாரு
வேரற்ற மரந்தானுந் துளுக்கும்பாரு
　　வெருளாதே சாரத்தின் வெகுபோக்குத்தான்
நீரற்ற விடந்தனிலே ஜீவஜெந்து
　　நிலையில்லா திருக்குமப்பா நேர்ந்துபாரே. அஎ

பாருமே சாரத்தின் ஜயநீர்தன்னில்
　　பக்குவமாய் நாகத்தை யுருக்கிச்சாய்க்க
காருமே நாகமது சவடுதீர்ந்து
　　கனிவாக நாகமங்கே கட்டிப்போகும்
சாருமே ரவிபழுக்கும் வேதையாகுஞ்
　　க்ஷணத்திலே சகலமெல்லாஞ் சித்தியாகும்
பாருமே சாரத்தை விட்டாறுைல்
　　சகலமெல்லாம் சித்தியில்லே தண்மைதானே.

தண்மைய்ாய்ச் சாரமதை ராமதேவர்
　　தாக்கியே சகலமெல்லாம் கட்டிநீற்றி
கண்மையாம் சாரத்தால் வெகுஆட்டுத்தான்
　　கலக்கமற் றுடினு ராடுமோட்டு
வண்மையாம் நாற்கோடி சாரத்தாலே
　　வகையாக நாகத்தைக் கட்டிநீற்றி

உண்மையாய் வாதமது பண்ணிஞானம்
உற்றுமே பார்த்திட்டு இருந்தார்தானே. ௮௯

இருந்திட்டார் சிவயோகி யாயிருந்து
உற்றுமே குளிகைமுதல் பார்த்திட்டார்பார்
நருந்திட்டார் சித்தியெல்லா மாச்சுப்பாரு
நவாசார மென்றதனைக் குளிகைப்பண்ணி
கருந்திட்ட மலைமுழைஞ்சில் குளிகைசெய்து
கலக்கமற் றிருந்திட்டார் ராமதேவர்
அருந்திட்ட வெல்லாமுஞ் சினத்தாலே
ஆச்சரியஞ் சினந்தானகைவாச்சே. ௯0

ஆச்சென்ற வெண்கண்டர் சினமாகும்
அறிவில்லா வாதிதான் துரிசைநீற்றி
காச்சென்ற நீறுதே போனதாலே
கனிவாக வாதம்பொய் யென்பாரப்பா
மூச்சென்ற ததுவடங்கி சரிநில்லாது
முனையான சுழிமுனையில் நின்றுதேறு
வாச்சென்ற விதியாளிக் கண்டுகொள்வான்
வகையில்லான் காணான்பார் மருவிப்பாரே. ௯௧

மருவிப்பார் சித்தர்முனி ருஷிகள்தேவர்
மாட்டியே துரிசுமுதற் சுன்னம்பண்ணி
அருவிப்பார் சூதத்தைக் கட்டிநீற்றி
ஆண்மையாய்க்குளிகைமுதல் பண்ணித்தேர்ந்து
வருவிப்பார் ரச்வாத யோகியாவார்
வடிவான சமாதியிலே யிருந்துதேறு

கருவிப்பார் கேழ்வியிறைற் சுட்டுச்சுட்டு
காணாம லிருந்தவர்தான் கோடிதானே. கூஉ
கோடிபேர் சுட்டுமே யொன்றுங்காணார்
குணங்கெட்ட மடையரப்பா வொன்றுங்காணார்
தேடியே யிதோவாச்சு ஆச்சுதென்பார்
குணமில்லார் மணமில்லார் குடிகெடுப்பார்
தேடிப்பார் சாஸ்திரத்தை தேடமாட்டார்
தெருவிலே யலேகுவா ரொன்றுமில்லே
நாடியே வாதாங்க முன்னூறுள்ளே
நாட்டிலுள்ள வதிசயமுஞ் சொன்னேன்பாரே.
சொன்னதெல்லாந் தீக்ஷவிதி தன்னில்தானும்
சுருக்காக வீதிரண்டு மொத்துப்பார்த்து
கன்னல்போல் தொகைவகையாய்க் கண்டுபேசி
கணக்கறிந்து பொருளறிந்து கண்டுகொள்ளு
இங்கிலத்தில் பொருளறியா னுலுத்தவாதி
எப்போதும் போலவே சாரந்தன்னே
நன்னயமா யுழைத்தாக்கால் வாதமாகும்
நாடியே பொருளறிந்தால் வாதியாமே. கூசு
வாதியாஞ் சாத்திரத்தை யறியாமற்றான்
வகையில்லாச் சரக்குகளைப் பார்த்துப்பார்த்து
சோதியா ததனலே வாதம்பொய்யாம்
சூத்திரத்தை யறியாமல் தவிப்பார்பாரு
கோதியே பாராமல் குணமுமில்லே
குடிகேடு செய்திடுவா ருலுத்தரப்பா

பேதியா திதுவெல்லாம் புரண்டுபோகும்
　　பிரபலமாய் ஞானத்தைப் பேணிப்பாரே. ௯௫

நாகக் கட்டு.

பேணிப்பார் நாகத்தை யிலுப்பைநெய்யில்
　　பிரபலமா யுருக்கிநீ சாய்த்துக்கொண்டு
ஊணிப்பார் சாரத்தை மேலேபோடு
　　உற்பனமாய்ப் புகையடங்கும் கட்டித்திரும்
நாணிப்பார் புகையடங்குஞ் செம்புதன்னில்
　　நலமாக விருபதிற்கு ஒன்றேதாக்கு
தாணிப்பார் மாற்றென்ன திசைமாற்றுரும்
　　தடையற்று கடைதனிலே விற்றுக்கொள்ளே.

வித்துமே செலவழித்து ஞானந்தன்னை [ம்
　　விரும்பியே பார்த்திடவே வெளியாய்த்தோனு
சித்துமே செய்துநீ ஜபத்தைப்பண்ணு
　　சிறப்பாக மோகத்தைத் தெளிந்துபாரு
முத்தியே பலனுகும் வேதையாகும்
　　முடியுமட்டும் ஞானத்தை விரும்பிநில்லு
சித்தியா யெல்லாமுஞ் சித்தியாகும்
　　சிக்கிரத்தில் ஞானத்தைப் பார்த்திடாயே. ௯௭

சீனச் சுன்னம்.

பார்த்திடவே பின்னமொரு வேதைமார்க்கம்
　　பதிவாக சொல்லுகிறே னுலகத்தோர்க்கு
ஏர்த்திடவே வுவர்மண்ணும் சுன்னநேரே
　　உண்மையாய்க் கலந்துமே காய்ச்சிக்கொள்ளு

கார்த்திடவே சினமது காலுசேரு
　　நலமாகப் பொரித்துமே கல்வத்திட்டு
வார்த்துமே சவுக்காரக் குழம்பினலே
　　வகையாக அரைத்துவில்லை கட்டிக்கொள்ளே.

கட்டியே வில்லைகட்டிக் காயப்போடு
　　கனமாகப் பெரியபுடம் போட்டெடுத்து
நட்டியே யெடுத்துப்பார் சுன்னமாகும்
　　நலமாக சவுக்காரக் குழம்பினலே
வட்டியே யரைத்துவில்லைக் காயவைத்து
　　வடிவாகப் பின்பொருகால் புடத்தைப்போடு
வட்டியே கடுஞ்சுன்னம் சினச்சுன்னம்
　　வகையறவே சொல்லுகிறேன் தண்மையாமே.

வெடியுப்புச் சுன்னம்.

தண்மையாஞ் சினத்தின் சுன்னந்தன்னை
　　தடையறவே வெடியுப்பு ஐந்தாங்காச்சல்
வண்மையாய்ச் சேர்த்துமே யிடையேதானும்
　　வகையாகச் சேர்த்தரைத்து வில்லைகட்டி
நண்மையாய் பழச்சாறு விட்டரைத்து
　　நலமான சட்டிபிட்டு எரிநேர்ஜாமம்
உண்மையாய் நீறியது சுன்னமாகும்
　　உறுதிபெற்ற சுன்னமது வுற்றுப்பாரே.　　௯00

உற்றுப்பா ரிப்படிக்குச் சினச்சுன்ன
　　முறுதியா யைந்துமுறை சேர்த்துஊது

நற்றுப்பார் கடுஞ்சுன்ன மாகும்பாரு
நலமான வெடியுப்புச் சுன்னமாச்சு
கற்றுப்பார் சாஸ்திரத்திற் சொல்லவில்லை
கனிவான வாதாங்கந் தன்னிற்சொன்னேன்
சிற்றுப்பார் வெடியுப்பு பெருமைதன்னை
சிறப்பாக அரனாலு முடியாவாறே. ௧௦௧

துருசுச் சுன்னம்.

முடியாது வெடியுப்புப் பாகமாக
முற்றிபெறச் செய்துமே சுன்னந்தன்னில்
கடியாமற் சாரத்தை யிடையேசேரு
கருணைபெற நீருகும் நீறுதன்னில்
வடியாக வீரமொடு பூரமிட்டு
வகையாக வைத்துமே சொல்லக்கேளு
துடியாகத் துருசுனீர் சுக்குபோடு
துடியாகப் பத்துநாள் போட்டுப்பாரே. ௧௦௨

போட்டுமே துருசுதான் சுக்கான்போல
பெருமையாய்க் கட்டியே யிருக்கும்பாரு
நாட்டுமே வங்கமென்ற சுன்னந்தன்னை
நலமாக மேற்கவச நாடிப்போடு
பாட்டுமே குக்குடமாய்ப் போட்டுக்கொண்டு
பதிவான கடுஞ்சுன்னந் துருசுச்சுன்னம்
தீட்டுமே அம்பரத்தில் செருக்கியோடும்
திடமான துருசுதான் வேதையாமே. ௧௦௩

வேதையாம் தில்லம்பால் படிகவர்ந்து
விருப்பமாய்ப் பணவிடைதான் பாலிலிட்டு
காதையாம் பார்த்திடவே முறிந்துபோகும்
கனிவான சரக்கெல்லாஞ் சொன்றேற்கட்டும்
நாதையா முப்புமுத லிருபத்தைந்தும்
நலமாகக் கட்டாகும் வேதையாகும்
பாதையா யிதுபோர போக்குத்தானும்
பதியான ஜயமாகும் பண்புள்ளோரே. ௧௦௪

பாஷாணக்கட்டு.

பண்பாக வெள்ளை பாஷாணந்தன்னில்
பதியாகச் சுருக்கிடவே கட்டிப்போகும்
தண்பாக தீக்ஷைவிதி தன்னிற்சொன்னேன்
தடையறவே இதுசேர்த்து வெள்ளிபண்ணு
உண்பாரை யுடுப்பாரைப் பார்த்துவங்கி
யுறுதியா யிருக்கவே வேண்டாமய்யா
நண்பாகப் பாகமாய்ச் செய்துகொள்ளு
நானிலத்தில் தபசியா யிருந்திடாயே. ௧௦௫
இருந்திடவே வெள்ளை பாஷாணம்போலே
இதமாகக் கௌரியை யிப்படியேபண்ணு
நருந்திடவே தாளக மிப்படியேபண்ணு
நலமாக லிங்கத்தைப் பண்ணித்தேறு
கருந்திடவே கார்முகி இப்படியேபண்ணு
கனமான வாத மிப்படியேயாச்சு
பருந்திடவே கட்டாகு மெழுகுமாகும்
பதிவரவே விதியாகும் பண்புள்ளோரே. ௧௦௬

பண்புள்ளார் விதியாளர் கண்டுகொள்வார்
பதிவில்லார் காணும லலைகுவார்பார்
திண்பாகத் திண்ணியப் பேசிக்கொள்வார்
திருடரப்பா அவரைத்தான் நம்பவேண்டாம்
உண்புள்ளோ ரொருவருடை பேச்சைக்கேட்டு
உறுதி யில்லாமலே யலைகுவார்பார்
நண்பாகக் கெட்டபுத்தி யாயிருப்பார்
நானிலத்தி லவர்களுக்கு நரகமாமே. ௧௦௭

நரகமா மிவ்வேதை நிஜமதாகும்
நாடியே பாகமாய்ச் செய்துகொள்ளு
உரகமா முள்ளபடி சொன்னேன்பாரு
உற்றுமே பார்த்தாலே யெல்லாமாகும்
முரகமாப் பண்ணுத வாதிமார்கள்
முகமினிக்கித் தலைதுளக்கிப் பேசுவார்பார்
நரகமா மிவர்பேச்சை நம்பவேண்டாம்
நாடியே பார்த்திடவே நலமதாமே. ௧௦௮

நலமாக வெடியுப்பு ஜயநீர் தன்னில்
நாடியே சரக்கெல்லாங் கட்டிக்கொள்ளு
உலகமாம் ஜகமெல்லாம் சித்தியாகு
மொழுங்காக வெல்லாமும் சித்தியாகும்
சிலகமாம் வெடியுப்பு ஆதியாகும் [ம்
சிக்கெனவே பார்த்தாக்கால் தோணும்தோணு
முலகமாந் தோணுமல் செய்யவேண்டா
மொவ்வாத படியெல்லாம் செய்யவேண்டாம்.

செய்யவே யுலகத்தில் வாதிமார்கள்
சொல்பமாய் மூலிகையில் வெடியுப்பைத்தான்
மய்யவே யரைத்துமே புடத்தைப்போட்டு
மதியாகக் கரியாகப் போகும்பாரு
நய்யவே ஜயநீர்தான் பண்ணிபண்ணி
நலமாகச் சரக்கைத்தான் துவைத்துவாட்டி
மெய்யாக ஜயநீர்தா னுச்சுதென்பார்
மதிகெட்ட வாதிதான் சொல்லுவாரே. ௧௧0

சொல்லுவார் பலபேச்சு சொல்லுவார்பார் [பார்
சுருதியில்லை சாஸ்திரத்தைப் பொய்யேயென்
வல்லமையாய்ப் பேசுவார் மாயக்காரர்
வடிவுடைய வெல்லாமும் பொய்யேயென்பார்
நல்மையாய்ப் பேசியே கழுத்தறுப்பார்
நாடியே சித்தியெல்லாம் வெடியுப்பாலே
பொல்லாமை யில்லாநல் மார்க்கமாகப்
புஞ்சையாங் கோபத்தைப் போக்கிப்போடே.

போக்கியே சாஸ்திரத்தைப் பார்த்துப்பார்த்து
பொறுமையாய்ப் பாகமாய் செய்துகொண்டு
நோக்கியே சமாதியிலே நின்றுதேறு
நொடிக்குள்ளே ரசவாதஞ் சிக்கிப்போகும்
பாக்கியமா யெல்லாமுஞ் சித்தியாகப்
பதியாகும் விதியாளி வெடியுப்பைப்பார்
நோக்கியே யாறுதரம் வெளியாய்ப்போகும்
நுணுக்கமெல்லாம் வெடியுப்பு தன்னிலுலே.

ஆமேதான் சினத்தைச் சுன்னம்பண்ணு
அடைவாகப் பின்னேதான் வெடியுப்பைப்பார்
காமேதா னதன்மேலே சாரம்பாரு
கருத்துண்டாம் வாதமெல்லாம் சித்தியாகும்
மாமேதான் சகலமுந்தான் சித்தியாகும்
பதிவாகும் துருசென்ற சுன்னந்தன்னை
வாமேதான் சித்தியெல்லா மெளிதிலாகும்
வடிவான துறையறிந்த வாதிதானே. ௧௧௩

வாதிதா னென்றுசொல்வார் நூலைக்காணார்
வாய்ப்பேச்சால் கட்டலைந்து மாளுவார்பார்
நீதியாய்க் கண்டனென்பார் பொன்னைத்தானும்
நிலையில்லாப் பொன்தனையே காட்டுவார்பார்
சோதிபெற நான்செய்தே னென்பார்பாரு
சுரூபநிலை தெரியாதா ருலுத்தர்வாதி
ஆதியென்ற பொருளைத்தா னறியாரப்பா
ஆச்சுதே வெள்ளிவித்தை சுருகுதானே. ௧௧௪

வெள்ளிவித்தை.

சுருக்காகச் சொல்லுகிறேன் வெள்ளிவேலை
சுப்பிரமா யிதுலதுவு முன்னேபாரு
நருக்காகப் பார்த்திடவே சித்திசித்தி
நாணயமா யிவ்வேலை நாடிப்பாரு
பருக்காகக் கல்லுப்பு படிதானெட்டு
பதிவாக நல்லதண்ணீர் படியீரெட்டு

வளுவாக வெப்புதனி லூற்றிக்கொண்டு
வகையாகச் சுண்ணும்பு படிதானென்றே. ௧௧௫

ஒன்ருகப் போட்டுமே காச்சக்கேளு
உறுதியாய் வடிகட்டித் தெளிவிறுத்து
நன்ருகக் காச்சியே உரையப்பாரு
நலமாக வுரைந்தபின்பு நாட்டங்கேளு
கன்ருக மறுசட்டி யகப்பையாலே
காரணமாய் மொண்டுபுது சட்டியிட்டு
வன்ருக வொட்டவே காச்சிப்போடு
வகையாக நீர்போகக் காச்சிப்போடே. ௧௧௬

போடவே சட்டிநடு பள்ளம்செய்து
பேர்பெரிய ரசந்தானும் சேரதொன்று
நாடவே நடுவதனி லிரதம்விட்டு
நலமாக மேற்சட்டி மூடிப்போடு
காடவே சீலைமண்தா னேழுசெய்து
கருத்துறவே பனிரண்டு ஜாமந்தானும்
நாடவே யெரித்திடவே உயரவேறி
நலமாக இருக்குமது தந்தமாமே. ௧௧௭

ஆமேதான் சட்டியைநீ பிரித்துக்கொண்டு
அடைவாக மயிர்க்குச்சி யாலேதானே
போமேதான் வழித்துமே பதங்கந்தன்னை
போக்காக கல்வத்தி லிருசேரிட்டு
நாமேதான் வெள்ளையென்ற பாஷாணத்தை
நலமாக இடைசேரு கல்வத்திட்டு

வாமேதான் வெடியுப்பு நீராலாட்டி
    வடிவாக நால்ஜாம மரைத்துக்கொள்ளே. ௧௧௮

அரைத்துமே வில்லைதட்டிக் காயவைத்து
    அடைவாக சட்டியிட்டு நடுவில்வைத்து
பரைத்துமே மேல்மூடி சீலைசெய்து
    பதிவாக அடுப்பேற்றி யிருஜாமந்தான்
கரைத்துமே யெரித்திடவே வுபரவேறும்
    கனிவாக வெடுத்துமே மயிர்க்குச்சாலே
துரைத்துமே யெடுத்துஅரை வில்லையாக்கி
    துடியாக முன்போலே யெரித்திடாயே. ௧௧௯

எரித்துமே இப்படிக்கு ஐந்துஅப்பா
    இயல்பாக வெரித்தெடுத்து வைத்துக்கொண்டு
நரித்துமே வெள்ளீயம் பலமுமொன்று
    நலமான தாளகமும் பலமுமொன்று
கரித்துமே தாளகத்தைப் பொடியாய்ச்செய்து
    கனிவாக வங்கத்தி லுருக்கிக்கொண்டு
பரித்துமே இடைசமனாய் கொடுநொறுங்கும்
    பதிவான இன்னமொன்று பகரக்கேளே. ௧௨௦

பகரவே சாரத்தை யிடையேசேர்த்து
    பதிவாக யரைத்துமே யுருக்கித்தீரு
நகரவே வெள்ளீயஞ் சுத்தியாச்சு
    நலமாக வெள்ளிபோ லோசைகேட்கும்
வகரவே குகையிட்டு உருக்கிக்கொண்டு
    வடிவாக நூற்றுக்கு ஒன்றுதாக்கு

பகரவே வெள்ளியது பத்துமாற்று
பகரரிய வங்கத்தின் பெருமைதானே. ௧௨௧

தானென்ற காரியங் குத்திரூது
தடையறவே யோடாது நிற்கும்பாரு
வானென்ற வெள்ளியைத்தான் விற்றுக்கொண்டு
வரிசையாய் சிவபூசம் பண்ணித்தேறு
கானென்ற சிவயோக நிஷ்டைபாரு
கருத்துவைத்தால் வெள்ளிவித்தைவருகும்பாரு
ஊனென்ற சுழிமுனையில் நாட்டம்பாரு
உற்றுணர்ந்தா லெல்லாமுஞ் சித்தியாமே. ௧௨௨

சித்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பாக வெள்ளை பாஷாணத்தாலே
முத்தியாய் வெள்ளியது ஆச்சுபாரு
முடிவான யோகத்துக் கிதுதானுதி
சத்தியா யிதைவிட்டால் வெள்ளியில்லை
சரியான பாகமாய் செய்துக்கொள்ளு
நத்தியே சகலமுந்தான் சித்தியாகும்
நலமான பொருளறிந்த வாதியாமே. ௧௨௩

வாதியாம் பொருளறிந்தால் சொல்லக்கேளு
வகையான வெள்ளியைத்தா னறியவேணும்
நீதியாய்ச் சகலசித்தி யாடவேணும்
நிலையான பொருளறிய வேணுமப்பா
சோதிலா தறிந்தவனே சித்தன்சித்தன்
கொடுமைபெறச் சொன்னக்கா லொன்றுமில்லை

பாதிமதி யணிந்தவனே யாகும்வித்தை
பதியறியார் விதியாளி காண்பான்பாரே. கஉச

பார்க்கவே வெள்ளிவித்தை சொன்னநேர்மை
பதிவான பொருளறிந்து பண்புபார்த்து
சேர்க்கவே யொருமுறைதான் தப்பிற்ருனல்
சிறப்பாக மும்முறைதான் செய்துகொள்ளு
ஏர்க்கவே கைபாகம் தப்பிற்ருனல்
ஏழைபோ லிருக்காதே பின்னும்பாரு
வார்க்கவே பார்த்திடவே சித்தியாகும்
வளமான பொருளியார் மாடுதானே. கஉரு

மாடுதா னொருபோக்கா யிருக்கும்பாரு
மனிதருக்கு ஒருபோக்கும் தெரியாதப்பா
காடுதா னுடுபோல் திரிவார்பாரு
கனிவாகப் பொருளறியார் காட்டுவாதி
நாடுதா னாட்டிலுள்ள வாதிமார்கள்
நலமான பொருளறி யாமல்தானும்
பாடுமோ பாடியவர் முடியப்பாடி
பதமில்லை யென்பார்கள் முறட்டுவாதி. கஉசா

வாதிதான் பாடுபட்டுப் பலனுமில்லை
வடிவாகப் பொருளுமில்லை யென்பாரப்பா
சோடுதான் பிரிந்ததுபோல் சொல்வாரப்பா
சுருதியிலே யாறுப்ந்து துவக்கும்பாரே கஉஎ
துலக்கமா சினத்தைச் சுன்னம்செய்து
துடியாக வெடியுப்புத் தன்னில்சேர்த்து

பலக்கமா யரைத்துவில்லைக் காயவைத்து
பதிவாகுஞ் ஜயநீராய்ச் செய்துகொள்ளு
வலக்கமாஞ் சகலமெல்லாம் சுண்ணஞ்செய்து
வடிவாக நீற்றியதை யெல்லாங்கட்டும்
துலக்கமாம் ஜயநீரா லெல்லாமாகுந்
துடியாகச் சரக்கெல்லாம் கட்டுமாமே. ௧௨௮

ஆமேதான் தீக்ஷைவிதி யிந்நூல்தன்னில்
அடைவாச்சு வெள்ளிதான் செய்யச்சொல்ல
நாமேதான் சொல்லிவிட்டோம் வாதாங்கத்தில்
நலமாகப் பொருளறிந்து வாதிமார்கள்
காமேதான் கருத்தாகச் செய்துகொள்வார்
கருத்தில்லார் செய்யவே மாட்டாரப்பா
பூமேவு நிலந்தனிலே யிருக்குமட்டும்
பொறுமையா யிருந்துமே செய்துகொள்ளே.

ஸமஸ்தமும் வெள்ளியி லாசவேண்டும், அதனால்
முன்னையதைச் செய்யவும்.

கொள்ளவே சகலமுந்தான் சித்தியாகும்
கூறான சித்தியெல்லாம் தீயிலாச்சு
நள்ளவே வெள்ளியென்று லெளிதோவல்ல
நலமாக மதியைத்தான் செய்துகொள்ளு
கள்ளமாய்த் திரியாதே நூலைப்பாரு
கருத்தாக நூலென்றால் கற்கக்கேளு
முள்ளமாய்க் கேள்வியினால் சுடவும்வேண்டாம்
முடியமட்டும் பார்த்திட்டு உழைத்துத்தேறு.

தேறவே கைபாகமாகச் செய்தால்
ஜெயமாகும் வேதையெல்லா மெளிதிலாகும்
ஆறவே பாகமது தப்பிப்போனு
லடைவாக முடியமட்டு முறைத்துப்பாரு
காறவே வரிசையாய்ச் செய்துகொள்ளு
கடினமாய் வாதமெல்லாம் கைக்குளாகும்
தாறவே வாதம்வந்தால் சொல்லவேண்டாம்
தடையாறப் பொன்னுகும் தன்மைபாரே. கருக

பாருநீ சகல சாஸ்திரங்களெல்லாம்
பதிவாகப் பார்த்துமே தேர்ந்துகொள்ளு
காருமே பாகமெல்லாந் தெளியும்பாரு
கருத்தான பாகமது எளிதிலாகும்
சாருமே பாகம்வந்தா லெல்லாமாகும்
சரிதையாய்த் திரியாதே சாரும்பாரு
காருமே ஞானம்வரும் யோகமாகும்
கடிதென்று விட்டாக்கா லெல்லாம்போமே.

போகாமற் சாரத்தைக் கட்டிக்கொள்ளு
போக்கோடே ஜயநீரும் வைத்துக்கொள்ளு
தாக்காமல் சொன்னதெல்லாம் சித்தியாகும்
தடையறவே சித்திக்கும் வேதையாகும்
வாகாம லுப்புமுதல் தாதுவெல்லாம்
வடிவாகச் சித்திக்கு முத்தியாகும்
தேகாமல் செந்தூர பாகமெல்லாம்
தேசத்தில் வாதமெல்லாம் ஜயமுமாமே. கருரு

சாரக்கட்டு.

ஆமேதா னின்னமொரு சேதிகேளு
அடைவான சாரத்தின் குருவுதன்னை
நாமேதான் சொல்லுகிறேன் வாதாங்கத்தில்
நலமான பொருளாகும் நாட்டில்தானும்
சீமேதான் சினமது பலந்தான்பத்து
சிறப்பாகச் சவுக்காரக் குழம்பைவிட்டு
காமேதா வரைத்துவில்லை காயவைத்து
கருத்துறவே பெரியபுடம் போட்டுக்கொள்ளே.

போட்டுமே கடுஞ்சுன்னம் சினச்சுன்னம்
போக்காகச் சவுக்காரக் குழம்பைவிட்டு
தீட்டுமே யரைத்துவில்லைக் காயவைத்து
ஸ்திரமாக ஐந்துமுறை யிவ்விதந்தான்
வாட்டுமே கடுஞ்சுன்ன மாகும்பாரு
வடிவாக விச்சுன்னம் வீரம்கூட்டி
நாட்டுமே ச்ாரத்தின் மேலேபூசி
நலமாகப் புடம்போட்டு எடுத்திடாயே. கஙரு

எடுத்திடவே சாரமது முத்துப்போல
இதமாக தந்தம்போ லிருக்கும்பாரு
அடுத்திடவே சாரத்தின் மகிமைசொல்ல
அரனாலு முடியாது மற்றோர்காணார்
கடுத்துமே சாரமது சுன்னமானால்
கனமாக சகலமெல்லாம் சுன்னமாமே

விடுத்துமே அம்பரத்தை யகற்றியோடும்
விருதாவாய்ச் சொன்னுக்கா லிசைவாகாதே.

நாகக்கட்டு.

இசைவாக நாகத்தை யிலுப்பையெண்ணெ
யிதமாக விருபத்து ஒன்றுசாய்த்து
பசையாக உருக்கையிலே சாரமீய
பதைபதைத்துக் கட்டுமே நாகந்தானும்
விசையாகக் கட்டினதோர் நாகந்தன்னை
விருப்பமாய்த் தங்கத்தி லிடையேதாக்கு
துசையாகப் புட்டாகு மெடுத்துக்கொண்டு
துப்பறவாய் ரவிதனிலே நூற்றுஞ்றீயே.
ஈயவே மாத்துதான் பத்துமாகு
மினிதாகச் சிவசொத்தை விற்றுநீயும்
மாயவே செலவுசெய்து யோகம்பாரு
மதிமயங்கித் திரியவே வேண்டாமய்யா
நாயமார் போலவே நடத்தைசெய்து
நலமாகக் குருசெய்து குளிகைப்பண்ணி
வாயமா யுலகத்தி லிருந்துத்தேறு
வடிவாக சித்தியெல்லாம் வருகும்பாரே. கஙஅ
வருகுமே வாதத்தைக் கண்டபோதே
மதிமயங்கி கெர்ஜித்துத் திரியவேண்டாம்
நருகுமே குரும்பாகச் சொல்லவேண்டாம்
நாட்டியவான் போலவே யுடையவேண்டாம்

கருகுமே சிவஞான போதமாகக்
கருத்துவைத்தால் மௌனமா யிருந்துகொள்ளு
உருகுமே புன்னைத்தான் தேவராக
உத்தமனே சொல்லுவா ருறுதிதானே. கஙசூ

என் நூலி லின்னதைச் செய்துகொள்.

உறுதியா யென்னுடைய சாத்திரத்தி
லுண்மையாய் வாதாங்கந் தன்னில்தானும்
நறுதியாய் வெள்ளிவித்தை யுப்புச்சுன்னம்
நலமான சாரத்தின் சுன்னத்தோடு
வறுதியா யாருய்ந்து பார்த்துப்பார்த்து
வடிவாக வுறுதியாய்ச் செய்துகொள்ளு
நறுதியாய் நாட்டிலே யெல்லாமாகும்
நாடாட்டா லொன்றுமில்லை நடத்தைபாரே.

வெள்ளிவேதையில் வெள்ளிசேர்க்க வேணுமென்பது.

பாரேநீ வெள்ளிமுறை தன்னைத்தானும்
பக்குவமாய்ப் பார்த்துமே தெரிந்துதேறு
கூரேநீ சகலமெல்லாஞ் சித்தியாகும்
குணங்கெட்டுத் திரியாதே வேதைபாரு
நாரேநீ வெறுமரத்தில் புதையாவாறு
நலமாகப் பொருளறிந்தால் சித்தனவான்
காரேநீ யெல்லாமுஞ் சித்திக்குந்தான்
கருணைபெறப் பார்த்தவனே யோகியாமே. கசசு

யோகியா யுலகத்தில் வாதம்பார்த்து
உத்தமனே ஜீவனத்தைச் செய்துகொண்டு

பாகியா யிருந்தாலே சித்திசித்தி
பதிவான குருவாலே கோடிகாலம்
யூகிநான் கண்டுமே பிடித்தேனப்பா
உற்றுணர்ந்தால் சித்தியா மொளிவுமாகும்
மோகியாய் திரிந்தாலே லாபமில்லை
முடியமட்டுந் தேடியே யிருந்திடாயே. கசஉ

நூற்பரம்பரை.

இருந்திடவே சிவன்சொல்ல தேவிகேட்க
இதமான தேவி நந்திக்குச்சொல்ல
நருந்திடவே நந்திதான் தன்மந்த்ரிக்கு
நாட்டிலே தன்மந்த்ரி யகஸ்தியர்க்கு
வருந்திடவே யகஸ்தியரும் புலத்தியர்க்கு
வளமான புலத்தியரும் தேரருக்கு
கருந்திடவே தேரர்தான் யூகிக்குச்சொல்ல
கருணைபெற யூகிதான் சொன்னவாரே. கசஙு

திரிசுச்சுன்னம்.

வாரேது என்றுக்கால் சொல்லக்கேளு
வரிசையாய்ச் சீனத்தின் சுன்னத்தோடே
பாரேது சூடனைத்தான் சேர்த்தரைத்துப்
பதிவான சவுக்காரக் குழம்பினாலே
காரேது அரைத்துருட்டி வில்லையாக்கி
கருணைபெற ரவிதனிலே காயப்போடு
தாரேது ஐந்துசுன்னம் நடுவில்வைத்து
தப்பாமற் புடம்போடச் சுன்னமாமே. கசச

சுன்னமாந் துரிசதுவுஞ் சுன்னமானால்
சூதத்தைக் கால்வாரி யடிக்கலாகும்
அன்னமாந் துரிசினது சுன்னந்தன்னை
யடைவாக விராலியிலே பிழிந்துவிட்டு
வன்னமாஞ் சூதத்தை விட்டுக்காச்சு
வடிவான சூதமது அட்டைபோலாம்
பின்னேவே றில்லையப்பா வாதந்தானும்
புறட்டில்லை யெல்லாமுஞ் சித்தியாமே. ௧௪௫

சித்தியா மத்தங்காய்க் குள்ளேஇட்டு
சிறப்பாக நூறுபுடம் போட்டுத்திரு
முத்தியாங் கரியிலிட் டுருக்கிப்பாரு
முனிவாக வயிரம்போ லுருகியாடும்
புத்தியாய்க் குகையிலிட்டு நாலுருக்கி
முனிவாகத் தங்கமது ஒன்றுபோடு
சத்தியாய் நாகமிடை தங்கத்துள்ளே
வடிவாகப் போட்டிடவே களங்கமாமே. ௧௪௬

களங்கமாம் நவலோகம் நூற்றுக்கொன்று
காட்டிடவே திசைமாற்றுக் கருதிப்பாரு
பளங்கமா முப்புக்குங் காவிக்கப்பா
பதிவாக நிற்குமப்பா சொல்லக்கேளு
நளங்கமாம் பொன்னைவிற்றுச் செலவுசெய்து
நாதாந்த சற்குருவி னாட்டம்பாரு
பளங்கமாம் வாசியோ கத்தைப்பாரு
பத்தியா யிருந்தாக்கால் சித்தியாமே. ௧௪௭

சித்தியே யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பாகக் களங்கத்தை நொறுக்கிக்கொண்டு
புத்தியாய் கெந்திதான் கூடச்சேர்த்து
பொதுவான புகைநீரா லரைத்துக்கொண்டு
நத்தியாம் காசிதான் குப்பிதன்னில்
நலமாக வைத்தெரிக்கச் சிந்தூரந்தான்
முத்தியாய்ப் பணவிடைதான் தேனிலுண்ணு
முடியமட்டுங் காயமது இரும்பாம்பாரே. ௧௪௮

இரும்பாகுந் தேகந்தான் கல்லைப்போலா
யிருந்திடவே சமாதிக்கு யிருக்கலாகும்
அரும்பாகு நோயெல்லாம் தவிடேயாகு
மடைவாகச் சிரமது கற்றாணுகும்
நரும்பாகும் வஜ்ரமாந் தேகந்தானும்
நலமாக விருக்குமடா சிந்தூரந்தான்
விரும்பாகும் வேதமிது சொன்னபுத்தி
விதமான நவலோகம் பொன்னதாமே. ௧௪௯

பொன்னாக வேணுமென்றால் சொல்லக்கேளு
போக்கோடே நவலோகம் நூறிலொன்று
நன்றாக வியந்திடவே மாற்றுபத்து
நானிலத்திற் கூறுகிறேன் தீக்ஷைதன்னில்
பின்னவே ரில்லையப்பா வாதமார்க்கம்
பிரபலமாய் நூல்வீதி யடுத்துப்பாரு
கன்னல்போ லிருக்குமே யுலகநீதி
கருதியே யெல்லாமுஞ் சித்தியாமே. ௧௫௦

சித்தியே யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பாக சூதத்தைக் கட்டிக்கொள்ளு
முத்தியா யுருக்கியே கரியிலாட்டு
மூனிவாகத் தங்கமென்ற குருவைச்சேரு
ஈத்தியே சேர்த்தாலே யெல்லாமாகும்
நாடினால் சகலநூல் பார்த்துத்தேறு
கத்தியே திரியாதே யெல்லாமாகுங்
கருத்துவைத்து வாதாங்கம்பார்த்துக்கொள்ளே.
கொள்ளவே வேதாந்த சித்தாந்தத்தை
கொடிதாகப் பார்த்துமே நிலைநிறுத்து
விள்ளவே சகலமெல்லாம் சித்தியாகும்
வேதாந்தத் தின்பொருளை விளம்பலாகும்
துள்ளவே திரியாதே அனந்தம்பாடு
திடமாகப் பட்டாக்கால் திரந்தோணும்
கொள்ளவே விதியாளி காண்பானப்பா [மே.
கொடுமைசொன்ன லொன்றுமில்லை குழியுமா

தங்கஞ்செய்ய இவை வேண்டும்.

குழியாக வேணுமென்றால் சொல்லக்கேளு
குழியான துரிசைத்தா னீற்றவேணும்
பொழியாகச் சூதத்தைக் கட்டவேணும்
போக்கோடே செம்பெல்லாந் தங்கமாகும்
பரிசேர்ந்து தங்கமது ஆகவேணும்
பதியவே ரசவாத மெல்லாங்கேட்கும்
நதிபோலே திரியாமல் நூலைப்பாரு
நாடினால் வாதமது எவலாமே. ௧௩௩

துரிசுக்களங்கு.

ஏவலாஞ் சத்துவகை சொல்லக்கேளு
இதமான அரப்பொடிதான் பலமும்பத்து
காவலா யெலுமிச்சஞ் சாறுதன்னை
கனிவாக மிதக்கவே கூடவிட்டு
நாவலா மூன்றுநாள் வைத்துப்பாரு
நலமாகத் தெளிவைத்தா னடிப்பாரு
தூவலாந் தெளிவிறுத்து வைத்துக்கொள்ளு
தடையறவே இன்னமொன்று சாற்றுவேனே.
சாத்துவேன் துரிசுதான் பலமும்பத்து
சரியான கெந்தியது பலமுமுக்கால்
காத்துவே னிதிரண்டுங் கல்வத்தாட்டு
கணக்காக அயத்தெளிவா லிருஜாமந்தான்
பாத்துவேன் வில்லைதட்டி ரவியிற்போடு
பதிவாகச் சுண்ணாம்பு உப்புநேரே
காத்துவேன் கலசமிட்டுப் புடமாய்ப்போட
கனிவாகக் கறுப்பாக விருக்கும்பாரே. ௧௫௫
இருக்குமே புடமிட்டுக் குகையிலிட்டு
இதமாக வுருக்கிடவே சத்துமாகும்
நருக்குமே சத்துஐந்து தரமேயூது
நலமான சத்துதான் சொல்லக்கேளு
கருக்குமே வெண்கலம்போல் நகரும்பாரு
கலமான சத்தையே யுருக்கினாலும்
மருக்கிடவே தங்கமொன்று நாகமொன்று
மலதாகச் சேர்த்திடவே சொல்லக்கேளு. ௧௫௬

கேளுமே களங்காக இருக்கும்பாரு
கெடியாக நவலோகம் நூற்றொன்றீய
ஆளுமே மாற்றெட்டு ஆகும்பாரு
அடைவாக வுப்புக்கும் நிலைக்கும்பாரு
வாளுமே புத்தியினால் செய்துகொள்ளு
வடிவான பொருளறிந்தோன் ஞானியாவான்
காளுமே பொருளறியார்க் கொன்றுமில்லை
கடைகெட்ட வாதிமா ரலைவார்பாரே. ௧௫௭

அலையாம லிருக்கவென்று லுப்பைப்பாரு
அலைந்துமே உலையாகத் துரிசைப்பாரு
கலையாமல் ருதத்தைக் கட்டியாடு
கருத்தான வாதமெல்லா மெளிதிலாகும்
வலையாமல் வாதம்வந்தால் ஞானமாகும்
வருகாதே போனாக்கால் உலுத்தமாடு
மலையாமல் சாத்திரத்தை மருவிநின்று
மனதுவைத்து நூலெல்லாம் பார்த்திடாயே.

பார்த்திட்டால் ரசவாத மேவலாகும்
பாராட்டா லொன்றுமில்லை பரமநூல்தான்
சேர்த்திட்டால் மட்டமாஞ் சேராவிட்டால்
செழிப்பில்லா வொருவருடன் பேசவேண்டாம்
மூத்திட்டான் மூத்தாள்தான் முகத்தில்நின்றால்
மூதேவியாய்த் திரியவேண்டா மய்யோ
போத்திட்டா லேமமா மில்லாவிட்டால்
பூதலத்தி லில்லாமல் பிச்சைவாங்கே. ௧௫௯

வாங்கியே திரியாமல் சொல்லக்கேளு
வடிவான துரிசைநீ வைத்துக்கொள்ளு
தங்கியே முக்காலுந் திரமாய்ப்பாரு
தடையில்லா வேலைதான் சரிதையாகும்
ஓங்கியே யொருவருடன் பேசவேண்டாம்
உலுத்தனவன் யோகியா யிருக்கவேணும்
தூங்கியே திரியாமல் ஞானந்தன்னை
துப்பறவாய்ப் பார்த்துமே சொல்லிடாயே. கசுO

சொல்லிடவே ஞானந்தான் மிகவுமாகும்
சொற்பெரிய பெரியோரை யடுத்துக்கேளு
நல்லிடவே வழிசொல்லார் பெருமையாக
நாதாந்த சாரமெல்லா நலமாகும்பார்
பொல்லிடவே பொறுமையாய் வாதம்பாரு
போக்கோடே சகலசித்து முடனேயாகும்
முல்லிடவே வெகுதூர மோடிப்போகு
முடியாத பொருளெல்லா முடியுந்தானே.

தானென்ற வுலகத்தி லில்லாமார்க்கந்
தப்பாம லுண்டாகுந் தபசிக்குத்தான்
ஊனென்ற பொருளறிந்தால் வாதமாகும்
உண்டாட்டா லொன்றுமில்லை யுலுத்தமாடு
கானென்ற சரக்கறிந்தோன் வாதியாகுங்
காணுட்டா லுப்பறிந்தால் சிலதுமாச்சு
நானென்ற ஆணுவத்தாற் கெடவும்வேண்டாம்
நானிலத்தில் தொகையறிந்தால் நாடும்பாரே.

உப்பாற் சகலமுமாம்.

நாடுமே யுப்பாலை யெல்லாமாச்சு
நலமாச்சு பொருளாச்சு நன்மையாச்சு
கூடுமே தவமாச்சு திரேகமாச்சு
குணமாச்சு மணமாச்சு குறிப்புமாச்சு
வாடுமே வாதந்தான் மிகவேயாச்சு
வழியோடே ஆறுதவம் வடிவுமாச்சு
நாடுமே யெல்லாமுஞ் சித்தியாச்சு
நாடினா லெல்லாமு நாடிப்பாரே. ௧௬௫

நாடிப்பார் ரசவாதம் செய்யவேதான்
நலமாக அரிதல்ல சொல்லக்கேளு
கூடிப்பார் தொகையறிந்தால் வாதமாச்சு
குணமாக அறியாட்டால் வாதம்போச்சு
தேடிப்பார் சேதியறி ஞானமாச்சு
தேடாட்டா லொன்றுமில்லை திருட்டுவாதி
மோதியே யறியவென்றால் வாதந்தன்னை
முடியுமட்டுந் துரிசைநீ முயன்றுபாரே. ௧௬௬

வெடியுப்பு திராவகம்.

முயன்றுபார் வெடியுப்புப் புகைநீர்கேளு
முதலான வரமதனைச் சொல்வேன்பாரு
நயன்றுபார் வெடியுப்புப் பலமும்பத்து
நலமான சீனமது இருபத்தைந்து
கயன்றுபா ரிரண்டுமொன்றாய் பொடித்துக்கொண்டு
காரியமாய் வாலையென்ற சட்டிபிட்டு

கயன்றுபார் அடுப்பேற்றித் தீயைமூட்டு
காரணமாய் வெள்ளைநீர் வருகும்பாரே. கசுரு

பாருமே வெள்ளையைத்தான் வீசிப்போடு
பதிவான சிவந்தநிறம் வருகும்பாரு
சேருமே இதைப்பிடித்து வைத்துக்கொண்டு
சிறப்பாக இரண்டுசேர் கல்வத்திட்டு
நாருமே பூநீறு பலமும்போடு
நலமாகப் பொங்கியே கரைந்துநிற்கும்
வாருமே பீங்கானி லிட்டுக்கேளு
வழியோடே சொல்லுகிறேன் வண்மைகேளே.

துரிசுச் சுன்னம்.

வண்மையாந் துரிசுதான் பலமிரண்டு
வாகாகக் கரிதனிலே வாட்டிப்போடு
திண்மையாய் வெள்ளையா யிருக்கும்பாரு
ஸ்திரமான முன்னீரில் தோய்த்துப்போடு
வண்மையாய் பச்சமொன்று தோய்த்துப்போடு
வகையாக வீரமது சுன்னநேரே
உண்மையாய்க் கூட்டியே யுடைத்துப்போடு
உறுதியாய் துரிசற்று நீறுமாமே. கசுஎ

நீரான நீறுலே விராவிக்கிட்டு
நிலைக்கவே பிழிந்திடவே தண்ணீராகும்
வாரான தண்ணீரால் பாஷாணஞ்சேர்
வடிவான கௌரிமுத லிங்கங்கட்டும்
காரான ரசமுதல் வீரஞ்சாகும்

கடுசான இரும்பெல்லா முஞ்சியாடும்
ஆரான வெகுதூர மெட்டிப்போகும்
ஆச்சரியஞ் சரக்கெல்லா மணியுமாமே. ௧௬௮

அயத் தங்கம்.

மணியான இரும்பைத்தா னுருக்கிக்கொண்டு
மாசற்ற தங்கத்தை யிடையேசேரு
கணியான சவுடுதிரைப் போகும்பாரு
கலங்காம லிருந்துமே வேதைபாரு
திணியான பொருளறிந்தால் வேதையாகுஞ்
சினத்திலே அறியாட்டால் கமுதைமேக்கி
திணியான ரவிதனிலே நூற்றுக்கொன்று
சேர்த்திடவே பதினாறு மாற்றுமாமே. ௧௬௯

ஆமேதா னிரும்பென்று வெளிதோவல்ல
ஆச்சரியம் ஆஸ்தானங் கரும்பொன்னாகும்
தாமேதான் குருவறிந்தோர் வாதியாகுந்
தாட்டிகமா யறியாட்டால் கமுதைமேக்கி
பூமேதா னிலந்தனிலே யிரும்புசெம்பு
பூட்டியே வாதமெல்லாம் பொருந்திப்பாரு
நாமேதா நரையுக்கு விருந்தாப்போல
நாடினல் சகலசித்து மாடலாமே. ௧௭௦

ஆடலா மிரும்பைவிட்டால் வாதமில்லை
அலட்டென்று விட்டாக்கால் காணதோடும்
பூமேதா னிரும்பென்றால் வெளிதோவல்ல
புகழ்பெறவே யிரும்புமுதல் வேதையாகும்

நாடினு விரும்பினு லுழைப்பாரப்பா
நாட்டிலே வாதியென்ற மாக்கள்தானும்
கூடலா மிரும்பைத்தா னுழைத்தாற்கேளு
கூடுமோ ரசவாத மெளிமைதானே. ௧௭௧

கட்டுவகை.

தானென்ற சாத்திரத்தில் சித்தர்தானும்
தடையறவே கட்டுவகை மறைத்துச்சொன்னார்
வானென்ற வாதாங்கந் தன்னில்தானும்
வகையாகக் கட்டுவகை சொல்லக்கேளு
நானென்ற ஆணுவத்தில் கெடவும்வேண்டாம்
நாய்போலே திரியாமல் வேதைபாரு
ஊனென்ற கட்டுவகை சுளுதுபாரு
ஓகோகோ விதனாலே யெல்லாமாமே. ௧௭௨

பச்சை தருசால் கட்டுவகை.

ஆமேதான் கட்டுவகை சொல்லக்கேளு
அண்டபகி ரண்டமெல்லா நுழைந்துஆட
நாமேதான் சொல்லுகிறே னுழைந்துக்கேளு
நாதாந்த சாரமெல்லா மிதற்குள்ளாகும்
வாமேதான் கட்டுவகை யேதோவென்று
மயங்கியே திரியவுந்தன் வேண்டாம்வாதி
ஓமென்ற அறிவாலே யுற்றுப்பாரு
ஓகோகோ கட்டுவகை யுறுதிதானே. ௧௭௩

லிங்கக்கட்டு.

உறுதிதான் சீனமது பலமும்பத்து
உற்றுமே முன்போலே சுன்னம்செய்து

நறுதிதான் வெடியுப்பை சேர்த்தரைத்து
நலமாக வூதிடவே கடுமைசுன்னம்
கருதிதான் வெடிசுன்னம் பலமோபத்து
கடிதான சட்டியிலே நடுவேவைத்து
நருதிதான் துருசதுதான் பலமோபத்து
நலமாகக் கரிநெருப்பில் வைத்துஊதே. ௧௭௪

லிங்கக்கட்டு.

ஊதிடவே பக்குவமா யூதுநீயும்
உத்தமனே வெண்மையா யூதிப்போடு
நாதிடவே யெடுத்துமே பொடித்துக்கேளு
நலமாக வெடியுப்புச் சுன்னமேலே
காதிடவே பொடிபரப்பி அதன்மேற்கேளு
கனமான லிங்கமது பலமுநாலு
வாதிடவே கட்டியா யதன்மேல்வைத்து
வண்மையா யதன்மேலே துரிசுவெள்ளை. ௧௭௫

போட்டுமே அழுத்தியே யதன்மேற்கேளு
பொருந்தவே வெடியுப்புச் சுன்னம்போடு
நாட்டுமே அழுத்தியே யடுப்பிலேற்றி
நலமாக விருஜாம மெரித்துவாங்கு
காட்டுமே யுருகியது கட்டிப்போகும்
கனமான லிங்கமது முழுக்கட்டப்பா
திட்டுமே அம்பரத்தை செறுக்கியோடுந்
திரமான கட்டெல்லாந் துரிசுக்கட்டே. ௧௭௬

ஷலிங்கந் தங்கஞ் சேர்ந்தவேதை.

கட்டியே லிங்கமதை யெடுத்துக்கொண்டு
கனமான லிங்கமிடை தங்கஞ்சேர்த்து
நட்டியே யுருக்கிடவே யிரண்டுஞ்சேர்ந்து
நலமாக வுருகியே மணிபோல்நிற்கும்
வொட்டியே நவலோக மிருபதிற்கொன்று
உண்மையாய்க் கொடுத்திடவே பத்துமாற்று
பட்டியே போகாமல் புடமிரங்கும்
பதிவான தொழிலெல்லாந் துரிசினூட்டே. ௧௭௭

பாஷாணங்கள் முதலிய கட்டு.

துரிசியால் பச்சையிலே வேதையாகுந்
துடியான சரக்கெல்லாம் பச்சைகட்டும்
வரிசையாய் லிங்கம்போல் வெள்ளைகட்டும்
வகையான வீரமுதல் கௌரிகட்டும்
நரிசையாய் வெள்ளையென்ற பாஷாணந்தான்
நலமாகக் குதிரையென்ற பாஷாணந்தான்
கரிசையா யிப்படியே யெல்லாங்கட்டுங்
கனிவாக விப்படியே கட்டிக்கொள்ளே. ௧௭௮

மேற்படி வேதை.

கட்டியே நவலோகந் தன்னிலேதான்
கனிவாகப் பாச்சிடவே வேதையாகும்
முட்டியே பச்சையிலே வேதையாகும்
முடிவான ஆட்டெல்லாந் துரிசினூட்டு
நாட்டியே வாதந்தா னெளிதிலாகும்
நலமாக யெல்லாமுஞ் சித்தியாகும்

முட்டவே யோகமுதல் ஞானமாகும்
　　முடியமட்டும் யோகமா முனிந்துபாரே. ௧௭௯
முனிந்துமே நாதாக்கள் சொன்னசொல்லை
　　முனிவாக வுழைத்துமே பார்த்துத்தேறு
கனிந்துமே பாராம லுழைக்கவேண்டாங்
　　கதிபெறவே சரக்கிலே யுழைத்துஆடு
நனிந்துமே யுழைத்தாலோ வெல்லாமாகும்
　　நாதாக்க ளாடினூர் பச்சையாக
வனிந்துமே பாகமா யுழைத்துத்தேறு
　　வடிவான பொருள்றிந்தால் வாதிதானே. ௧௮௦

வாதிகள் மடைமை.

தானென்ற வாதிதான் கட்டுமார்க்கந்
　　தடையறவே துரிசைத்தான் புடத்தில்வைத்து
வானென்ற கரியாகப் போனதாலே
　　வகையாகக் கெட்டுமே அலைவார்பாரு
நானென்று ஆணுவத்தில் கெட்டேனென்று
　　நலமாக அலைவார்கள் புத்தியில்லார்
பானென்று ஆறுதலாய்க் காணுமல்தான்
　　பதிகெட்டு அலைந்துமே திரிவார்பாரே. ௧௮௧

பச்சைத் துருசால் சரக்கெல்லாம் கட்ட.

திரியவே வேணுமென்ருல் துருசைத்தானுந்
　　துடியாகப் பச்சையாய்க் கரியில்வைத்து
ந்ரியவே சட்டியிட்டுச் சரக்குவைத்து
　　நலமாக வெரித்திடவே கட்டிப்போகும்

பரியவே கட்டினதோர் சரக்கினாலே
பதிவாக வேதையாங் கோடாகோடி
துரியமா யெல்லாமுஞ் சித்சியாகும்
துடியல்லாந் துருசினுட ஆட்டுத்தானே. ௧அ௨

ஆட்டான கேள்வியினால் வாதஞ்சுட்டால்
அறியாமற் போகிவிடுங் கரிபோலாகும்
நீட்டான பாகமாய்ச் சுடவும்வேணும்
நேரான கைமுறையுங் குருவும்வேணும்
பாட்டான வாதாங்கந் தன்னில்தானும்
பரிவாகத் துரிசுபச்சை கட்டுமார்க்கம்
ஊட்டான பொருளாகச் சொல்லிவிட்டேன்
உத்தமனே பொருளறிய வேணுந்தானே. ௧அ௩

தானென்ற உலகுதனில் வாதிமார்கள்
தடையறவே கட்டுவகை தெரியாதாலே
ஊனென்ற சரக்குத்தான் கரியாய்ப்போகும்
உற்றுமே பார்த்துதான் சொன்னதாலே
நானென்ற ஆணுவத்தால் கெட்டோமென்று
நலமாக வேங்கியே யழுவார்பாரு
கானென்ற கடைமருந்தி லில்லையென்று
காரியமாய்ச் சொல்லுவா ருலுத்தமாடே. ௧அ௪

மாட்டைப்போ லலைந்துமே மதிமயங்கி
மடையரப்பா கெட்டுமே கேடுகெட்டு
காட்டவே மூலிகையைப் பிடுங்கிப்பார்த்து
கடைகெட்டுத் திரிவார்க ளுலகமன்னர்

கூட்டிலே யடைந்ததொரு கிளியைப்போலே
குடிகெடுத்துத் திரிந்துமே உலகவாதி
நீட்டுமே சொன்னதெல்லா நிஜமுமாகும்
நிச்சயமாய்ப் பார்த்துநீ அறிந்திடாயே. ௧௮௫

அறியவே துரிசைநீ வைத்துத்தேறு
அடைவாகப் பொன்னாகும் வேதையாகு
நெரியவே துரிசானால் பொன்னுமாகும்
நிலவரமாய்ப் பொன்னாகு மெளிதில்வேதை
பிரியவே சொல்லியே திரிந்தாலென்ன
புரட்டாகச் சொன்னதினா லென்னலாபம்
கரியவே சொன்னதெல்லா நிஜமுமாகுங்
கனிவாகப் பார்த்துணரச் சித்தனாமே. ௧௮௬

சித்தனாஞ் சித்தனென்றால் சாத்திரத்தை
சிறப்பாகப் பார்த்துமே சோதித்தேரி
பத்தனா யிருந்திடுவான் கைபாகத்தை
பார்த்துமே சோதித்துப் பரிவாய்ச்செய்து
முத்திபெறப் பாகத்தைக் காண்பானப்பா
மூதண்ட மாட்டிவித்த துரிசுதானுஞ்
சித்தியாய்ச் செய்திடுவான் சித்திக்குத்தான்
திறமாக யோகசித்தி பார்ப்பான்பாரே. ௧௮௭

பார்க்கவே துரிசுகுரு இதுதானப்பா
பதிவான பச்சையிலே வேதையாகும்
கார்க்கவே பச்சையென்றா லெளிதோவல்ல
கனமான பச்சையிலே முடியும்வாதம்

ஏர்க்கவே பச்சையென்று மயங்கவேண்டா
மின்பமாய்ப் பச்சையல்லோ பொன்னதாச்சு
வார்க்கவே யெல்லாந்தான் பாகத்தாலே
வண்மையாய் விதியறிந்த வண்மைதானே.

கல்லுப்புகட்ட சமுத்திர நீரெரிக்க, இது சுத்த ஜலமென்றும் புகைநீரென்றும் பெயர்.

வண்மையாங் கல்லுப்புக் கட்டுமார்க்கம்
வகையாக வென்னுடைய நூலில்தானும்
உண்மையாய்ச் சொல்லிவிட்டேன் நூலில்தானு
முற்றுமே வாதாங்க மொத்துப்பாரு
திண்மையாங் கடல்நீரு கொண்டுவந்து
திறமாக வாலையென்ற சட்டிமூடி
கண்மையாய்த் தீயெரிக்கப் புகைநீராகுங்
கருத்தாகச் சுத்தஜலம் போலாம்காரே. கஅசு

கல்லுப்புக் கட்டு.

காருமே கல்லுப்புப் படிதானெட்டு
கருத்தாகக் கடல்நீர் திராவகமும்பத்து
வாருமே கடல்நுரைசுன் னம்மிரண்டு [று
வகையான இரண்டுமொன்றுய்க் கலக்கிக்கொள்
சேருமே வோட்டிலே காய்ச்சிப்போடு
சிறப்பாக வுப்பெடுத்து அகப்பையாலே
சாருமே துணிதனிலே போட்டுக்கட்டு
சரியாகப் பந்தைப்போல் கட்டிடாயே. கசுo
கட்டியே அனல்தனிலே வொட்டக்காய்ச்சு
கனமாகக் காய்ச்சியே கெட்டியாக்கு

துட்டியே அதன்பேரில் கவசங்கேளு
துடியாகத் துரிசியது சேருவொன்று
முட்டியே கடல்னுரைதான் சேருவொன்று
மூதண்ட குப்பைமெனி சேருவொன்று
நாட்டியே யிதுமூன்று மரைத்துக்கொண்டு
நலமாகக் கல்லுப்பு மேலேகட்டே. ௧௬௩
கட்டியே பத்தெருவிற் புடைத்தைப்போடு
கனிவாக வெடுத்துமே சொல்லக்கேளு
முட்டியே முன்போலே கல்லுப்புக்கு
முடிவாகப் பழையபடி கவசம்போடு
செட்டியே பத்தெருவிற் புடைத்தைப்போடு
சிறப்பாக விப்படியே மூன்றுபோடு
வெட்டியே மேல்கவசந் தள்ளிப்போடு
வகையாகக் கல்லுப்பைக் கல்வத்திட்டே. ௧௬௪

பாஷாணக் கட்டு.

கல்வத்தி விட்டுமே சொல்லக்கேளு
கனமான கட்டினதோ ருப்புநேரே
நல்வமாம் வெள்ளையென்ற பாஷாணஞ்சேர்
நலமாக முன்னீரா லரைத்துக்கட்டு
துல்வமா யுண்டைபண்ணிக் காயவைத்து
துடியாக வதன்பேரில் கடல்னுரையுஞ்சீனம்
வில்வமாய் மேனியிலே மூன்றரைத்து
விருப்பமாய்க் கல்லுப்பின் மேலேகட்டே. ௧௬௫
கட்டியே யிப்படிக்குப் புடமிரண்டு
கனிவாகப் போட்டெடுக்க தங்கம்போலாம்

தெட்டியே வயிரம்போ லிருக்கானும்
தேசத்தி லலையாதே யிந்தவுப்பு
பட்டியே குகையிலிட் டுருக்கித்தீரு
பதிவாக வயிரம்போ லாகுமாகும்
முட்டியே யிதுபோர போக்குத்தானும்
முனிவருக்கும் நாவினல் சொல்லப்போமோ.

சொல்லவே யிவ்வுப்புக் கரியில்நின்று
சுகமாக வுருகுமது குடிக்காதப்பா
மெல்லவே யிவ்வுப்புக் கடுமைமெத்த
மேதினியில் சித்தர்தான் மறைத்தார்பாரு
நல்லவே வாதாங்கந் தன்னில்தானும்
நலமாக யிவ்வுப்பி னுட்டஞ்சொன்னேன்
பொல்லாமை யில்லாம லிந்தவுப்பை
பொறுமையாய்ச் செய்திடவே சித்தியாமே.

சித்தியா யாகவென்றால் கல்லுப்போடே
சிறப்பாக வெள்ளைபா ஷாணஞ்சேரு
முத்தியாய்க் கல்லுப்பு உருகியாடும்
மூர்க்கமாம் வேதையிது முடிவுகாணும்
நத்தியாய்ப் பாஷாணஞ் சேராப்போனல்
நலமாக சித்தியில்லை நாட்டுளோர்க்கு
சத்தியமாய்ச் சொல்லிவிட்டே னுலகினுள்ளே
தாட்டிகவான் கண்டுகொள்வான் தரணிதானே.

தரணியாங் கல்லுப்பு சத்துதன்னை
தகைபெறவே யுருக்கியே கரியிலாட்டி

பரணியா மாடாதே போனாற்கேளு
பதிவாகத் திரும்பவுந்தா னுருக்கியாட்டு
கரணியாம் வயிரம்போல் கம்மாதாகில்
காரணமாம் விதங்களினிச் சொல்வேன்பாரு
தரணியாம் வயிரம்போ லுருகிற்றானால்
சரியான விதமினித்தான் சொல்லக்கேளே.

கேளுமே வயிரமா முப்புச்சத்து
கெடியாகப் பலம்நாலு உருக்கிக்கொண்டு
பாளுமே போகாமல் தங்கத்தாயை
பதிவாக நாலிலொன்று சேர்த்துருக்கு
வாளுமே தங்கமிடை நாகம்போடு
வடிவாகச் சேர்ந்தொன்றாய்க் களங்கமாகும்
நாளுமே நவலோக நூற்றுக்குத்தான்
நன்மையா யுருக்கியொன்று ஈய்ந்திடாயே.

ஈய்ந்திடவே உட்கொண்டு சுழித்துவாங்கி
இதமாக உள்ளேதான் சென்றுதேறி
பாய்ந்திடவே பத்தரைதான் மாற்றுக்காணும்
பதிவான உப்புக்குங் காவிக்கப்பா
வாய்ந்திடவே யோடாது கடையில்விற்று
வழியோடே சென்றறிந்து யோகம்பாரு
காய்ந்திடவே கனகமது கண்டபோதே
கருத்தாக வெண்ணியே வாழ்ந்திடாயே. ௧௬௬

வாழ்ந்திடவே வாதந்தா னெளிதோவல்ல
வகையான மவுன்மா யிருந்துகொண்டு

தாழ்ந்திடவே புத்திதான் தணியவேணுந்
    தணியாமல் மனமதுதான் துணிந்துபேச
காழ்ந்திடவே துணிந்தாக்கா லுன்னையோகோ
    கருத்தாகக் கொன்றுமே போடுவார்பார்
மாழ்ந்திடவே கெட்டபுத்தியாய் நடந்து
    வடிவுகெட்டுத் திரியாதே வதைதான்பாரே.

கல்லுப்பும் பாஷாணமும் சேர்ந்த கட்டு.

பாருமே கல்லுப்பைக் கட்டிக்கொண்டு
    பதிவாக வெள்ளைபா ஷாணமோடே
சேருமே சேர்த்துநீ புடத்தைப்போட்டால்
    சிறப்பாகக் கல்லுப்பு ஈயம்போட
வேருமே யுருகியது சத்துமாகும்
    வெண்மையாய்ப் பளிங்குபோ லுடையும்பாரு
சாருமே இப்படிக்குச் செய்யவேணும்
    சரியான கல்லுப்பு மணியுமாமே. உ0க

மணியான கல்லுப்பு மணியைக்கோர்த்து
    மதிபெருக்கத் தாவடமாய்க் கோர்த்துப்போடு
பிணியான நோயெல்லாம் பொடியேயாகும்
    புரட்டில்லா ஐந்துமெட் டெழுத்துமோது
கணியாகத் தேறியவன் முன்னிற்பான்பார்
    கருத்தாக வாசியது பிறுகும்பாரு
நணியாக வாதமொடு யோகசித்தி
    நாடுமே சகலமுந்தான் சித்தியாமே. உ0உ

சித்தியா யாகவென்றால் கல்லுப்பைத்தான்
    திறமாக உருக்கியே சத்தெடுத்து

முத்தியாய் சத்தோடே தங்கஞ்சேரு
முனிவான நாகத்தைக் கூடச்சேரு
பத்தியாய் வாதமது எல்லாமாகும் [ண்
பதிவுபெறச் சத்தியமாய்ச் சொல்லிப்போட்டே
முத்திபெற வெல்லாமுஞ் சித்தியாகும்
மூவுலகுஞ் சித்தியெல்லா முடனேபாரே. உ0ரு

சகலரோகத்திற்கும் காட்டாமணக்கெண்ணெய்.

பாருமே யெண்ணெயொன்று சொல்லக்கேளு
பதிவான காட்டு ஆமணக்குகொட்டை
சாருமே ஊற்றியே படிநால்தானுஞ்
சரியான யிளநீரு கூடநேரே
வாருமே விட்டுமே காச்சிக்கொள்ளு
வடிவான மண்டியது தெளிந்துபோருங்
காருமே யெண்ணெய்தா னெடுத்துவைத்து
கனிவாகச் செய்திடுநற் பாகங்கேளே. உ0சு
கேளுமே வல்லாரை புளியாரைத்தான்
கெடியான கையாநும் நிலையாவாரை
பாளுமே யிவைநாலும் புட்டவித்து
பதிவாகப் பிழிந்துமே சொல்லக்கேளு
நாளுமே யெண்ணெயிடை யூற்றிநீயும்
நலமாக மூன்றுநாள் வைத்துக்கொண்டு
வாளுமே கடுக்காயுஞ் சிவதைவேரும்
வழியாக கடுகுரோகணியுங் கூட்டே. உ0எ
கூட்டியே தான்றிக்காய் வாலுளுவையோடு
குணமான கொத்தமல்லி தானுஞ்சேர்த்து

தாட்டியே நெல்லிமுள்ளி தன்னோடெத்தான்
தயவாக வகைக்கொன்று நிறுத்துக்கொண்டு
பாட்டியே மூன்றுடனே கிராம்புகிஸ்கி
பதிவாக வகைக்கொன்று இடித்துப்போடு
நாட்டியே முன்னெண்ணெய் தன்னிலிட்டு
நலமாக வெரிபதத்தைப் பார்த்துக்கொள்ளே.

பார்த்துமே தானெடுத்துக் கரண்டிவீதம்
பதிவாக உண்டுவர தினந்தான்மூன்று
சேர்த்துமே நோயெல்லாந் தவிடேயாகும்
தேசத்தில் போனாலு மிந்தவெண்ணெய்
கார்த்துமே வருகாது நோவுபோகுங்
கனிவாகக் குட்டமுதல் காணாதோடும்
நாத்துமே மேகமெல்லா மாண்டுபோகும்
நலமான எண்ணெயிது நாடிப்பாரே. ௨0எ

நாடியே எண்ணெய்தான் கொள்ளும்போது
நலமான சர்க்கரைதான் போட்டுஉண்ணு
வீடியே வாதமெண் பத்துநாலும்
விருப்பமாய் பித்தமெல்லா மோடிப்போகும்
நாடியே அண்டவாதங்கள் தீரும்
நலமான சிலேஷ்மமுமே நாடாதோடும்
கோடியே க்ஷயகாசம் சூளைபோகும்
குணமான விப்புருதி யோடுந்தானே. ௨0அ

ஓடுமே ரத்தபித்த காசத்தோடு
வுத்தமனே பவுத்திரமு மகோதரம்போம்

ஆடுமே பித்தமகோ தரமும்போகும்
அடைவான வியாதியெல்லாங் காணுதோடும்
பாடுமே பத்தியமா யுண்டுதேறு
பக்குவமா யுண்டாக்காற் பலனுமாகும்
ஒடுமே யிதைவைத்துச் செலவுசெய்து
எத்தேச காலமெல்லா மிருந்துதேறே. ௨0௬

தேறவே சிவனத்துக் கெண்ணெய்பண்ணி
சிறப்பாகக் கைபாக மாகச்செய்து
வாறவே யெண்ணெய்பண்ணி விற்றுக்கொள்ளு
வடிவாக வாதந்தான் மிகவும்பண்ணு
நாறவே யிவ்வெண்ணெய் சகலத்திற்கும் [கும்
நாடினல் வியாதியெல்லாம் பொடியாய்ப்போ
பாறவே யிதைவிட்டு வயித்தியோர்கள்
பதிவான கொட்டை யாமணக்குஎண்ணெய்
வாறவே எண்ணெய்தான் செய்துவிற்று
வியாதியெல்லாம் தீராதே போனதாலே
காறவே சாஸ்திரந்தான் பொய்யேயென்பார்
கதியில்லார்க் கொன்றுமில்லை கணக்குமாமே.

கணக்காக வென்னுடைய தீக்ஷைதன்னில்
கனிவாகச் சொல்லிவிட்டே னுலகத்தோர்க்கு
பிணக்காகச் சாத்திரத்தில் பொய்யோசொன்னேன்
பெரிதாக உலகத்தில் வாதிமார்கள்
தனக்காக வாதாங்கந் தன்னில்சொல்னேன்
தன்மையா யிவ்விரண்டு மொத்துப்பார்த்து

வணக்காகச் செய்திட்டு உலகந்தன்னில்
வண்மையா யுலகத்தில் வேதைதானே. உகக

தானென்ற வெண்ணெய்தான் சொன்னமார்க்கந்
தாயான ஈஸ்வரிக்கும் அகத்தியர்க்கும்
மானென்ற குருவிற்குப் பொய்யோசொன்னேன்
மகத்தான வுபதேசங் கேட்டுத்தேறி
வானென்ற வுலகத்தில் பிழைக்கவேண்டி
வடிவான வுலகத்தில் சொன்னேன்யானும்
தேனென்ற தேரருட பாதம்போற்றித்
தேறியே யுலகத்தில் சொன்னேன்யானே. உகஉ

சொன்னதொரு வாதாங்க முன்னூறுள்ளே [ம்
சூட்டினேன் வெள்ளிமுறை பொன்னின்மார்க்க
நன்னயமாய்ச் சொல்லிவிட்டேன் பாகமாக
நலமாக யோகமுதல் கிரியைமார்க்கம்
இன்னிலத்தில் வாதிக்குச் சொன்னேன்புத்தி
இதமாகச் சொல்லிவிட்டே னுலகத்துள்ளே
கன்னல்போ லிருந்தாலே வாதமபகும்
கனகமது பிறக்குமது கருத்தால்பாரே. உகங

வெள்ளிவித்தை.

கருத்தாக வெள்ளையென்ற பதங்கங்கேளு
கனிவெள்ளை பாஷாணங் குதிரைப்பல்லும்
வருத்தப்பா தாளகமும் பூநீர்வீரம்
வடிவான சாரமொடு துரிசுசீனம்

கருத்தப்பா கல்லுப்பு வெடியுங்கவுரி
நலமான வெள்ளை யப்ரேதத்தோடு
கருத்தப்பா நாகமொடு வெள்ளியந்தான்
நலமாக இவையெல்லா மொக்கச்சேரே. உகச

சேர்த்துமே எருக்கம்பால் தன்னாலாட்டி
சிதமாக அரை ஆறு ஜாமமாட்டி
பார்த்துமே வெள்ளியால் கிண்ணம்பண்ணி
பக்குவமா யதற்குள்ளே யிட்டுக்கேளு
கார்த்துமே மேல்மூடி வெள்ளியாலே
நலமாகச் சீலைசெய்து சொல்லக்கேளு
வார்த்துமே முக்கவரில் கிண்ணிவைத்து
வடிவாக விளக்கேற்றி யெரித்திடாயே. உகரு

எரித்திடவே அகல்வைத்துத் திரியேபோடு
இதமான முன்னகலில் வார்த்தஎண்ணெய்
நரத்திடவே மூன்றுநா ளவியாதேற்று
நலமான பதங்கமது ஏரப்பாரு
கருத்திடவே பதங்கமெல்லா மெடுத்துவாங்கி
கனிவாக வெள்ளெருக்கம் பாலாலாட்டி
வாத்திடவே யுண்டைபண்ணிக் காயப்போட்டு
வடிவாக மேற்கவசம் சொல்லக்கேளே. உகசு

சொல்லவே அபிரேகம் பலமுமைந்து
சொற்பெரிய வீரமது பலமுங்கால்தான்
மெல்லவே அரைத்துமே பாணியாலே
மேன்மையா யரைக்கஙவ நீதமாகும்

நல்லவே முன்பதங்க மேலேகட்டி
நலமாக ரவியிலிடு தினந்தானேழு
வல்லவே புடமிட்டு எடுத்துப்பாரு
வயிரம்போல் தானிருக்கும் பஸ்பந்தானே.

தானென்ற பஸ்பத்தைக் கரியில்வைத்து
தாட்டிகமா யுருக்கிடவே யுருகும்போது
வானென்ற வெள்ளியென்ற ஈயம்சேரு
வகையான சாரமிட்டு உருக்கிச்சாய்க்க
நானென்ற வெண்மையா யுருகும்பாரு
நலமாக சூதத்தை யிடையேசேரு
கானென்ற இந்தஇடை வெள்ளைபோடு
கனிவாக முலைப்பாலில் சாமமாட்டே. உகஅ

ஆட்டியே ரவிதனிலே காயவைத்து
அடைவாக முன்கவச மேலேகட்டி
தாட்டிகமாய்ப் புடம்போட்டு எடுட்துக்கொண்டு
தடையறவே வெள்ளிசெம்பு நூற்றுக்கொன்று
வாட்டியே யுருக்கியே கொடுத்தாயானால்
வகையாக இருபத்து ஐந்துமாற்று
நாட்டியே சூதவெள்ளி யாகும்பாரு
நலமாக லோகமெல்லாம் வெள்ளியாமே. உககூ

ஆமேதான் வாதனையை நீக்கித்தள்ளி
அம்பரனை தரிசித்து அப்பால்மேவி
நாமேதான் சிலம்பொலியின் நாதங்கண்டு
நலமான சிலம்போசை நடனங்கண்டு

வாமேதான் சிவசொத்தைப் பதுமைபோலே
வடிவாகச் செய்துமே வடிவும்பார்த்து
காமேதான் சித்தரவர் மறைத்தவெள்ளி
கனிவான வாதாங்கங் கணக்கிலாச்சே. ௨௨0

ஆச்சென்ற வெள்ளிமுறை அடுத்துப்பாரு
ஆகாகா யிதுலகுவு முன்னேபாரு
காச்சென்ற கனலதுதா னேரமாட்டா
கைக்கடங்கா தொழிலிதுதான் கனகமாகும்
நீச்சென்ற போதத்தை நம்பிப்பாரு
நிலையான குருபதத்தை நேர்ந்துபாரு
வாச்சென்ற ஞானத்தின் வெள்ளியாதி
வடிவாக வெல்லாமுஞ் சித்தியாமே. ௨௨௧

சித்தியா யாகவென்றால் வெள்ளிபாரு
சிறப்பாக வெள்ளிவித்தை க்ஷணத்திலாகும்
முத்தியா யாகவென்றால் பொன்னைப்பாரு
முடிவாகச் சித்தானால் முடிந்துபோகும்
பத்தியா யாகவென்றால் செம்புபாரு
பதிவாக வெல்லாமுஞ் சித்தியாகும்
நத்தியா யாகவென்றால் நலமதாகும்
நலமான யோகசித்தி நலமதாமே. ௨௨௨

வெள்ளிசெய்து வித்தால் லாபமில்லை
அதைத் தங்கஞ்செய்.

நலமாக வெள்ளிதனைச் சரியாய்ப்பண்ணி
நாடியே விற்றுமே செலவுசெய்து

மிலமாக விற்றுமே செலவுசெய்து
பெருமையாய் ஞானத்தின் வழியிற்சேரு
கலமாக விருந்தாக்கா லொன்றுமில்லை
கனகமது ஆனுக்கால் சித்தியாகும்
வலமான பொருளறிந்தோன் வாதியாகும்
வடிவாக அறியாட்டால் பேதையாமே. உஉ௩

பேதையென்று நினைவெடுத்துத் திரியவேண்டாம்
பேய்போலே யலையாமல் நூலைப்பாரு
காதையா லலைந்தாக்கா லெல்லாங்காண்பீர்
கருத்தாக அலையாம விருந்தாற்கேளு
வாதையே படவேண்டாம் உலகுதன்னில்
வடிவான வெள்ளிதான் வடிவுபார்த்து
நீதையாம் பொருளறியார் வாதிமார்கள்
நிச்சயமா யறிவீர்கள் நிஜங்கண்டோரே. உஉ௪

நிஜமாகச் சுடும்வாதி அறியமாட்டார்
நீணிலத்தில் பொய்சொல்வார் நிஜமதாக
வசமாக வாதம்வரு மென்றுசெல்வார்
வகையறியா திருடரப்பா திருட்டுவாதி
பிசகாதே சொல்வார்கள் பேச்சைக்காணூர்
புறட்டாகச் சொன்னதினல் பலனுமில்லை
பசைவான நூலறிந்தோர் படிக்கவேணும்
பதிவான முத்திசித்தி பலனுமாமே. உஉ௫

ஆமேதான் பொருளறியா ரவியைக்காணூர்
அழும்பாகச் சொல்லிடுவார் அசடர்தாமும்

நாமேதான் திருடர்தா னிஜத்தைக்காணர்
நடுவிலே சுட்டுமே நலிப்பான்மட்டி
பூமேவு முலகத்திற் பொய்கள்சொல்வார்
'போக்கோடே ஆறுதலங் காணமாட்டார்
பாமேவும் பொதிகைமுனி நானேயென்பார்
பதிவான விதியறியார் பதிவுள்ளோரே. ௨௨௬

வெள்ளி வித்தை.

உள்ளாக வேணுமென்று யின்னமொன்று
உண்மையாய் வெள்ளிவித்தை யுறுதிகேளு
கள்ளமாய்ச் சொல்லவில்லை வெளியாய்ச்சொல்வேன்
கணக்கறிந்தால் பலனாகும் வெள்ளிதானும்
துள்ளவே கைமுறையைப் பார்த்துத்தேறு
துடியான யோகமுதல் சித்தியாகும்
வள்ளலார் சொல்லிவிட்ட வெள்ளியைத்தான்
வகையாகச் சொல்லுகிறேன் வகையைக்கேளே.

வகையாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
வண்மைபெற வெள்ளையென்ற பாஷாணந்தான்
துகையாக நவாச்சார மரைசேர்கூட்டி
துடியாக அதைப்பொடித்துப் பானையிட்டு
நகையாக மேல்மூடிச் சீலைசெய்து
நலமாக வெரித்திடவே யுயரவேறும்
அகையாக யெடுத்துமே வைத்துக்கொண்டு
அடைவாகச் சொல்லுகிறேன் ஆண்மைகேளே.

ஆண்மையா யிரதமது சேருஒன்று
அடைவாகக் கல்லுப்பி லெரிக்கவேறும்
தாண்மையாய் சூதபஸ்பம் வெள்ளைபாஷாணம்
தடையாக வீதிரண்டுஞ் சேத்தரைத்து
வாண்மையாய் வெள்ளெருக்கம் பாலாலாட்டி
வகையாக உண்டைபண்ணி சொல்லக்கேளு
காண்மையா யப்ரேகம் கவசம்போட்டு
கணக்காகப் புடமிட்டு எடுத்துக்கொள்ளே.

எடுத்துமே பின்புதான் சொல்லக்கேளு
இதமான வெள்ளியஞ் சேருவொன்று
நடுத்துமே அரப்பொடியும் சேருவொன்று
நலமான வெள்ளைபாஷாணங் காலாய்
விடுத்துமே சேர்த்துருக்க வுருகும்பாரு
விதமாக வெங்காரம் பாதிசேரு
கடுத்துமே யிரண்டுதர முருக்கிடப்பா
கனமான இரும்புதான் வெளியிற்போமே. ௨௯௦

போமேதான் சாரமது இடையேசேரு
போக்கோடே அரைத்திட்டு வில்லையாக்கி
ஆமேதான் புடம்போட்டு உருக்கிப்பாரு
அடைவாக கல்மசங்க ளற்றுப்போகும்
நாமேதான் கட்டிவெள்ளிப் போலேயாகும்
நலமாக யிவ்வெள்ளி நாலிலொன்று
தாமேதான் முன்குருவைக் கொடுத்துப்பாரு
தப்பாது ரசிதமது பத்துமாமே. ௨௯௧

பத்தான சாரத்தை விட்டாற்கேளு
பதிவான வெள்ளிதா னாகமாட்டா
சித்தான இரும்புதா னியத்தோடே
சேராட்டா லியமது நீர்தான்வாங்கா
முத்தான இரதமது சோரம்போனால்
முடிவான வெள்ளிய நீர்தான்வாங்கா
நத்தான வெல்லாந்தான் சேர்ந்தால்சித்தி
நாட்டிலே வெள்ளிவித்தை நலமதாமே. ௨௬௨

நலமான சித்தியெல்லா மேதாலாச்சு
நன்னயமாம் வாதவித்தை தன்னாலாச்சு
பலமான வெள்ளிதா னேதாலாச்சு
ப்ரபலமாய் வெள்ளை பாஷாணத்தாலாச்சு
உலமான கிரிகையொடு ஞானத்தாலே
உற்றுணர்ந்து சிந்திக்க வெல்லாமாச்சு
கலமான கலனறிந்தால் சூக்ஷமாச்சு
காரியத்தை அறியாட்டா லெல்லாம்போச்சே.

போச்சென்று எண்ணாதே வெள்ளிதன்னை
போக்கோடே செய்துமே பூண்டுபாரு
நீச்சென்று எண்ணாதே வெள்ளிவேலை
நிமிஷத்தி லாகுமே நிலைக்கும்பாரு
ஆச்சென்று மஹிபதிகள் முன்பின்சொன்னார்
அதனாலே வெள்ளிதான் மறைந்துபோச்சு
மூச்சென்ற ததுவடங்கி ஜடநில்லாது
முனையான அரியறிந்தால் மூர்க்கமாமே. ௨௬௪

மூர்க்கமர் மர்ச்சிதத்தை முன்னேபாரு
மூவுலகு மெச்சுமே ஞானமாகும்
ஆர்க்கமா முன்னுடைய வெள்ளிதன்னை
அடைவாகச் செய்தாக்கால் சித்திசித்தி
மார்க்கமாஞ் சித்திதா னிரம்பவுண்டு
மதயானை வெள்ளிய நீரைவாங்கில்
ஊர்க்கமா மெல்லாமுஞ் சித்தியாச்சு
ஓகோகோ சித்திதரும் ஞானவானே. உ௬௫
ஞானவா னென்றுமொழி சொல்லேதுக்கு
நலமான வெள்ளிவித்தை தெரிந்ததாலே
கானகத்தில் திரிந்தலைந்து திரிதல்வேண்டாம்
கருணைவைத்தால் சித்தியாங் கண்டுபாரு
ஊனமாய் திரிந்தலைந்தா லாபமேது
உற்றுணர்ந்து பாராட்டால் சித்தியில்லை
வானகமும் விண்ணகமு முன்னதாச்சு
வகையான வெள்ளிவித்தை பார்த்திடாயே.

வெள்ளிவித்தை—அகத்தியர்முறை.

பாத்திடவே இன்னமொன்று பகரக்கேளு
பதிவான வெள்ளியது எளிதிலாக
காத்திடவே ஏழையாம் வாதிதானும்
கருத்தாகச் செய்திடுவா னுலகுதன்னில்
நாத்திட்டு நட்டாப்போல் வேதையாகும்
நலமான சித்தியாம் நாட்டுளோர்க்கு
வாத்திட்ட விக்கிரகம் போலேயாகும்
வடிவான சித்தியெல்லா மெளிதிலாமே. உ௬எ

எளிதாக வின்னமொன்று வெள்ளிவித்தை
இன்பமா யகத்தியரு மெனக்குச்சொன்னார்
அளிவான மனத்தினால் பரர்க்கவேண்டா
மடைவான சிந்தையினா லடர்ந்துபாரு
துளிவான துரோகிக்குக் கிட்டாதப்பா
துப்பறவாய் சித்திக்கும் நல்லோருக்கு
வளியோடே செய்தாக்கால் சித்திசித்தி
வகையறிந்த தொகையறிந்த வளம்பெற்றாரே.

வளமாகப் பொருளறியார் நூலைக்காணார்
வழிதப்பி வாதத்தைச் சுட்டுசுட்டு
களமாகக் கரியதனைப் பண்ணிபண்ணி
கருத்தில்லா வாதிகள்தான் கேட்டேனென்பார்
துளமான வெள்ளிவித்தை யெளிதிலாகுந்
துடியான யெளியோரும் செய்வார்பாரு
பளமான ததுவரிந்து உண்ண உண்ண
பதிவான ருசியாகும் பாருளோர்க்கே. ௨௩௯

பாரியாய் வெள்ளிமுறை யொன்றுகேளு
பதிவான விதியாளி அறிவானப்பா
தேரியே வெள்ளையென்ற பாஷாணந்தான்
திறமாகச் சேரதொன்று கல்வத்திட்டு
நாரியாய்ச் சூதமது சேரதொன்று
நாட்டவே சாரமது சேரதொன்று
பாரியா யிதுமூன்றுங் கல்வத்திட்டு
பாரித்துப் பொடித்துமே சொல்லக்கேளே. ௨௪0

சொல்லவே பானையது இரண்டெடுத்து
சிறப்பாக வராஞ்சியே யொக்கப்பண்ணி
நல்லவே அடிப்பானைக் குள்ளேயிட்டு
நலமாக மேற்பானைக் கவிழ்த்துமூடி
பண்ணவே சீலைமண் நாலேசெய்து
வடிவாகத் தீயெரிப்பா யெட்டுஜாமம்
துள்ளவே யுயரவே பதங்கமாகுந்
துடியான பதங்கமெல்லாம் வழித்துக்கொள்ளே.

வழித்துமே யெருக்கம்பால் தன்னாலாட்டி
வளமாக உண்டைபண்ணிக் காயவைத்து
நழித்துமே அப்ரேக நவநீதத்தை
நலமாக உண்டைமேற் கவசங்கட்டி
கழித்துமே காயவைத்துப் புடத்தைப்போடு
கனிவாக வுருகியே கட்டிப்போகும்
பழித்துமே கட்டியே குருவுமாச்சு
பதிவாக வெடுத்துமே பருவங்கேளே. ௨௪௨

கேளுமே வெள்ளீயஞ் சேருஒன்று
கெடியாக விரதமது கால்சேர்கூட்டி
நாளுமே யுருக்கியே புட்டாயாக்கி
நலமாகக் கல்வத்தி லிட்டுக்கேளு
பாருமே அண்டோடு சேருஒன்று
பக்குவமாய்ச் சுண்ணாம்பு உவர்மண்ணேரே
தாருமே போட்டுமே சுத்திபண்ணி
தடையறவே யெடுத்துமே சொல்லக்கேளே.

சொல்லவே வெள்ளியம் புட்டுநேரே
செம்மையாய்ப் பாணியா லரைத்துவில்லை
நல்லவே காயவைத்துப் புடமேபோடு
நலமாக எடுத்துமே நவிலக்கேளு
கல்லவே வெள்ளியம் நீர்க்கப்போடு
கனமாக எடுத்துமே சாரஞ்சேரு
வல்லமையா யுருக்கிடவே வெள்ளிபோலாம்
மயங்காம லெடுத்துமே மார்க்கங்கேளே. உசச

கேளுமே வெள்ளிபோ லுருகும்பாரு
கெடியாகத் தட்டினு லோசையாகும்
வாருமே சரிகைவெள்ளி போலாம்பாரு
வடிவாக யிதைபுருக்கி நூறிலொன்று
காருமே முன்குருவைக் கொடுத்தாயானல்
கனிவாக வெள்ளியது பத்துமாற்று
தாருமே வங்கத்துக் கோடாதப்பா
தண்மையாய் விதியறிந்து செய்திடாயே. உச௫

செய்திடவே வெள்ளிவித்தை யெளிதிலாகும்
சிறப்பான மார்க்கமாய்ச் செய்துகொள்ளு
எய்திடுமே காயசித்தி கவனமாகும்
ஏழைமதி போகாதே வெள்ளிபாரு
உய்திடவே சித்தியெல்லாம் வெள்ளியாலே
உண்மையாய் வெள்ளிதா னதிகவேதை
பைதிடவே பாகமாய்ச் செய்துகொள்ளு
பதிவான விதியறிந்தா லெல்லாமாமே. உசசு

ஷி பரம்பரை.

ஆமேதான் சிவன்சொல்ல தேவிகேட்க
அடைவாக நந்திதான் கேட்டுக்கொண்டு
பூமேவு நந்திதான் அசுவனிக்கு
போக்கோடே அசுவனியும் விசுவனிக்கு
நாமேதான் விசுவனியுங் கேட்டுத்தேறி
நலமாக தன்மந்த்ரிக் குபதேசிக்க
வாமேதான் தன்மந்த்ரி அகஸ்தியர்க்கு
வடிவான அகத்தியரும் புலத்தியர்க்கே. உசஎ
சொன்னதொரு புலத்தியர் தேரர்க்குச்சொல்ல
சொற்பெரிய தேரர் யூகிக்குச்சொல்ல
நன்னயமா யூகிமுனி சந்தோஷித்து
நலமாக ஆயுருவேதத்தைப் பார்த்து
கன்னல்போ லுலகத்திற் பிழைக்கவேண்டி
கருத்தாக வாதாங்க முன்னூர்தன்னில்
இன்னிலத்திற் பெரியோர்கள் பாதம்போற்றி
எழுதினே னஞ்சாமல் வேதைதானே. உசஅ
தானென்ற வெள்ளிவித்தை சொன்னமார்க்கந்
தாயான ஈஸ்வரியும் குருவுஞ்சொல்ல
வானென்ற இப்பொருளை ஆய்ந்துதானும்
வடிவாகச் சுருக்கியே முன்னூர்தன்னில்
கோனென்று கொட்டியே வைத்தேனப்பா
கூர்ந்துமே வெள்ளிவித்தை குணமதாகும்
நானென்ற ஆணுவத்தால் வித்தையெல்லாம்
நாடியே யுலகத்திற் சொன்னேன்தானே. உசகூ

சொன்னதொரு திகைஷவிதி முன்னூர் தன்னில்
சொற்பெரிய களங்கோடு வெள்ளிதானும்
நன்னயமாய்ச் சொல்லிவிட்டேன் பார்த்துத்தேறி
நலமாகப் பாகமாய்ச் செய்துதேறு
கன்னல்போல் வாதாங்க முன்னூர் தன்னில் [ரு
கைக்கனிபோல் சொல்லிவிட்டேன் கனிந்துபா
இவ்னிலத்தில் வெள்ளீயம் நீரைவாங்கு
இரந்துண்டு திரியாமல் வெள்ளிபாரே. உ௫0

பாரப்பா வென்னுடைய சாத்திரத்தை
பதிவாக முழுதுமே பகர்ந்துபாரு
சாரப்பா பார்த்தாக்கா லெல்லாந்தோணும்
சவங்கலாய்த் திரிந்தாக்கா லொன்றுமில்லை
வேரப்பா வொவ்வொன்று மிந்தநூலில்
வேதையொன்றுந் தப்பாது விரைந்துபாரு
ஆரப்பா அறிவார்கள் புத்திமான்கள்
அறிவார்க ளிந்நூலை அறிவாய்ப்பாரே. உ௫க

அறிவார்கள் வெள்ளிவித்தை உலகத்தோர்க்கு
அன்பாகச் சொல்லுகிறே னுலகவாதி
பிறிவாக உலகத்திற் கெட்டுள்ளோர்கள்
பிழைக்கவே தெரியாம லலைவாரையோ
பிறிவாக உலகத்தில் வாதிமார்கள்
பிறிந்துமே பாரிலே யலைவாரப்பா
நெறியான நெரியறிந்தா லுலகநீதி
நேராகச் செய்தாக்கால் சித்தியாமே. உ௫உ

சித்தியா யாகவென்றால் வெள்ளை தன்னை
சிறப்பாக வைத்திடவே சித்தியாகும்
முத்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
மூவுலகு மேய்க்கவே வெள்ளிதன்னை
பத்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
பதிவாக விதியறிந்து பரமயோகி
சத்தியமாய்ச் சொல்லிவிட்டே னுலகத்துள்ளே
சாதுபோற் கண்டுமே பார்த்திடாயே. உ௱௩

கண்டுபார் வெள்ளிவித்தை யெளிதிலாகும்
கணக்காகப் பார்த்துமே சரணம்பண்ணி
தொண்டுபா ரிடைபாக மாகச்செய்து
தொன்மைபெறச் செய்தாலோ வெல்லாமாகும்
துண்டுபார் நூலெல்லாம் வாசித்துப்பார்
ஜகஜ்ஜால வித்தையெல்லா மெளிதிலாகும்
கண்டுபார் வாதாங்கந் தன்னில்தானும்
கருத்தாக உறுதிபெற்று இருந்திடாயே. உ௱௪

இருந்திடவே சகலமெல்லாஞ் சித்தியாகும்
ஏழைமதி போகாதே செம்பைப்பாரு
வருந்துபா ரெல்லாமுஞ் சித்தியாகும்
வடிவாக எல்லாமும் சித்தியாகும்
கருந்துபார் வாதாங்கந் தன்னில்தானும்
கருத்தாகச் சோதித்தா லெல்லாமாகும்
பரந்துமே திரியாதே பார்த்துத்தேறு
பதிவான எல்லாந்தா னுரும்பாரே. உ௱௫

ஆகுமே வெள்ளிதனை விற்றுக்கொண்டு
அடைவாக ஞானயோகத்தைப் பாரு
பாகுமே சுழுமுனையில் நாட்டம்பாரு
பக்குவமாய் வாதியென்று பேர்படைத்து
தாகுமே யிரும்பைத்தான் முந்திப்பாரு
தாக்கிடவே எல்லாமுஞ் சித்தியாகும்
வாகுமே பொருளெல்லாந் தெரிந்துபோகும்
வளமான பொருளறிந்தால்சாரமாமே. ௨௫௬

சாரத்தை வெள்ளை பாஷாணத்தோடே
சாத்தியே யரைத்திடவே கட்டிப்போகும
பாரத்தை அண்டோட்டில் வெள்ளீயத்தை
பதிவாக நீரிறுக்கும் பதியில்நில்லு
காரமென்ற காரத்தால் வெள்ளீயத்தை
கணக்காக உருக்கியே நீரைவாங்கு
பாரமென்ற பாரத்தால் சித்தியாகும்
பதினாறு மாற்றாகும் பதிவாய்ப்பாரே. ௨௫௭

வாதவெள்ளியில் அயச்செம்பு சொடுக்க.

பதிவாக அயச்செம்பை முந்திப்பார்த்து
பதியவே செம்பெடுத்து மதியில்தாக்கு
விதியாக வெள்ளிதான் பழுத்துப்போகும்
விதமாகச் சரக்கெல்லா மிதிலேசாகும்
கெதியாகச் சொன்னக்கா லொன்றுமில்லை
கெடிதாக ஒன்றொடொன்று சேர்ந்துஆகும்
பதியாக விதியறிந்தால் பதியுளோர்க்கு
பதிவான உண்மையிது பரிந்துபாரே. ௨௫௮

பாரேநீ இக்காண்டம் தன்னில்தானும்
பதியவே பொருளெல்லா மெடுத்துக்காட்டு
காரென்ற விதியாளி கண்டுகொள்வான்
கனிவாக இல்லாதான் கணக்குமாமோ
வாரேநீ கருவாளி காண்பானப்பா
வடிவாகப் பொருளறிந்து மாளவொட்டார்
சீரான சீரறிந்தாற் பாதையாகும்
சிறப்பான பொருளறிந்த வாதிதானே. உகூசு

வாதிகள் செய்யவேண்டியவை.

வாதியென்று பேர்படைத்தால் சீனச்சுன்னம்
வடிவாக வெடிபுப்புச் சுன்னம்பண்ணு
சாதியென்று பேர்படைத்தால் தபசுபோச்சு
சாத்திரத்தை நம்பாதே சரிதைபோச்சு
வேதியென்று பேர்படைத்தால் ஞானம்போச்சு [ம்
வேதாந்தப் பொருளறியார் விதிநூல்பொய்யா
பாதிமதி யணிந்தவர்தான் சொன்னநீதி
பதிவான விதியாளி யறிவான்பாரே. உகூ0

ஆனந்தக்களிப்பு—சவுக்காரச்சுன்னம்.

சவுக்கார சுன்னத்தைச் சொல்வேன்—பூநீர்
சத்தியாம் நாதந்தான் பூநீர்தானச்சு
நவுக்கார வழலை யதுதான்—நல்ல
நாயகி சுக்கான்கல் வழலைக்கல்ஆச்சு உகூக

ஆச்சுமே இதுரண்டும்சேர்ந்து—இது
ஆதிசவுக்காரப் பேராச்சுதோழி

பாச்சுமே கல்லுப்புசேர்ந்து—நல்ல
பாதையாய்சுன்னங் கடுமையாயாச்சு ௨௬௨

காரத்தில் காரமுமேற்ற—நல்ல
காரமுமாச்சு சவுக்காரமப்பா
நீர்த்ததோர் கல்லேயெடுத்து—இதில்
நேராயுவருப்பு சுன்னங்கரைத்து ௨௬௩

கில்லேயும்போட்டு எரிக்க—நல்லாய்
காணிதுசுத்திபு மாச்சுதேபாரு
செல்லக் கரிதனிலூதி—இதை
திட்டமாய்ச்சுண்ணும்பாய் பண்ணிடுதோழி ௨௬௪

பண்ணியே பூநீறுபத்து—படி
தானேஅளந்துமே பாண்டத்திலிட்டு
கண்ணியமாகவேகேளு—கல்
சுன்னம்படியொன்று விட்டிடுதோழி ௨௬௫

சவுக்காரக்குழம்பு.

கல்லுப்புச் சுன்னமுமொன்று—நல்ல
காரமாய்ப்போட்டு கலக்கிடுதோழி
வல்லமையாகக் கலக்கி—பாரு
காரியமாகக் குழம்பாகக்காச்சி ௨௬௬

குழம்பையிறுத்திடுதோழி—சொல்ல
கூசாமலேதினி சொல்லமுடியா
அழம்பைக் குழம்பினல்வேதை—ரம்ப
ஆதிசவுக்காரக் குழம்பிதுபாரு ௨௬௭

எல்லாச்சரக்குகள்கட்டும்—நல்ல
இன்பரசவாத மாகுமேதோழி
நல்லாயிருக்குமே கேளு—நல்ல
நாயகியாகுமே நலமிதுபாரு ௨௬௮

சீனம்ஒருசேரெடுத்து—நல்ல
சீனத்தைச் சட்டியி லிட்டுப்பொரித்து
கானமாய் வெண்கருவிட்டு—நல்ல
காரமாய்த்தானே அரைத்திடுதோழி ௨௬௯

ஜாமமொரு ஜாமமாட்டி—நல்ல
சாதகமாகவே வில்லையாய்தட்டி
வாமமாய்தான்ரவிவைத்து—வடி
வாகக்கல்சுன்னம் கீழ்மேலுமிட்டு ௨௭௦

இட்டுப்பெரும் புடம்போட்டு—இதை
இன்பமாய்த்தானே யெடுத்திடுதோழி
கட்டுமேதான் கடுஞ்சுன்னம்—நல்ல
காரியமாகவே சொல்லுவேன்கேளு ௨௭௧

ஆதிசவுக்காரந்தன்னை—இதை
அன்பாய்க்குழம்பையும் விட்டுஅரைத்து
பாதியாய்ச்சீனத்தினோடே—இதில்
பத்திச்சவுக்காரம் தானேகுழம்பை ௨௭௨

விட்டுஅரைத்துமேவில்லை—தட்டி
வேகமதானே ரவிதனிலிட்டு
கட்டுமெட்டாகவேபோடு—புடங்
காட்டமாய் போட்டுஎடுத்துமேகேளு ௨௭௩

எடுத்துமே சாரத்தின்மேலே—கட்டி
இன்பமாய்காட்டி ரவிதனிற்காய
அடுத்துமே வைத்திடுதோழி—நல்ல
ஆதியாய்தானேபுடமதுஇட்டு ௨௭௪
எடுத்துமே பார்க்கவேகாட்டம்—இதை
இன்பமாய்ப்பார்க்கவே தந்தம்போலாகும்
தடுத்துமேநாகமுருக்கி—இதை
தப்பாமல்தானிடை தானேகொடுக்க ௨௭௫
கட்டுமே தானேஉருகும்—நல்ல
கட்டாகும்வேதை கனிந்திடும்தோழி
பட்டுஎடுத்துமேபாரு—புகை
பக்குவமாகவே கட்டிடுந்தோழி ௨௭௬
புகையதுகட்டிக்கனியும்—நல்ல
போக்கோடேவாதம் நிலைத்திடும்தோழி
வகையது ஆருமேவாதி—நல்ல
மாரலில்நூற்றுக்கு ஒன்றிடுதோழி ௨௭௭
மாற்றது பத்துமேயாகும்—மய
மாகும்புடத்துக் கிறங்குமேவாதி
சேர்த்துயெடுத்துநீதோழி—ஜய
மாகுமேதான்புடம் தானேநிலைக்கும் ௨௭௮
விற்றுச் செலவுகள்செய்து—நல்ல
வேதாந்தஞானம் பலித்திடும்தோழி
சித்துக்கரியதோர்ஞானம்—திர
மாகவேபார்த்து இருந்திடும்வாதி ௨௭௯

எட்டெழுத்துமேசொல்லி—இதில்
இன்பமேயாகச் செபித்திடுதோழி
கட்டும்சுழிதனிலேறி—ஐய
கானலமாகவே கட்டிப்பிடித்து ௨௮௦

செய்திடுசித்திக்குஞ்ஞானம்—நல்ல
சிக்கவேயோகம் பலித்திடும்வாதி
பையவேஞானமிகவும்—நல்ல
புத்திதரும்ஜீவ முத்தியைப்பாரு ௨௮௧

பார்க்கதரிசினையாகும்—நல்ல
பாகமிதுவாகும் கேளடிதோழி
ஏற்கவேசித்திகளாகும்—நல்ல
எட்டுமேசித்தி இருந்திடும்வாதி ௨௮௨

ஆடித்திரியாதேவாதி—நல்ல
அம்பலவாணரை தானேதுதிநீ
கூடிப்பிரியாதேவாதி—நல்ல
கொடுமைகள்சேய்திட வேண்டாங்காண்வாதி ௨௮௩

திட்டமாய் கைபாகம்செய்து—நல்ல
சித்திக்குமுத்திக் கிருப்பிடமாகும்
வட்டமூலமணமார்பன்—சொன்ன
வடமொழிதன்னி லிருந்ததுகாணும் ௨௮௪

பட்டமாய்செய்யாதே தோழி—நல்ல
பாடுகள்பட்டுமே செய்திடுதோழி
சிட்டர்கள்புகழ் தில்லைவாசர்—செய்ய
திரன்அரன்போலே கூத்தாடுந்தோழி ௨௮௫

ஆடிசிவபூஜைபண்ணி—நல்ல
அன்பாகப்பார்த்து இருந்திடுந்தோழி
காட்டித்திரியாதேவாதி—கண்
கண்டுபிடித்து இழுத்திடுவாதி உஅசு

வாதம்நிலைத்ததன்பின்னே—வடி
வாகவேஞான மிகப்பாருதோழி
சேதம்வராமல்சரக்கு—ஜயம்
சித்திக்கப்பண்ணிடு வந்திடும்வாதம் உஅஎ

சித்தர்மறைப்பையுஞ் சொன்னேன்—நல்ல
சித்திக்குமான வாசியைச்சொன்னேன்
புத்தியாய்கண்டுபிடித்து—புல
னாகவேசெய்து புகழ்ந்துநீபாரு உஅஅ

வெற்றிதரும்ரச வாதம்—நல்ல
வேதாந்தசற்குரு வெற்றிபெறலாம்
புத்திதருசிவபோதம்—நல்ல
புத்தியில்சித்தி பொருந்துமேதோழி உஅகூ

நடனமுசெய்திடுதோழி—நல்ல
நால்வேதமுண்டான போதுமேவாதி
கடனுளியாகத்திரிந்து—நல்ல
காதலயந்தனைப் பார்த்திடுதோழி உகூ0

கெந்தியால் வர்ணமுமாகும்—நல்ல
கீர்த்தியுமாகும் கிருபையுமாகும்
நந்திஎண்ணுபிரந்தன்னில்—இதை
நாடியிருந்துநலம் பெறச்சொன்னர் உகூக

செப்பமதாகரசத்தை—ஜயம்
செய்திடுவாதம் நிலைத்திடும்போது
கற்பமாயூகிமுனியும்—நல்ல
காரணமாகவே வாதாங்கந்தன்னில் உகூஉ
பாகமாய்ச்செய்பவே சொன்னேன்—நல்ல
பாகத்தைக்கண்டு பிடித்துமேவாதி
தாகமாய்த் தான்வரச்சொன்னேன்—நல்ல
தாட்டிகமாக இருந்துமேவாதி உகூங

வேறு.

வாதியாய் வடமொழியிற் சொன்னமார்க்கம்
வகையாகச் சிவன்றானும் அம்மைக்குத்தான்
நீதியாய் நந்திதான் கேட்டுக்கொண்டு
நிலவரமாய் விசுவனியும் அஸ்வனிக்கு
சோதிபெற தந்மந்த்ரி கேட்டுத்தேறி
சுயமாக அகஸ்தியரு முபதேசிக்க
பாதிசேர் அகத்யரும் புலத்தியர்க்கு
பண்பாகச் சொல்லிவிட்டார் பாரில்தானே.
தானென்ற புலத்தியரும் பார்த்துத்தேறி
தப்பாமல் புலத்தியரும் தேரருக்கு
வானென்ற தேரருமே பார்த்துத்தேறி
வகையாக யூகிமுனிக் குபதேசிக்க
நானென்ற யூகிமுனி உலகத்தோர்க்கு
நாடியே ஆயுர் வேதத்தைத்தானும்
கோனென்ற குருவருளால் சொன்னமார்க்கம்
கொடியதொரு வாதிதன் நேர்மைதானே.

நேர்மைதான் கைபாக விபரமெல்லாம்
　　நிலைத்துமே தீக்ஷைவிதி தன்னிற்சொன்னேன்
தாண்மைதான் வாதாங்கந் தன்னில்தானுந்
　　தடையறவே சொல்லிவிட்டேன் சார்புதன்னை
வாண்மைதா னிக்காண்டம் தன்னில்தானும்
　　வகையாகச் சொல்லினே னுலகினுள்ளே
காண்மைதா னில்லாமல் நல்லோர்க்குத்தான்
　　கருத்தாகச் சொல்லினேன் காண்பீராமே. உகூகூ

காணப்பா வாதத்தி னுர்ப்பனத்தைக்
　　கருத்தாக வாதாங்கந் தன்னிற்சொன்னேன்
பூணப்பா யிவ்விரண்டு மொற்றுப்பார்த்து
　　பூருவத்திற் சொன்னதெல்லாம் புதிதாய்ப்பாரு
தோணப்பா அறுதலிபோல் நின்றுலாமோ
　　தொன்மைதரும் பெரியோர்கள் சொன்னநீதி
வாணப்பா சாத்திரத்தை ஆறுய்ந்துப்பார்
　　வகையாகச்சொன்னதெல்லாம் வண்மைதானே

வண்மைதான் பெரியோர்கள் சொன்னநீதி
　　வகையாகப் பார்த்துமே மனதுநேர்ந்து
தண்மைதான் பெரியோர்கள் சொன்னநீதி
　　தடையாகச் சாத்திரமும் பொய்யென்பார்கள்
கண்மைதான் சாத்திரத்தை யொத்துப்பார்த்து
　　கணக்கறிந்து உண்மையாய் கவனம்வைத்து
நண்மையாய்ச் செய்தாக்கா லெல்லாமாகும்
　　நாடினு லெல்லாமுஞ் சித்தியாமே. உகூஅ

சித்தியா யாகவென்றல் நூலைத்தானும்
சிறப்பாகப் பார்த்துமே மனதிலெண்ணி
முத்தியாய்ப் பாகமாய்ச் செய்துகொண்டு
முனிவாக மனத்தையே சிந்தித்தேறு
பத்தியாய் மனமகற்றிப் பொருளைத்தேடி
பதிவாக மெய்யென்று பாழில்மீளா
நித்தியமா யென்றுதா னினவில்புக்கி
நீடூழி காலமெல்லா நினைவிற்பாரே. ௨௯௬

நினைவிலே பார்த்தவுடன் வாதந்தன்னை
நிச்சயமாய் நினைவுதனில் நினைத்துஎண்ணி
கனவிலே கண்டபொருள் போலேசெய்து
காட்டியே திரிந்துநீ பொருளைப்பாரு
அனவியே திரிந்தாக்கால் வேதைமார்க்கம்
அடைவாகச்செய்துமே சொல்லக்கேளு
தனவிலே செய்தாக்கா லாபமாமோ
தாக்காட்டால் தன்மையாய்த் தாக்கிப்பாரே.

தாக்கிப்பார் சிவன்றனக்குச் சரணமையா
தடையறவே அம்மைக்குச் சரணஞ்சொல்லு
நீக்கிப்பார் நந்திக்குச் சரணஞ்சொல்லு
நிலைவரமா யகஸ்தியர்க்குச் சரணஞ்சொல்லு
வாக்கிப்பார் மந்திரிக்குச் சரணஞ்சொல்லு
வகையாகத் தேரர்க்குச் சரணஞ்சொல்லு
வீக்கிப்பார் தேரர்க்குச் சரணஞ்சொல்லு
விதமான பூகிமுனி சொன்னவாறே. ௯௦௧

சொன்னதொரு ஆயுருவேதத்தைத்தானும்
சுகமாக உலகத்திற் சொன்னேன்யானும்
கன்னதொரு கருத்தறிந்த பேர்கள்தானும்
கனிவாக உலகத்தில் மனதுதானும்
பின்னமில்லாமலே சொல்லிப்போட்டேன்
பேர்பெரிய வாதமென்ன வெளியிலாகும்
துன்னதொரு படிப்பாளி கிடைக்கும்பாரு
சித்திமுத்தி செய்திடுபேர் சின்னந்தானே. ௩0௨

யூகிமுனி வாதாங்கதீக்ஷைவிதி

மூன்னூறும் முற்றிற்று.

உ

சிவமயம்.

ஸ்ரீகிமுனி வாதாங்கதீக்ஷைவிதி—௩௦௦.

விஷயம்.	பக்கம்.	விஷயம்.	பக்கம்.
காப்பு	௧	களங்குகளெல்லாம் செம்பாக்கிரயவாடைபோக்கி அந்தச் செம்பை வெள்ளியிற் கொடுத்தால் மதி பழுக்கும் மாற்றுகும் பொன்னுகும் எல்லாம் சித்தியாகும்	,,
வாதம் உபதேசித்த பரம்பரை	,,	கௌரியால் அயமுருக்க	௧௮
இந்நூலிற் கைபாகங்களெல்லா முடித்துச் சொன்னேன்	௨	அயச்செம்பு	,,
சவுக்காரக் குழம்பினால் கல்லுப்பைச் சுன்னம்செய்து ஜயநீராக்கில் அதினுல் சகலசரக்கும் கட்டும்	௨-௩	கெந்திபஸ்பம் செய்யதீக்ஷை	௨௧
முதல் துருசுச்செம்பெடுக்கும் வழி	௫	கெந்தகக்கட்டு	,,
இதற்கு வெடியுப்புத் திராவகம்	௬-௭	கெந்திச்சுன்னம்	,,
தாளகச்செம்பு	௧௦	துருசுடன்கெந்திசேர்த் துருக்கினுல் வெங்கலம்போலிருக்கும்	௨௫
தாளகக்கட்டு	,,	மேற் கூறியதை இன்	
இன்னதில்லாமலிது உதவாது	௧௪		
வெள்ளிசுத்தி	௧௬		

விஷயம்.	பக்கம்.
வின்ன நூல்களிற் பார்	௨௪
துருசுக் களங்கு	௨௮-௫௪
வெட்டையார்,யிருக்கும் செம்பை பஞ்சமித்ரத்திலிருக்கிச் சாய்க்கவும்	,,
இன்னின்னதை முறையேபார்க்கவேண்டும்	௨௯
சாரக்கட்டு	௨௯-௪௭
சிலைச்சுன்னம்செய்து சாரத்தின்மேற் கவசம் கட்ட	௩௦
சாரச்சுன்னம்	,,
சாரஜயநீர்	௩௧
நாகக்கட்டு	௩௪-௪௮
சிலைச்சுன்னம்	௩௪
வெடியுப்புச் சுன்னம்	௩௫
துருசுச் சுன்னம்	௩௬-௫௦-௫௮
பாஷாணக்கட்டு	௩௭-௬௭
வெள்ளிவித்தை	௪௦-௭௪-௭௯-௮௨
ஸமஸ்தமும் வெள்ளியிலாகவேண்டும், அதனால் முன்னேயதைச் செய்யவும்	௪௫
என் நூலிலின்னதைச் செய்துகொள்	௪௯
வெள்ளி வேதையில் வெள்ளி சேர்க்கவேணுமென்பது	,,
நூற்பரம்பரை	௫௦
தங்கஞ்செய்ய இவை வேண்டும்	௫௩
உப்பாற் சகலமுமாம்	௫௭
அயத்தங்கம்	௫௯
கட்டுவகை	௬௦
பச்சைத்துருசால் கட்டுவகை	,,
லிங்கக்கட்டு	௬௦-௬௧
ஷ லிங்கந் தங்கஞ் சேர்ந்த வேதை	௬௨
பாஷாணங்கள் முதலிய கட்டு	,,
மேற்படிவேதை	,,
வாதிகள்மடமை	௬௩
கல்லுப்புக்கட்ட சமுத்திர நீரொரிக்க, இது சுத்தஜலமென்றும் புகைநீரென்றும் பெயர்	௬௬
கல்லுப்புக்கட்டு	,,

விஷயம்.	பக்கம்.
கல்லுப்பும்பாஷாணமும் சேர்ந்தகட்டு	௭௦
சகலரோகத்திற்குங் காட்டாமணக்கெண்ணெய்	௭௪
வெள்ளிசெய்த வித்தால் லாபமில்லை அதைத்தங்கஞ்செய்	௭௭
வெள்ளிவித்தைசெய்த பரம்பரை	௮௩
வாதவெள்ளியில் அயச்செம்பு கொடுக்க	௮௫
வாதிகள் செய்யவேண்டியவை	௯௦
சவுக்காரச்சுண்ணம்-ஆனந்தக் களிப்பு	௯௧

முற்றிற்று.

ரு 6 25
ப.4-4ம்

புதிக முன் ம.லாக
உரையில் பக்கம் 97ம் இதை
142 வராக இருந்தது
சரியாக 26.7-74
ஜெ: 26.7.74

சிவமயம்.

யூகி முனி

வாத வைத்திய உலா—௧௦௦௦.

அண்ணா மலையில் அரன்சிவனும் உமைபாலும்
பண்ணா ரசவாதம் பாலித்தார்—கண்ணாப்
வட கிரந்தந்தன்னை வடிவாந் தமிழ்செய்தார்
திடமுடனே யூகிமுனி—செப்ப

சிவனு முனாசெய்தார் தேவிக்குத் தானும்
அவனுமந் நந்திதான் பக்கல—கேட்டவனும்
தன்மந்திரிக்கிச் சொல்ல தப்பாமல் அஸ்வனியும்
வனமுள்ள விஸ்வனிக்கி வாழ்த்திதன்—தன்மையை

அகத்தியற்குச் சொல்ல ஆதி புலத்தியரும்
தகத்துடனே கேட்டுத் தான்மகிழ்ந்தார்—சகத்தில்
தேரருக்குச் சொன்னார் தேரருமே யூகிமுனி
பாரி லதிகம் பரத்தினார்—மலர்க ௨

உலகம் பிழைக்க வோங்கு ரசவாதம்
கலக மில்லாமலே காட்டினார்—நிலையாக
சித்தர்சொன்ன நூலை திரட்டியதில் கைபாகம்
முத்திபெறச் சிந்தூர முன்னிலையில்—சித்தி ௩

தயிலவகை சொல்லித் தாகமுடன் சுன்னம்
பயிலாக் களங்குவகை பாடினேன்—ஓயிலாக
கைபின் வரிசை காதலாச் செய்யும்வகை
பைய புடம்பாகம் பகட்டியே—செய்ய ௪

கருவான வாதங் கடைவிட்டால் ஞானம்
தருவாக யில்லை தடைப்பட்டு—திருபாகம்
பிச்சை யெடுத்துண்டு பிரட்டுக்கு வுள்ளாகி
நிச்சயமாய்ப் போக நிலைபாரு—தச்செயலாய் ரு

வாட்டு மிகுந்தால் வரிசையது வாருது
தேட்டு புடமீறில் செப்பக்கேள்—மூட்டினுல்
மண்ணுகும் பொன்னுமில்லை வாதிபடிப்பு
கண்ணுளர் கண்டால் கருதுவார்—புண்ணுளர் சு

உழைத்தவர்க்குத் தோணும் உண்மை ரசவாதம்
தழைத்தவர்க்குக் காணும் தலைப்பட்டால்-புழைக்கை
ஓங்கு கணபதியையும் உள்ளபடி சேவித்து
தாங்கு ரசசிந்தூரஞ் சாத்தக்கேள்—பாங்காய் எ

ரசசிந்தூரம்.

ரசசுத்தி பண்ணி நாடிபலம் நாலு
திசசுத்தி கெந்திஅரைப் பலம்நிறுத்து—விசைபாக
அரிதாரங் கால்பலமும் ஆட்டியே மூன்றும்
பரிகார மாய்ப்பொடித்துப் பாச்சியே-வரிசையாய் அ

குப்பி தனிலிட்டு குமுரப் பணிரெண்டு
தப்பித மில்லாமலே தாக்கியே—யெப்படியும்
பேமி மேலே யிருக்குமே மூன்றும்
ஆரியே பார்த்தா லமிஉள்ளோர்—மீமி கூ

செக்கச் சிகப்பாகும் சேர்ந்து இருக்கும்
பக்கமுள்ள குப்பி உடைத்து—மக்கக்
கல்வ மதிலிட்டுக் கடிய திராவகத்தின்
சலமதனைச் சொல்லுகிறேன் தாக்க—உலகர்களே க0

வெடியுப்பு திராவகம்.

பொட்டணையும் பத்து பொடிசெய்து சீனம்
கட்டிளையாய் மூவெட்டு காட்டினர்—திட்டமாய்
இரத்துப் பொடித்து யினிவாலே தன்னில்
அடைத்து திராவகத்தை வாங்கியே—வடைகூ கக

அரக்கென் றகுப்பிக் கடைத்து யினிச்சொல்லுகிறேன்
பரக்கெனவே சிந்தூரம் பாச்சி—துடக்க
அரைத்து உமிநெருப்பி லாட்டி வறுத்து
தரைத்துடனே மேரு தானடைத்து—உரக்க கஉ

யெரிக்கச் சிந்தூரமாம் யின்பமாய்க் கேளு
தரிக்க யெடுத்துயினி தான்கேளு—பரிசிக்கில்
எட்டுக்குத் தங்கமொன்று வினியதொரு நாகம்
பட்டுக்கு முன்னிடைக்கிப் பாச்ச—பிட்டாகும் கங

சிந்தூரஞ் சேர்த்துச் சிறப்பாய் திராவகத்தால்
மந்தூரம் ரொம்பவிட்டு மாட்டியே—பந்தனமாய்
வறுத்துக் கடமதனில் வைத்திடவே குப்பி
யெரித்து யெட்டுசாமம் எடுக்க—பொறுத்துமே கச

யெடுக்கச் சிந்தூரமாம் இனியதொரு தங்கம்
அடுத்துரவி தன்னி லடவாகக்—குடுக்க
நூறுக்கு ஒண்ணு நுழைத்துமே பூந்தாக்கால்
தேறுமோ யெட்டனைசெப் மாத்து—பாரிலுள்ள கரு

பாருக்குள் ஞானம் பலித்துமே வாசி
தாருக்குள் யோகமெனச் சாருமே—வாருமென
வாதிகளே யிந்த வகையான சிந்தூரம்
பேதிக்க யூகி புகன்றேன்—வாதிசெய்ய

மங்களஞ்செய் வாதி மௌனமுடன் தானிருந்து
தங்க ளபிமானத்தைக் காரு—உங்கள்
மனத்தை யிறுக்கி வழிபடவே நில்லு
சினத்தொரு கோபஞ் செயவேண்டாம்—அனத்தம்
வருமென்று தானினைந்து வல்லமையைத் தள்ளி
யிருமென்று வுன்மனத்தை யிருத்தியே-குருவென்று
வபித்தியத்தை நாடி வறுமைகளும் போகும்
தபித்தியர் போலிருந்து தாக்கு—பயித்தியமாய் ௧௯

வீரச்சிந்தூரம்.

சொல்லாத பேருக்குச் சொல்லவே வேண்டாங்காண்
நல்லவே யோகம் நாடுவீர்—நல்லாய்
வீர சிந்தூரத்துள் வேதை யினிபாகம்
பார மில்லையென்றுசெய பத்தியே—காரமாய் ௧௯

தங்க மயமாகத் தாக்கவே சொல்லுகிறேன்
உங்கள்குல மீடேற ஒடியே—சிங்கம்
வீர மகராசன் வீர சயராசன்
பாரமிகு வேதைகளும் பாலிப்பேன்—காரமாய் ௨௦

சிந்தூரஞ் செய்ய செப்புகிறேன் கேளும்
பந்தூர வீரம் பலமெட்டு—சிந்து
கெந்தி பலமொன்று கிருடையுள்ள தாளகமும்
நந்திபல மோரனாயாம் நாட்டியே—சிந்தாமல் ௨௧
பொடிசெய்து குப்பிதனில் போட்டுமே கல்மூடி
யடிசெய்து மேரு வினிலடைத்து—படியாக
காடாக்னி நீ யெரித்து கட்டமுட னேகிறுத்தி
பாடாகக் குப்பி பதமாக—சோடா ௨௨

யெடுத்து உடைத்து யினியவே தான்பார்க்க
அடுத்துமே வீரம் அருணநிறம்—நடுத்து
* தீணீரை விட்டு சிறக்கவே ரொம்பப்
பாணீரும் நெருப்பில் பாகமாய்—யேனேகேள் உ௩

* தீ—நீர் = தீணீர் என நின்றது. தீநீர் - திராவகம்.

வறுத்து அடைத்து வளமாக வெண்சாமம்
எரித்து யெடுக்க யினிக்கேளு—நிறுத்து
முருக்கினுட் பூப்போல முன்னே யிருக்கும்
தருக்குமிகச் சிந்தூரம் தானே—திருத்தமாய் உ௪

ஏமமொன்று சேர்த்து யினியதொரு நாகம்
ஆமொன்று யிருக்கி அடவாக—சாமம்
அரைக்க திராவகமும் ஆட்டி வறுத்து
நிரைக்கவே மேருவினில் நிச்சயமாய்-உரைக்க உ௫

அடைத்து யெரித்து ஆன ரவிநூறில்
தடைத்துக் குடுக்கத் தங்கமாம்—படைக்க
ரசவாத மாம்பெரிய நாடியே வுண்டால்
மூலவாத மெல்லாம் முழுங்குமே—நிசவாதம் உ௬

காய சித்தியாகும் கடிதான யூகிமுனி
தாயகமாய்ச் சொன்னார் தயவாய—தோய
வாதி ரசவாதி வடிவான சிந்தூரம்
பேதிக்கச் செய்து பெலப்படுத்தி—சேதியே உ௭

உங்கள்குல மீடேற வுண்மை யிதுபாரும்
நங்கள்கை பாகமெல்லாம் நாட்டியே—திங்கள்
தங்கமிலாச் சிந்தூரம் தாக்கவே மாத்து
அங்கமிலாச் சேவுகன்போ லாகுமே—வுங்கள் உ௮

மனதுதனி லெண்ணி வகைபான சிந்தூரம்
கனகமது ஆகக் கருத்தா—யினமாக
சத்தியமாய்ச் சொன்னேன் தபவாக நம்புயினி
முத்திபெறத் தங்க முடியும்—சித்தியாம் ௨௯

ரசகற்பூரசிந்தூரம்.

பூரச் சிந்தூரம் புகலக்கேள் வாதிகளே
தாரம் அரையுந் தக்த்துப்பார்—சேரக்
கெந்தகந்தா னென்று கெடியான பூரமது
அந்தப் பலம்நா லடவாக—சிந்தாமல் ௩௰

பொடிசெய்து குப்பியிட்டுப் போட்டுப் பனிரண்டு
அடியா யெரித்து அளக்கப்—படியாக
முருக்கம்பூப் போலே முக்கியமா யிருக்கும்
தருக்கத் திராவகத்தை தாக்கியே—வறுத்து ௩௧

மேருவினி விட்டு மேன்மைபெறத் தானிருக்க
காருமெனச் சிந்தூரம் காதலாம்—பாரும்
தங்கமொன்று நாகமொன்று தாக்கி யுருக்கிவிட்டு
திங்களைப்போ லேயிருக்கும் சீக்கிரமாய்-பங்காய் ௩௨

அரைத்து அடைத்து அன்பாகத் தானெரிக்க
பரைத்த முருக்கம்பூப் பாரும்—நிரைத்த
செம்புதனில் நூறு திட்டமாகக் கொடுக்க
ஒன்பது மாத்து வுறுதியாம்—தென்பாக ௩௩

எட்டரையும் காணு மினியதாம் காயசித்தாம்
முட்டவே வாசி முடியும்—திட்டமாய்
தாரங் கெந்தியில்லா தகுந்ததோர் சிந்தூரம்
பாரமது யில்லை பலியாது—நேரமாய் ௩௪

சிந்தூர மெல்லாம் சிவப்பாக விப்படியே
சந்தூர மாய்சிவக்கும் நாடியே—பிந்தாமல்
கையகமாய்ச் செய்தால் கனகமது வுண்டாகும்
பையபவே நிர்ணயமாய்ப் பாரு—வையகத்தில் ௩௫

ஓங்குபுகழ் செல்வம் ஓதவரு முந்தனுக்கு
நாங்களென்ன செய்வமென்று நாடாதே—வாங்க
சுட்டுத் திரியாதே தொல்புவியி லுள்ளோர்கள்
மட்டுப்படா வுன்னை வைகுவார்—செட்டாக ௩௬

இருமெனவே யென்று மிருக்கக் கணிதரிடம் [வே
தருமெனவே சாதகத்தைத் தான்காட்ட—வருமென
என்றிப் படியே யியம்பினர் யூகிமுனி
அண்டிப் படித்தார் அநேகபுத்தி—நன்றி ௩௭

குடவன் செம்பு.

குடவனைத் தான்தட்டி கட்டு திராவகத்தி
லடவாக வேழுதிதிவைத்து வைத்து—திடமாக
வுருக்கச்செம் பாகும் வுண்மையாய்க் கேளு
நருக்க வுருக்கினீ நாலிலொன்று—உருக்கு ௩௮

அயச் செம்பு.

சேர்த்து வுருக்கச் சேராமை போலிருக்கும்
பார்த்துமெள்ளத் தாமெடுத்துப் பத்தியே—சாத்தி
னுறுக்கு * மதிதன்னில் னேகாமல் சேர்த்தூத
நறுக்கும் பசுமை நாடியே—யிருக்கும் ௩௯

மதி = வெள்ளி.

பொன்சேர்த்து வூது போரான பொன்னாகும்
சன்சேர்த்து வூத நலமாகும்—பின்பமாம்

பொன்னிட்டால் பொன்னாகும் போத ரசவாதி
பின்னிட்டால் ஒன்றுமில்லை பேசக்கேள்-நன்னிட்டால்

அயச்செம்புக்கு அயமுருக்க.

களங்கமெல்லா மிந்தக் கருத்தாகச் செய்தாக்கால்
உளங்கொள்ளும் வேதை யுசருமே—பளங்கமாம்
அயத்தில்வெகு வேதை ஆண்மையாய்ப் பொன்னாகும்
நயத்தி லுருக்குமென நாடுமே—பயப்படா ௪௧

கெந்தகமும் பத்து கெட்டி அயம் ஒன்று
பந்தமா அஞ்சுதரம் பாச்சியே—சொந்தமா
ஆட்டி அரைத்து அன்பாக அஞ்சுதரம்
பூட்டி யுருக்குப் புகழாக—தாட்டிகமாய் ௪௨

எடுக்கக் கறுக்கும் யினிய வெங்காரம்
அடுத்துப் பொரித்து அதிலிட்டே—தடுத்து
அரைத்து வுருக்க ஆனமணி யாகும்
தரைத்துருக்கச் சட்டைத்தான் தட்டு—உரைத்து ௪௩

துருசுக்களங்கு.

அயச்சவடு போக்கு ஆனவெள் வீரத்தால்
நயத்து வுடைக்க நல்வெட்டை—சயமா
வெட்டை ஒருபலமும் வேண்டிநீல கண்டன்
தட்டையே பத்துத்தான் சேர்த்து—நிட்டை ௪௪
அரைத்துப் புடமிடநீ ஆனதொரு திராவகத்தால்
நரைத்துமே அஞ்சுபுடம் காட்டியே—யரைத்து
யெடுக்கக் குருவாகு மின்பு ரசவாதம்
அடுத்து யெடுத்து வதின்பிறகு—தொடுத்து ௪௫

நொறுக்குவெள்ளி ஊகி நுட்பமாம் பத்து
நறுக்குரவி ஒன்று நாட்டியே—யெடுக்க
யேழாகு மாத்து யினியதொரு சிந்தூரம்
பாழாகப் போகாமல் பத்தியே—தாளாக ௪௬

பத்திபே செய்து பதிவா யிருந்தாக்கால்
முத்தியது மாத்து முதன்மையாம்—சித்தர்களா
யிருக்க ரசவாத மின்ப சுகமாக
பருக்கபிருக்கப் பதம் பாரு—பொருக்க ௪௭

பேதிமாத்திரை.

பேதிக்கித் தானுரைக்க ப்ரபலமாய்ச் சொல்லுகிறேன்
ஆதியாய் நேர்வாளம் அன்பதுதான்—சேதி
யெடுத்துக் கருக்கி யின்பமாய்த் தான்கொட்டி
அடுத்துயின்னம் வாளம் அதிற்பாதி—தடுத்து ௪௮

பச்சையாப்க் கொட்டி பதிவா யவாவாசி
யிச்சையாய்ப் பச்சை யிளங்கருக்காய்—நிச்சயமாய்
* வேர்க்கொம்பு ஒன்று விருப்பமாய்த் திப்பிலியும்
ஆர்க்க மிளகும் அடவாக—யேற்க ௪௯

வேர்க்கொம்பு = சுக்கு

யிந்துப்பு ஒன்று யின்பமாய் ரோகணியும்
சிந்தனையாய் கடுக்காய் செயமாக—பந்தனமாய்
வகைக்கி ஒன்றுசேர்த்து வலுவாய்க் கலுவமதில்
துகைபார்த் திடைசமனாய் சேர்வான்-வகையாகும் ௫௦

நிம்பப் பழச்சாத்தில் நேரா யரைத்துளடு
நம்பா யிலந்தைவிரை நாட்டியே—பின்பமாய்
வென்னீரிற் கொண்டால் விருப்பமுள்ள ஈளசுரம்
தன்னிலே யோடித் தவிக்கும்—சொன்னேன் ௫௧

அகத்தியரும் பச்சை அடைவாகத் தான்மனைக்க
தகத்துடனே வயித்தியர்கள் தான்கேட்டு—தகையாய்
துருசதுதான் பச்சை துகையா யனைத்தோரும்
பருத்துதான் கேட்டு பதைத்தோம்—உருசை ௫௨

பச்சையிது பச்சை பகையாகப் பின்னுண்டை
நிச்சயமாய்ச் செத்து நினைவா —லெ சை
குடுக்கவே வாங்கி குடுரமாய்த் தான்பண்ணி
அடுக்கவே பாகம் ,லிங்தோரும்—நடுக்க ௫௩

செப்யாது செய்து சி குத் திரியாமல்
பய்பவே பச்சையதை பாகமாய்—செய்து
வயித்தியத்தைப் பார்த்து வகையாகச் சிவனரும்
நயத்துடனே பேசி நலமாக்கு—பயத்தில் ௫௪

லிங்கசிந்தூரம்.

லிங்க சிந்தூரம் நிலவரமாய்ச் சொல்லுகிறேன்
அங்கமது வன்னிரசம் ஆறு—தங்கமாம்
உப்பி லெரித்து வுபாயமாய்த் தானெடுக்க
தப்பிதமில்லாம லப்பூ தானைக்கும். இப்புவியில் ௫௫

நாலுக்கு ஒன்று நாட்டியே கெந்தகமும்
காலுக்குத் தாளகமும் காட்டியே—சேலாப் [கும்
அரைத்துயெரி குப்பியினில் ஆட்சியாய்த் தான்சிவக்
பரைத்து யெடுத்து பலிதம்பார்—நிரைத்து ௫௬

திராவகத்தை ஊத்து தப்பாமல் ரொம்ப
பராமுகமாய் வறுத்துப் பாகமாய்—நுராபோகம்
குப்பிபிட்டுக் காய்ச்சிக் குருரமாய்த் தானெரிக்க
தப்பிதமில் லாமலெடு தாட்டிகமா—யிப்புவியில் ௫௭

பத்துக்கு ஒன்று பாண்மையாய்த் தங்கம்
சித்துக்கு நாகம் சிறப்பாக—முத்தி
சேத்துருக்க பிட்டு செயமான சிந்தூரம்
பாத்துமெள்ளக் கூட்டு பதமாக—சேத்து ருஅ

அரைத்து வறுத்துயெரி ஆமெனவே சிந்தூரம்
புரைத்து ரவியினிலே புக்கியே—நிறுத்து
தூத்துக்கு ஒன்று நேரான தங்கமாம்
பாத்தயிது சத்தியமாய்ப் பண்ணு—நேத்தியாம் ருகூ

வீரரசசிந்தூரம்.

லிங்கரசம் போல நேரான தங்கமில்லை
துங்கமாம் வீரரசம் சொல்லக்கேள்—உங்கள்
ரசவாதம் செய்து நல்லாக ஞானம்
பிசகு வாராமலே பெற்றுமே—நிசவாதம் கூ0

வீரரசம் பண்ணி விரும்பிபலம் எட்டு
தாரமதி லரையும் தாக்கி—பாரரக
கெந்திபலம் ஒன்று கேட்டு நிறுத்து
அந்தி பகல்பொழுது ஆட்டியே—முந்தி கூக

குப்பிதனி லிட்டுக் குமுற பெரித்திடவே
தப்பியே யெரிக்கத் தான்சிவக்கும்—இப்புவியில்
திராவகத்தை விட்டு தப்பாமலே வறுத்து
பராமுகமாய்ப் பாராமல் பக்குவமாய்—வராமுகமாய்

எரித்து யெடுக்க யினிய சிவப்பாகும்
அரித்துமே பத்து அன்பாக—நிறுத்து
தங்கமொன்று நாகமொன்று தப்பாமல் சேர்த்து
திங்களைப்போ லுருகிச் சேர்த்துமே—தங்காமல் கூரு

அணைத்து யெரிக்க அன்பாய் மூருக்கினுடன்
பணைத்து சிந்தூரம் பாகம்—நிணைத்து
செம்புதனில் நூறு திட்டமாகக் கொடுக்க
நம்புபினி தங்கமாம் நாட்டியே—தெம்பு ௬௪
எடுத்துச் சிலவழித்து யினியதோர் ஞானம்
அடுத்துமே பார்த்து அன்பாக—தொடுத்து
ஞானமிகப் பார்க்க நல்கினேம் கேளும்
யேனமிகும் பாகமாய் யேற்று—மோனமிகும் ௬௫

பத்தியாய்ப் பாரு பரம னுரையாகும்
முத்தியாம் பாரு முழுமுதலாம்—சித்தியாம்
என்றிப் படிதான் யியம்பினார் யூகிமுனி
அன்றிப் படிதான் அநேகமாம்—நன்றி ௬௬

தருஞ்செல்வம் வாதம் தடையறவே யில்லை
வருஞ்செல்வம் யோகம் விளையும்—பெருஞ்செல்வம்
ஆனதொரு பாகம் அடவாகத் தான்பார்க்க
ஞான மிகுந்து நலமதாம்—மௌனமாம் ௬௭

வீரநூஞ் சொன்னேன் விரும்பி ரசஞ்சொன்னேன்
பாரமில்லை சிந்தூரம் பத்தினேன்—காரமாய்
சுத்த ரசவர்த்தி சுகமாகத் தானமிவான்
பத்த வெடுதங்கம் பாக்கியமாம்—நித்தம் ௬௮

கெந்தகத்தின் தன்பெருமை கேட்டபேர்க் கெல்லாம்
பந்தன மாகும் பகரா—சிந்தையா
வாதசுத்தி பண்ண வகையறியாமல் தானும்
சேதிமிக்க கேட்டுத் திரிகுவார்—பாதி ௬௯
பொன்னே யெனக்குவரும் பேராசையாய்ச் சொல்லி
யென்னேர மேய்க்க யெழுந்திருந்து—முன்னே

நன்னயமாய்ப் பேசி நாடித்திரிவார்கள்
பின்னே பிறளி பேசுவார்—நன்னயமாய் எ0

வாத கரிச்சுட்டு வகையாக யிப்படியே
சோதிக்கக் கேட்டுத் திரிவோரும்—மாதர்தங்கள்
நாதத்தை வாங்கி நன்மையாய் பொன்னுக்க
பேதமையாய்க் கேட்டுப் பிதத்தியே—சாதமாய் எக

வாதம் சொலவேணு மருவி யவன்பின்னே
சேதப் படப்பொன் சிலவழித்து—பேதமாய்
நாகத்தைக் கட்டி நலமான செம்புதனில்
பேதப்படக் கொடுத்துப பொன்னைப்போ—லாக எஉ

யெடுத்துத் திரிந்து பேங்கி முகம்வாடி
அடுத்துக் கடையி லலைவோரும்—படுத்து
கிடைக்கயிலே யோசனைகள் கேட்டு யெழுந்திருந்து
படுக்கையிலே பூஜைபண்ணப் பார்ப்போரும் நடுக்கம்

சாராயங் கள்குடித்து சாப்பாடு நின்றுப்
பாராயண வாதம் பகர்வோரும்—நீரா
குகையிலே வைத்துக் குனிந்தூதி வாதப்
புகையிலே கண்கெட்டுப் போவோரும்-நகையாய் எச

கெந்தியைத்தான் காணமல் கேடுகெட்ட வாதி
அந்திபகலாய்த் திரிந் தலைவோரும்—சிந்தனையாய்
சவுக்காரங் கெட்டு சவுங்கலாக வலைந்து
நவக்காரம் எண்ணையிட்டு நாடியே—தவக்கமாய் எரு

கெந்திசுத்தி.

நல்லாகக் கெந்திசுத்தி நாட்டியே சொல்லுகிறேன்
பல்லாப் பலமும் பதினெட்டு—சல்லாபம்

மஞ்சள் தபிலம் வாங்கியே விட்டரைத்து
தஞ்சமுடனே பொடித்து சாத்தக்கேள்—மிஞ்சாமல்

பன்னடையைச் சுத்திமேல் பதியவே கட்டி
நன்னயமாய்ச் சட்டியிடு நற்கெந்தி—சின்ன

சட்டியனைவாசி தானுடைத்து மேல்கழுத்து
வட்டியது சட்டிமேல் வைத்திடுநீ—திட்டி எஎ

மேலே புடம்வைக்க விருப்பமுள்ள கெந்தகமும்
காலே மணிபிரங்கும் காரமாய்—பால்விட்டு

அடிச்சட்டி தனிலிரங்கும் ஆன மணியெடுநீ
பொடித்து யெடுத்துப் பிறகு—தடுத்து எஅ

கெந்தகத்தைலம்.

அரைத்துமே அஞ்சு அடைவாகத் தானிருக்க
பரைத்தநல்ல சுத்தி பண்பாகும்—திரைத்து

யெடுத்து அரைத்து யினியமஞ்சள் தபிலத்தில்
அடுத்துக் குழப்பி அரைச்சூடாய்— எகூ

தபிலமாம் கெந்தி தனிரத்த மில்லாமல்
அபிலமாந் தங்க மதனைப்போ—பயிலாக

ஆடுஞ் சரக்கு அறுபதுநால் பாழான
கூடுஞ் சரக்கு குணமாக—நாடும் அ0

கட்டும் உருகிவிடும் கரியில்நின்று வேதைத்
திட்டமுட னகும் திடமாக—முட்டெனவே

தங்கமாம் வேதை தாய்சொல்ல யான்கண்டேன்
பங்கயில் லாமலே பாரு—உங்கள் அக

தவப்பேரு மாகும் தனியான வாதம்
கவப்பேரு மானகடல் துலக்கம்—உவப்பாய்

தருநுமே பொன்னுந் தவமாங் கருவாகும்
பருகுமே பாக்பம் பலிக்கும்—நிருபாதம் அ௨

இல்லாமல் போனல் நேர க வாராது
எல்லாம் பணம்வேணும் இன்பமாய்—நல்லா

யிருக்கவல்லோ சொன்னேன் யேழமதி போகாமல்
முருக்கநிறஞ் சிந்தூர மெத்த—திருத்தமாய் அ௩

மாத்தாகுந் தங்கம் வல்லமைய் மாகும்
சேத்தாக்கால் வாதம் செயம குும்—ஏந்த

நவலோக மெல்லாம் நல்லாகச் சிந்தூரம்
தவமாய்க் கிடைக்கும் தப்பாமல்—நலமாக அ௪

செம்பு அயம் காரீயம் சேர்த்து கரிசெய்து செம்பெடுக்க.

ஒன்பது லோகமெல்லாம் ஒக்கவே சிந்தூரம்
தென்பாகும் வேதை செயமாக—யின்பமாய்

சொல்லக்கேள் வாதி சேர்க்கவே செம்புஅயம்
நல்லாக ஓரிடையாய் நாடியே—வெல்ல அ௫

காரியொன்று கூட்டி கனக்கவே மூன்றும்
நாரியிடை பாகமா யுருக்கி—பாரி

கெந்தி யிடைஒன்று கிராசம் கொடுக்கநலம்
வந்தியாய்த் தாலெடுத்து வைத்துமே—முந்தி அ௬

தாளகத்தை ஒண்ணு நாக்கவரை கிராவகத்தால்
பாளக மில்லாமலே பத்தியமா—யேழு

அரைத்துப் புடமடுநீ அன்பாகச் சிந்தூரம்
வரைத்து சிவகக்கமட்டும் மாட்டியே—கிரைத்து அ௭

எடுத்து நிறுத்து யின்பமா யோரிடைக்கி
அடுத்த துரிசுபத்து ஆட்டியே—தடுத்து
அரைக்கப் புகைநீரால் ஆட்டியே வில்லை
பரைத்துப் புடம்நாட்ட பக்குவமாம்—பருக்க அஅ

மாத்தேழு மாகும் மயங்கித் திரியாமல்
நாத்திசையும் போற்றுவார் நாட்டியே—பார்த்து
பின்னியெடு மின்னும் பிரளாதே வேலைக்கி
தன்னிலே ஒட்டுந் தயவாகும்—நன்னயமாம் அசு

குற்றமில்லாப் பொன்னாகும் குறைவற்ற செல்வம்
அத்துடனே சேந்து அருள்பெருகும்—சத்தியமாம்
என்றிப்படி தான் யியம்பினர் சிந்தூரம்
அன்றிப் படித்தார் அநேகமுமாய்—நன்றி கூ0

தெரியாத வாதிகளே தேசத் தலையாமல்
பரியாச மில்லாமல் பாரு—துரிபமாய்
யெத்தனைமுன் சொன்னேன் யேராளச் செம்பெடுக்க
அத்துடனே யிரும்பு அந்திடைக்கி—நத்தி கூக

உருக்கி யிடைதாக்கு வுண்மையாக் கெந்தகமும்
நருக்க வுடைத்து நலமாகப்—பெருக்க [தால்
தாளகத்தை நாலிலொண்ணு தாக்கியரைத் திராவகத்
யேழைமதி போகாம லிடுவில்லை—தாளக கூஉ

சிவக்கப் புடம்வைத்து சிவக்காதே போனால்
தவக்கமில் லாமல் புடம் தாக்கியே—உவக்க
சிந்தூர மாகும் சேருமே தான்துருசு
சிந்தையுடன் பத்தச் சிறப்பாக—பந்தியாய் கூங

நேக அரைத்து நினவாக வில்லைகட்டி
தாகமுடன் திராவகத்தால் தாக்கியே—பாகமாய்

தீயப் புடம்ரெண்டு செப்பமாய்ப் போட்டெடுக்க
தாபக மாய்குருவு தானகும்—உபாய கூச

நொறுக்கு மதிதன்னில் நுகரவே பத்து
நறுக்கென்று தான்கொடுக்க நாடவே—பெருக்கமா

யெட்டடையுங் காணும் இன்பமுள்ள பொன்னாகும்
தட்டவே தங்கம் தானகும்—பட்டடையிற் கூரு

பித்தளையென் றுலெளிதாய் பேதமையாம் வாதி
நத்தியே சொல்லி நகைப்பான்—வித்தைபாய்

பொன்னுக்கு ஆதி பேர்பெரிய பித்தளையும்
தன்னிலயம் நாடத் தாக்குமே—நன்னயமாய் கூசு

பித்தளைச் செம்பு.

சருகுதான் பித்தளையைச் சாத்தக்கேள் சாத்த
உருகுமே யுருக்கி யொருபலந்தான்—வருக

உருக்கித் தகடடித்து வுண்மை மருந்தைத்
திருக்கமுடன் சொல்லுகிறேன் சீனம்—நறுக்க கூஎ

கரியில்வைத்து மேலூதக் காரமாகச் சிவந்து
பரியாகச் சுன்னமாம் பாரு—திருமாது

வீரம் இடைசேர்க்க மேவுஞ் சிவப்பாகும்
ஆரமுடன் பித்தளையி னதின்மேலே—பாரம் கூஅ

பூசியே காயவைத்து போடப் புடம்நாலு
ஆகிபது செம்பு அலரிபோல்—பாசம்

இருக்குமந்தச் செம்பை யியன்ற நொறுக்குவெள்ளி
தருக்குமிடை டநாலிலொண்ணு சாத்து—உருக்க கூகூ

பசுமைபாம் வெள்ளி பதியவே பூதி
தசுமையாம் நாலிலொண்ணு தங்கஞ்சேர்-கசுமையாம்

சேத்துாத மாத்துச் சிறப்பாக யேழையும்
பாத்துாத வாதம் பலிக்குமே—நேத்து க௦௦
நேர்சொன்ன தான்பேச்சு செப்பமாய் மாத்து
ஆரவறிந்து அதைப் பாரு—நேராய்
உங்கள்குல மீடேறும் உங்கள்தவ மேபலிக்கும்
துங்க ரசவாதம் சொலிக்குமே—அங்கம் க௦க
வாய்ப்பேச்சுச் சொன்னல் வழக்காகும் லோகம்
காப்பேச்சு தானிருக்குங் காரணமாம்—மேய்ப்பாக
திரியாதே பித்தலையச் சீர்தூக்கிப் பாரு
அறியாயோ தங்கம் அடைவாகும்—நரியாக க௦௨
விடத்தைத் தான்தின்று வீண்மதங்கள் பேசாதே
நடத்தை யறிந்து நலம்பெறுநீ—திடமாக
வாய்க்கும் எளிதாய் வகையா யறிந்திடுநீ
தாய்க்கு முலைப்பாலு தாழ்ச்சியோ—பேயாய்த் க௦௩
திரிந்து அலையாதே திறமாய்க் குடவனைத்தான்
அறிந்து பெடுத்து அலுவல்பார்—பரிந்து
செல்வம் நிலையாது தேறரசவாதம்
மல்குமே பென்னேரம் வந்திடுமே—புல்க க௦௪
பணத்தைச் சிலவழித்தால் பாக்கியங்கள் போகுமவ்
வினத்தின் ரசவாதம் ஈபமே—கனத்த
சிதம்பரத்தைப் பாரு தொல்நடனம் தோனும்
அதம்பரத்தால் கெட்டு அலையாதே—இதமாய் க௦ரு
ஆசத் திரிந்து அலைந்து திரியாதே
பாடி ரசவாதம் பாரு—தேசு
பெருநூலிற் சொன்ன பேதத்தை யிப்போ
தருமநூ லுலாவிலே சாத்தினேன்—மரும க௦௬

பித்தளைச்செம்போடு அயம்சேர்க்க.

பித்தளையின் செம்புசொன்னேன் பேதமறப் பாரு
அத்துடனே சேரு அயமொன்று—யெட்டுக்
கொன்றிட் டுருக்கக் கிருபைபறத் தானுருகும்
அன்றிப்படியே அடி தகடாய்—நன்றாய் க0எ

அடித்துத் தகடாக்கி ஆனதொரு வெங்காரம்
பொடித்துப் பொரிக்கப் புகல்சுன்னம்—படித்து
கடுஞ்சுன்னமாகும் கருத்தா பொருபலந்தான்
எடுஞ்சுன்னம் சினம் இருபலமும்—கடுஞ்சுன்னம்

சேத்துத் திராவகத்தால் செப்பஅரைத்துத் தகட்டின்
ஆர்த்து யிடைமேலே அதிற்கட்டு—சேர்த்து
புடமிட் டெடுக்க போராப்க் கறுப்பாகும்
தடமிட்டு அஞ்சுபுடம் தாக்க—யிடம்விட்டு க0சு

போருமயம் செம்பாகும் போக்கு அலரிநிறம்
ஆகுநிறம் பூப்போ லதில்பாரு—ஆகு
மட்டும் புடம்போட மகாசிவப்புத் தானகும்
செட்டு அயச்செம்பு சேர—பட்டு கக0

நோறுக்கு வெள்ளிதன்னில் நேராக வூதி
தருக்கும் எட்டுக்கொன்று தாக்க—உருக்கு
யேழாகு மாத்து யினியதொரு வுப்புக்கும்
பாழாகப் போகா பதமாகும்—வேளாகும் ககக

சிவன்தானுஞ் சொன்னர் சித்தர்மறைத்தார் நூலின்
கவன்தானும் நூலில் கருத்தா—இவன்தானும்
சொல்லொண்ணு வேதை துடிப்பாம் அயம்தன்னில்
நல்லொண்ணு வேதை நலமாகும்—யெல்லாம் கசஉ

வருகுமே யென்று வருக வுலாவை
தருகுமே யென்று தாட்டிகமாய்—உருவா
யெடுத்துப் பெருநூலில் இன்பமாகத் திரட்டி
அடுதத கைபாகம் அறைந்தேன்—படுத்தி ௧௧௩

யெல்லாரும் பார்த்து யினிதான கைபாகம்
நல்லாப்ப் பொருக்கி நயமாக—சொல்ல
கைபாகந் தப்பில் கனிவான பொன்னுமில்லை
கைபாகந் தான்வரிசை நாடியே—பாகம் ௧௧௪

செய்து முடித்தால் சிரான தங்கமாம்
வயதுகேட்டுத் திரிந்தால் வகையேது—பைய
பழுத்தகனி தின்றால் பரிவா யினிக்கும்
தழுத்த அடிபட்டகனி தானினிக்கா—வழுத்த ௧௧௫

பெருநூல் வினையமெலாம் பேராகச் சொல்வேன்
தருமநூ லுலாவிலே சாத்தினேன்—திருநூல்
கங்கை மதியணிந்தார் கடாக்ஷித்தார் அந்நேரம் [ம்
துங்கமதா யீஸ்வரிக்குச் சொல்லிவிட்டார்-யெங்காளு

களங்குகளுக்குச்சேர்க்கத் தாளகக்கட்டு.

வாதிகளே கேளும் வகையான தாளகத்தை
யோதியே திராவகத்தி லொண்ணுக—நீதியாய்
அரைக்கரொம்ப விட்டு ஆட்டி வறுத்துவில்லை
தரைக்க சுக்கானீர் தனிலிடமாய்—நிரைக்க ௧௧௭

புதைத்து பெரிநாலு போக்கோடே சாமம்
வதைத்து எடுத்து வகையுடனே—சிதைத்து
அஞ்சுதிரந் தானரைத்து ஆட்டி வறுத்துபெடு
தஞ்சமுடன் தான்சிவக்கும் தாக்கியே—கெஞ்சி ௧௧௮

செம்பி னரப்பொடியில் சேர்த்து அரைத்துடனே
வம்பாக மண்புடங்கள் வைத்துமே—தெம்பாக
களங்கு வருமிடங்கள் காதலாய் நீசேரு
துளங்கவுரை யாணியாம் சோதி—புளங்காணும் ௧௧௯

கெந்திசுத்தி.

காரிய செம்புசொன்னேன் காதலாய் கெந்தகத்தை
பாரியாய் திராவகத்தை பாச்சியே—நீதியாய்
சேர்த்து அரைத்து செயமாயுருக்கியெடு
பார்த்துரச பதங்கத்தில் பாச்சியே-கேந்தியாய் ௧௨0

காரீயக்சரி.

ஈயத்தில் கிராசமிடு பேந்திழையே பொன்னாகும்
பாயமாய்த் தான்வெள்ளி பாச்சிடுநீ—நாயமாய்
தங்க மயமாகும் தாழ்ச்சியில் லாதிருக்கும்
உங்கள்குல மீடேறும் யோகமாம்—துங்க ௧௨௧

கல்லுப்புக்கட்டு.

கல்லுப்பி லேகசிவு காதலாய்ப் போக
நல்லுத்த வாருதியில் நாதங்காண்—கல்லும்
எடுத்துகட்டி யாய்நிறுத்து யேத்தமாக் கேளு
அடுத்துசுக்கான்அஞ்சுபடி தானளந்து—படுத்தி ௧௨௨

சட்டி யரைவாசி சதிருடனே தானிட்டு
தட்டி கல்லுப்பிட்டுச் சதிராக—வட்டி
அதன்பேரில் நீரிட்டு ஆனதொரு மேல்மூடி
சதியான மண்சீலை தாக்கியே—பதிவாக ௧௨௩

பெரிக்கக் கமலம் இருசாம மாகமட்டும்
அரித்தகல்லு நீர்தா னதிலே—தரிக்கா

பேகியே போகும் இனிவெள்ளை யாகும்
ஆகியே கட்டு வகையாகும்—ீயாகி கஉச

தெரிப்படங்குந் தானுருகும் செயமாகும் வேதை
பரியாக நல்லதாம் பாரு—வரியாய்
துரிசைகொன்ருல் வாதம் துப்பரவா யாகும்
பரியாய் ரசங்கட்டும் பாரு—பொரிபோல் கஉரு

ரசநீறிப் போகும் நன்மையாம் வாதம்
நிசமாகும் காய நிறுத்து—வசமாகும்
சினமது சுன்னம் செயமாக ஆச்சுதென்ருல்
ஆன நவாசாரம் அடங்கும்—மானமாம் கஉசு

பள்ளிலே சொன்ன பதிவான பொட்டணையை
வள்ளலாய் வைத்து வகைபாரு—தெள்ளியதோர்
சரக்கைத்தான் கட்டும் சாதகமாய்ப் பாரு
பரைக்கிச் சதிர்பூசை பண்ணு—உரைக்க கஉஎ

அப்ரேகம் வீரமொடு ஆட்டி அரைத்துவைக்க
தப்பா மலயா தாக்க—விப்புவிபில்
சுருக்குபோட் டுச்சரக்கை சுகமாக மேல்கவசம்
நருக்கக் கவசமிடு நாட்டி—பெருக்க கஉஅ

யெரித்து எடுத்துக்களங்கில் இன்பமாய்ச் சேரு
வரித்திப் படிதங்க மாகும்—பரித்து
முத்துகாய்ச் சாப்போலே பொன்மயமாய்க் காணும்
பார்த்து யெடுத்திடவே பாக்கியமாய்—நேத்தி கஉகூ

சங்கத்திராவகம்.

சங்கந் திராவகத்தைத் தான் சொல்லக்கேளும்
பங்க மில்லாமல்நீ பாரு—இங்கிதமாய்

வெடியுப்புப் பத்து விருப்பமாய்ச் சீனம்
படியான பதினஞ்சு பத்து—வடியாக ௧௬௦

இந்துப்பு வொன்று மியல்பான நீலகண்டன்
சிந்தியா யொன்று சிறப்பாக—பந்தியாய்
அன்னமென் பேதி அதிலொண்ணு நீபோடு
சொன்னதொரு பூநீறு சூட்டு—நன்னயமாம் ௧௬௧

கூட்டி யிடித்து குமுறவே வாலேயிட்டு
காட்டி வடித்துக் கருத்தாக—நாட்டி
முன்னீனாத் தள்ளு மொழியவே பின்னீனா
தன்னிலே வாங்கு தவறுதே—நன்னயமாம் ௧௬௨

வடித்து யெடுத்து வகையாய் அரக்கேனம்
துடிக்க அடைத்துவைக்கச் சொல்லுவேன்—படியாக
வன்னிகர்ப்ப மீதில் வாத்தனைக்கக் கேளும்
தன்னில்ரசம் கக்கும் தாட்டிகமாய்—சென்னி ௧௬௩

லிங்கரசபதங்கம்.

யெடுத்து உப்புதனி விதமாக யிட்டு
அடுத்து யெரித்திடவே ஆகும்—தடுத்து
பஸ்பமாம் லிங்கம் பதிவாக நாலிலொண்ணு
அற்பமாய்த் தங்கமதில் நாகம்—சொற்பமாய் ௧௬௪

சேர்த்து வுருக்க செயமாகப் பிட்டாகும்
பார்த்து வுடைத்து முன்பஸ்பத்தில்—சேர்த்து
அரைத்துத் திராவகத்தால் ஆட்டி யெடுத்து
பரைத்துடனே காசிப் பதிவாக—வரைத்து ௧௬௫

அடைத்துப் பனிரொண்டு அடைவாகத் தானெரிநீ
புடைத்து வெள்ளையாகும் பதிவாக—துடைத்து

யெடுத்து ரவிதன்னி லிபவே நூறு
படித் தங்கமாகும் பரிசோர்—அடுத்து கருசு

நம்பினல் பொன்னுண்டு நாம்பாதே போனல்
தம்பி வெகுபாட்டால் தவிப்பான்—எம்பிரான்
போலாகுந் தின்டால் ஏத்துவா ருலகம்
பாலாகும் பாக்கியங்கள் பாரு—நாலாய் கரு எ

கட்டுவகை திராவகம்.

கட்டுவகை சொல்லுவேன் காரியமாய்க் கேளு
பட்டுபோல் கட்டியே பாலிக்கும்—திட்டமாய்
திராகவத்தைத் தானிரக்கித் தாக்கவே காற்படிதான்
பராமுகமாய்ப் பீங்கானில் பாவித்து—நராபோகம்

ஊத்தி யெடுத்து வூட்டவே சொல்வேன்
நேத்தியாய்த் தங்கமொன்று நேராக—பார்த்து
நாகமொன்று சேர்த்து நல்லா யுருக்கிப்
பாகமாய்ப் பிட்டாகும் பாரு—விவேகமாய் கருகூ

உடைத்துத் திராவகத்தி லூட்டியே போட்டு
நடைத்துச் சரக்கெல்லாம் நாட்ட—படைக்கும்
சுருக்கிடவே கட்டும் துய்ய மணியாகும்
நருக்கிடவே வுட்பழுக்கும் நாடி—பெருக்க கசO

கட்டாகுங் கட்டில் கனக மயமாகும்
செட்டாகுஞ் செல்வம் சிவமாகும்—திட்டமாய்
பெருநூலில் தாறெளித்தேன் பேர் பெரியகட்டை
தருநூலில் உலாவிலே சாத்தினேன்—வருநூல் கரக

லோகங்கள் சேர்ந்தா லொருநொடியில் கட்டாகும்
பாகமாம் பொன்னகும் பாரு—லேகியமாம்

கட்டுவந்த தன்னிடத்தில் காதல் திராவகத்தால்
விட்டும் பரிசோர்ந்தால் மேன்மையாம்—தட்டு ௧௪௨

சாரக்கட்டு.

கெட்டுமே போகாமல் கேட்டு ஒருபொருளை
பட்டுமே செய்து பதம்பாரு—திட்டமாய்
சாரத்தைக் கட்ட சாத்தக்கேள் மாந்தருக்கு
பாரமில்லை யிப்போது பாரு—நேராய் ௧௪௩

எருக்கம்பால் தன்னி லியல்பாய்த் துவைத்துரவி
நருக்கவே சுன்னகடு நாட்டியே—யெரித்து
பார்க்கவே யஞ்சுதிரம் பண்ணியெடுத் தாயானல்
யேர்க்கமுழுக் கட்டாகும் இன்பமாய்—கார்க்கும் ௧௪௪

தந்தம்போ லக்காணும் தயவாகச் சீனத்தை
பந்தமாய் ஆதியே பாரு—விந்தமாய்
சுன்ன மபமாகும் சுருக்காகச் சாரமேல்
நன்னயமாய்க் கட்டியே நாட்—சொன்னபடி ௧௪௫

சேவற் புடமிட்டு செப்பமாய்த் தானெடுக்க
ஆவலாய் நீரும் அதிற்கேளு—பாவ
நாகத்தைச் சுத்திபண்ணி நாடி முகந்தனிலே
பாகமாய்ப் போடப் பதைத்து—யேகமாய் ௧௪௬

கட்டும் புகைபடங்கும் காணவே சிறலறும்
பட்டுமே தங்கமிடை பக்குவமாய்—விட்டு
வுருக்கி யெடுத்து வுண்மையாய்க் கேளு
பருக்காவி தன்னிலே பாச்ச—நறுக்க ௧௪௭

நூறுக்கு ஒன்றிடவே நன்மையா யெட்டாயாம்
பாருக்கு வாதம் பலிக்கும்—சேரு

வித்திலே நின்று விதமாகத் தான்முளைக்கும்
பத்தியே தங்கம் பதமாகும்—சித்தாக கசஅ
உழுது பரம்படித்தா லுண்மையாய்த் தான்விளையும்
அழுது முகந்துடைக்க லாகாது—பழுதில்லா
பெத்திலே செய்தா விதமாக ஒன்றுமில்லை
சத்தியமாய்ச் சொன்னேன் சலதிபார்—நித்தியமாய்
என்றிப் படிதான் இயம்பினர் பூகிமுனி
அன்றிப் படித்தார் அநேகமாய்—சென்று
வருந்தப் படாமல் வாய்ப்பேச்சு சொன்னால்
திருத்தப்படா வாதம் சிவக்காது—பொருத்தம் கூ0
இல்லாத பேர்க்கு மியல்பாகத் தான்வருமே
யெல்லாஞ் சிவமயமே யாகும்—பொல்லா
பணத்தைப் பணம்வுண்டு பண்ணிவிக்கும் வாதம்
சனத்தில் ரசங்கட்டிச் சிவக்கும்—கனத்த கூக

கல்லுப்புதிராவகம்.

பொன்சேர்ந்த மட்டமெல்லாம் போக்கோடே தான்
தன்சேர்த்ததிராவகத்தைதாக்க—மின்வந்த[பழுக்கும்
தேதினு லென்முல் இயல்பாய் வெடியுடனே
ஆகிஞல் சினம் அதில்பாதி—நீதியாய் கூஉ
கறியுப்பு நாலிலொன்று காரணமாய்த் தானிடித்து
வழியாய் கடமதினில் வைத்து—வரியாக
வாலைசட்டி மேல்மூடி வகைபாய்த் தானெரிக்க
ஆலேபோல் நீர்க ளதில்வந்து—ஞாலமாய் கூ௩

பொன்னுக்குமாத்துயர.

பெருக்குமே நீர்கள் பேசாமல் குப்பியிடு
தருக்குமே பொன்னுருந் தாக்கவே—பருக்க

மட்டத்தை யிட்டு வகையாய்க் கொதிப்பிடவே
திட்டமாம் பொன்தான் செயமாகும்—முட்ட கருச

எடுத்துமே வித்து யியல்பாக ஞானம்
அடுத்துமே பாரு அதிகமாம்—தொடுத்த
வாதிக்கு நல்ல வரிசைகா ணிந்தமுறை
பாதி மதிபணிந்தோர் பாகம்—சேதி கருரு

நீத்தினசங்கத்திராவகம்.

நீத்தினத்துக் கெல்லாம் நேர்மைகா ணிப்போ [ன்
பார்த்து சங்கத் திராவகத்தைப் பாவிக்க—சாத்துகிறே
வெடியுப்பு ஆறு மேன்மையா யிந்து
அடிப்பாய்ப் பலமூணு ஆக்கி—யடியா கருசு

சாரம்ரொண்டு தானெடுத்து சாத்தியதோர் நல்ல
ஈரமில்லா அன்னம் பலம்ஒன்று—நேராக
துரிசியது காலும் துடியாப் படிகாரம்
அரிசியது முப்பதாம் ஆக்கி—நரிசியாய் கருஎ

பூநீறு காலும் புகல்பெறவே தானெடுத்து
ஆநீரு யெல்லாமும் ஆட்டி—தானிரு
கிடத்திலரை வாசியடைக் கீர்த்தியாய்த் தானடைத்து
தடத்தி லெரிக்கத் திராவகமாம்—படத்தில் கருஅ

எடுத்து யெரிக்க யியல்பான நீராகும்
அரித்துயின்னம் போக்கு அறைகுவென்—சரித்து
அரப்பொடியி லிட்டுரவி ஆதரவாய் வைக்க
பரபரொன்று நீறியிடும் பாங்காய்—நாவாக கருகூ

உபரசங்க ளெல்லாம் ஓகோகோநீறும்
தபனமாய்ச் செம்பு தானீறும்—நபமாகும்

வெள்ளியது நீறும் விருப்பமாய் நாகமெல்லாம்
தள்ளியே தானீறும் தாகமாய்—வள்ளல் கசுO
தாளகமும் கெந்தகமும் தாக்கிச் சுருக்கிடவே
பாளகமாய்ப் பொன்னாகும் பாவிக்க—வாளகமாய்
உப்புமுத லெல்லாம் ஓடாது நீறிவிடும்
அப்புவினல் வந்த அருளதுதான்—இப்புவியில் கசுக
நவகோடி சித்தர் நாடி யிதைவைத்து
பவமாகப் பொன்மயமாம் பாவித்தார்—தவமாம்
கருத்துவைத்தால் யோகம் கனமாகத் தான்பலிக்கும்
பெருத்துமுனி தங்கம் பிலமாக—நருக்க கசுஉ
வேதமுனி சொன்ன வித்தை யிதுபாகம்
ஆதலால் நான்கண் டறிவித்தேன்—போதமாய்
எண்ணியே சொல்லி யின்பமப மாயிருந்து
தன்னிலேவாசி தனைப் பாரு—புண்ணியமாய் கசுங
யோக மகராசன் யோககுரு நாதன்
பாகமாய்ச் செய்து பதமாக—நீதியாய்
செய்தால் ரசவாதம் செயலாகும் இப்போது
வைதா லுனக்கென்ன வந்திடுமோ—பைய கசுச
யிருந்து படித்து யின்ப மயமாக்கு
வருந்தினல் வந்து வலதாகும்—அருந்தி
கள்ளைப் போல்முழித்துக் காட்டித் திரியாதே
வள்ளலார் போற்று மருந்தை—மெள்ள கசுரு
சிந்தூரம் வைத்து சிறப்பாகத் தின்றுநயம்
வந்துமே காயம் வலுமைபார்—நந்தி
சொன்ன வுபதேசம் சொல்லுவேன் இப்போது
நன்மையா வாதிகேள் நம்பியே—பின்னை கசுசா

செய்வோமென் றெண்ணுதே தெத்திமன னிப்போ
வையவமென்று யெண்ணி வதையாதே—நைய
காரச்சசந் திரக் கருணைபெறத் தாளகத்தை
நேசமாய்ச் சொல்லுகிறேன் நீதியாய்—உபாயமாய்

தாளகசுத்தி.

தாளகத்தைக் கொண்டுவந்து தாக்கமகாக் கற்சுன்னம்
வாளகமாய் நீர்விட்டு வகையாக—மீள
அரைத்து யெடுக்க யினிதாக பைத்தறுமே
அரித்து யெடுத்து அலம்பி—சரித்து கசுஅ

வீரச்சிந்தூரம்.

வீரம்பல மெடுத்து விருப்பமுள்ள பானையதில்
சேரப் பொடித்துச் செயமாக—பார
மேல்பானை மூடி விரும்பியே தானெரிக்க
ஆப்பானை மேலேறும் ஆதியாய்—வாப்பானை கசுகூ

உயரவே யேரி வுளுக்காங் திருக்கும்
அயரவே சங்குநிறம் அன்பா—தயராதே
யெடுத்துடனே அப்பாலே யின்பமாய்த் தான்வைத்து
அடுத்து யின்னம்சேதி அரையக்கேள்—தடுத்து கஎ0

பச்சைக் கற்பூரம் பதமா யொருபலமும்
இச்சையுடன் தானிறுத்து யெடுத்து—அச்சமிலா
தாளகமும் ஒன்று தாக்கவே வீரமொன்று
பாளகமாய்த் திராவகத்தைப் பாச்சியே-நாளாக கஎக

அரைத்து ரவியில்லை ஆகவே காயவைத்து
பரைத்துக் கற்சுன்னம் பதிவாக—நிரைத்து

சட்டிதனில்பாதி தாக்கியே வில்லை வைத்து
முட்டவே கற்சுன்னம் மேல்மூடி—தட்டி ௧௭௨

யிருத்தி அமுத்தி யெரிக்க ஒருசாமம்
வருத்தமில் லாமலெடு வண்மையாய்ப்—பொருத்த
யெடுக்க வெள்ளையாகும் யினிதாப் பணவிடையும்
அடுத்துக் கொடுக்கவே அப்பால்கேள்—தடுத்து ௧௭௩

சயமீளை காசம்போம் தாக்கவே குன்மம்
நயமாகத் தான்போகும் நாடு—பயமில்லா
பீலிபிடி முயல்வலிப்பு வாங்குமே சொந்த
பலிப்பான வாயு பதறுமே—நலிப்பாகும் ௧௭௪

ஆபிரம் வாயு அலறியே யோடிவிடும்
பாபிரமா யரவுகடி பதறிப்போம்—நேயமாய்
வயித்தியர்க்கு நல்ல வகையாம் அவிழ்தங்காண்
நயத்தில் புளிதள்ளி நாடு—பயித்தியமாய் ௧௭௫

திரியாதே கேளும் சீக்கிரமாய் வைத்து
அரிதாரம் பொன்னுக்கு ஆணியிலே—பரிசேர்
தங்க மயமாகும் தாய்கொஞ்சம் சேரு
பங்கமிலாத் தங்கமாம் பாரு—இங்கிதமாய் ௧௭௬

உங்கள்குல மீடேற வுங்கள் ரசவாதம்
திங்கள்போல் வாழ்ந்து சிறப்பாகும்—மங்களமாய்
இருக்கவல்லோ சொன்னேன் ஏந்திழையார் சொன்ன
பருக்கநல்ல வேதை பகருவேன்—வருக்காய் ௧௭௭

பதிந்தேன் பெருநூலில் பாக்கியங்க ளுண்டாகும்
வதிந்தேன் இனியென்ன வாடாதே—கதிந்த
குறுக்குவகை சிந்தூரங் கோடான கோடி
நிறுக்கு வாராமலே செய்து—பெருக்க ௧௭௮

சிந்தூரஞ் செய்து செயமாகி யெங்கள்குலம்
நந்தூர மீடேற நாடியே—சந்தோடம்
மாக யிருந்து மயக்கமிலா மல்தானும்
ஆகப் பொருளெல்லாம் அடைவாக-சோகமாய் ௧௭௯

சோதித்துப் பாரு சுபமான தங்கமாம்
ஆதித்த னுள்ளளவும் ஆடுவீர்—சேதிகேள்
வேதை மிகவாக விரும்பியிதிற் சொல்லுகிறேன்
பாதி மதியணிந்த பரமனார்—நீதியாய் ௧௮0

சொன்னதொரு சிந்தூரம் தொகுப்பாயினிச்சொல்லு
நன்னயமா யிப்பொருளை நாடுவீர்-முன்னம் [கிறேன்
கைபாக மாகக் கனிவான சிந்தூரம்
மெய்யாக யிப்போ விளம்புவேன்—செய்பாகம் ௧௮௧

செய்பவே சொல்லுகிறேன் செயமாகும் யிவ்வேதை
பையவே பத்திப் பதிவாக—வையகத்தில்
பார்த்து யெடுத்தால் பாக்கியங்க ளுண்டாகும்
நேத்தி குருமுனிதான் நிசமாய்—வாத்தியே ௧௮௨

சொன்னதொரு வாக்கு சுயமான லோகத்தில்
முன்னமே சொன்ன முடிவுகாண்—நன்னயமாய்
நவலோக மெல்லாம் நாடிப் பழுக்கும்
தவமான இவ்வேதை தாக்குவீர்—அவமில்லா ௧௮௩

வேதை மிகவாகும் விரும்பியே நீபாரு
சேதம்வா ராமலிது செப்புவீர்—ஆதரவாம்
ரசத்தைவிட்டால் வர்ணம் நாடாது நாடில்
தவத்தோர் கிடைக்கும் தவமாகும்—அவத்தை ௧௮௪

படாமலே சிந்தூரம் பத்தியே பாரு
அடரொளியாம் வாதஞ் செயமாகும்—மடநெஞ்சே

யேங்கித் திரியாதே யின்ப ரசந்தன்னை
பாங்குபெறப் பாரு பதமாக—தூங்கி ௧அ௫

மூலைக்கு மூலை விரும்பி யலையாதே
பாலைப்போல் மனதைப் பதிவாக—நாலை

விரும்பிநீர் பார்த்து மெய்யான பாகமதை
திரும்பியே மூணுதிரம் சோதிக்க—நரும்பி ௧அ௬

கெட்டாலுங் கேளு கிருபைபாய் மூணுதிரம்
நட்டால் பயிர்விளையும் நாடியே—முட்டாக [௧
பார்த்தால் வெளியாகப் பாரினுள்ளோர் தான்பிழைக்
சேர்த்தா ரசவாதம் செயல்காணும்—பார்த்த ௧அ௭

வாதிகளே கேளும் வகையான பாகமதை
சேதி கேட்டா லென்ன சிக்குமோ—போதிமிக்க

வுழுது பயிரிட்டால் வுசத்தியாய்த் தான்விளையும்
அழுது மிகநின்று லருளாமோ—நழுவாதே ௧அஅ

பாருமென்று சொன்ன பரமருளாணை
சேருமென் கைபாகம் செப்பவே—போரோன்

தங்கமொன்று நாகமொன்று தாக்க ரசமொன்று
யிங்கிதமா யிரதம் யித்தனையும்—பங்கமாம் ௧அ௯

திராவகமு மொன்று தாக்கவே தங்கமாம்
பராமுகமா யிருந்தால் பாவங்காண்—இராமுகமாம்

யித்தனையும் விட்டால் யிதமான தங்கமில்லை
முத்தி மிகவில்லை முடியாது—சற்றேகேள் ௧௯0

பட்டங்கட்டச் சிர்தப்பில் பறக்குமோ மானுடரே
அட்டியில்லாப் பேச்சு அதிகமாம்—கெட்டியாய்

திரிந்தாலோ தங்கதைச் சீராகக் காணலாம்
அரிந்தாலோ பெல்லாமு மாகும்—செரிந்தே　ககூக

செப்பாகம் விட்டுச் சிவமாகத் தானமூதால்
மெப்பாகந் தான்வருமே வேண்டு—நைபாகம்

என்றிப் படிதா னியம்ப ரசவாதி
அன்றிப் படிதான் அநேகபுத்தி—நின்று　ககூஉ

மடக்குரசசிந்தூரம்.

மருகாமற் பாரு மயக்கமெலாந் தீர
தருகவினிச் சிந்தூரம் சாத்துவேன்—வருக

மடக்குச் சிந்தூரம் வகைநல்ல பாகமிது
அடக்கமாய் வைத்து அலுவல்பார்—திடமாக　ககூங

சூதத்தைத் தானெடுத்துத் துப்ய திராவகத்தில்
ஆதரவா யூத்த அதிற்கேளு—சேதிகேள்

யிரதமிடை யூத்து யேத்தமுள்ள திராவகத்தை
வரதமிடை பூக்கும் வகையாக—நிரந்தரமாய்　ககூச

எடுத்துகுப்பி தன்னிலடை யேறும் பனிரண்டு
கடுத்துயெரி பாகம் கணக்கா—நடத்து

யேறிமஞ்ச ளாகு மிருக்கவே தானுடைத்து
ஆறியிடை திராவகத்தா லாட்டியே—தேறி　ககூரு

பீங்கானில் தான்வறுத்துப் பேர்பெரிய குப்பியினில்
ஆங்கார மாக அடைத்து—பாங்கா

யெரிக்கச் சிவப்பாகும் யேந்திழையே கேளும்
நரிக்கி யுடைத்து நடப்புகேள்—பெருக்க　ககூசு

எடுத்துஅப்பால் வைத்து யினியரசம் நாலு
அடுத்தகெந்தி தானென் றதிலுருக்கு—படுத்தி

தாரமரை யோடு தாக்கவரைத்துக் குப்பிப்
பாரமாய்ச் செவ்வல்லிப் பூச்சாறு—நேர்மையாய்

அரைத்துகுப்பி தன்னி லடைவாகத் தானெரிக்க
நிரைத்து சிகப்பாகும் நேராய்—பரைத்து
பெடுத்து நிறுத்து யின்பமாய்க் கேளு
அடுத்துமுன் மஞ்சளதில் நேரே—இடைக்கி ௧௯௮

நிறுத்துத் திராவகத்தால் நேர்சமனுப் செய்து
பருக்க திராவகத்தால் பாச்சியன்—வறுத்து
காசியென்ற மேருவினில் காட்டி யெரித்து
வாசியாய் பனிரண்டு வாசமாய்—நீதியாய் ௧௯௯

தீமூட்டித் தானெரித்துத் திட்டமாய்த் தானெரிக்கக்
காமூட்ட செவ்வலரிக் காணு—வாமூட்ட
குப்பியுடை தான்சிவக்கும் கொடுக்க ரவிதனிலே
தப்பித மிலாமாத்துத் தானாகும்—இப்புவியில் ௨00

நூறுரவி தானிட்டு நுட்பமாய்த் தான்கொடுக்க
பேறுரவி தங்கம் பிலப்படுங்காண்—வாறுகே
ளிப்படியாய்த் தானிருக்க வின்பமாய் கைபாகம்
தப்பித மில்லாமல் தடுமாறி—இப்புவியில் ௨0௧

உலகவாதிகள் புறட்டு.

வாதிகளாய்க் கூடி வடிவாகத் தங்கமது
பேதிக்கச் செய்வான் பிறட்டாக—நீதியாய்
களங்கு வகைசெய்து காட்டித் தருவனென
முழங்கியே யொருவனிட முக்கியமாம் வளங்காணு
தங்கமயஞ் செய்து தருகிறேனென்று சொலி
பங்கயமாய் லேகியங்கள் பற்றுவார்—தங்கமாய்
சாராயங் கள்குடித்து சாப்பிட் டிளப்பாறி
பூராய மாகப் புலம்புவார்—நேராக ௨0௩

நாதவிந்து கெட்டு நலங்கியே சூத்திரத்தைப்
பாதமென்று வாங்கிப் பதற்வோரும்—பேதமாய்
அண்டமுப்பு வென்று அலைந்து ரசவாதி
பிண்டம் வழலை பினத்தியே—மீண்டாக உ0ச

மூலிகையி லுப்பு முயங்கித் திரிவோரும்
தாலிமுதல் கட்டுத் தவிப்போரும்—பாவித்து
காவிகள் தான் பூண்டு கலங்கித் திரிவோரும்
பாவிகள்போல் நிட்டை பாவிப்போர்-தாவியே உ0ரு

வாதம் வருமென்று வகையாகத் தான்கெட்டுச்
சேதப்பட்ப் பணமும் சிலவழித்து—ஆதரவு
இல்லாமல் விட்டு யேக்கமாய்த் தான்திரிந்து
பொல்லா மனிதரிடம் போகியே—நல்லாய் உ0சு

லிங்காசசிந்தூரம்.

வேதையொன்றுசொல்வேன் விருந்துமேதான்கேளு
பாதக மில்லாமலே பாவிக்க—சோதி
தங்கமய மாகத் தாக்க வெகுசளுகு
பொங்கமாய்த் தான்பார்க்கப் போதிப்பேன்—திங்கள்

வன்னி ரசமெடுத்து வல்லமையாய்க் கேளும்
உன்னியே நாலுபல முற்றுக்கேள்—சென்னி
பிங்கானில் விட்டுப் பிரபலமாய்க் கேளு
தாங்கவே திராவகத்தைத் தாக்கியே—ஆங்காண் உ0அ

படியொன்று விட்டுப் பக்குவமாய்த் தான்வறுக்க
வடியா யுமிநெருப்பில் வாட்டியே—நெடிய
குப்பியடை மேருவினில் கோதையரே கேளு
தப்பிதமில் லாமலெரி தாக்கியே—யிப்புவியில் உ0கூ

எடுக்கவே காவி யேறிச் சிவப்பாகும்
அடுத்துமெள்ள வாங்கு அதின்பின்பு—தொடுத்து
பச்சைரசந் தன்னில் பாகமாய் நாலு
யிச்சையுடன் கெந்தியவை யின்பமாய்—அச்ச ௨௧௦

தாரமவை தானரைத்துத் தாக்கப் புகைநீர்
பாரமா யரைத்துப் பக்குவமாய்—நேராக
அரைத்துஅடை காசிதனி லாகயெரி யெண்சாமம்
பரைத்துச் சிவப்பாகும் பண்பாய்—நிரைத்து ௨௧௧

எடுத்து மஞ்சள்தன்னி லின்பமாய்த் தானிடைக்கிப்
படுத்துத் திராவகத்தால் பக்குவமாய்—அடுத்து
அரைத்து பெரித்துயெடு ஆனதொரு செம்பரத்தம்
பரைத்துப் பூப்போல பக்குவமாய்—நிரைத்து ௨௧௨

சிந்தூர மெட்டு சிறப்பாகத் தங்கமொன்று
வந்தூர நாகம் வகையொன்று—சேர்ந்து
உருக்கப்பிட் டாகும் உண்மையாய்த் திராவகத்தால்
நருக்க அரைத்து நலமாக—பெருக்க ௨௧௩

அடைத்துமே காய்ச்சி அன்பாகத் தானெடுக்கப்
படைத்துப் பனியொண்டும் பாக்கியமாய்—துடைத்து
யெடுத்துமே பாத்தா லேத்தமாய் செவ்வல்லி
அடுத்துப்பூப் போலே அழகாகும்—எடுத்து ௨௧௪

லிங்காசவேதை.

செம்புதனில் நூறு திட்டமாய்த் தான்கொடுக்க
நம்புமே மாத்து நலம்பத்து—தெம்பாகும்
வேதைபிது போல வேகமாய்த் தானிருக்கும்
பாதகமில் லாமலே பாத்துவிடும்—சோதிமயம் ௨௧௫

ஆகுமே யெல்லாம் அன்பாக போகமாம்
பாகமாய்ச் செய்து பார்த்துக்கோ—நீதியாய்

வீரரச சிந்தூரம்.

வீரரச மெடுத்து விளம்பமாய்த் திராவகத்தால்
வாரமாய் விட்டு வறுத்துமே—சீராக ௨௧௬

அடைத்துயெரி காசியினி லன்பாய் பனிரெண்டு
வுடைத்து யெடுக்க வொளிவாகும்—படைத்து
யெடுக்கச் சிவப்பாகும் யேந்திழையீர் கேளீர்
அடுக்க யெடுத்து அதின்பின்பு—தடித்து ௨௧௭

அப்பாலே வைத்து ஆதியாஞ் சூதமெடு
தப்பாமல் நாலுபலம் தாக்கவே—ஒப்பாக
கெந்தியொன்று தாரமரை கேட்டுமிகத் தானெடுத்து
அந்திபக லாக அரைத்துமே—முந்தி ௨௧௮

அரைக்கச் செவ்வல்லி ஆனபூச் சாத்தில்
பரைத்து அரைத்துப் பதமாக—வரைத்து
அரைத்து யெரிக்க ஆன சிகப்பாகும்
படைத்து யெடுத்துப் பதமாகத்—துடைத்து ௨௧௯

யெடுத்துவீர சிந்தூர மேத்தமாய் ரண்டையுந்தான்
அடுத்து யிடைபாகம் அதில்சேர்த்து-தொடுத்து
அரைத்து யெடுத்து ஆனமகா மேரு
பரைத்துப் பனிரண்டும் பாகமாய்—நிரைத்து ௨௨0

யெரித்து யெடுக்க யினிதான திராவகமும்
அரித்து அதில்விட்டு ஆட்டியே—தரித்து
நாலிரண்டுக் கொன்று நலமாகத் தங்கம்சேர்
பாலிக்க நாகம் பதமாக—சாலித்து ௨௨௧

உருக்கப் பிட்டாகு முண்மையாய்ச் சிந்தூரம்
நருக்க அதில்சேர்த்து நாட்டியே—பெருக்க

அரைத்து யெடுத்து அடைவாகத் தான்பார்
உரைத்த சிகப்பாகு முன்னியே—நிரைத்து உஉஉ

யெடுத்து ரவிதனிலே யேத்தமாய் நூறிலொன்று
அடுத்துக் கொடுக்கவுமே அன்பாக—படுத்து
பார்க்கவே மாத்துப் பத்தாகுங் காவிக்கும்
யேற்குமே வுப்புக்கும் யேகாது—பாத்தியமாய் உஉங

வடநூற் கிரந்தம் வடிவாகச் சோதித்துத்
திடமான யூகிமுனி செப்பினார்—முடிவாக
பெருநூல் முடிவிதுதான் பேரான வாதம்
தருநூல் பொருளிதுதான் தாக்கிப்பார்-கருநூல் உஉச

உலாவி லுபதேச முண்மையாய்ச் சொன்னேன்
நிலா:வின் வெளிச்சம் நலமாக—உலாவித்
திரியாதே பாரு திட்டமாய்ச் சிந்தூரம்
பரிவாகத் தான்செய்து பாரு—நெரிபாக உஉரு

பாகத்தை விட்டுப் பதைத்துத் திரியாதே
யோகத்தைப் பார்த்து ஒளிவாகு—தாகமாய்
கண்டு மனமகிழ்ச்சி களிகூறு யென்னுடைய
பண்டு வுலாதனிலே பத்தியே—கண்டு உஉசா

அடுத்து ரசவாதி ஆண்மையாய்க் கேளு
படுத்துச்செய் கைபாகம் பத்தியே—யெடுத்து
செய்து முடித்துச் சிறப்பாகப் பொன்செய்து
நைதுமென் ஞானத்தை நாடியே—பைய உஉஎ

யிருந்துமே பாரு யேத்தமுள்ள வீரரசம்
அருந்தி யெடுக்க அடிபாரு—திருந்தி
சிந்தூர மெல்லாஞ் சிவக்கவே தாளகத்தை
சிந்தையாய் விட்டுத் திரியாதே—பந்தமாய் உஉஅ

ஏழை ரசவாதி பேத்தமாய்ச் செய்த
பாழைகளைச் சொல்வேன் பதிவாக—மூழை

ரசிதக்களங்கு.

வுருக்கு ரசிதத்தை யுண்மையாய் வங்கம்
பெருக்கக் கொடுத்து பெலமாக—திருத்து ௨௨௯

கொடுத்துமே வூதிக் குடிலமாய்க் கால்பலமும்
அடுத்துமே வெள்ளி அதிலிடவே—படுத்து
வன்னி ரசங்கொடுக்க வாங்கி யிடையிரண்டு
வுன்னிதமாய்க் கல்வமதில் தேய்க்க-நன்னயமாய் ௨௩0

பொடியாகும் போலே போகமாய்த் தானிருக்கும்
படியாக் கரிநெருப்பில் பாகமாய்—வடிவாக
யெடுத்துமே வாட்ட யின்பரசம் போகும்
அடுத்துமே சண்டபற்ப மதில்கொட்டி-கொடுத்து ௨௩௧

அரைத்துத் திராவகத்தா லாட்டிவுண்டை செய்து
பரைத்து ரவிதனிலே பாகமாய்—நிரைத்து
காயவைத்து வெண்கருவில் கனக்கவே தோய்த்து
தாயவைத்து அப்பிரகமுந் தாக்கியே—நேப ௨௩௨

தோய்த்துடனே தோய்த்துச் சுவறரவி காயவைத்துப்
பார்த்து யெடுத்துப் பதமாக—நேத்தியாய்
வுமிப்புடத்திற் போடு வுண்மையாய்த் தானெடுத்து
நமியாக வன்னிபற்பம் நாட்டியே—சமியாக ௨௩௩

இப்படியே தொந்தமிடு யின்பமா யஞ்சு
தப்படியே சூதம் தனைநிறுத்தும்—உப்பாம்
சிகப்பாகத் தானிருக்கும் சேர்ந்துமே யிரண்டு
வுகப்பாக வெள்ளியஞ்சி லொன்றுமே-நகப்பாக ௨௩௪

வுருக்கிக் கொடுக்க வுண்மைரவி யஞ்சு
தருக்கிபிடை யொன்றுந் தாக்கியே—பருக்கி
யெடுத்துத் தகவுடைத்து பின்ப மயமாக
அடுத்துவுப்பு செங்கல்மா அஞ்சுதிறம்—படுத்து உ௲ரு

புடமிட் டெடுத்தால் பேறுன தங்கம்
அடவா யிரட்டியிடை யாகும்—நடமாகும்
எடுத்துச் செலவுசெய்து இனியோகம் பாரு
அடுத்துமே நல்லா யருளுவீர்—படுத்து உ௲சு

நல்லாகத் தானிருந்து நாடி மிகப்பாரு
பொல்லா தவனுப் புகலாதே—வில்லாக
வளைந்த அம்புதைக்கும் வளையாத வில்லு
தளைந்த தடியாம் தனைப்பாரு—உளைந்து உ௲எ

பொல்லாமை செய்து புலம்பித் திரியாதே
நல்லாயுலகத்தில் நாடுவீர்—வல்லா
செய்து முடித்தால் செயமாகும் நம்முடைய
பெய்த ரசவெள்ளி பாருமே—மெய்யா உ௲அ

யிருக்கவில்லை வாதம் யிபம்ப வறுகும்
நயம்பிறக்கவே பத்திப் பாரு—நெருக்க
ஓங்கும் ரசவாதம் ஓதரிய வேதமெலாம்
பாங்காகப் பாத்தாற் பரிவாக—நீங்காமல் உ௲௯

செய்து முடித்தால் செயமாகு மிப்புவியில்
நைது ரசவாதம் நாடியே—பையப்
பதறுமற் செய்தால் பாக்கியங்க ளுண்டாகும்
சிதறுமல் ஞானஞ் சிறப்பாகும்—பதறுமல் உசO
சொன்ன ரசவாதம் சொற்பெரிய கைபாகம்
தன்னயமாய்ச் சொல்வேன் நாடுவீர்—பன்னு

தங்கக்களங்கு.

புடத்தங்கம் வாங்கு போருப்பல மொன்று
திடமாகச் சண்டரசம் சிராய்—அடைவாக ௨சக

ஆத்தவே சேந்து வுண்டையாய்த் தானிருக்கும்
பாத்து அரைக்கப் படியுமே—நேத்தியாய்
கல்வத்தில் தேய்த்துக் கனக்கவே மண்போல்
செல்வக் கரியூதி சேர்த்திடவே—நல்லாய் ௨சஉ

தங்கத்தை விட்டுத் தாட்டிகமா யோடிவிடும்
பங்கமாய்த் தூளாகும் பாரு—யிங்கிதமாய்
தங்கமிடை யொன்று தாட்டிகமாய் சண்டரசம்
பங்கமா பொண்ணரையும் பாச்சியே—யுங்கள் ௨சங

அரைத்துத் திராவகத்தா லாட்டிக் கயருக
பரைத்துரவி காயவைத்துப் பாகங்கேள்—நிரைத்து
வெள்ளிபொடிப் பண்ணி விரும்ப அதின்பேரில்
துள்ளியே வெண்கருவா லொட்டியே—தள்ளி ௨சச

யிடைசமனு யொட்டி யின்பமா கவுலரத்
தடையாய் வெயிலதனில் தாக்கியே—படைபாக
உமியிலிடு காடை யொட்டியே போடு
தமியிலிடு தானெடுத்துப் பாரு—கமியா ௨சரு

யிருக்கும் சிவப்பா யின்ப ரசவாதம்
செருக்குரவி நூறெண்ணில் சேர்த்திடவே-பெருக்கப்
பத்தாகு மாத்துப் பதிவாகச் சொர்ணமபம்
சித்தாகும் போகஞ் சிறப்பாகும்—முத்தியே ௨சகூ

தங்கமய மாகுந் தாட்டிகமாய்த் தானெடுத்து
வுங்கள்குல மீடேற வுல்கியே—பங்கம்

வாராமல் தானிருக்கும் வருத்தமில் லாமலிது
பாராமல் தங்கத்தைப் பாச்சவே—நேராக உசஎ

தங்கமிட்டால் தங்கமாம் தாழ்சியிலாப் பொன்னுரு
முங்கள்குல மீடேற மூண்மையாம்—திங்கள்
கோசமென்றும் பீசமென்றும் கொள்கையிது வாகும்
பாசமாய் தானிருக்கும் பாரமாய்—வாச உசஅ

முருக்க மலர்ப்போல் முடிப்பார் முடித்தால்
மருக்கொழுந்தின் வாசம் வருமோ—ஒருத்தர்
ரசவாதஞ் செய்வமென்று ஓடி அலைந்து
பிசவாமல் தங்கத்தைப்பிரட்டி—நிசமாக உசகூ

மடக்கிக் கபிற்கொண்டு மாட்டி யெடுத்து
கடக்கவே ஓடினான் கண்டு—திடத்தை
அரிபீ ரசவாதி ஆன பொருளறிந்து
பரியான தங்கத்தைப் பாரு—பொரியாக உருo

செய்தால் ரசவாதம் செப்பமாய்த் தானிருக்கும்
வைதா லுனக்கென்ன வந்திடுங்காண்—மெய்போல்
அலைந்தாலோ யென்ன ஆகியாய் மூலி
துலைந்தா லெனக்கென்ன செல்வம்—கலைந்தால் உருக

ஆகும் ரசவாதம் அடைவாகத் தானழுதால்
பாகுமே நாத்துப் பயிராகும்—நீதியாய்
செய்தால் பலிக்கும் செல்வம் நிலையாகும்
எய்தாலோ அம்பு பிதமாகும்—கைதப்பிப் உருஉ

போனால் ரசவாதம் போக்கோடே வாராது
ஆனால் ரசவாதம் ஆடக்கேள்—தானாக
செய்து முடித்துத் திரமான ஞானம்பார்
வைது அடித்து வளையாதே—உய்ய உருந

நானென்ற ஆணவத்தை நாட்டாதே நாட்டினல்
தானகக் கெட்டுத் தவியாதே—பேனே
வாதிக்குப் புத்தி வகையாகத் தான்வேணும்
சேதப்படச் சரக்கு செய்யாதே—மேதினியில் உருச

சூதத்தைக் கட்டு சுருக்கான வாதமெலாம்
நாதம்போல் வந்து நல்குமாம்—பேதமிலா
லிங்க ரசத்தை நேராகத் தானெரித்துத்
தங்கத்தைக் கூட்டத் தளவாயாம்—உங்கள் உருரு

குலங்க ளீடேறும் கோத்திரங்கள் வாழும்
நலங்காணு மிப்புவியில் நாடுவீர்—பிலங்காணும்
வீரரசஞ் சொன்னேன் மேதினியி லெல்லாநம்
பாரமா யில்லை பத்தியே—காரம் உருசு

தங்கக்களங்கு சொன்னேன் தாட்டிகமாய்ச் செய்து
உங்க ளபிமான முண்மையாய்—திங்க
செலவு செய்துகொண்டு சிறப்பாக யோகம்
அளவா யிருந்து அதிற்பாரு—துளவாய் உருஎ

வாதயோகத்திற்கு சபாநாதர் தியாநம்.

அரசன் சிவனுமென்று ஆனதொரு வித்தைப்
பிலங்கள் குறையாமற் பின்பாரு—வரங்கள்
தருகுமென யோகம் தப்பாது யிப்புவியில்
வருகுமே வாதம் வருங்காண்—சருகு உருஅ

புசித்துத் திரியாமல் போரான விந்தை
தரித்து யிடையாய்ச் சாத்துவீர்—வருத்தத்
தில்லைச் சிற்றம்பலத்துள் சேர்ந்து யிருந்திடுநீ
அல்லல் படாமற் கணக்காய்—நல்ல உருகூ

சபாபதியைக் கண்டு சாதிச் சிவயோகம்
நலமான கண்டத்தில் நாடுவீர்—சிவமாம்

செம்புக்களங்கு.

செம்பொன்று சொல்வேன் சிறப்பாய்ச் சிவமயமாம்
வம்பென்று விட்டு அயராதே—தெம்பாய் [ருக்கி
தங்கமொன்று செம்பொன்று தாட்டிகமாய் சேர்த்து
யுங்கள் தகடா யுருட்டியே—யெங்கள்
தகட்டை யடித்துத் தாட்டிகமாய்க் கேளு
மகட்டான சினநவா சாரமுடன்—புகட்ட உசுக

கல்லுப்பு வொன்று கருத்தான பொட்டணையும்
நல்லுடனே சூடனது நல்லாய்—வெல்ல
வகைக்கொன்று சேர்த்து வண்மைப் பழச்சாற்றில்
நகைப்புடனே நால்சாமம் நாட்டியே—திறக்க உசுஉ

பெடுத்துத் தகட்டி லின்பமாய் மேலே
அடுத்து அதிற்பூசி ஆண்மையாய்—தொடுத்து
ரவிதனிலே வைத்து நல்லாய்ப் புடம்நாலு
கவியவே போட்டுக் கணக்காய்—பவியமாய் உசுங

செம்புருக்கித் தான்கொடுக்கச் சிவந்த தங்கமாகும்
வம்புடனே பார்த்து வரிசையாய்—தென்பாய்
போகங்களாகும் பூகிமுனி சொன்ன
ஆகுமது களங்கு அன்பாக—தேகம் உசுச

அநித்தியமென் றெண்ணு அன்பாய் ரசவாதம்
நபத்திலே காணு நலமாகும்—சகத்தில்
ரசவாதம் பொய்யோ நாடிமிகக் கேழ்ப்போர்
தசமான யோசனைகள் தாக்கியே—நிசமாக உசுரு

செய்தால் ரசவாதஞ் செல்வமுடனே வருகும்
வைதா லுனக்கென்ன வந்திடுமோ-மெய்யாக

யென்று முனிவ ரியம்பினு ரந்நேரம்
அன்றிப் படித்தா ரநேகமாய்—நின்று ௨௬௬
காரியமாய்ப் பாரு காதலா யென்னேரம்
பாரியாய் சாஸ்த்திரத்தைப் பார்த்து-நேரியாய்
நல்லாகப் பார்த்து நாடியே கைபாகம்
வல்லமையாய்ப் பாரு வளமாகும்—எல்லாம் ௨௬௭
பார்த்தாக்கால் தோன்றும் பத்தியுடன் சொன்னேன்
சேத்தால் ரசவா தம்சிவக்கும்—பேர்த்து
அலையாமற் பாரு ஆதி சிவனருளால்
அலையாமல் நந்திபக்கல் தான்கேட்டு—மூலையாமல்
அசுவனியும் சொன்னார் ஆதி விசுவனியும்
பசுபாசத் தன்மந்திரி பாவித்தார்—நிசமாக
ஆதி அகத்தியற்கு ஆண்மையாய்த் தான்சொன்னார்
சேதிமிக கேட்டுத் தெளிவாக—நீதியாய் ௨௬௯
புலத்தியற்குச் சொன்னார் பெரிய புலத்தியரும்
நலத்துடனே தேரர்க்குச் சாத்தினார்—நலத்தில்
யூகிமுனி கேட்டு வுண்மையாய்த் தானெண்ணிப்
பாகினு ஞதிக்கிப் பாலித்தார்—போகில் ௨௭0
உலகத்தோர் கேட்டு வுண்மையாய் மெய்யென்று
கலகமில்லாமல் நம்பி காட்டினார்—பலிவாய்
வயித்தியங்கள் சொல்லி வாதிக்கிப் புத்திசொலி
நயத்திலே காட்டி நபந்தார்—பயமா ௨௭௧
யெல்லாருங் கேட்ட இன்ப வுலாதன்னை
நல்லா யுனக்குதான் நாடினேன்—சல்லாப
மின்னமொரு வேதை யின்பமாய்ச் சொல்வேன்
நன்னயமாய் கைபாகம் நாடியே—சொன்ன ௨௭௨

சொல்பேர்லே பாரு தோயும் ரசவாதம்
நல்பெரிய சாஸ்த்திரத்தை நாட்டியே—யிப்புவியில்

தங்கச்செம்பு நொறுக்கு.

வெள்ளியில் கொடுக்க.

லிங்கபற்பந் தானெடுத்து நேத்திபாய்க் கீழே
அங்கமாகப் பற்றி அப்புறங்கேள்—திங்கள் ௨௭௩

செம்பைத்தான் மின்னூதி சிவந்த பருவத்தில்
வெம்பைத்தான் யேழுதிரம் வைத்திடவே-நம்பு
யிழுக்குமே பற்பம் யியல்பாகத் தான்கட்டும்
அழுக்குமே செம்பு அடைவாக—பழுக்கும் ௨௭௪

நொறுக்கு மதிதன்னில் நேரா யிரண்டிடையாய்
கறுக்நவ் சொ லிக்கக் கனகமாம்—நறுக்காய்
கொடுத்தூது தங்கஞ்சேர் கோதையரோ கேளு
படுத்தூது யெட்டளாயும் பாலிக்கும்-யெடுத்துவித்து

கைபாகந் தப்பில் காட்டாது தங்கம்
மெய்பாகந் தப்பிலுயிர் மீளுமே-பொய்பாகும்

சரக்கில் உப்பு - புளி அறிந்துசேர்க்க.

உப்புப் புளிபார்த்து வூட்டச் சரக்கில்
தப்பித மில்லாமலே தங்கமாம்—இப்புவியில் ௨௭௬

ஆனசரக்கு வந்தால் ஆதி புளிசரக்கு
தானாகச் சேந்தாக்கால் தங்கமாம்—வாளுகும்
ஆணுடனே பெண்ணு அடைவுடனே சேர்ந்தாக்கால்
தானு சிறுபாலகரும் தாட்டிகமாம்—பேணு ௨௭௭

வருகு முயிர்போல் வாதமே செய்தால்
தருகும் புளியுப்புத் தாக்குவேன்—பெருகும்

வெடியுப்பு வுப்பாகும் வேதமாம் சாஸ்த்திரத்தில்
படிக்கிப் புளியென்று பாவித்தார்—நொடியாக ௨௭௮

கல்லுப்பு வுப்பு காதலாய் வாதிகேள்
நல்லுப்புக் கடல்நுரைதா னுடுவீர்-வெல்லுப்பு

வேலை அமுரிநீர் வேதாந்த வாதிகேள்
சாலவே யிந்துப்புத் தான்புளியாம்—காலம் ௨௭௯

சூடனது வுப்புத் துடியான வாதிகேள்
நாடகமா கத்துருசு தான்புளியாம்—நாடு

கடல்நுரையு முப்பாகும் காதல் ரசவாதிகேள்
தடவைக் கற்சுன்னம் தான்புளியாம்—நடமாடு ௨௮௦

சூதமது வுப்பாகும் சூக்ஷமாய் வாதிகேள்
சாதகமாய் கெந்தி தான்புளியாம்—பேதமாய்

காந்தமது வுப்பாகும் காதல்ரச வாதிகேள்
சேர்ந்தபழங் காடிபுளி செப்பினேம்-பாந்தமாய் ௨௮௧

இரும்புதா னுப்பாகு மின்பரச வாதி
அரும்புகாட்டாமணக்குப்பால்புளியாம்-திரும்ப

தொட்டியது வுப்பாகும் தேரர்சொன்ன ரிப்புவியில்
தட்டிப் புளியரணை தான்புளியாம்—வட்டியாம் ௨௮௨

பேதியது வுப்பாகும் பேதமுள்ள வாதிகளே
சாதியாம் பொன்னம்பர் தான்புளியாம்—நீதியாம்

மாங்கிசத்தின் பேதி வளமாக வுப்பாகும்
தாங்குங் கல்மதம் தான்புளியாம்—பாங்காய் ௨௮௩

வீரமது வுப்பாகும் விருத்தரச வாதிகேள்
பாரம் புளியாரைப் பார்புளியாம்—சாரம்

உப்பாகு மென்று ஓதினார் யூகிமுனி
தப்பாகு மிந்துப்புத் தான்புளியாம்—இப்புவியில்
அப்ரேக முப்பாகும் ஆன பிணிசரக்கு
தப்பித மில்லாமலே தான்புளியாம்—இப்புவியில்
கௌரி யுப்புமாகும் கேட்ட ரசவாதி
தவரிபுளி மாங்காய் தான்புளியாம்—பவரி உஅரு

வெள்ளைப் பாஷாணம் வேண்டியதோ ருப்பாகும்
கள்ளு பனமரமும் காட்டினேன்-தெள்ளுதமிழ்
வைக்கிராந்த வுப்பு வண்மையுள்ள வாதிகளே
பைக்கமஞ் சள்கிமிளை பார்புளியாம்—செப்பத் உஅசு

தங்கமது வுப்பாகும் தானே சிலையிரண்டும்
பங்கமில் லாமல்புளி பத்தியே—சிங்கம்
நாகமது வுப்பு நலமான வாதிகேள்
தாகமா யிலுப்பைநெய் தான்புளியாம்—யோகமாம்
விந்துவது வுப்பாகும் விரும்பியே நாதம்
சிந்துபுளி யாகுமெனச் செப்பினேன்-முந்தியே
வெண்காரி தான்புளியாம் வேதமெனச் சொல்லும்
தங்காத சாரம் தானுப்பு—பங்காமல் உஅஅ

மஞ்சள் கருபுளியாம் மயங்கித் திரியாமல்
தஞ்சமென வெண்கருவும் தானுப்பு-பஞ்சாயம்
யோனிக் கிளிஞ்சியின்மே லோடுப்புத் தாரமாய்
மானுட் சதைதான் பிளியாம்—பாரம் உஅகூ

சங்குவது வுப்பாகும் சாத்துவே கேளு
பங்கமா யுட்சதையும் பார்புளியாம்-துங்கமாய்
பச்சையென்ற கற்பூரம் பாகமா யுப்பாகும்
இச்சையுட னிந்து யினிப்புளியாம்-நிச்சயமாய் உகூ0

உப்புப் புளிசேர்த்து வுண்மையாய் திராவகமும்
தப்பிதமில்லாமலே தான்வாங்கு—இப்புவியில்
உப்பிலிட்டா லுப்பாகு முண்மைபாய் சினத்தை
தப்பித மில்லாமலே தானீத்து—இப்போ ௨௬௧

உப்புப்புளியின் செய்கை.

க்ஷணத்திலே நீரும் சயமான கண்டன்
கணத்திலே நீரும் கருத்தக்கேள்—யுனக்கே
சொன்ன புளியுப்பு சிக்கிரமாய் கைபாசம்
நன்னயமாய்ச் சொல்லுவேன் நாடுவீர்-முன்னம் ௨௬௨
வெடியுடனே சினம் விதமாகச் சேர்ந்தால்
அடியோடே சரக்குவகை ஆண்மையாம்—படியாம்
கட்டுண்ணும் தங்கமாம் கரியில் நின்றுடும்
சட்டு பலிக்கும் சயமாகும்—முட்டவே ௨௬௩
சயமாகும் யெல்லாம் ஜந்து நவலோகம்
அயமாகும் செம்பு அடைவாகும்—தயவாகும்
கல்லுப்பு வந்தால் கசிவறவே ஆக்கும்
நல்லொத்த பூநீறு நாதங்காண்—செல்லுற்று ௨௬௪

நீத்தனம்.

துருசுவந்தா லுருக்க துப்பறவாய் வெங்காரம்
அரிசுடனே போட வதுவுருக்கும்—பரிவாய்
நீத்தனங்க ளெல்லாம் நிலவரமாய் சொல்லுகிறேன்
பாத்துடனே பண்ணே பதமாக—சேத்தால் ௨௬௫
நீருகு மெல்லாம் நிர்ணயமாம் வாதமாம்
பாருகும் பச்சை கற்பூரத்தால்—நேராகும்

கல்லுப்பு என்றதெலாம் கடல்நுரையை நேராக
நல்லொத் தரைத்தூது நற்சுன்னம்—வெல்லுற்று

திராவகத்தை விட்டு தப்பாமல் நாலேழு
பராமுகமாய்வைத்துப்பார் பாருப்பாம்—சராமுகமாம்

ஓட்டவே காய்ச்சி ஒருமிக்க வுப்பாக்கி
வட்டமுள்ள வில்லைகட்டி வாதமா—திட்டமாய் ௨௯௮

ரவிதனிலே போட்டு நலமாய்ப் புடமிடவே
தவியவே சுன்ன மகிமைபாம்—தவியாதே

யெட்டுக் கிரண்டு யினியதொரு நீலகண்டன்
வட்டுச் சேர்த்தூத வளப்பமாய்—திட்டமாய்

சுடுஞ்சுன்ன மாகும் காதல்ரசங் கட்டும்
படுமோ ரசவாதம் பாலிக்கும்—எடுமே

களங்கு செய்துகொள்ளு காரமாய் தங்கம்சேர்
துளங்கமணி மார்பர் சொல்லிவிட்டார்—பளக ௨௯௯

அண்டச்சுன்னம் - வெள்ளிவித்தை.

நூறுகி தேவருக்கு நுணுக்கமாய்ச் சொல்லிவிட்டேன்
பாறு வுலாவிலே பாவித்தேன்—சேறு

அண்டவித்தை சொல்வேன் ஆதிசிவன் சொன்ன
பிண்டவித்தை யுண்டு பிலக்கேடாம்—தொண்டர் ௩00

காத்தாக்கா லோதெரியும் காரணமாய்ச் சொல்வார்
பார்த்தால் ரசவாதம் பாவிக்கும்—சேர்த்தால்

வெள்ளிவித்தை யுண்டு மேதினியோர் தங்களுக்கு
துள்ளி ரசவா தம்சொலிக்கும்—மெள்ள ௩0௧

முட்டையின் மேலோடு முக்கியமாய் பத்து
நிட்டையா யூத நிறமாக—நட்டாக

ஆகிடவே சுன்னமாம் ஒக்க வெடியுப்பும்
பாதுடனே யிடைசமனுப் பாச்சியே—வாதாக ௩0௨

அண்டக்கருவா லரைத்து வில்லை காயவைத்து
கண்டபுடம் போடு காரமாம்—பண்டாக
யெடுத்துமே பிங்கா ளிதமாக விட்டு
நடுத்து திராவகத்தை நாட்டியே—நடத்து ௩0௩

மூனுநாள் வைத்து முன்னீரைத் தானிறுத்துக்
காணுமே வுப்பு கனமாகும்—வேணும்
வறுக்கவுப்பு மாகும் வல்லமையாய் தானெடுத்து
தறுக்கப்பட்ட வெள்ளை தனக்லக்க—பொறுத்து ௩0௪

அரைத்துத் திராவகத்தா லானரவி காயவைத்து
பரைத்துமே மண்மறைவில் பக்குவமாய்—நிரைத்து
போட்டு புடமெடுத்து பேரான வெள்ளீயம்
காட்டுமோ சீதங் கனமாகும்—நாட்டு ௩0௫

ஆத்துர்கு நிற்கும் வுள்ளபடி யாடும்
நாத்திரையு மெர்சும் நலமாகும்—பாத்திபனே
யென்றுமுனி சொன்னு ரியம்பிப் பலவார்த்தை
நன்றுமே புத்தி நலம்சொன்னு—கன்று ௩0௬

கொடுத்தபால் போல கொற்றவனே கேளும்
உடுத்த ரசிதவெள்ளி யாகும்—நடுத்து
செயமான வேதை செய்யவே சொன்னேன்
ஜயமான யோகமே நாடுவீர்—பயமாக ௩0௭

யில்லா ரசவாதம் யின்பமாய்ச் சொல்வேன்
நல்லா வுலாவிலே நாடுவீர்—கல்லா
மனிதருடன் பேசாதே மார்கமாகச் சொல்லு
தனியே ஒருத்தனைத்தான் தாட்டிகமாய்—பனியாக

ரசவெள்ளி.

நம்பாதே யென்று நலமாக பூகிமுனி
தெம்பாகச் சொன்னார் சிறப்பாக—தம்பமாய்
அலையவே வேண்டாம் ஆதி ரசவெள்ளி [தே
தலமையாய்ச் சொல்லுகிறோம் தான்கேளு—கலையா

ரசத்தில் திராவகத்தை நாட்டியே பார்த்தால்
தசப்பாக வுப்பாகத் தானாகும்—வசப்பாக
யிருக்கு மதையெடுத்து யேற்கவே வைத்து
நருக்கவே கோழிமுட்டை தானுப்பு—யெடுத்து ௩௧௦

யிதுரெண்டு மாக யேற்கவே தானரைத்து
தடுத்து வில்லைகாய தனைவைத்து—படுத்து
வுமிநெருப்பி லிட்டு வுத்தமமாய்த் தானெடுத்து
தமியான வெள்ளியம் தாகமாய்—நமியாக ௩௧௧

குடுக்க ரசிதமாம் கொக்குநிறம் போலாம்
நடுக்க யிருக்க நலமாகும்—பெடுத்து
யெடுத்துமே வித்து யிதமாய்ச் சிலவுசெய்து
அடுத்துசிவ யோகம் ஆதியாய்—கடுத்து ௩௧௨

பாருமே யென்று பரமனுரை செய்தார்
தாருமே பூகிமுனி தான்சொன்னேன்—வாரு
மேனிருத்திக் கொண்டு வடிவாக நானுதி
தேவருமே தேவர் திறமாக—பாரில் ௩௧௩

வுபதேசம் சொன்ன ரின்ப ரசவாதம்
தபமாகத் தான்சொல்லத் தாகமாய்—நவமாக
நவசித்தர் ஒன்பதுபேர் நாடி மிகவந்து
தவமா யுபதேசம் சாத்தினார்—பவமாய் ௩௧௪

சித்தர்சொன்ன நூலைத் திரட்டியே அத்தனையும்
பத்தி வுலாவிலே பாடினேன்—சித்தாக
போகவே சொன்னேன் போக்கோடே வாதம்
தாகமாக் கைபாகம் சாத்தினேன்—தவமாக ௩௧௫
சிந்தூரம் சொன்னேன் செப்பமாகக் களங்கம்
பந்தூரம் கைபாகம் பாடினேன்—நந்தூரம்
தபிலவகை சொல்லி தாகமா யந்நேரம்
பயிலா வுலாவிலே பாடினேன்—நயமாக ௩௧௬
மட்டங்கள் சொன்னேன் மயமாக கைப்பாகம்
திட்டமுடன் பாகம் திறமாக—முட்டவே
வுப்புகூட் டுச்சொன்னேன் ஒங்கியதோர் பாகம்
தப்பில் லாமொழிகள் சாத்தினேன்—யிப்புவியில்

துருசுசுன்னம்.

துருசுவது சுன்னம் துப்புறவாய் சொல்லுகிறேன்
பரிசு தரவேணும் பாரிலுள்ளோர்—நரிசுதர
கைபாகம் சொல்வேன் காதலரே கேளும்
மெய்பாக மாக விளம்புவீர்—செய்பாகம் ௩௧௮
கண்டுமே தேறு கருத்தாய் துருசுடனே
பண்டு வெகுமானம் பாலிப்பார்—சென்று
ஒறுத்துத் துருசியைத்தான் ஒட்டி மிகப்பாரு
சிறுத்த ரசம்கட்டும் க்ஷிணத்திலே—வருத்தாக ௩௧௯

வ ழ லை.

கும்பமுனி சொன்னார் கொடூரமாகத் துருசு
நம்பினேன் அந்நேரம்—நாட்டமாய்
ஆதி வழலைதன்னை அன்பாகச் சொல்லுகிறேன்
சோதிபெற மேன்மையாய்ச் சொல்லுவே—நீதியாய்

வீர ரசமெடுநீ விருப்பமா நாலுபலம்
காரமாய்த் திராவகத்தை காட்டுநீ—பாரமாய்
பீங்கானில் விட்டுவைக்க பிரண்டுவுப்பு ஆகும்
நீங்காமல் காயத் திடமாக்கு—பாங்காக ௧௨௧

யெடுத்துமே நாலு யின்பமாய்ச் சீனம்
அடுத்து முன்னிடைக்கி அடைவாகத்—தடுத்து
ஆதி யெடுத்து வுணர்வா யிடைசேர்த்து
ஆதி புகைநீரு லரைத்துரயி—போதி ௧௨௨

அஞ்சுசுன்னம் தன்னி லடைவாய் நடுவிலிடு
கெஞ்சுமென சுன்னங் கிருபையாய்—பஞ்சாய்
பச்சை கற்பூரம் பதமாய் புகைநீர்விட்
டிச்சையுடன் புறண்டு யிப்புவிபில்—நச்சயமாய் ௧௨௩

வுப்பாகுங் காச்சி வுணர்வா யெடுத்துடனே
தப்பிதமில் லாமலிடை தான்சேரு—மெச்சியே
அரைத்து அஞ்சுசுன்னம் அன்பாய் நடுவில்வைத்து
தரைத்துப் புடம்போடத் தான்குருவாம்—பரைத்து

துருசியின்மேல் கட்டி துப்பறவாய்க் காடை
பரிசனமாய்ப் போட்டுப் பதமாக—வுரிசையாய்
நீலகண்டன் நீறும் நிமிஷரசங் கட்டும்
ஆலகண்டன் போல அதுவாகும்—பாரில் ௧௨௫

சரக்கெல்லாங் கொஞ்சாம் சத்தி சிவமாகும்
அரக்கென்ற பாஷாணம் அதிற்கட்டு—புறக்கும்
வேதை யிகிலாகும் வேதாந்தம் தான்முடிவாம்
பாதகமில் லாமலே பாத்துவீர்—பேதை ௧௨௬

சவுக்கார மாகும் சார்ந்த சரக்கெல்லாம்
நவுக்கார மாய்க்கொல்லும் நாணயமாய்—பிணக்காம்

மறைத்த வழலையிது வாதிகளே கேளு
யிறைத்த கிணறூறும் யின்பமாய்—பறைத்த ௩௨௭

தங்கமய மாம்வேதை தாய்சொல்ல யான்கண்டேன்
தக்கமாம் தங்கம் பொருப்பாகும்—வுங்கள்
குலங்க ளீடேறும் கோத்திரமுந் தான்வாழும்
அலங்கல் பதிவழலை அறைந்தேன்—நலங்கேள் ௩௨௮

சித்தர் மறைத்த சிறமாய்த் துருசதுவை
பத்தியே சொல்லி பாவித்தேன்—பெத்தி
பெருநூலைக் குறுக்கிப் பேதமில் லாமல்
தருநூ லுலாவிலே தாபித்தேன்—வருநூல் ௩௨௯

பேதங்க ளில்லாமல் பித்தனார் சொன்ன
சாதங்கள் கைபாகம் சாத்துவீர்—தாதை
தனைப்போல சொன்னேன் தன்னை யினிப்பாரு
வுனைப்போ லுலகில் ஒருவருண்டோ—தனைப்போல

மலைகள் பழுக்கும் மாதவர்கள் செய்த
கலைக ளுணரவல்லோர் கற்றுணர்ந்தோர்—சிலைபாக
பெல்லா மழிந்திடுநீ யின்பதுன்ப நீங்கும்
பொல்லாத பேறுகப் போகாதே—நல்லோர் ௩௩௧

யிருந்த யிடத்தில் யிருக்கவே சொன்னேன்
நறுந்தண் தமிழை நடைபாக—தருந்தி
பெருநூலைப் பாரு பேய்போல் திரியாமல்
தருநூ லுலாவைத் தரித்துமே—கருநூல் ௩௩௨

தனித்துமே பாரு தப்பாமல் முத்தி
செனித்துமே தானிருக்குஞ் செப்பமாய்—பணிந்து
நிக்குமே வாழ்வு நீடூழி காலம்
பக்குவமாய்த் தானிருக்கும் பாரிலே—கற்க ௩௩௩

வழலை தரு சுக்கான்.

சுக்கான் வழலைதான் சொல்லக்கேள் சொற்பெரிய
மிக்கா சவுக்காரம் மேன்மைபாம்—மக்காக
பூநீர் விளையுங்கல் பேர்பெரிய நீத்தியதை
தான்படி நாலு தாக்கியே—பேனேகேள் ௫௫௪
சாடிதனிற் போட்டுத் தளர புகைநீர்விட்டு
நாடி ஒரு மண்டலத்தில் நாடியே—தேடி
யிறுத்து யெரிக்கவே யேகமா யுப்பாகும்
நறுத்துப் பொடித்து நலமாக—நிறுத்து ௫௫௫
அரைத்து ரவியில்வில்லை அன்பாக காய்ந்து
நிரைத்துச் சுன்னம்நடுவில் சுகமாக—பரைத்து
காடைப் புடமிட்டுக் காட்ட பெரித்திடவே
ஜாடையா யெடுக்கத் தான்குருவாம்—தேடி ௫௫௬
சவுக்கார மாச்சு சதாசிவன் தான் சொன்ன
மௌக்காரம் வழலை வடிவாகும்—நவுக்காரம்
பூத்தூ சத்தோடே புகலரி நேராகப்
பார்த்து அரைக்கப் பலனுண்டாம்—சேர்த்து ௫௫௭
அரைத்துப் புடமிடவே ஆன வழலையாம்
அரைத்து யெடுத்துப் பக்குவமாய்—நிரைத்து
எடுத்துத் துருசின்மே லேகமாகக் கவசம்
தடுத்துக் கொடுத்துத் தாக்கவே—யடுத்து ௫௫௮
காடைப் புடமிடுநீ காட்டி யெடுக்க
பேடைத்துருசு பெலமாக சோடை—யெடுக்கக்
கடுஞ் சுன்ன மின்பமாய்த் தானிருக்கும்
அடுத்து சுக்கான் வழலையாகும்—தடுத்து ௫௫௯
சரக்கெல்லாங் கட்டும் சதாசிவன்தான் சொன்ன
துரக்கவே பொன்னாகும் கூட்ட—துரக்க

வெடியுப்பு கூட்டும் வெண்மை நவாசாரம்
படியாகத் தான்கட்டும் பாக்கியமாம்-பொடியாக ௩௪0

இரதமது கட்டும் ஏத்தவெள்ளை பாஷாணம்
சுரத் மயமாகத் திடிப்பாக—வரத
கட்டுமே லிங்கம் கசடத்த வேதைமுகம்
செட்டுமே வாதவெள்ளம் செப்புவீர்—பட்டுமே ௩௪௧

வுபரசங்க ளெல்லாம் வுருகுமே வுண்மையாம்
பரவசமாய் வாதம் பாவிக்கும்—நவரசமாய்
கல்லோடு எல்லாம் கனக்க வுருகுமே
நல்லோடு செம்புதங்கம் நாடுமே—பல்லோடு ௩௪௨

தங்க மயமாகும் தாட்சிவா ராதுபினி
பொங்க மயமாகும் புவிமீதில்—வுங்கள்
குலங்க ளீடேறும் கொற்றவர் போலாவீர்
தலமெல்லாம் நாடும் தவமாகும்—யிடமாக ௩௪௩

வுன்னரிய போதமாம் வுண்மை யிதுவாகும்
தன்னிலே நாடும் தண்மையாம்—யென்னரிய
கைபாக மாகவே காதலாய்ச் சொன்னேன்
மெய்பாக மாக விருந்தாகும்—பொய்பாகம் ௩௪௪

ஆகவே செய்து வடிவாகத் தப்பியே
தாகவே செய்து தடுமாறி—யேகமாய்
பணமெல்லாம் போச்சுதென்று பாகமாய்ச் சொல்லி
கனமாக வேபுலம்பி காட்டாதே—சினமாக ௩௪௫

யிருக்கு ரசவாதம் யின்பமாய் தானிருக்கும்
சுருக்கமா யிந்நூலில் சொல்லிட்டேன்—சிறப்பாக
யிருக்குமிடமெங்கென்றால்யேத்தமாய் வன்னிகர்ப்பம்
படமாகச் செந்தூரம் பண்ணியே—நடமாடு ௩௪௬

தங்கமய் மாகும் தாழ்ச்சிவா ருதுநலம்
பங்கமாய் மேருவினில் பத்தியே—சிங்கமாம்
தங்கத்தைச் சேரு தாழ்ச்சி வாராதுநலம்
பொங்கமா யீவு போதமாம்—நங்கள் ௩௪எ

குலதெய்வ மாகும் குற்றமிக வாருது
கலசெய்வ மாகியே நாடிநீ—பலதெய்வம்
மென்றுமே கும்பிட்டு யேங்கித் திரிவார்போல்
நன்று பொருளை நாடியே—சென்று ௩௪அ

வுறுதியாய் நின்று வுற்றரச வாதம்
கறுதியாய்ச் செங்கோலும் நாடியே—வறுதியாய்
செய்து முடித்துத் திறமாக கைபாகம்
பையவே செய்துகொள்ளப் பாகமாய்—நைதால்௩௪௯

ஒருதிறந்தான் தப்பினு லொத்துமே பார்த்து
இருதிறந்தான் சோதிக்க வெய்துமே—வருதிறமாய்
செப்பவே தேறும் தேற்றிக்கொள் உன்மனதை
வையகத்தில் மானுடரை நம்பாதே—மெய்யாய் ௩௫0

ஆண்டவருக் கேதெரியும் ஆனரச வாதிக்கி
பூண்டபணி கண்டாலும் பொய்யாங்காண்—தாண்டா
விளக்கு எரியுமோ வேதையென்று சொன்னக்கால்
குழப்பமாய் நின்றால் குடிகேடு—தளப்பமாய் ௩௫௧

தோணுத வாதி துவ்வரம்பருப் பைக்கண்டால்
காணுத தங்கம்போல் காணும்—பூணுத
வழுதுப் பபிரிட்டா லுறுதியாய்த் தான்விளையும்
அழுது புலம்பினு லாகுமோ—பழுதாக ௩௫௨

யிருந்தால் தெரியுமே யேழை மடநெஞ்சே
பொருந்தாத பொன்னெனிவ் போகுமே—வருந்த

மெய்வருத்தப் பட்டால் விளையும்ரசவாதம்
செய்வருத்தப் பட்டால் செயமாகா—நைவருந்த ௩௫௩

செம்புவது சொன்னேன் சிறப்பாக சுத்திமுறை
நம்பியே பாத்த ல் நலமாகும்—தம்பிரான்
செய்து முடிப்பார் செயமான வேதைபாம்
வைது திரிந்தால் வருமோசொல்—கையில் ௩௫௪

வெண்ணை வாத்தெரிக்க விருப்பமாய் நெய்பாகும்
பெண்ணைவைத்த சிரசில் பிஞ்ஞகரோ—வுன்ன
வருமெனவே சொன்னர் வல்லமையாய்ச் செய்து
தருகும் ரசவாதம் தானகும்—பருகும் ௩௫௫

செம்பை வெட்டைசெய்து கொடுக்க.

செம்பைபிக அமிந்து சேர்க்கவே தங்கம்
பங்கமில் லாமலே பாத்துமே—நம்பு
ரவியைத் தகடித்து நல்லவெடி யுப்பாம்
கவியவே சினமுடன் காரியமாய்—பவிய ௩௫௬

குண்டுமணி சேர்த்துக் கொள்கையாய் நேரே
துண்டுமே கத்தநீர் துப்பரவாய்—பண்டு
துப்பரவாகக் குழம்பி துடிப்பாக பப்பரமே
தப்பாதே அப்பாலே தான்வைத்து—செப்பும் ௩௫௭

பழுப்பினத்தை நூதி பகரவே யேழுகிரம்
தழுப்பாக தோய்த்திடவே தான்கேளு—நடுப்பாக
யெளிக்குஞ்சு தன்னிறமாம் யேத்தமாய்த் தானுதி
பளிக்கவே தோய்த்துப் பதமாக—சொலிக்க ௩௫௮

தோய்த்து யெடுத்துத் துப்பரவாய்த் தானுடைக்க
வாய்த்து அருந்திராய் வண்மையாய்—சாய்த்து

அதிக வெட்டைபானு லது வுதவாது
கதிபெறவே வுட்கொள்கா ரியமாம்-சதியாக ௩௫௯

செய்து கொடுத்து தில்லாகச் சொல்லாதே
வையவே கைபாக நாடுவீர்—பைய

பழுத்தகனி தான்ருசியாம் பழுக்காத மாங்கனியை
தழுத்த ருசியாகா தயவிலது—வழுத்தி ௩௬0

செம்பை அரைவாசி திட்டமாய்த் தான்கொண்ணு
வம்புலாம் வெள்ளிதனில் வாட்டியே—தெம்பாக

நாலுக்குஒன்று நலமாகச் செம் பொன்று
சாலமாய்ச் சேர்த்துருக்கதானுகும்—போலாகும் ௩௬௧

பொன்னிடையே சேர்த்து போடப் புடம்நாலு
தன்னிலே தானிறங்கும் தாரணியில்—நன்னயமாய்

இருக்குமே பொன்னு யேத்தமா யாணி
அருக்குடம் பத்து வயதாகும்—நருக்கும் ௩௬௨

கைபாகஞ் சொன்னேன் காதலாய் நம்புவீர்
மெய் பாகமாக மிதிப்பாகா—செப்பாகம்

பாகமே செய்தால் மயக்கம் ரசவாதம்
தேகம்போல் செய்து திடமாக—யோகமாம் ௩௬௩

எண்ணைக் கிருந்தாலு மிருக்குமே காயம்
நன்னயமாய் கைபாகம் நாட்டவே—சொன்னபடி

செய்து பார் பலிக்கும் ரசவாதம்
கடிசெய்து யோகம் கனகமாம்—முடியில் ௩௬௪

இவ்வேதை போல யெங்குங் கிடைபாது
செய்வேதை வாதம் சிறப்பாக—மெய்வேதை

யிருத்தி மனத்தை யேற்கவே செய்தால்
பருத்தியது பூத்த பரிவாகும்—நருத்தி ௩௬௫

சிந்தூரஞ் செய்தால் செயவேதை தான்பலிக்கும்
வந்தூரப் பொன்னும் வளமாகும்—விந்தையாய்
லோகமெல்லாம் பழுக்கும் லோகாதி லோகம்
பாகமாய் கைபாகம் பத்துவீர்—தாகம் ௩௬௬

எடுத்தால் குடிக்க யின்பமாப்த் தோணும்
அடுத்தால் ரசவாத மாகும்—தொடுத்தால்
யெந்தவித மானாலு மிருக்கி ரசந்தன்னை
அந்தவிதம் பொன்னாக ஆகும்—சுந்தரமாம் ௩௬௭

துருசு சிந்தூரஞ் சொன்னேன் பெருநூலில்
அருசு திராவகமும் அதில்விட்டு—வரிசையாய்
யெரித்து யெடுக்க யினிய சிகப்பாகும்
பரிந்துக் கடுங்காரம் பாகமாம்—நிறுத்து ௩௬௮

பூத்தரசஞ் சொன்னேன் பூதலத்தில் மானுடர்க்கு
நேத்தி யிடைபாகம் நேராகச்—சாத்தி
யெடுத்து நிறுத்து யினிய புகைநீரால்
அடுத்து அரைத்து அதிலடைத்து—கடுக்க ௩௬௯

எரிக்கச் சிவப்பாகு மேங்கித் திரியாமல்
பரிக்க ரவிதன்னிலே பாச்சிவிடு—சரிக்கமாய்
மாத்துமே பத்தாகும் மபக்கமது நீங்கும்
சேர்த்து ரசவாதம் தெரியாமல்—பார்த்து ௩௭0

இருந்த சிவயோகம் பேறவே பாரு
அருந்தவே வாசியைநீ ஆத்துவீர்—பருந்தாக
திரியர்தே யென்று தேசத் தலையாதே
பரிகாச மாகவே பத்தாதே—வரியாக ௩௭௧

செப்பினேன் உலாவிலே சேரவே கைபாகம்
தப்பியே போகாததனைப் பாரு—யிப்புவியில்

வாழ்ந்து பெருஞ்செல்வம் வல்லாண்மை யாய்ப்பாரு
சேந்து நவலோகஞ் சிறப்பாம்—தாழ்ந்து கஎஉ

போகாம லப்பிரகம் போக்கோடே சொல்வேன்
தாகாமல் சிந்தூரந் தான்பாரு—வாகாக
சத்தியுட நாதங்காண் சதாசிவன் தான்சொன்ன
பத்தியுடனே யறிந்து பண்ணு—சித்தியாம் கஎங

அப்பிரகசிந்தூரம்.

தங்கமய மாகும் தாய்சொல்ல கண்டேன்
யிங்கிதமாய்ச் சொன்ன ளிதமாகப்—பொங்கமாம்

அப்பிரகம் நாலுபலம் அடவாக வீரங்கால்
தப்பித மில்லாமல்சீ தாக்கியே—நட்பு கஎச

படஅரைத்துப் பார்க்கப் பதமாக வெண்ணெயாம்
திடமுடனே தன்பிடமும் தேறவே—அடவாக
யெடுத்து ப்பால்வைத்து யின்பமாய்க் கேளு
தடித்து ரசத்தில் திராவகத்தை—விடுத்து கஎரு

ஆக்கவே வுப்பாகும் வுண்மையாய் நாலுபலம்
நாத்திசையும் அப்பிரகம் நாழிலொன்று—சேத்து
அரைத்துத் திராவகத்தால் ஆட்டி வறுக்க
பரைத்து குப்பிதன்னில் பாகமாய்—வரைந்து கஎசு

அடைத்து யெரித்துயெடு ஆன சிகப்பாகும்
துடைத்து மறுபடியும் சொல்லக்கேள்—நடத்த
அஞ்சுதிரம் தானெரிக்க ஆன சிவப்பாகும்
பஞ்சமில்லைப் பொன்னு பதமாகும்—தஞ்சமாய் கஎஎ

யெடுக்க முருக்கும் யின்ப ரசவாதம்
அடுத்து ரவியிலிடு அன்பாகத்—தடுத்து

நூறுக்கொன் றிட்டால் நுழைந்துமே தங்கமாம்
பாரி லதிகம் பத்துமாம்—வாரு ௯௭௮

வுப்புக்குங் காவிபினி லோடாது தங்கம்
தப்பித மில்லாமலே தானாகும்—இப்புவியில்
கைபாக மாகக் கருதினே னிப்புவியில்
மெப்பாக மாகயினி யென்றுநீ—செய்பாகம் ௯௭௯

விட்டுக் கெடுத்து விருப்பமா யில்லாமல்
பட்டுநூல் போல பதம்பாரு—செட்டாக
இருந்து ரசவாத மின்பமாய்ப் பாரு
நருந்தமிழை நாடி நலமாக—வருந்தி ௯௮௦

தேசத் தலைந்து செய்யுங் கைபாகம்
ஆசையுடனே கேட்டு ஆதரவாய்—பாச
பசியடைக்கி நின்று பதராதே வாதம்
பிசகாமல் பார்த்துப் பிரியமாய்—நிசமாக ௯௮௧

அப்பிரகச் சித்தை ஆராயப் போரார்கள்
தப்பித மில்லாமலே தானறிந்து—யிப்புவியில்
அறிந்து யெடுத்து ஆன நவநீதம்
பிறிந்து கைபாகமாய்ப் பேருலகில்—நறிந்து ௯௮௨

புத்தியுள்ள வாதிகேள் புத்திரனைப் போல
சத்தியமாய்ப் பாரு சதாசிவன்போல்—முத்தி
அறிந்துமே சிந்தூரம் ஆதி நலமாகச்
செறிந்துப் புகைப்பாரு சீக்கிரமாம்—பரிந்து ௯௮௩

சித்திக்கி முத்தித் தெளிவான ஞானம்
பத்திக்கி முத்திப் பதிவாகும்—சித்தியாம்
துருசு சிந்தூரம் துப்பரவாய்ச் செய்து
பரிசனமா யிரதம் பாச்சுவீர்—சரியாகும் ௪௮௪

அண்ட கெவுனமாம் ஆதிசிவன் சொன்ன
துண்டப் பரிவழலை துப்பரவாய்—சண்ட
ஆடுமே ஆட்டு ஆதிசிவன் சொன்ன
தேடுமே துருசுநீர் சேர்க்கப்—பாடும் ௩௮௫

ரசவாத மாகும் நன்மையுண்டாம் போகம்
பிசகு வாராமலே பித்திபே—நிசவாதம்
துருசு சிந்தூரம் துடியக் கிடையாட்டால்
பரிசாக அப்பிரகம் பாரு—வரிசையாய் ௩௮௬

இரதமது கட்டு மின்பரச வாதம்
கரதமெனக் காட்டும் கனியாகும்—சுரத
நெல்லிக் கனியெல்லாம் நேரான தங்கம்
கொல்லமா சித்தர்போல் கூடுமாம்—நல்லாக ௩௮௭

பொதிகைமுனி போலாம் போக்கரிய ஞானம்
பதியான கண்ணு போல் பாரும்—கெதிகொளவே
தேரர் போலாகும் தேத்தி யிப்புவியில்
பாரமிலை ஞானங்கள் பத்துமே—காரம் ௩௮௮

பாச்சரசங் கட்டுமே பாருலகில் மானுடர்கள்
பேச்சு வருத்தமிலை பேதமாய்—வாச்சு
யிருந்திடவே யோகம் யின்பமாய்க் கேளு
நருந்திடவே ஞானம் நல்வழியாம்—பருந்து ௩௮௯

ஏய்க்கும் ரசவாத மெப்படியாப் பாத்தாலும்
பாக்கியமாய்ச் செய்தால் பலிக்கும்—வாய்க்கும்
மனசை நிலைநிறுத்து வந்திடுமே வாதம்
கனதைபெற கல்வி களைத்ததது—பினமாக ௩௯௦

செய்க்குரம் போட்டால் சேந்து விளையும்
நயக்குருவால் சிந்தூரம் நாடுவீர்—மெய்க்கு

காயசுத்தி பண்ணு கனதைபெறத் தானிருக்கும்
மாயமில் லாமல் வலதாக—நியாயமாய் ௩௯௧

இருந்து ரசவாத மேத்தமாய்த் தான்பாரு
மருந்துபிடை தங்கத்தை நாடுவீர்—வருந்திஞல்

எல்லாந்தான் வருகு மிருப்பா யிருந்தாக்கால்
நல்லாக வென்னவரும் நாடிவீர்—எல்லாம் ௩௯௨

கருத்துவைத்தா லேதெறியும் கள்ளமட நெஞ்சே
யுருத்தாகத் தான்திரிந்தா லொக்குமே—சிறுத்த

நாட்டி லிருக்காதே நன்மையா யன்றில்போல்
பாட்டுப் படித்துப் பதமாக—வேட்டில் ௩௯௩.

இருக்கு மதைப்பார்த்து இன்ப ரசவாதம்
பெருக்க நினைத்துப் பேதமா—யிருக்க

தங்கக்குரு.

தங்கக் குருசொல்வேன் தப்பாது கைபாகம்
பங்கமில் லாமலே பற்றுவீர்—சிங்கம் ௩௯௪

ஏமம் பலமொன்று யேத்தமாய் பொன்னிமிளே
ஆம முருக்கி அதிலிடுநீ—சாமம்

கொடுக்க வுடையும் குணமாகத் தானனாத்து
படுகப் புடமிட்டுப் பாரு—யெடுக்க ௩௯௫

ஓங்கி சிகப்பாகு முற்ற ரசவாதம் [ம்
பாங்குபெறச்சொல்லுகிறேன் பாரதனில்—ஆங்காணு

ரவிதனிலே பத்து நாட்டவே யேழாகும்
பவிதனிலே ஒன்று பத்தியே—கவிய ௩௯௬

பெடுத்துப்பு தன்னிலிடு யேத்தமாய்த் தங்கம்
படுத்துப் புடமிறங்கும் பாரு—நடுத்து

ஞானம்பார் யோகம்பார் நல்வினையும் போகும்
வானம்பார் புவியில் வடிவாக—தானம்பார் கூசஎ

பொன்னிமினை தானிழைத்தால் பொன்போலத் தாணு
வன்னி வடிவாய வாதாகும்—பின்னே [கும்
பேழைரச வாதிசெய் மேற்றமுள்ள பொன்னதுதா
வாழைமட நெஞ்சம் வலுமையாய்—பாழை [ன்

சொன்னதுபோல் செய்து துகைபாய் முடித்துப்பார்
அன்னதுபோல் கைபாகம் ஆண்மையாய்—பின்னே
சுட்டுத் திரியாதே தோசிப்போ லெங்ஙோம்
பட்டுபட்டுத் தேமிப் பதமாக—இட்டமாய் கூசக

வாதப் படாநெஞ்சே வல்லமைபாய்ப் பண்ணு
சேதப்படப் பணத்தைச் செய்யாதே—பாதகமாய்
சொல்லாத சொற்களையே சோம்பித் திரியாதே
நல்லா யொருபொருளை நாடுவீர்—சொல்லா ச00

பணத்தைப் பொன்னுக்கும் பார்தனிலே வித்து
க்ஷணத்தில் ரசவாதம் சிராய்—கனத்த
சரக்கையெல்லாங் கட்டு சாங்கமாய்ப் பொன்னாகும்
துரக்குமே வாதந் துடருமே—பரக்க ச0க

நடக்காதே யென்று நன்மையாய்ச் சொன்னேன்
மடக்க ஒருசேதி பேதமாய்—அடக்க
மாகவே செய்தால் மயங்காமல் வாத
மாகவே யேவ லதுகேட்கும்—தாகமாய் ச0உ

தாம்ப்ர சுன்னம்.

தாம்பூரம் நீத்த ருட்டிகமாய்ச் சொல்லுகிறேன்
ஆம்நல்ல வாதி அறியக்கேள்—மாமாகேள்

செம்புமிக நீமிச் செயமாக ஆச்சுதென்ருல்
தும்பமற்றப் பொன்னுகும் சோதியாம்—நம்பு ௪0௩

இரதமது கட்டு மின்ப சயவாதம்
கரதலத்தில் வந்திருக்கும் காணும்—சுரதம்

வருகும் ரசவாதம் வல்லமையாய்க் கேளும்
தருதும் பலன்கள் தாட்சியில்லா—நருகும் ௪0௪

கைபாக மாய்ச்செய்தால் காரியமாம் நீறும்
மெய்பாக மாக விருக்குமே—நைபாகம்
செம்பைப் புளியிலேபோல் சேந்துமே தட்டி
நலம்பரவச் சொல்லுகிறேம் நாடியே-தென்பாக ௪0௫

வெடியுடனே சீனம் விரும்பியே தானிடைக்குப்
படியாகச் சேத்து பதமாக—நெடிதாக
கழுதையுடன் கத்தம் கனக்கவே தான்பிழிந்து
பழுது படாமலே பக்குவமாய்—நழுகாமல் ௪0௬

குண்டுமணி தானிழைத்துக் கூட்டிக் குழப்பி
பண்டுசெய் செம்புக்கு மூன்றிடையாம்—கண்டு
யெடுத்துக் குழம்பாக்கி யின்பமாய்க் கேளும்
அடுத்துச்செம்பைமின் ஞாத்தில் துவைக்க—கடுக்கக்

கரியில்வைத் தூதி காரணமாகத் துவைக்க
பரிகார மில்லாமல் பத்தியே—சரியாக

ஓரத்துமே பார்க்க ஒடியாதே போனல்
நடுத்து மறுபடியும் நாடியே—படுத்து [ருளா

வெட்டை கொள்ளத் துவைத்து வேதாந்தம் அப்பொ
கிட்டைகொள்ள வெட்டையாம் நிர்மலமாம்—செட்டு
யெடுத்து வுறுக்காமல் பேங்குமுகம் வாராமல்
அடுத்துமே ஆட்டெலும்பை அதில்வைத்து—தடுத்து

ரொம்பவே கீழ்மேலும் நேராகக் கொட்டி
தம்ப கசபுடமாய்த் தான்போடு—பம்பரமாய்
ஆத்தி யெடுக்க அடைவாகத் தானீறும்
பாத்திகளோ ரசவாதி பாகத்தை—சேத்து ௪௧௦

வெளுக்காதே போனால் விரும்பியே பின்னென்று
தளுக்காக யில்லாமல் தான்பாரு—முழுக்க
வீரமிட்டுத் தானரைத்து விதமாய்த்தான் போட
காரமாய்த் திராவகத்தால் காட்டியரை—பாரம் ௪௧௧

தாம்பூரந் தானீறும் தாக்க ரசவாதம்
யேங்காணு மென்று விதுகேட்கும்—ஆங்காணும்
சுன்னத்தில் தாம்பூர சுன்ன மிதுவாகும்
பண்ணத்த வாதிகளே பாகமாய்—சொன்ன ௪௧௨

தாம்ப்ரசுன்ன பலன்.

படிபோட்டுப் பாரு பாத்து யெடுத்து
வடியான சுன்னம் வலுமைகேள்—படியாக
விராலி யிலைக்கிட்டு வடிவாகத் தான்பிழிய
காராலி யிலைதானுக் கனமாக—பராமுகமாம் ௪௧௩

தண்ணீராய் நிற்கும் தாக்கு யெடுத்து
புண்ணிய மாகவே புத்திகேள்—நண்ணி
அபக்கரண்டி தன்னி லானைபைத் தானிட்டு
பயப்படா மூவிநீர் பற்றவே—நபப்படவே ௪௧௪

விட்டுமே காச்ச விரும்பியே தானேட்டம்
கட்டு நிரைத்துக் கனக்குமே—திட்டமாய்
சூடனுட தீயில் துரிசாக வாட்ட
ஆடகமாய்த் தான்வெள்ளி ஆகுமே—பாடி ௪௧௫

யெடுத்துமே செம்பட்டி லேத்தமாய்க் கோத்து
அடுத்துமே தாவடமாய் ஆண்மையாய்—படுத்து
கோத்துச் சிரசுதனில் கொண்டுமே போட்டு
பாத்துமே அஞ்செழுத்து பற்றுவீர்—சேத்து ௬௧௬
வுருச்செபிக்கும் போது வுண்மையாய்க் கேளும் [க்க
பருச்செவிக்கப் பாக்கியங்கள் பண்பாம்—நருச்செவி
மந்திரங்கள் மாரணங்கள் மாருமே சல்லியங்கள்
தந்திரங்கள் ஞானம் தழைக்குமே—பிந்தாமல் ௬௧௭
எட்டெட்டுஞ் சித்தியா மேற்ற ரசவாதி
அட்டாங்க யோகம் அருளுமே—தட்டாதே
தொட்டதெல்லாஞ் சித்தி தொன்மை ரசவாதி
பட்டபா டெல்லாம் பலிக்குமே—வட்டாக ௬௧௮
தங்கவித்தை யாகும் தாட்டிகமா போகம்
பங்கப் படாமலே பாரு—உங்கள்
குலங்க ளீடேறும் குற்றமிக வாராது
தலங்க ளபிமானந் தாக்கும்—நலங்கள் ௬௧௯
கட்டுகின்ற தான்ரசத்தைக் காதல் கரிதனிலே
செட்டுமே தானுருக்கச் செயமாகும்—வட்டு
வுருக்கவே நாலிலொன்று வுண்மையாய் தங்கம்
பருக்க நாகத்தைப் பாச்சியே—வறுக்க ௬௨0
எடுக்கக் களங்காகு மேழைமதி போகாமல்
தடுக்காவி நூரிலே தாக்கியெடு—நடுக்க
மில்லாத தங்கமா மிருக்குமே கேளும்
சொல்லா ரசவா தஞ்சுயம்பாம்—நல்லாய் ௬௨௧

தாம்பூர பற்பமதை தாக்கப் பணவிடைதான்
வாம்பூர குன்மம் வகைபாகும்—சோம்பல்
இருந்தநோ யெல்லாமிருப்பிடத்தை விட்டு
அருந்தவே போகும் அடைவாக—திருந்த ௪௨௨

செம்பதுதா னீற்றுச் செயமான வாதமாம்
அம்பொன்ற நவலோகம் அடைவாக—நம்பும்
பழுக்குமே யென்று பதிவான கைபாகம்
மழைக்குமே போகா தனைப்பாரு—திழுக்க ௪௨௩

வாதிகள் செய்கை.

வகையறியார் வாதி வல்லமையைப் பேசி
நகையாகத் தானகைத்து நாணுவார்—பகைபாக
செம்புவது நிறமே செயமாகப் போகுமே
நம்பி ரசவாதம் நாடுமே—இப்புவியில் ௪௨௪

வாதமென் றுலெளிதோ வாய்வாத மாகும்
பேதப் படாமலே பேசுவார்—பாசமாய்
அலைந்து வுலகில் ஆடித் திரிந்து
அலைந்து வெகுமலைகள் சுத்தியே—மூலைந்து ௪௨௫

கூடாத பேருடனே கூடித் திரிந்து
ஆடாத சத்திபூசை ஆர்ப்பரித்து—நாடி
கும்பிட்டுப் பாத்திரத்தை காட்டிக் குடித்து
வம்பிட்டு சண்டைக்கி வாய்ப்பட்டு—தெம்பிட்டு ௪௨௬

ஆடாத கூத்தெல்லாம் ஆடித் திரிந்து
பாடாத பாடெல்லாம் பாடியே—தேடி
லேகியங்கள் தின்று மினைவழிந்து இருமல்மிஞ்சி
பாழிலே வீணுப் பலங்கெட்டு—போகி ௪௨௭

யெல்லார்க்குங் கள்ளரா யேழ்பிறப்பும் தீதாகி
பொல்லாப்பு பட்டு புலம்பியே—வல்லாய்
திரியாமல் தாம்பரத்தைச் சீர்தூக்கி நீத்திப்
பெரிதாப் ரசங்கட்டிப் பேசு—வறிவாக ௪௨௮

வங்கசுன்னம்.

வங்கத்தை கைபாக மாகவே சொல்லுகிறேன்
சிங்கமென நீத்த செயலறிநீ—உங்கள்
குலதெய்வம் போல குமிப்பாய் நினைத்து
அலையாமல் வங்கம் அதில்நில்லு—கலையாமல் ௪௨௯

வங்கத்தை காய்ச்சி வளமாக வேழுதிறம்
சிங்கமெனத் தோய்க்கச் சொல்லக்கேள்—பங்கப்
படாமல் வெடியுப்புப் பாணியால் தானரைத்து
தகடாக் குழம்பில் தான்தோயாய்—வகடாக ௪௩௰

துவைத்துமே யேழுதிறம் தோய்த்துமே பார்த்து
தவத்துமே புண்ணாக்கித் தானுள்ளே—கவுத்து
மூடிக் கசபுடமாய் முக்கியமாய் தானிடவே
ஆடியே சங்குபோ லாகிவிடும்—தேடி ௪௩௧

யெடுத்துமே சொல்வே னிதமாகக் கேளும்
அடுத்துமே கார மதில்சேர்—தடுத்து
சீனத்தை பூத செயமான சுன்னமாம்
காணைத் திவ்விடைக்கிக் காட்டியே—யேனைதான்

அரைத்துரவி காயவைத்து அன்புடனே அஞ்சு
துரைத்துச்சுன்னங் கீழ்மேலு மிட்டுமே—நிரைத்து
புடமிட் டெடுக்க பேர்பெரிய சுன்னமாம்
நடமிட் டனுபோக நாடுவீர்—திடமாக ௪௩௩

தங்கமது நீறும் தாளகமும் நீறும்
பங்கமாய்ச் சாரமது பாவிக்கும்—சிங்கம்
வருகுமுன்னே பட்டு வகையாகத் தான்காட்டும்
தருகுஞ் சிவயோகம் தானாகும்—பருகும் சஙச

போகாத வாதத்தை போக்கோடே சொல்ல
வாகாத வங்கத்தை வைத்தூது—காகாத
வெல்லாமு மாகு மின்ப ரசவாதம்
சொல்லால் பெரியோராய்ச் சொல்லுவார்—நல்லாய்

அடிமறத்தி லேறி அடைவாகத் தொத்தினால்
முடிமறத்தி லேறலா முண்மையாம்—படியாக
விருந்தால் நடந்து யின்பமா யேரி
வருத்தாக வுச்சிதனி லேறலாம்—முருந்த சஙசு

வங்கமென்ற சொல்லை வகையாக கைபாகம்
சிங்கமென்ற ராசனைத்தான் சிக்கியே—பொங்க
பாகப் படியே படிவித்துச் செய்து
தாகமாய் வங்கத்தைத் தான்பாரு—யோகமாய் சஙஎ

தாம்பூரஞ் சொன்னேன் தாக்கவே வங்கத்தை
வாம்பூர வைபாக நாடியே—நாம்பூர
ரசங்கட்டச் சொன்னே நாடியே கைபாகம்
தசம்கட்ட நன்றாகக் காரு—வசமாக சஙஅ

நாகசுன்னம்.

நாகத்தை நீத்த நலமறியச் சொல்லுகிறேன்
பாகமாய் நாகத்தைப் பாத்துமே—யாகமாய்ப்
பொரும லடங்கப் போக்கோ டுலுப்பையெண்ணை
தரும விருபத்தொருகா சாய்த்துமே—வருமம் சஙசு

சாத்துமே தானெடுக்க சாத்தியே கண்ணடங்கும்
பாச்சுமே வுருக்கிப் பதமாக—தேச்சு
பொடியாக யிட்டு பேர்பெரிய வீரத்தை
அடிவாக கால்வாசி அதிலிட்டு—படியாக சச0

அரைத்து வில்லைகாய அளம்பாக் கிளிஞ்சனீற் [து
றரைத்துடனே போட்டுள்ளே தான்புடமாம்-பரைத்
புடமிட் டெடுக்கப் பேர்பெரிய சுன்னமாம்
தடமாக வீரங்கால் தாக்கியே—நடம ட சசக

அரைத்துத் திராவகத்தால் அன்பாகத் தங்கம்
கரைத்துத் தகடதனில் கட்டியே—புருக்க
புடமிட் டெடுக்க பேருன தங்கநீர்
தடபட்டுச் சுன்னம் தண்மையாம்—நடமிட்டு சசஉ

எடுக்கக் குருவாகு மின்ப ரவிதன்னில்
அடுத்து அன்பதுக்காகு மாணியாம்—படைத்து
காஞ்சனமு மாகும் கடிய நவலோகம்
தாஞ்சமில் லாமலே தான்பழுக்கும்—வாஞ்ச சசங

நாகம்போ லேவேதை நலமாகக் கண்டதில்லை
பாகமா யுன்மனசு பத்தியே—நாக
சணபேதியாம் நாகம் சத்தமுதல் தங்கம்
பணபேதி யாகும் பரிசுதான்—சினபேதி சசச

வாதிகள் புறட்டு.

சோரத்தை காட்டவே துப்பரவாய் வாதி
ஆரத்தைப் போலே அலைகுவார்—நாரொத்த
ஊரமஞ்ச ளோடும் வுழுண்டு திரிந்து
யாரமில்லை யென்றுலைந்து பாவிப்போர்—நாரம் சசரு

கட்டுபடா நாகத்தைக் காட்டிச் சிறிதுபேர்
பட்டுப் படாகப் பதைப்போரும்—செட்டு
செம்புதனில் கொடுத்து செபதங்க மாச்சுதென்று
வம்புக்காய் வாதி யலைந்தோரும்—தெம்பாக சசரு

சுட்டுக் கரிபெடுத்து சோம்பலாய்க் கொட்டி
பட்டு அலைந்து பகர்வோரும்—செட்டியாய்
நாணயங்க ளில்லாமல் நாடி யலைவோரும்
பாணமென்று கள்குடித்துப் பாரிலே—ஞானம்

போலே யிருந்தும் புலம்பித் திரிவோரும்
ஆலயங்கள் தேடி அலைவோரும்—பார்தனிலே
மௌன மாயிருந்து மாட்டி யுலகத்தை
தவநமாக் கெடுத்து தான்பணத்தை—கவநமாய் சசஅ
பணங்கள்தந்தால் வாதம் பாவிப்போ மென்று
சுணங்கன்போ லேகடிக்குந் தோசிப்போல்—இணங்க
பல்லாக்கி லேறிப் பதிய மவுனமாய்
யெல்லாந் தெரியுமென்று யேங்கியே—சல்லாப சசகூ

சிஷன்கைபிற் பணத்தை சீக்கிரமாய் வாங்கி
தாழப் புதைந்துத் தவிப்போரும்—நாளாக
ஆகட்டு மென்று சொல்லி அலையவைத்து
பாகமில்லை யென்று பதைப்போரும்—தாகமா

யிப்படியே சொல்லி யிதமாய்த் திரியாமல்
மைப்படியும் நாகத்தை வளமாக—வெப்படியும்
நீத்தியே தங்கம் நிர்ணயமாய் மேலே
ஆத்தியே கட்டு அடைவாக—பாத்து சருக

தங்கத்தை நீற்றினல் தங்க மதுவாகும்
பங்கப் படாமலே பற்றுவீர்—சிங்கம்

புதைய விருந்தால் போக்கோடே தானப்பாம்
வதையாக தானிருக்கும் வண்மையா—பிதையாக

வெடியுப்புசுன்னம்.

பொட்டணையின் வேதை போக்கோடே சொல்வேன்
கட்டளையாய் நம்பி கருத்தாக—போட்ட
வெடியுப்பு அஞ்சு விளங்கியதோர் சினம்
அடியான அஞ்சு அடைவாக—பொடியாக ௪௫௩

அரைத்துப் பழச்சாற்றால் ஆணவில்லை கட்டி
பரைத்துக் கரியில்வைத்து பக்குவமாய்—நிரைத்து
ஆகிலை நீறும் வுள்ளபடி பூக்கும்
பாதியே வீரமுடன் பத்தியாய்—வாதியாய் ௪௫௪

அரைத்துத் துரிசியின்மேல் அப்பிக் கனமாக
நிரைத்து நெருப்பில் நேராக—பரைத்து
அண்டவே வாட்டி அடுக்காக உப்புசுன்னம்
சுண்டவே மண்ணதுவும் சுவறவே—முண்டாக ௪௫௫

செய்து புடம்போடு சிறப்பாக குருவாகும்
நைதுவெள்ளி தன்னிலே நாலு—பைய
ஒன்று கொடுக்க வுண்மையா யேழாகு
நன்றுப்புக் காவிக்கும் நல்குமே—பன்று ௪௫௬

வுழுது பயிரிட்டால் ஓங்குமே வெள்ளாண்மை
அழுது புலம்பினு லாகுமோ—முழுதும்
சோதித்தால் தோணுஞ் சொற்பெரிய வாதம்
பாதியே பாத்தால் பலனுமோ—நீதியாய் ௪௫௭

ஒருதிறந்தான் தப்பினல் ஒத்துமே பாத்து [தான்
இருதிறந்தான் சோதித்தா லெய்துங்காண்—மறுதிறந்

செய்யு மூலகம் செப்பரிய ஞானம்
பைய வருமெனவே பாரு—வுய்வுபட
வாதத்தை விட்டாக்கால் வடிவில்லை ஞானம்
சேதப்பட வுலகில் சிக்கியே—பாத ௪௭௧

மெல்லார்க்குங் கள்ளரா யெழுபிறப்புந் தீதாக
நல்லாய் பெருந்திருட னாகியே—சொல்லா
திருக்குமோ லோகம் திருக்காக தான்வையும்
செருக்குமே கைபாகம் செய்குவாய்—நினைத்து ௪௭௨

துருசைநீ பார்த்து துப்பறவா யேறி
நரிசையா யிரதத்தை நாடியே—பரிசையாய்
கெவுன சித்தனுகி கெடப்படவே வாழ்ந்து
தவனமுடன் யோகமெனத் தான்பார்த்து—புவன ௪௭௩

சக்கரத்தைப் பாரு தடையறவே யோகம்
பக்கமுள்ள சிந்தூரம் பண்ணி—மிக்க
ராசயோகம் பெற்று யின்பமாய் வாழ்ந்து
தரா சௌபாக்கியம் தாண்டியே—வராசை ௪௭௪

யிருக்கும் அயந்தனையே யின்பமாய்ச் சொல்வேன்
பெருக்க நினைமனமே பேசவீர்—உருக்க
யிரும்பென்று வெளிசா யினிய தங்க மாகிவிடும்
அரும்பென்று வுள்ளே அசைவாய்—தரும்பார் ௪௭௫

துருசு அயச்செம்பு

செய்து முடித்தால் செயமாகும் வாதம்
நைதுதனி விரும்பை நாடுவீர்—பைது
அயமதனை ராவி அன்பாக பத்து
நயமாக வெங்காரம் நாடியே—பயமாக ௪௭௬

பழச்சாறு விட்டு பக்குவமாய்த் தானேழு
நழச்சாறு நாளேழு ஆட்டியே—பழச்சாறு

ஆட்டி அரைத்து அம்பாக மெல்ல
தாட்டிகமாய் மேல்சட்டை தானுருக்கி-வாட்டி சஎஎ

எடுத்து மணியாக யின்பமாய் தூரவைத்து
அடுத்து அதின்மே லரையக்கேள்—தடுத்து

கெந்திபல முக்கால் இருபையுள்ள சூடனரை
அந்தியலம் கால்வீ ரம்மரைக்க—சுந்தரமாய் சஎஅ

அரைக்க திராவகத்தா லாட்ட மெழுகாகும்
நிரைத்த துருசுபலம் நேராக—புரைக்க

கண்டாமே யச்சத்தை காட்டி யிதின்பேரில்
துண்டா விதனிலே தூக்கியே—பண்டாக சஎகூ

காயவைத்து மேலே கட்டாயம் கெந்தியைத்தான்
பாயமாய் கூட்டி நல்ல பக்குவமாய்—நேயமாய்

சுண்ணாம்பு செய்து சுருக்காக மண்கவசம்
நண்ணாகச் செய்துபினி நாட்டுவீர்—பண்ணாக சஅ0

யெடுத்து கஜபுடத்தி லின்பமாய் போட்டு
அடுத்து மேல்கவசம் அதைத்தள்ளி—படுத்து

வுருக்காவி யாகும் வுண்மையாய் பத்திலொன்று
நருக்கா மதிதனிலே நாடியே—பருக்க சஅக

மாத்துமே யேழாகும் வையகத்தோர் போற்றுவார்
சாத்துமே யச்செம்பு தான்வேதை—பாத்து

யிதுலகுவு சொன்னே னேத்தமுள்ள வாதிகளே
அதுலகுவாய் அபத்தை அன்பாக—பதுலகுவாய்

பார்த்தால் தெரியும் பதிய அயந்தன்னை
சேர்த்தாலே பொன்னு செயமாகும்—நேர்த்தியாய்
அயச்செம்பு செம்பாய் அடைவாகத் தானெடுத்தால்
பயப்படா சீவனங்கள் பண்ணலாம்-நபப்படவே ௪௮௩

என்று முனிவ ரியம்பினார் சொல்லி
அன்று முனிவ ரநேகமாய்—சென்று
படித்தா ரநேகபுத்தி பத்தியா யெல்லாம்
தடுத் தாண்டுகொண்டார் தயவாக—வடியாய் ௪௮௪

யூகிமுனி சொல்லை யுற்றுக்கேள் நெஞ்சே
பாகிமுனி யென்று பலம்படைத்து—யேகிமுனி
அண்ணா மலையி லடுத்தகரு நெல்விதனில்
பண்ணார் தபசு வுடன்பாவித்து—நண்ணாய் ௪௮௫

மரத்தடியில் வீற்றிருந்து வல்லமையாய் பாடி
கரத்தட்டில் சொன்ன கருத்துக்கேள்—வரதாக
சொன்னேன் பெருநூலு சோகிபெற வாதம்
நன்னயமா யந்நூறு நல்கினேன்—பன்னகமாய்

சிங்கிடிப்பு சொன்னேன் சிறப்பாக மன்னூறு
அங்கமாய் பாடி அறங்கேத்தி—துங்க
வகுப்பு முப்பத்திரண்டு வகையாகப் பாடி
தகுப்பாக கைபாகம் தாக்க—நருப்பாக ௪௮௭

வுலாவிலே சொன்னேன் வுண்மை ரசவாதம்
பலாபலங்க ளெல்லாம் பகர்ந்தேன்—நலமாக
கைபாக மெல்லாம் காதலாய்ப் பாடி
மெய்பாக நல்ல விபரமாய்—செய்பாகம் ௪௮௮

யூகிமுனி அகத்தியர் தேரையர் முதலிய சித்தர்களைக் கண்டது.

அகத்தியனார் கேட்டு ஆனதொரு நன்னூலை
தகத்துடனே கேட்டு தடுமாறு—வகுத்து
கேட்டுக் கிருபைசெய்து கேள்விகள் தான்செய்து
பாட்டுக் கொருபா கம்பரிந்தார்—நாட்டு சஅகூ

வுலகத் தெல்லோரு முண்மையாய்த் தான்பிழைக்கக்
கலகப் படாமல் கருணையாய்—நலமாக
தேரையனைக் கண்டு தெளிந்தேன் தெரிவையைப்போல்
ஆராரு யென்றார் அவனைநான்—பேராக சகூ0

பாதம் பணிந்தேன் பரிவாக யூகிமுனி
பேதமிலா யூகிமுனி பேர்பெறவே—போதம்
உறுவா யென்று ருண்மை பவரனுப்ப
சுருதிபோலே நின்றே னுண்மையாம்—பருதி சகூக

சித்தரெல்லாம் வந்து சிறப்பாக வாதத்தை
அத்துடனே கேட்டார் அறிவாகப்—பித்தாய்
சொன்னமொழி யெல்லாம் சொற்பெரிய தேனுகும்
கன்னமொழி கரும்புங் கண்டேன்காண்—நன்னயமாய்

துரிசதுவுஞ் சொன்னேன் சுருக்கமா கக்கேட்டார்
தெரியபடச் சொன்னேன் சிந்தையாய்—வரிசையாய்
கைபாகஞ் சொன்னேன் காதலரோ யிப்போ
மெய்பாக நாட மிகபாத்தேன்—செய்பாகம் சகூ௨

ரசங்கட்ட துருசுகுரு-
அகத்தியர் முறை.

சொன்னேன் துருசுநீர் சோதி ரசங்கட்ட
நன்னயமா கப்புவியில் நாடுவீர்—சொன்ன

துரிசைத்தான் சொல்வேன் துடியான கைபாகம்
வரிசையாய் சொல்வேன்—வகைபாரு ௪௯௪

சொல்வேன் சயசுன்னம் தொல்லுலகி லெல்லோரும்
நல்வே னுனதுமை நாடியே—செல்வம்

வருத்தத் துரிசைநீ வைத்துமே பாரு
பருகுமே வாதம் பலிக்குமே—செருக ௪௯௫

பூநீர் பலம்பத்து பூட்டவே கேளும்
ஆநீர் திராவகம் அதிற்போடு—வாஞேர் [த்து
போலுமெனத் தான்களையும் போகமாய்த் தான்வறு
ஆலுமென வுப்பாகும் அதில்வேதை—சிலைபோல்
விரம்பூ ரம்போட்டு விருப்பமாய்த் தான்கலக்கி
ஆரமாய்க் குளம்பு அடைவாகும்—பாரம்
நீரில் கலக்கி நிலவறமாய்த் துரிசுபலம்
பால ரவியில் பந்துநாள்—பாரில் ௪௯௭

உலரவைத்து மேலே ஓங்கினதோர் வெள்ளியம்
அலரக் கரண்டி அதில்போட்டு—இளர
வுருக்கி வெடிப்பு வுண்மைபிடை சாகமட்டும்
நருக்கிப் பொடிபோட்டு நாடியே—பெருக்க ௪௯௮

யெடுத்துமே கொட்டி யினிதான சீனமது
அடுத்து வுணத்தி அதிற்பத்தி—கடுத்து
திராவகத்தை விட்டுத் தளரஅனாத்து வில்லைப்
பராமுகமாய் ரவிதனிலே பாகமாய்—நிராமுகமாய்
காயவைத்து குக்குடத்தில் காட்டுமுன்னே நீறும்
பாயமாய் முன்துருசில் பதிவாக—நேபமாய்
கட்டி வலுக்கக் காடைப் புடம்போட
முட்டிவெள்ளை யாதி முடிவாகும்—வட்டி ௫00

வங்கம் வந்தவிடத்தில் வலுவாக வீரமிடு
துங்கத் தூரிசுமேற் சூட்டுவீர்—பங்கம்
துருசு சயதுருவாம் துப்பரவா யாகும்
பருச்னமாம் வேதை—பகரு ௫0௧
யெடுத்து விலாரி யிலேக்கிட்டுப் பிழி
படுத்துமே தண்ணீர் பதுவாம்—நடுத்து
புண்ணியமாங் கரண்டி போட்டு ரசந்தன்னை
நண்ணியே விட்டு நலமாக—கன்னியமாய் ௫0௨
காச்சவே யிட்டவியம் காதலாய்த் தானுருட்டி
பாச்சவே சூடன் பதிவாக—ஏச்ச
கொளுத்திவிட்டு வாட்ட குணமாகக் கட்டும்
பளுத்திடும் தங்கமாம் பாரு—மூளுக்க ௫0௩
சோதித்தால் தான்வருகும் சொற்பெரிய வாதம்
பாதிமதி யணிந்த பரமனார்—நீதி
தங்கமொன்று நாகமொன்று தாக்கி வுருக்கிச்சேர்
பங்கமுள ரசத்திற் பாச்சியே—சிங்கம் ௫0௪
அரைத்து யெரிகுப்பி ஆண்மையாய்த் தான்சிவக்கும்
பரைத்துமிகச் சிந்தூரம் பாகமாம்—பரைபோல்
இருக்குமிகச் சிவந்து யின்பமாய் தோன்றும்
பருக்கு மெடுத்துப் பதம்பாரு—பொறுத்து ௫0௫
யெடுத்துரவி முன்றி லின்பமாய்த் தான்கொடுக்க
படுத்ததங்க மாத்துப் பத்துமாம்—நெடுத்து
யிப்படியே வாத மிருக்கும்வகை சொன்னேன்
எப்படியும் பாக மறவாதே—வெப்படியும் ௫0௬
வாதங் கிடைக்கும் வலதாகச் சொன்னக்கால்
சேதம் வருமென்று திரமாக—வேதம்

சொற்படியே சொன்னேன் சோதி ரசவாத
மெப்படியும் வந்து யிதமாக—சொற்படிக்கு ருOஎ

துருசுசுன்ன மாகும் சுய்மாய் ரசங்கட்டும்
பரிசன வேதைபாம் பாரு—வரிசையாய்
புரண்டு துரிசைத்தான் புரண்டுமுண்டு பாரு
வரண்டு ரசத்தை வலுவாகும்—திரண்டு ருOஅ

எப்படியும் கட்டும் யேறைமட நெஞ்சே
தப்பித் திரிந்து தவியாதே—இப்போ
ரசத்துக்கு வேறு நலமாகச் சட்டையுண்டு
விசையாகச் சட்டை விருப்பமாய்—திசையாக ருOசு

கட்டக்கேள் வாதிகளே கனமான துருசிநீர்
முட்டக்கேள் செய்தால் முதலாகும்—சிட்டர்களே
யேங்கித் தவியாம லின்பமுள்ள தான்துரிசை
பரங்காகப் பாத்துப் பதம்படுத்து—தாங்கி ருகO

துருசுகுரு - தன்மந்திரி முறை.

வரிசையாய்ச் செய்து வருத்தபடா ரசத்தை
வுரிசையாய்க் கட்டு வுண்மைபாம்—பரிசையாய் [ன்
அகத்தியரும் ஆடும்வித்தைஅன்பாய் துரிகசொன்னே
நகத்துடனே தன்மந்த்ரி தான்துரிசை—நயத்துடனே

சொல்வே னுலாதனிலே சொல்லக்கேள் வாதிகளே
வெல்லுரசந் துருசி இன்பமாய்—கொல்லும்
இந்துபலம் ஒன்று வின்பமுள்ள திராவகத்தால்
பந்து அதையட்டிப் பதிவாக—வந்து ருகஉ

வறுத்து வில்லைகட்டி வல்லமையாய்ச் சுன்னம்
முறுத்தகீழ் மேலிட்டு மூடியே—சிறுத்து

புடமிட் டெடுத்து போர்பனியில் வைக்க
அடவுடனே சயநீரு மாகும்—திடமாக ௫௧௩

பச்சைச கற்பூரம் பலமாக பீங்கானில்
இச்சையுடன் திராவகத்தா லிட்டு—லச்சையற
சாரம் பலமொன்று சாதகமாய்த் திராவகத்தைப்
பாரம் பலமொன்று பக்குவமாய்—வாரம் ௫௧௪

ஊத்தியே வைக்க வுண்மையுள்ள வுப்பாகும்
பாத்தியே வில்லை பதமாக—சேத்து
புடமிட் டெடுக்க பேர்பெரிய சுன்னமாம்
அடவுடனே மூன்று அடைவாக—திடமாக ௫௧௫

சேத்துத் திராவகத்தால் செப்பமாய் விட்டு
பாத்துத் தயிர்போல பால்வெண்ணை—வாத்து
துருசு ஒருபலத்தை தோச்சுமே போட்டு
வரிசையாய் நாளெட்டு வல்லமையாய்—நரிசை ௫௧௬

சுக்காணைப் போலே துய்யவெள்ளை பாரு
மிக்காகத் தானிருக்கும் விருப்பமாய்—சிக்கு
வங்கசுன்னம் பண்ணி வண்மை யதின்மேலே
சிங்கக் கவசமிடு சிக்கிரமாய்—பங்கம் ௫௧௭

படவே கவசம் பத்தவே கட்டி
நடவென்ற காடை நலமாக—புடமிட்
டெடுத்தால் குருவாகு மின்பமுள்ள வாதம்
அடுத்தால் நலமாகும் அன்பாய்—தொடுத்து ௫௧௮

துத்தி யிலையில் துடியாகத் தான்போட்டு
பத்தியுட னேமூன்று நாள்பார்க்க—சித்தியாம்
சாறுவருந் தான்பிழிந்து சாத்திரிய சூதத்தை
வாறுடனே போட வலுமையாய்—சோறு ௫௧௯

போலக்கொதி யிடவே போக்கோடே தான்திரண்டு
பாலநட செத்திரம்போல் பத்தியே—வாகா
கட்டிமணி யாகுங் கசடற்றுத் தானுருகும்
விட்டுவினிச் சொல்லுகிறேன் மேன்மையாய்—முட்டி

யேமமொன்று நாகமொன்று யேத்திடும் மூண்மணி
யாமமொன்று தானுருக்கு அடைவாக-தாபமாய்[யில்
சேத்துருக்கிச் செம்புதனில் நூறி லிரண்டு
பாத்துக் கொடுக்கப் பத்தனையாம்—நேத்தியாம் ௫௨௧

சொன்னபடி செய்து சுபம்பா யாவிதனில்
பன்னமாக் கொடுத்துப் பத்தியே—முன்னே
யிருந்து செயமாக்கி யின்பமுள்ள வாதிகளே
பொருந்துசிவ னிஷ்டை பூண்டுமே—இருந்து ௫௨௨

சிவயோகம் பாரு சித்த மாயத்தா
லவமாகத் தான்திரிந்து அலையாதே—பவமாக
சொன்னபடி செய்து சோதிச்சுப் பாகமாய்
நன்னயமாய்ச் செய்து நலமாக—முன்னியே ௫௨௩

தன்மந் திரிநூலில் தாட்சியாய்ச் சொன்னன்
வன்மமுள்ள கைபா கம்மறைத்து—உன்னிதமாய்
சொன்ன ரடியேற்கு சோதிச்சு யான்சொன்னேன்
முன்னமே நூலில் முகித்தேன்—பின்னை ௫௨௪

ஒருவருடன் பேச்சை யுண்மையாகக் கேட்டு
வருவது மில்லை மலையாதே—நிருபாக
மாகவே சுட்டு மலைத்துத் திரியாதே
தாகவே நன்னூலைத் தான்பாரு—யோகம் ௫௨௫

வருமெனவே யோகம் வருகும் வரும்போது
தருமெனவே சித்தி தானகும்—பருமெனவே

கருத்துக் கிசைந்து கனிவாகத் தான்பாரு
வருத்தப் படாமல் மனதற்றே—பொருத்த ௫௨௬

யிருந்தா லகுவாத மழைக்குமே புக்கிறு
விருந்தால் சமாதிதா னெய்துமே—வருத்தினால்

வந்துவிடும் வாதம் வகையாக யோகமுதல்
தந்துவிடு ஞானம் சமாதிதான்—சிந்தனையாம் ௫௨௭

வாசியோ கம்முடியும் வல்லமைத்தா னுண்டாகும்
பாசுபத மெல்லாம் பதறுமே—நாசி
யோகமக ராசனைப்போ லொக்க விருந்து
பாகமாய்ச் செய்து பதம்பாரு—தாகமாய் ௫௨௮

சிந்துமே வாதம் செயலரிய யோகமுதல்
வந்துமே நின்று மருவுங்காண்—முந்தத்
துரிசை முடித்துத் துப்பறவாய்ச் செய்து
பரிசமென ரசத்தை பாச்சியே—உருசை ௫௨௯
கண்டு மனங்கனிந்து காதல் ரசவாதி
கொண்டுசிவ பூசையிலே கோதியே—நின்று

பரிசிகத்தில் வேதை பதிவா யிருந்துமென
•தெரிசிகத்தில் தங்கத்தைத் திரமாக—வரிசையாய்

லோகம் பழுக்கும் லோகாதி லோகம்
பாகமாய்ச் செய்து பதிவாக—வாதிகளே

பிரதமது கட்டி யின்ப ரசவாதம்
பரதமாய்க் கண்டு பதிவாக—சுரந்தியா ௫௩௧

யென்றிப் படித்தா னியம்பிரச வாதிக்கு
அன்றிப் படித்தா ரநேகமாய்—சென்று
யிருத்தேன் சிந்தூர மின்பமாய்த்திரண்டு
வருத்தேன் சிலகாலம் வகையாக—வுருந்த ௫௩௨

நிலனைத்தான் கொண்டு நேராய் ரசவாதம்
ஆலயம் போல அதில்நில்லு—காலாங்கி
யடக்கும் வாதம் பத்தியாய் செய்து
பசியடக்குஞ் செம்பு பதமாக்கி—வசியமாய் ௫௩௩

செய்து முடித்து சிறப்பாக ஞானங்கள்
பைது ரசத்தைப் பவழமாய்—கையால்
அரைத்துச் சிந்தூரம் அன்பாகக் குப்பியினில்
பறைத்து அடைத்துப் பதமாக—பொரித்து ௫௩௪

துருசுகுரு - தேனாயர் முறை.

தின்முலே காயசித்தாம் திட்டமாம் வாசி
யென்முலே யோகமென வின்பமாம்—நன்று
தேரர்சொன்ன தான்துரிசை செப்பக்கேள் செப்பில்
பாரமில்லை கைபாகம் பாரு—நேரமாய் ௫௩௫

சிவனுமுறை செய்த சிவமான பார்பதியும்
அவனும்நந்தி செய்த அடைவாக—நலமாக
செப்பினர் நீலனைத்தான் செயமாகச் செய்தால்
அப்புச் சிலத்தே அறிவிப்பேன்—இப்புவியில் ௫௩௬ ◦

காணாது காணலாம் காட்சிமிக வுண்டாகும்
வாணாது நல்ல படிவாகும்—தோணாதே
போனால் துரிசை புகட்டியே வைத்திடுநீ
பானால் பதிவாகும் பார்மீதில்—தானாக ௫௩௭

வடித்த திராவகத்தில் வலதாகச் சொல்லுகிறேன்
நடித்த வெடிசுண்ணம் நலமாக—பொடித்து
போட்டுமே மெள்ள புகலரிய மொழுமொலென
வாட்டுமே கரைந்து வகையாக—தேட்டு ௫௩௮

துரிசைநீ தோச்சு துடிவாகப் பத்துநாள்
வரிசையாய் தோய்த்து வழியாக—நரிசையாய்
சூரிய னிலாக்காய சூட்டிபெடு பின்னலே
வாரியாய்ச் சினம் வகைபத்து—கரியில்வைத்து ௫௩௯

ஆகிடவே வெண்ணையாய் வுண்மையாய் நீறும்
பாகிடவே திராவகத்தை பாத்துஅரை—காதி
அரைத்து ரவிகாய அன்பாய்ப் புடமிட்டு
தரைத்து யெடுத்துத் தயவாக—வரைத்து ௫௪0

ஆட்டிக் கவசமிட்டு அப்பாலே கேளும்
பாட்டிரவி காயவைத்து பண்பாக—தாட்டிகமாய்
தீநீ ரறைத்துத் திடமாய்க் கவசமிட்டு
பானீரின் மேல்கவசம் பத்தியே—சாநீரில் ௫௪௧

சேவல் புடத்தில் திரமாகச் செம்பாகும்
பாவக் குருவினல் பாகமாம்—யோகமாம்
அண்டாண்ட மாடும் ஆதி குருவாகும்
பிண்டம் வழலையெனப் பேசுவீர்—கண்டா ௫௪௨

தில்லம்பூால் தன்னில் திரமாகப் போட்டுவைக்க
நல்லாய் முறியுமே நாடியே—வல்லாய்
அயச்சட்டி யிட்டு அரன்பீச மிட்டு
நயப்படவே கோதிபிடு நாடியே—பயப்படா ௫௪௩

சென்று ரசங்கட்டும் சிறப்பாக் கரியில்வைத்து
நன்று வுருக்கினு லாடிவிடும்—நின்று
தங்கமொன்று நாகமொன்று தாக்கி யுருக்கி
யுங்கள்ரவி நூறி லுருக்கிபிடு—சிங்கம் ௫௪௪

போலாகப் பாய்ந்து போதமென நஞ்
செயலாகத் தங்கம் அடைவாகும்—செபலாய்

வருத்தப் படாமல் வளமாகத் தான்பாரு
கருத்துடனே யாகுங் கனகமயும்—பகுத்து ருசரு

நாகசயநீர் - சரக்குகள்கட்ட - மூலிகைரசம்பிழிய.

நாகஞ் சயநீறு நலமாகச் சொல்லுகிறேன்
பாகமாய்ப் பாரு பதமாக—வேகா
சுத்திபண்ணித் தானெடுத்து சுத்தவன்னி ரசத்தை
பத்தியுட னிடைக்கிப் பாச்சியே—சித்தி ருசசு

வருக்கி ரண்டிஞ் சேத்து வுண்மையாய் வீரம்
பருக்கபிடை யொன்றாக பாச்சியே—வறுக்க
திராவகத்தை விட்டு தளரவே வைத்துவிட்டு
பராமுகமாய் நாளெட்டில் பாரு—சராபோக ருசஎ

மாகவே நீரெல்லாம் வாங்கியொரு பீங்கான்
தாகவே அப்பால் தனைவைத்து—சேகரமாய்
துரிசை யொருபலத்தில் துப்பறவா கக்கரியில்
வரிசையுட னூதி வைத்திடவே—வரிசையாய் ருசஅ

வெளுக்கும்வெள்ளை யாகும் வேகமாய்த் தானிருக்கு
தளுக்காய்ச் செயநீரில் தான்தோய்த்து—முழுக்க [ம்
யெட்டுநாள் போட்டு யிதமாகப் பார்நீரில்
செட்டுப் படவுள் செலுத்தியே—முட்ட ருசகூ

சட்டியிட்டுத் தானெரித்து சாமநால் தானெரித்து
முட்டவே பிரிக்க முக்கியமாம்—சிட்ட
யெடுத்துமே பாத்தா லேத்தமாய்த் தான்சிவக்கும்
அடுத்துக் குருவாகும் ஆண்மையாம்—அடுத்து ருரு0

மூலிகை யிட்டு முறுக்கியே தான்பிழிய
வாலிபமாய்க் காட்டும் வசமாகும்—பாலித்து

ரசமுடனே வீரம் நன்மைபெரு தாளகமும்
விசையாகத் தான்கட்டும் விரும்பியே—தசமாக
லிங்கமுதல் பூரம் நிலவற மாகத்தான்
பங்கப் படாமல் பதைக்குமே—துங்கம்
வேதையாம் வேதை விருப்பமாய்த் தானுகும்
பாதையாம் நல்ல மாத்தாகும்—காதை ௫௫௨
சொல்ல முடியாது சொல்பெரிய வேதைகளை
வல்லபமாய்ச் சொல்வேன் வகையாக—நல்லா
யிருக்க ரசவாத மின்பமாய்த் தான்பாரு
பெருக்க முடித்துப் பிலம்பாரு—செருக்க ௫௫௩
யேழை ரசவாதி யின்பமாய்த் தானே
பாழைபட வதைத்தால் பாக்கியமாம்—வேடம்
எடுத்தாலே கூத்துக் கிசையு மடநெஞ்சே
அடுத்தால் ரசவாத மாகுமே—கொடுத்தால் ௫௫௪
வாங்குவார் தானுலகர் வாதைப் படமாட்டார்
தாங்குவார் வாதந் தனைப்பொய்யா—யேங்குவார்
வாதம் சிவயோக வாதிக்கு வுண்டாகும்
பாதம் உலகத்தோர் பத்தாது—யேதுக் ௫௫௫
கென்றுசொல் வாருலக ரேங்கித் திரிந்து
அன்றுதா நூல்களையே ஆராய்ந்து—நன்றி
பரதேசி வந்தார் பூக்கவைத்துப் போனுர்
நரர்சொல்லி காட்டி நயப்பார்—வுரசாக ௫௫௬
நான்செய்வே னென்பார் நாளைக்குக் காட்டுவேன்
வான்செய்த கைபாக மாகுங்காண்—யேன்செய்த
யேட்டிலே யென்ன யிருக்குமென்று சொல்லி
பாட்டிலே ஒன்றுமில்லைப் பாருமே—கெட்டாக ௫௫௭

பாடினா ரென்பார் பயன்பிரி யாமல்தான்
ஆடினார் பாட்டு அடைவாக—நாடியே
செய்வேனென் பார்சிலரும் சிறப்பாகத் தங்கத்தை
மைவேன் யெனக்கு மயமாக—செய்ய ருருஅ

கொடுக்க யெடுத்துக் கொண்டோடிப் போவாரும்
அடிக்கப் பிடித்து அடைவாக—நடுக்க
அடிதண்ட மாக அடித்துப் பிடிகட்டி
படியாக வேசிலரும் பாத்துமே—நொடியாக ருருகூ

விப்படியே திரிந்து யேங்கித் திரியாதே
பைப்படியுந் தான்துருசு வைத்துமே—யெப்படியும்
இரதத்தைக் கட்டு வேத்தமுள்ள பொன்னாகும்
சுரதத்தை நாடிச் சுகமாக—வரதத்தை ருகூ0

யென்றிப் படித்தா னியம்ப வுலகத்தில்
அன்றிப் படித்து அருள்பெறுவீர்—நன்றி
பொன்னாகா பாவிக்கிப் பொருந்தவே வெள்ளீயம்
தன்னிலே வெள்ளி தானாகும்—முன்னே ருகூக

வெள்ளிவித்தை.

சொன்னெனொரு வெள்ளிவித்தை சொற்பமாய்க் கே
நன்னயமாய் வெள்ளி நலமாகும்—பின்னே [ரு
வெள்ளைப் பாஷாணம் வேண்டி யொருபலந்தான்
வள்ளல் பலம்நாலு வாங்கியே—மெள்ள ருகூஉ

வண்ணா னிடங்கொண்டு வகைபான வெள்ளாவி
தன்னாவி தன்னிலே தான்வைத்து—கண்ணாளா
யெரித்து யெடுத்து யின்பமாய்த் தானும்
வரித்துப் படிசெய்ய மாட்டுவேன்—வருத்தப் ருகூங

பட்டு வெருக்கம்பால் பாடுபட்டுத் தோய்த்து
கட்டுமே யெட்டுநாள் காரியமாய்—போட்டு
சுக்கானீர்க் குள்ளே சுருக்கா யெரிக்கவே
பிக்காக கட்டி விதமாக—சிக்கி ௫௬௪

யிருக்கு மெடுத்து இப்படியே யைந்துதிரம்
பருக்க யெரித்துப் பதம்பாரு—பொருக்க
நிற்கு மதையெடுத்து நேரான திராவகத்தால்
பற்கு மதையரைத்துப் பரிவாக—சேற்க ௫௬௫

ஜீனச் சுன்னம்பண்ணி சிறப்பா யதின்பேரில்
ஆன கவச மடைவாக—வானோர்
குடுத்துப் புடமிடுநீ கூடியே நீறி
யடுத்து யிருக்குமது பண்பாகும்—நடுத்து ௫௬௬

வெள்ளீயம் நூறில் விருப்பமாய்த் தான்கொடுக்க
துள்ளியெடு வெள்ளியாம் சோதியாம்—மெள்ள
நாகத்தில் தான்கொடுக்க நல்லவெள்ளி யாகும்
போகத்தை வாங்கிக் கொடுத்தூத—பாகம் ௫௬௭

மாறகமாய்ச் செய்து மயங்காமல் தான்பண்ணி
யேகமா யொன்று யிருந்துவிடு—நேசமாய்
சுடுவாதி சுட்டு சூக்ஷமாய்ப் பொன்னில்லா
படுவாதிக்கிவெள்ளி பலிக்குங்காண்—திருவாதி ௫௬௮

யேழையாம் வாதிக் கிரங்கிவெள்ளி சொன்னேன்
பாழையில் லாமலே பாரு—வாழை
வைத்தால் பயிராகும் வைக்காதே போனல்
சத்தாயச் செழித்து தானுண்டோ—மெத்த ௫௬௯

இருக்குமே வெள்ளி யின்பமாய்த் தானாகும்
வருக்கும் பகுந்தால் வகையாகும்—செருக்க

சிவயோகம் பாரு சிவகதியே யென்று
நவலோகம் பாச்சியே நலமாகும்—பவமாகும் ௫௭0

நெஞ்சுதனில் நினைத்து நேருக வெள்ளிவித்தை
தஞ்சமாய்ச் செய்து தவமாகும்—வஞ்ச
ஆமைமுட்டைக் கரையில் உப்பாலே யிட்டு
வாமைப்பட நினைப்பில் வைத்துமே—சாமை ௫௭௧

பயிரிட்டால் குருவி பறந்துவந்து வீழும்
தபிரிட்டால் தான்சாதம் தான்ருசிக்கும்—வயிரிட்டால்
ஆனைக் கரும்புதின்ருல் ஆன ருசியாகும்
பானை யரிசிபிட்டால் பாகமாம்—யேனே ௫௭௨

கெந்திநீர்- அதன் பலன்.

சொல்லக்கேள் வாதிகளே சொல்பெரிய கெந்திநீர்
அல்லக்கேள் சொல்வேன் அடைவாக—நல்லக்கேள்
நாறும் பூநீறு நலமாகச் சொல்லுகிறேன்
வாருகேள் வாதி வடிவாக—ஆறும் ௫௭௩

தில்லை மறப்பாலே திறமா யொருபடியும்
நல்லசுப கந்தி நடமாக—செல்ல
ஆட்டித் துவைத்தெடுத்து ஆத்தவே வாயில்
மாட்டியே போடு வளமாக—தாட்டிகமாப் ௫௭௪

போடவே மஞ்சள்போய் பொருந்தவெள்ளை யாகும்
ஆடவே யெடுத்து அடைவுகேள்—நாட
சியக்காய்க் குள்ளே செலுத்திக் கவசமிட்டு
ஆயமா யளாத்து அதின்பேரில்—நாயமாய் ௫௭௫

செலுத்தியே கொல்லச் செயமாகக் கேளும்
வலுத்திக்க ஆறுநீர் வாங்கியே—தனித்து

பானைதனி லிட்டுப் பதரு யதின்பேரில்
சேனைவிளி கட்டச் செயமாகும்—வானை ௫௭௬

யெரித்து யெடுத்து யிதமாய்க் கவசத்தை
அரைத்துப் பிழிந்து அலம்பியே—வருத்தி
கெந்தியைத்தான் பீங்கானில் வைர ரவிதனிலே
சுந்தரமாய் வைத்துத் துகைபாக—மந்திரமாய் ௫௭௭

தாட்டிகமா யெட்டு தடைபறவே வைத்து
பாட்டிகமாய் பூக்கும் பதமாகும்—நாடியே
பூக்காதே போனால் பின்பு மறுதிறந்தான்
தாக்கியே முன்போல் தயவாக—பாக்கியமாய் ௫௭௮

செய்திடவே நீறும் செயமாகத் தானிருக்கும்
பைதிடவே மாத்து பகருவேன்—மைய
தங்கமொன்று நாகமொன்று தப்பாதே சேத்துருக்கு
பங்கப் படாமலே பாச்ச—பங்கம் ௫௭௯

வராம லிருக்கும் வகையா யரைத்துமே
பராமுகமாய்த் திராவகத்தால் பாரு—சிராபோகம்
அரைத்துப் புடமிட்டு ஆனரவி நூலில்
தரைத்துடனே தங்கமாம் தாக்கினேன்—மறைப்பு
இல்லாமல் சொன்னேன் இன்பரச வாதிகளே
யெல்லாஞ் சிதம்ப ரத்தையே—நல்லாக
பாரு சபாபதியை பாகமாய்க் கெந்தகநீர்
தாரு வுருக்குமுனே தாக்கினால்—வாரும் ௫௮௧

நடேசர் தானுருவாய் நாட்டிலே நின்றார்
படபடத்தா லாமோ பரிவாகா—சடமானார்
கெந்தகத்தின் மார்க்கங் கிருபை ரசவாதி
அந்தக்கை பாகம்போ லாளுவீர்—முந்தமுந்த ௫௮௨

பாவிலே சாகும் பரிவான கெந்தகமும்
சாயில் கழுதைநீர் தான்கொல்லும்—மேலாக
சியக்காய் கெந்திபெண்ணே சீக்கிரமாய் வாங்கு
முபாயமா மிந்தவித்தைபார்மீதில்—நாயமாம் ௫அ௩

செய்து முடித்துத் திடமாகத் தின்றக்கால்
பையவே குட்டம் பறந்தோடும்—மெய்யாம்
வாதமெல்லாம் போகும் வந்திடுமே சொர்ணமயம்
சேதமெல்லா மத்த வேலைபோம்—காதம் ௫அ௪

நடந்தால் வழிதுலையும் நடக்காதே போனல்
படந்தால் வழிக்கென்ன பாருமே—கினந்தான்
அலைந்தாவ தென்ன அன்பாய் புவிமீதில்
துலைந்து வுலாவைத் துடியாக—மலையாமல் ௫அ௫

படித்துமே பாத்து பதையாமல் செய்து
முடித்துமே தின்றல் முடிவாகும்—தடித்து
நோயெல்லாம் போகும் நுணுக்கமாய்த் தாதுபுஷ்ட்டி
தாயகமா யாகுந் தணியாதே—பேபாய் ௫அ௬

தாம்ப்ர பஸ்பம்.

திரிந்து அலைந்தால் திறமாக வென்னபலன்
பரிந்து வுலாவைநீ பாத்து—வரிந்து
தாம்பூர பற்பந் தயவாகச் சொல்லுகிறேன்
காம்பூர பற்பங் கனமாக—வாம்பூர ௫அ௭

பண்ணில் ரசங்கட்டும் பண்ணுதே போனல்
யெண்ணினு லென்ன பலனுண்டு—திண்ணிதமாப்
செம்பைப் புளியிலேபோல் செப்பமாகத் தட்டி
வம்பாய்க் கரிநெருப்பில் வைத்தூது—தெம்பாக

கூப்பிட்டார் பூகிமுனி கூட்டமாய்த் தான்போக
வாப்பிட்டுச் சொன்னூர் வகைபாக—காப்பிட்டு ௮௭௪

கடைதலையுஞ் சொல்லி காட்டியே கைபாகம்
பட்டுவெனவே சொல்லிப் பதிவாக—திடமுடனே

யிருத்திமனஞ் சொன்ன ரியல்பாகச் சொல்லி
வருத்திபின்னஞ் சொல்வேன் வகைபாக—பொருத்தி

செம்புநிறஞ் சொன்னூர் சிறப்பா யுலாதனிலே
தம்பமாய்ப் பாத்துத் தடையறவே—தெம்பாக

செய்து முடித்து செயலான கைபாகம்
மெய்யாகச் சொல்வேன் மேதினியில்—வையகத்தில்

உலகத்தோர் கேளு முண்மைரச வாதிகளே
பலகத்து மென்ன பலனுண்டோ—பலமாக

வுலாவை யுரைத்து வுறுதியாய்ப் பார்த்தால்
பலாபலங்க ளெல்லாம் பலிக்குங்காண்—நிலாபோல்

தெரியும்ரச வாதிகளே சேத்து அலையாதே
பரிபோல தங்கமாம் பாருமே—நரிபோல்

சுத்தித் திரியாதே சூட்சு வுலாவை
பத்தியே பாரு பரிவாக—சித்தமா ௮௭௮

யிருக்கும் ரசவாத மின்பமாய்த் தோணும்
பெருக்கவே யோசனைகள் பிலப்படுத்து—நெருக்கி

பிடித்துமே பாரு பிடிபட்டுப் போகும்
படித்துமே செய்பாகம் பார்த்து—வடித்து ௮௭௯

சொன்னே னுலாவில் சோதிபெறத் தாம்பூர
மென்னே யிதுலகுவு மின்பமா—முன்னே

தேடி யலைந்து திரமாக யான்கண்டு
பரிபாஷை நீக்கிப் பதம்படுத்தி—பிரியமாய்ச் ௮௮0

செய்து முடித்துத் திரமாகச் செய்துமென்
கய்துமுன் பூகிமுனி நாடியே—செய்கையால்
பாகமாய்ச் செய்து பரிவாய்ச் சரக்குவகை
யேகமாய்ச் செய்து வுறுதியாய்—வாகமமாம் அ௲க

புலத்தியர்-அயச்செம்புவெள்ளியில்சேர்க்க.

புலத்தியருஞ் சொன்ன போக்கு பரிவாகத்
தலத்துடனே சொல்வேனுன் தன்மையாய்—பிலமாக
செம்பொன்று சொல்வேன் சுருக்கான தங்கமாம்
நம்பியே பாத்து நலம்பெறுநீ—யெம்பிரான் அ௲உ

சொன்னசொல் போல சொல்லுகிறேன் செம்புதன்ன
நன்னயமாய் தட்டி நலமாகப்—பின்னே
கெந்திபல மொன்று இருபையுள்ள வீரங்கால்
நந்தியே சீனம் நலமொன்று—பந்தியாய் அ௲ங

வெடியுப்பு ஒன்று வேதைபிது நாலும்
படியால் நிறுத்தெடுத்துப் பார்த்து—இதமா
பழத்தைப் பிழிந்து பதமா யரைகுழம்பி
தடுத்துக் குழம்பாக்கித்தன்மைகேள்—படுத்து அ௲ச

குழப்பிவைத்துக் கொண்டு குணமாக வெட்டுநாள்
தழைத்து யெடுத்துமே தன்மைகேள்—உழைத்து
பரவி நெருப்பில் பதமாய் நலமாக
கரியில்வைத் தூதியே காய்ச்சி—கவிய அ௲ரு

சிகப்பா யெடுத்து சிக்கிரமா யாறவைத்து
வகப்பாக வெட்டையே யாகமட்டும்—தகப்பாக
தோய்க்க வெடுக்க துப்பரவா வெட்டையாம்
யாத்துமே நொறுக்குவெள்ளி பலநாலு—வாய்த்து

ஒன்று கொடுத்து வுறுதிபா யூதிபெடு
அன்றுமே பொன்னிடைக்குச் சேரு—வென்று
வுருக்கித் தகடடித்து வுற்றுமே கேளு
நருக்கிப் புடம்வரிசை நாட்டக்கேள்—உருக்கியே

மட்டப்பொன்மாத்துயர.

செங்கல் பலநாலு சிறப்பான லிங்கம்
அங்கமா யொன்று அடைவுகேள்—சிங்கம்
பொரிக்காரி யொன்று பொரித்து பெடுத்து
வரிபா யிதுமூன்றும் வாகா—நெரிவாக ௮௮௮

வாக்கினல் மனதால் வகையாகத் தான்பிரித்து
ஆக்கி முன்தகடு அதில்வைத்து—மாமாகேள்
புடம்போடத் தங்கமாம் போரபிடை ரண்டும்
வடமாகத் தானிருக்கும் வண்மையாய்—நடமாக

வெடுத்துச் செலவுசெய்து இன்பமா யோகம்
அடுத்துப் பதிவா யதில்நின்று—படுத்து
வாசியோ கம்பாரு வண்மைபிது வாதம்
ஆதிபுலத்தி யகத்தியரு மன்பாகப்—பொதிகை

முன்பாகப் பாத்து முக்கியமாய்த் தான்வேதை
தென்பாகப் பாத்து செயப்படுத்து—அன்பாக
குடவனைத்தான் பாரு குணமாகச் செம்புபோல்
அடைவாகத் தான்பாரு அன்பாய்—திடமாக ௮௯௧

செய்து முடித்துச் சிறப்பான வேதைமுகம்
நைபவே செய்தால் நலமாகும்—மெய்யாய்
தங்கமது வேதை தாக்கவே செம்பாகு
மூங்கள்குல மீடேற வுற்றுக்கேள்—நாங்கள் ௮௯௨

செம்புவெள்ளிசெய்பாகம்.

செம்பொன்று தங்கமொன்று சேத்துருக் கித்தகடாய்
நம்பி யனைத்து நலமாக—வெம்பியே
வீரமொன்று கெந்தியொன்று விரும்பிக் கழுதைநீர்
பாரமா யரைத்துப் பத்தியே—சார அ௬௫

அரைத்தெட்டு நாள்வைத்து ஆன தெளிவிறுத்துப்
பரைத்துமே முன்தகடைப் பாகம்—நிரைத்து
வருணம்போல் காச்சி வகையா யெடுத்துக்கேள்
தருணமா கத்துவைக்க தாட்டிகமாம்—வருத்து அ௬௪

பொட்டி பொடியமட்டு மொக்க வொடித்து
பட்டியா வெள்ளியொடு பாச்சிடுநீ—முடியவே
பூகி யெடுத்து வுண்மை புடம்போட
பாதியாய் முன்புடத்தில் பாச்சிடவே—நாதியே

தங்க மிறங்குந் தப்பாதே வேதையாம்
பொங்கமென ஞானம் பொசியுமே—இங்கிதமாய்
வாசியோகம் வருகும் வண்மை நலஞ்சேரும்
காசி பணங்கள் கனகமாம்—வாசி அ௬௬

பெல்லா முன்சொன்னே னின்ப ரசயோகம்
சொல்லாற் பெரியோர் துணைசெய்வார்—வல்லார்
செய்து முடியார் செயமாகும் நற்பொருளாம்
பைய அயச்செம்பைப் பாருமே—மெய்யாய் அ௬௭

அயச்செபும்வெள்ளியில்சேர்க்கும்விபரம்.

சித்தர் மறைத்த செயமான பாகத்தை
முத்திபெறச் சொல்லுகிறேன் முக்கியமாம்—சித்தா

சொல்லக்கேள் வாதிகளே சொல்லும் அயந்தான்
நல்லா யொருபலந்தா னுடியே—மெல்லவே அகூஅ

யெடுத்து அறைத்து இன்பபிடை அரையும்
படுத்துமே சூடன் அரைபணியால்—தடுத்து
அரைத்து இநசாம மரைத்துவில்லை கட்டி
பரைத்து ரவியிலிடு பண்பாக—நிறைத்து அகூகூ

மூனுறு ளிட்டிடவே முக்கியமாய்ப் பூத்திருக்கும்
ஆணவே யெடுத்து அப்பால்கேள்—நாணயமாய்
விரமொன்று இட்டு விரும்பி யரைத்துநீர்
பாரமாய் நேரோ பரிந்துமே—சீராக கூ00

வம்பாகச் செம்பை வலுவாத் தகடடித்து
தெம்பாக வர்ணமாம் திட்டமாய்—நம்பியே
காச்சியதில் துவைக்கக் காஞ்சனம்போல் காணும்
பாக்கியமாம் வெள்ளிதனில் பாச்சிடவே—நோக்கி

யெட்டுக்கு வொன்று இன்பமாய் பாச்சிரண்டு [யே
வட்டமுள்ள தங்கத்தை வண்மையாய்—திட்டமுடன்
பாச்சி யெடுக்கப் பத்து வயதாகும்
தாட்சியில்லை வாதியிது சத்தியமாம்—நேத்தியாம்

படபடத்துச் செய்யாதே பக்குவமாய்ப் பாரு
தடதடென யோகந் தனைப்பாரு—திடமாகும்
என்று புலத்தியரு மின்பமா யூகிமுனி
சென்றுமே கேளுஞ் செயமாக—நன்றியாய் கூ0ரு

சொல்லி விடைகொடுத்து சொற்பெரிய யோகத்தை
மெள்ளவே சொன்னார் விருப்பமாய்—நல்லாக

இருமெனவே யென்றுசொல்லி யின்பமாய்த்தானுப்பி
பெருகுங்கவுனத்தில்போய்மறைந்தார்—வரிசையா

யிருந்து சிலகால மின்பமா யூகிமுனி
பொருந்தியே கைபாகம் புக்கியே—அருந்தியே

பாத்து சபமாக்கிப் பக்குவத்திற் சொன்னார்
ஏத்த வுலகோர்க்கு இன்பமாய்ச்—சேத்துமே ௲0௫

சொல்லினார் யூகிமுனி சொற்பெரிய வாதிக்கிப்
புல்கியே பாக மெனப்பிரித்து—நல்கியே

அடுத்து கைபாகம் ஆனதொரு செய்பாகம்
தடுத்துமே யெல்லாந் தனைச்சொன்னார்—பதித்துமே

தங்கக்குரு.

சொல்லி யிருந்து சுயம்பெறவே யந்நேரம்
புல்லியே யின்னம் புகலுவேன்—நல்கியே

தங்கக் குருச்சொல்வேன் தாட்சிவாராது அருள்
பொங்கித் திரிந்து யெளியவனை—பொங்கியே ௲0௭

போகாமல் சொல்வேன் போக்கா ரசவாதி
ஆகவே பாரும் அடைவாகும்—தாகமாய்

வாலை ரசமெடுத்து வண்மையிடை தங்காமல்
மாய வொன்றாகக் கலந்துமே—சோலை ௲0௮

புருட்டி யெடுத்து வுண்மையாய்க் கேளு
வருட்டிக் கரியோட்டில் வாட்டக்கேள்—திரட்டி

அப்பிரக நவநீதம் ஆகவே பண்ணி
தப்பியே மேலே தனைச்செலுத்தி—கப்பியே ௲0௯

கரியிலே வாட்டிக் காயவைத்துக் கேளு
பரியா யெலுமிச்சம் பழமதிலே—வரியாகச்

செலுத்தி யெடுத்துச் செப்பமாய் நூறு
வலுத்த வுமிநெருப்பில் வைத்திடவே—பலமா

யெடுத்துமே கேளு இன்பக் கவசமதை
அடித்துமே தள்ள அடைவாக—வலுக்க

அரைக்கத் திராவகத்தால் அன்பா யுருட்டி
பரைத்து அப்பிரக பதக்கவசம்—வரைந்து ௯௧௧

பழத்துள்ளே வைத்துப் பரிவாக நூறுபுடம்
தளத்துடனே தானெடுக்கத் தான்சிவக்கும்—அன்பா

யிருக்குமா விழுப்பத் திட்டிடவே தங்கம்
பெருக்க யிருக்கப் பிலமாகும்—வருக்காய் ௯௧௨

அயச்செம்பைகாரியச்செம்புசெய்து

வெள்ளியில்கொடுக்க.

இராசயோகம் பெறுவீர் நல்ல பதவியாம்
திராச நடனந் திடப்படுங்காண்—ரோசனமாய்

சொல்ல முடியாது சுருதியுள்ள காரியம்
நல்லாக வேதை நலமாக—வெல்லவே ௯௧௩

சொல்லக்கேள் வாகிகளே சுகமாகும் தங்கமாம்
வெல்லக்கேள் செம்பு விதமாக—வல்லக்கேள்

செம்புகட்டிச் சொல்வேன் செயமா யொருபலந்தான்
நம்பியே காரியம் நாலிலொன்று—தெம்பாக ௯௧௪

சேத்து வுருக்கி செயமாய்த் தகடித்து
பாத்துக் கரியோட்டில் பக்குவமாய்—நேத்தியாய்

காயவைத்துக் கேளு கனக்க வெடியுப்பு
பாயவே கெந்தி-பலமொன்று—நியாயமாய் ௯௧௫

பொட்டணையு மொன்று பொடித்துக் கலுவமதில்
நட்டணையாய்ப் பொடித்து நம்பியே—திட்டமாய்
கத்தநீர் விட்டு கனக்கக் குழப்பிபதை
பத்தக் கொதிபிட்டுப் பாகமாய்—வித்தகமாய் கூகசு

கால்வாசி காச்சி கனக்க விருந்துக்கேள்
வேலாகக் காச்சி விதமாக—மேலாக
காச்சிப் பதம்பாத்து கத்தநீ ரில்தோய்த்து
பாச்சியே வெட்டையாய்ப் பாகமாய்—வாச்சு கூகஎ

சேத்துஞ் சாகாதாய் செப்பமா கத்தோய்த்து
பாத்து யுடைத்திடவே பாங்குகேள்—சித்தியாய்
சாணாக் காசை சடுக்கென் றுடைத்தாப்போல்
வாணா இருந்து வளம்போல்—வனேகேள் கூகஅ

பக்குவத்தைப் பாத்து பதமாய் நொறுக்குவெள்ளி
விக்க வுருக்கி விதமாக—தொக்கவே
வெட்டிக்கொன் றிட்டு இதமாகப் பார்வைபிட்டு
மட்டம்போ லாகும் வளமாகும்—முட்டவே கூகக

யேழான மாத்தை யிதமாகச் சேத்துருக்கத்
தாழான யேழாகுஞ் சத்தியமாம்—வேளாளா
செய்ததுபோல் செட்து சிறப்பி யெடுத்துவித்து
பையவே ஞானத்தைப் பற்றுவீர்—மெய்யா கூஉ௦

யிருக்கவல்லோ சொன்னே னின்பமாய் தங்கம்
பெருக்கவல்லோ சொன்னேன் பின்புகேள்—பருக்கக்
காரியச் செம்புசொன்னேன் காதலரே கேளும்
பாரியாய்ச் சொல்வேன் பலனுக—ஆதியாய் கூஉக

அயச்செம்புவெள்ளியில்கொடுக்கும்பாகம்.

அயச்செம்பு சொல்வேன் ஆதிமுனி சொன்ன
நயப்படா வெள்ளம்போல் நாடுமே—பயப்படா
செய்துமே பாரு திடமா அயச்செம்பு
நைதுமே சொல்வே னயமாக—எய்து ௬௨௨

செம்புமே நாலு சிறப்பா யபமொன்று
நம்பி யிருக்கு நலமாக—தெம்பாக
வுருக்கித் தகடடித்து வுற்றுமே கேளும்
பெருக்கவே கெந்தியொன்று பேசக்கேள்—நிறுக்க

வீரங்கால் சூடனரை வித்தகமாய்க் கேளும்
பாரமாய் வெங்காரம் பலம்நிறுத்து—சேரவே
பொரித்துப் பொடிபண்ணி போக்கோடேசெவ்வல்லி
கரித்துப்பூச் சாறு கலவாடு—திரித்து ௬௨௬

சாறுவிட்டுத் தளர சாந்தமா பெட்டிலொன்று
வாருகக் காச்சி வளமாக—நேராக
குழம்பாகக் காச்சி கோதைமட வாதிகளே
துளம்பா யிருந்துமே சொல்லக்கேள்—நளம்பாய்

தகடுகாச் சித்தோச்சு தட்டியே பாரு
பகமாகத் தானுடையும் பத்துக்கேள்—விதமாய்
சேத்து யிருக்குஞ் செயமாய்ப் பருவத்தில்
வித்தகரோ யெடுத்து வித்தையாய்—பாத்து ௬௨௬

வெள்ளிக்கொள் யிட்டு விருப்பமாய்த் தான்பாரு
துள்ளிப் பசுமைபோல் சொல்லவே—நள்ளி
யிருக்குமே பீக் கிலேச்சாறு போல
யிருக்குமே யெடுத்துப் பாகங்கேள்—வருக்கில் ௬௨௭

பதிந்தாற் போல்காரி பார்வை விரகனையு
முதிர யிடைசேற்க முடிவுகேள்—வதிலாக
சேத்து வுருக்க செயமுள்ள தங்கமாம்
பாத்து யெடுத்துப் பதமாக—வாத்தி கூ௫அ

குற்றமில்லா தங்கம் கூறுவர வேயாடும்
பத்தனென்றுல் காண்பான் பதமாவான்—வித்தாக
சேத்தால் செயதங்கம் சேற்காதே போனல்
பாத்துத் தவிப்பான் பதியில்லா—சாத்துவீர் கூ௫கூ

எல்லாமுங் கைபாகம் இன்பமாய்க் கேளும்
பொல்லாத பாகம் புகலுவேன்—மெல்லவே
காச்சித் துவைப்பாகுங் கருத்துவைத்துக் கேளு
தாச்சவே வரணம் பலனுகும்—வாச்சுதே கூ௬0

யிப்படித் தானிருக்க வின்ப ரசவாதம்
எப்படி காணப்போரீ ரென்றுகாண்—சொற்படிக்கி
செய்து முடித்தால் செயமான தங்கமாம்
பையவே யிச்செம்பை பாத்துமே—மெய்யாக கூ௬க

கொடுக்குமது வாதம் கொடுக்காதே போனு
லிடுக்காக விச்செம்பைப் பாரு—முடிக்கியே
பாத்தால் ரசவாதம் பாலிக்கு மென்று
யேத்துமே சொன்னு ரினிக்கேளு—நேத்தியாய் கூ௬௨

பித்தளைசெம்புகொடுக்கும்விபரம்.

அடுத்த செம்பொன்று அன்பாகச் சொல்வேன்
தொடுத்துமே பாத்தால் துரியமாம்—கடுத்து
பித்தளையின் செம்பெடுத்து பேதமட நெஞ்சே
யித்துடனே செய்யு மின்பமாய்—முத்தி கூ௬௩

தகட்டை யடித்துத் தண்மையாய்க் கேளும்
புகட்ட ஒருபலந்தான் புக்கியே—பகட்டாக
வெடியுப்பு வொன்று வேதமகா சினம்
படியாய்ப் பலமொன்று பாகங்கேள்—வடியாக ௬௩௪

குண்டுமணி ஒன்று குணமாக மூன்றையுந்தான்
பண்டுமணி கத்தநீர் பதமாக—சென்று
அரைத்துக் குழப்பி அன்பாய்க் குடவனைத்தான்
பரைத்துமே தோய்த்துப் பதமாக—நிரைத்து ௬௩௫

ஓடியமட் டுந்துவைத்து ஒக்க யெடுத்து
படியாய்ப் பதம்பாரு பக்குவமாய்—நொடியாக
வெடுத்துமே வைத்து யின்பரச வாதிகளே
அடுத்துமே ஒன்று அறைபக்கேள்—படுத்து ௬௩௬

துரிசு பலமொன்று துய்யகெந்தி முக்காலும்
பரிசுமே பண்ணை பலமரையாம்—வரிசையாய்
வீரம் பலங்காலாம் விரும்பி யிதுநாலும்
பாரமா யரைக்கப் பாகங்கேள்—சேரவே ௬௩௭

கத்தநீர் விட்டுக் கருத்தாய்க் கொதிபிட்டு
முத்தவே தளர முக்கியமாய்—சத்தோ [ன்
குளப்பிவைத்துக் கொண்டு குணமாகச் சொல்லுகிறே
வளப்பிமுன் செம்பை வளமாகத்—துளப்பி ௬௩௮

காச்சியே தோய்த்து கனக்கப் பதம்பாத்து
வாச்சுதே யென்று வண்மைகேள்—தோச்சு
யெடுத்துமே வைத்து யின்ப னுருக்குவெள்ளி
படுத்துமே யெட்டிலொன்று பக்குவமாய்—நடுத்து
சேத்து வுருக்க செயமான தங்கமாம்
பாத்துமே தங்கம் பதமாக—சேத்துமே

பார்க்க யிடைரண்டும் பதிவான தங்கமாம்
யேர்க்குமே தங்க மிரங்குமே—மூர்க்கமாய் ௯௪0

காந்தியாய் நிற்கும் கனகமதனை
சேந்து யெடுத்துச் செலவுசெய்து—பாந்தமா

யோகமெனப் பாரு வுண்மைரச வாதிகளே
போதமென நினைத்து போற்றுமே—வாதைப் ௯௪௧

படாமலே செம்பை பதமாகப் பாத்து
தொடாமலே கன்னிதனை துப்பறவாய்—வடமாய்

செம்பெல்லா மிப்படியே சேத்துமே முன்தோய்த்து
வம்பாக வெட்டை வலுவானால்—பின்பாக ௯௪௨

செம்பை நொறுக்குவெள்ளியில் கொடுக்கும்போது

தோய்க்கவேண்டியவிபரம்.

கெந்தியுடன் சூடன் கிருபையுள்ள வீரமுடன்
வந்துமே தோய்க்க வளமையாம்—பிந்தாமல்

செய்தால் பலனுண்டு செய்யாதே போனால்
நய்தா லுனக்கென்ன நாடுமே—பைய ௯௪௩

முன்தோய்த்துப் பின்தோய்த்து முக்கியமாய் கட்டும்
சொன்ன லிதுசெம்பு சொர்ணமாம்—நன்மையாம்

இப்படியே தோய்த்தா லெளிசாகும் வாதம்
கைப்படியுங் கைபாக மாகுமாம்—எப்படியும் ௯௪௪

தோய்த்து யெடுத்துத் துப்பறவாய் வெள்ளிதனில்
பாச்சவே பொன்னும் பலனாகும்—வாச்சுமே

இருக்குமென யோசனைக ளெண்ணியே செம்பை
பெருக்கவே வுப்பில் பிலப்படுத்து—நருக்க ௯௪௫

மின்னூறி வுப்புதனில் மாளாமல் தோச்சு
நன்னயமாய்க் கெந்திதனில் நாடியே—முன்னே

பழுக்கவே காச்சி பதமாகத் தோய்த்தால்
வழுக்கவே தங்கம் வளமாகும்—இழுக்கு ௯௪௬
வாராதின்னஞ் சொல்வேன் வல்லமையாய்க் கேளு [ய்
தாராதரத்தில் தான்விளையும் தாம்பூரம்—பராமுகமா
தகடா யடித்துத் தாக்கவே கேளும்
பகடா வெடியுப்புப் பலநாலு—முகடாக ௯௪௭
சினமது ரண்டளாயாம் சித்தமாகப் பொடித்து
பானக் கரண்டி தனில் பதமாகத்—தானுருக்கி
உருக்கியே கேளு வுண்மைரச வாதிகளே
பெருக்கவே செம்பைப் பிலமாக—நருக்கவே ௯௪௮
பழுக்கவே காச்சிப் பதமா யெடுத்து
நழுக்கவே யெடுத்து நலமாக—வளுக்காய்
தோய்ச்சு யெடுத்து துப்பறவாய் வெட்டையாய்
பாச்சுமதி நொருக்கு பாகமா—வாச்சு ௯௪௯
யெடுத்துப் பதம்பாரு இன்பரச வாதிகளே
கடுத்துமதி லெட்டிலொண்ணு காரியமா—படுத்துமே
கொடுத்துக்கோ மாத்தாகுங் குத்தமிக வாராது
தடுத்துமே யிந்தவின்பங் தானே—படித்துமே ௯௫0
செய்யவே வேதையாம் செப்ப முடியாது
பையவே யிப்பொருளைப் பாத்துமே—மெய்யாம்
நொடிவித்தை யாகும் நுண்மையாய் வேதை
படியாகப் பாத்து பதமாகப்—பொடியாக ௯௫௧
மட்டுமே தோய்த்து மயங்கித் திரியாமல்
செட்டுமே பார்க்கச் செயமாகும்—விட்டுமே
முன்பாத்துப் பின்பாரு முக்கியமா யாகும்
பொன்பாத்தாப் போலே புகட்டுவீர்—தென்பாக

இருந்து முடித்து யிதமாகத் தான்பாரு
அருந்தினு லாகு மதின்பலந்தான்—பொருந்தினுல்
பொருத்தங்க ளாகும் போதமட நெஞ்சே
பருத்ததினு லென்ன பலனுமோ—சிறுத்துப் கூடுங

பாத்துப் பலப்படுத்து பாகமாய்ச் செய்தால்
சேத்துமே தங்கமாம் சிக்குமே—நேத்தியாய்
அறிந்து ரசவாதம் ஆண்மையாய்ப் பாரு
பொருந்துமே நல்லாக புக்குமே—இருந்து கூடுச

தாம்ரபஸ்பம்.

ரவிநீறச் சொல்வேன் நலமாகக் கேளும்
பரிந்துமே பாக்கியங்க ளுண்டாகும்—சரியாக
சொல்லுவேன் வெள்ளீயம் சிறப்பாக நாலுபலம்
வெல்லவே வங்கத்தின் தானிமிளை—நல்லாக கூடுரு

வுருக்கி அயக்கரண்டி லுணப் பொடித்து
நருக்கென்று போடு நலமாக—பெருக்க
போட வுடையும் பின்புகேள் வாதிகளே
ஆட வளாக்க அடைவாக—சாடவே கூடுசு

வெண்கருவை யூத்த வெண்மை யெருக்கலம்பால்
முன்னமே மூனுனுள் விட்டுவைக்க—திண்ணமாய
முரிந்து யிருக்க மூதன்மைபெற செய்பாகு
நரிந்துமே மத்திட்டு நலமாகப்—பரிந்து கூஎடு

கடைந்து தெளிவிறுத்துக் காரியமா யூத்தி
தடைந்து அரைத்துத் தனிரவியில்—உலர்ந்து
யெடுத்துப் புடமிட்டு யேத்தமாப்ப் பாரு
கடுத்துமே வெண்ணீற் கணக்காகப்—படுத்து கூடுஅ

இருக்காதே போனு லின்பரச வாதிகளே
திருத்தியே பின்பொருக்கால் தீருமே—வருத்திப்
புடமிட் டெடுத்துப் புகழாக வீரத்தை
நடமிட்டு நாலிலொன்று நாட்டியே—திடமாக ௬௫௬

அரைத்துப் புடமிட்டு ஆனவெண்ணீ ருகும்
பரைத்து யெடுத்துப் பதம்பாத்து—நிரைத்து
ஆட்டியே வீரத்தை அன்பாக நாலிலொன்று
மூட்டியே சேத்து முக்கியமாய்க்—காட்டியே ௬௬0

அரைத்துமே தாம்பூரம் ஆன தகட்டில்
வரைத்துமே அங்கி வலுவாக—நிரைத்து
காயவைத்துப் போடு கனக்கவெண் ணீருகும்
சாயவைத்து சாத்திரந் தனைமறைத்தார்—உபாயமாய்ச்
சொன்னூர் சிலசித்தர் சூட்சமாய்த் தான்மறைத்து
நன்னயமா யுலாவில் நாட்டினேன்—பின்னேகேள்

தாம்பூர நீறில் சகலசரக் கத்தனையு
மேங்கியே யோடா திருந்திடுமே—ஆங்கா னும்௬௬௨

தங்கமுதல் நீறும் தாட்சியில்லை வேதையாம்
மங்களமா யென்றென்றும் வாழலாம்—இங்கிதமாய்

அரன்பீசங் கட்டும் ஆதி கவுனமாம்
பரன்போலச் சதாசிவமாம் பண்பாய்—வரமருள

துரிசுமது நீறும் தூயவே மாத்தாகும்
பரிசிக்குஞ் சேனை பதம்நல்கும்—உரிசையாய்

தாளகமு நீறும் தாட்சியில்லா தங்கமாம்
மீளவே வாத முடிக்கிவரும்—தோழாகேள் ௬௬௪

வெடியுப்பு கட்டும் வேதை மிகவாகும்
அடியோட பொன்னும் அளவாகும்—பிடியாகும்

படிப்படியா யேறும் பத்தரச வாதிகளே
அடியான வாதம் சொலிக்குமே—முடியவரும் ௬௬௫
இத்தனையுந் தான்வருகும் மியல்பான செம்பை
புத்தியாய் நீத்தும் பதமாகும்—முத்தியாம்
ஆங்கார மாக அடைவுடனே செம்பை
பாங்காக நீக்கிப் பதமாக்கு—எங்காணும் ௬௬௬

வாதமது வெல்லாம் வகையுடனே கேட்கும்
சேதப் படாது செயமாகும்—போதம்
வருகுதமே சேர வலுமையாய்ச் செய்தோர்
பெருகுதமே சொல்ல விதமாக—தருகுமே ௬௬௭

யென்றுமுனி கேட்டு மியல்பா யுலகத்தில்
நன்றுமே சீஷருக்கு நல்கினோர்—அன்றுமுதல்
கேட்டா ருலகத்தோர் கீர்த்தியாய்த் தான்மகிழ்ந்து
நாட்டிகமா பூகிமுனி தக்காரஞ்—சூட்டியே ௬௬௮

செயமான பாகம் செயமான தாம்பூரம்
நயமாக நீலகண்ட னடியே—பயமில்லா
செய்து பிலப்படுத்து செயமாக வாழ்கவே
நைது விடைகொடுத்தார் நாடியே—மெய்யா ௬௬௯

யிருமென்று சொன்ன ரின்பமாய்ச் சுன்னம்
திருமால் குகைபாகந் திட்டமாய்—பெருகவே
யெரியினுட பாக மின்பவர்ண மயிதானம்
பரிசேற வர்ணமுதல் பாடவே—சரியாக ௬௭0

ஜயநீர்செய்யவேண்டியகாலம்.

பாடுவேன் கேளும் பதியவே கைபாகந்
தேடுவீர் சொல்வேன் செயமாக—நாடுவீர்

செயநீறு செய்ய சிறப்பான காலங்கள்
யயமில்லா பங்குனியும் பற்றுவீர்—நயமாகும் ௯எ௧
தையோ டேரம் தண்மையிது காலம்
மெய்யா யிருகாலம் விளைவாகும்—பொய்யல்ல
வுப்பு வுபரசமு முண்மையாய்ச் சுன்னமாம்
நப்புநவ ரத்னம் நவலோகம்—இப்புவியில் ௯எ௨
சுன்னமாம் வேதை சுருக்காகும் காரமாம்
நன்னயமாய் தண்ணீராம் நாடுவீர்—தன்னை
யெடுக்கச் சலமுடியா யின்பமா யூத்தாகும்
அடுத்துமே காரம் அடைவாக—இருக்கும் ௯எ௩
சரக்கெல்லாங் கட்டுஞ் சத்தியமாய்ச் சொன்னேன்
உரக்கவே யாகு முறுதியாய்—கரைக்குஞ்
சொன்னேன் சயநீர்க்கு சுருக்கான காலம்
நன்னயமாய்க் கட்டும்வகை நாட்டுவேன்—முன்னே

சரக்குகட்ட.

சரக்கென்ற தெல்லாஞ் சல்லியாய்க் கட்ட
நிரைக்கவே சுன்னத்தால் நீகட்டு—வரைத்து
தயிலத்தால் கட்டு தண்மையாய்த் திராவகத்தால்
பயிலாகக் கட்டும் பதம்பாரு—ஒயிலாக ௯எ௫
செயநீரால் சுருக்கு செப்பமாய்ப் போடு
நயமாகக் கட்டுமது நாடியே—பயமாக
தாக்கிச் சுருக்கிட்டுத் தடையறவே தானெடுத்து
பாக்கியமாய் சுக்கான் பதக்குநீர்—நோக்கியே ௯எ௬
நடுவில்வைத்துத் தானெரிநீ நன்மையா யோடாது
பிடிபடவே பின்பு பிரியமாய்—திடமாக

சுருக்கிட் டெடுக்க சுக்கானீர் தன்னில்
பரிக்கிட் டெரிக்கப் பதமாகு—நருக்கிடவே கூ௭௭
யெரித்துமே யிப்படியே யின்பமா யஞ்சுதிரம்
வருத்தி யெடுத்தால் வகையாகும்—கருத்தாய்
சரக்கு மடிக்கும் தடைப்படுமே ஓடாது
பருக்கபிடை போகா பண்பாகும்—நெருக்கும் கூ௭௮
நவலோகம் பாயும் நல்லதங்க மாகும்
சவம்போல சேத்துமே சாகும்—தவமாகும்
இப்படிச் செய்யாம லிதமாய்ச் சுருக்கிட்டு
வப்படியே நெருப்பில் வகையாக—துப்படியாய்கூ௭௯
வைத்தால் புடத்தில் வகையில்லா தோடிவிடும்
செத்தால் சரக்கு செயமாகும்—பத்தவே
தாகட்டுஞ் சுன்னநீர் தன்னி லெரித்திடுநீ
பாகமாய் நாளாகப் பாரு—யோகமாம் கூ௮௰
கட்டுவகை சொன்னேன் காலமுதல் சொன்னேன்
மட்டுவகைக் கால மதிவுகேள்—முட்டவே
வழலை முடிக்கும் வகைகாலஞ் சொல்வேன்
பழகி யிருந்து பதிவாக—தழலான கூ௮௧

வழலைமுடிக்குங்காலம்.

சித்திரை வையாசி சிறப்பான ஆனியாம்
பத்தியாய்ச் சுக்கான் தனைநீத்து—முத்தியாய்
திராவகத்தை விட்டுத் தப்பா தெளிவிறுத்து
பராமுகமாய்க் காயும் பதமாகும்—நராபோகம் கூ௮௨
கசியா திருக்குங் கலக்கமற்ற நெஞ்சே
பதியான நாளில் பலமாக்கு—சதியாக

காலமில்லா காலத்தில் கனக்கவே செய்து
சாலாகக் கசிவாகித் தானெடுத்து—ஏல ௬௮௫

வெடுத்து எரித்து இதமான சாத்திரம்பொய்
யடுத்துமே சொல்லா தறிவுபார்—தொடுத்து

கால மறிந்து காலத்திற் கூடும்
ஞாலம் புவியிலே நாடுவீர்—சேலாகும் ௬௮௪

சிந்தூரம்வைக்குங்காலம்.

சவுக்கா ரம்முடிக்கச் சாத்தினேன் காலம்
கவுக்கார சிந்தூர காலங்கேள்—பவமாக

கனத்ததோர் சிந்தூரங் கடிதாக வைப்பதற்கு
இனத்தையே சொல்வே னினிதாக ௬௮௫

சொல்லக்கேள் வாதிகளே சூழச்சியாச் சிந்தூரம்
அல்லக்கேள் காலம் அறிந்துமே—நல்லாய்

வைத்து எடுக்க வரிசையாய் மாதத்தை
சித்தான மேரமோடு சீக்கிரமாம்—பத்தியே ௬௮௬

ஆடியொடு ஆவணியும் ஆனபுரட் டாசிதனில்
தேடியே திராவகத்தை திட்டமாய்—பாடியே

செய்து முடித்தால் செயமாகும் வேதை
கைது கனகமாம் காரியமாம்—மெய்யா ௬௮௭

யெரித்துமே நீபாரு யேத்தநல்ல காலம்
அரித்துமே சிந்தூர மாகுங்காண்—சரித்து

ஆளலாம் யோகம் அடைவான ராசரிகம்
வாழலாஞ் சிந்தூரம் வண்மையாம்—ஆளாக ௬௮௮

வேளாளா தான்பயிரை விரும்பி யுழுததுபோல்
தாளான சிந்தூரம் தளவாயாம்—கேளாய்

செய்தால் முடியாது சிறப்பாய் சிவயோகி
பையவே கொட்டாற் பலிக்குமே—மெய்யாகும்

புடபாகம்.

இத்தனையுஞ் சொல்லி யிதமா யுரைத்தேன்யான்
பத்தனென்றுற் கண்டு பலப்படுவான்—சித்தமாய்ப்
புடம்போடச் சொல்வேன் பேருன காடை
நடமாடு விராட்டி நலம்ஒன்று—திடமாக ௯௯௦

கவுதாரி விராட்டி கனமா யெருமூன்று
நவுதாரிச் சேவல் நலம்பத்துப்—பவமாகும்
பண்ணிப் புடவிராட்டி பதமாக ஐன்பதுதான்
யெண்ணிக் கனபுடமே யெழுநூறும்—பின்னும் ௯௯௧

கசபுடமே விராட்டி கடிபடவே ஆயிரமாம்
தசமாக விப்படியே சாத்துவீர்—நலமாக
இந்தப் படிபோட்டா லின்பரச வாதிகளே
சுந்தரமாய்ச் சரக்கு சுகமாகும்—முந்தவே ௯௯௨

காலகா லத்தில் காத்தடித்துத் தாழைமல
ரேழாகப் பூத்த இடமதைப்பார்—பாலிலே
நீர்கலந்த பாலே நினைவாகத் தான்பிரித்து
ஆராக வேகுடிக்கு மன்னம்போல்—நேராக ௯௯௩

சிந்தூர காலஞ் செயமறிந்து செய்தால்
வந்துமே தங்கம் வரிசையாம்—பின்னுமல்
செய்து முடித்து சிறப்பான காலத்தில்
பையஅந்நா ளறிந்து பத்திக்கோ—மெய்யாம் ௯௯௪

அந்தந்த மாதம் அடைவாகச் செய்யாமல்
சிந்தை தடுமாறித் திரியாதே—முந்தவே

காசிமகா மேரு கல்லுப்பு செங்கல்மா
வாசனையா யெரித்து வாங்கிக்கோ—தேசமெல்லாம்

ஊத்துமுறை.

ஊத்துமுறை சொல்வே னுண்மையாய்க் கேளும்
பாத்துமே சுன்னமெனப் பண்ணக்கேள்—சேத்து
துருத்தியொன்று ஆத்துத் துப்பறவாம் சுன்னம்
பருத்திபோற் பூத்துப் பதமாகும்—வருத்தி கூகூசு

சத்து வருக்கின்முடி சாத்தி யிருதுருத்தி
புத்தியினுற் கண்டாற் புகழ்பெறுவீர்—நித்தியமாம்
இரும்பு செம்பாகு மின்பரச வாதிகளே
பொருந்தவே பாத்தூதி பலப்படுத்து—வருஞ்செம்பு

கடுமையாய் சத்துக்குக் காதலரோ வாதி
அடிமையாய் நால்துருத்தி யாகும்—படுமெனவே
இப்படிக்கி ஆதியே யெடுக்காதே போனல்
தப்பிக் கரடுகட்டித் தானுதும்—இப்புவியில் கூகூஅ

சுன்னமது ஆகாது சுகமான சத்தியில்லை
பின்னை ரசவாதம் பிடியில்லை—நன்னயமாய்
வீணுகப் பாடுபட்டு விரும்பித் திரியாதே
சாணுகத் தான்வயறு தான்வளர்த்து—நாளாக கூகூகூ

நாடித் திரிந்து நாம்கெட்டோ மென்றுசொல்லி
தேடும் படியாகச் சொல்வோரும்—காணிக்கி
இருந்தாலுஞ் சொத்தாகு மின்ப ரசவாதம்
பொருந்தாது என்று புலம்பியே—வருந்தி ௧000

மூடவன்கொம்புத் தேனுக்கு முன்னிலையாய் நின்றுப்
படபடத்துச் செய்து பதைத்து—நடமாடித் [போல்

திரிந்து புலம்பித் திரியாமல் நீயும்
அரிந்துமே பூத்து அதைஅறிநீ—செழிந்து ௧00௧
புடமாறிப் போட்டு பொல்லாத வாதிகளே
தடையறவே சரக்குத் தான்போச்சு—படபடென
சொல்லித் திரிந்து சொற்பெரிய வாதமில்லை
முல்லை யரும்புபோல் முன்னகைத்து—இல்லை ௧00௨
யென்றுமே சொல்லி யேக்கமுடன் கலக்கமாய்
நின்று தவித்துமே நிற்போரும்—நன்றாய்
இல்லையென்று சொல்லி யிந்தநூற் பொய்யென்று
கல்லைப் படச்சொல் கதற்வோரும்—நல்லாய் ௧00௩
இருந்தென் பணத்தை யியல்பான வாதத்தில்
பொருந்தச் செலவழித்துப் போவோரும்—வருந்திப்
புடத்திற் சரக்கு போக்கோடே போக
அடமாகச் சொல்லி அலைவோரும்—திடமாய் ௧00௪
தங்கஞ்செய் துதாரோன் தாக்கெனவே சொல்லி
மங்காத தங்கத்தை வாங்கியே—பிங்கிதமா
யெடுத்துக்கொண் டோடி யியல்பாகத் தேடிவர
பிடித்து மயிரைப் பிடிப்போரும்—அடித்து ௧00௫
நாதவிந்தை வாங்கி நல்கப் புடம்வைத்து
பாதகத்தைச் செய்து பதைப்போரும்—பேதமாய்
நின்று திரிந்து நினைவாகத் தங்கத்தை
கண்டுமே செய்து கதற்வோரும்—நன்றா ௧00௬
யிருக்கப் புடத்தை யின்பமாய்ப் போட்டு
நருக்காய் சரக்கொன்றாய் நாடியே—பெருக்க
சொன்னபடி போல சூட்சமாய்த் தான்போடு
நன்னயமாய் சரக்கு நாடுமே—பின்னை ௧00௭

தன்புத்தி யாற்செய்து தவித்துத் திரியாம
லென்புத்தி சத்தே யியம்பியே—நின்புத்தி
திட்டம் புடம்போட்டுத் திடமா யெடுத்தால்
பட்டபா டெல்லாம் பலிக்குங்காண்—முட்டவே க00அ

எரிப்புப்பாகம்.

எரிப்பினுட பாக மிதமாகச் சொல்லுகிறேன்
சரியா யெரித்தெடுக்கத் தான்குணமாம்—பரியாக
ஒருவிறகு தீப முற்றரண் டாம்விறகு
திருவாக் கமலாக்கினி செப்பவே—பருக்கில் க00கூ

அஞ்சுவிறகு அடைவாக்கா டாக்கினியாம்
கொஞ்சுமே வாதி குணமயிவான்—வஞ்சமென
வெரித்தாலோ மிஞ்சி யின்பரசம் போகும்
வருத்தாற் கறுத்து வளமில்லை—சரித்து க0க0

மிஞ்சின தீபாகில் வெறும்பானை யாயிருக்கும்
கொஞ்சமது வானல் குறையாது—வஞ்ச
யிரதமது சாகாது ஏத்தகுப்பி தானிருக்கும்
சிரதமே ஒன்றுஞ் சிறப்பில்லை—வாதம் க0கக

தெரியுமெனச் சொல்லித் தேம்பித் திரிவோரும்
பரிசாகப் பண்ணிப் பதைப்போரும்—சிரியவனாய்
நீத்தாடல் தானே நேசமாய் கைபாகம்
மிக்காகச் செய்தால் விளையுமே—மெய்க்கவே க0கஉ

உருக்கு குகை செய்வகை.

வாதி யறிந்து வகையாகச் செய்தாக்கால்
பேதிக்குஞ் சிந்தூரம் பிலப்படுங்காண்—சேதிதனை
நவலோக சத்து நலமாக வேயுருக்க
பிலமாய்க் குகைவகைகள் பிரபலமாய்—நலமாக க0கங.

சொல்லுகிறேன் கேளு சொற்பெரிய மூசைதனை
வெல்லவே சொல்வேன் விருப்பமாய்—நல்லாய் [ன்
களிப்பொறுக்குப்பத்து காரணமாய்க்கொல்லன்கிட்ட
தளிப்பப் பலம்பத்து தாக்கியே—வளியாக கூ0கச

கழுதைலத்தி ரண்டு காரணமாய் வெண்கல்லும
பழுதாய்ப் பலம்ரண்டு பாத்துமே—வாழுவாதே
சிலேசுட்ட சாம்பல் சிராய் பலம்ரண்டு
வாலைக் கடுக்காய் வகையாக—காலத்தில் ச0கரு

சயாழமிட்டு விட்டரைத்து கட்டவே மூசை
தயாளி நிழலுணத்தித் தான்பாரு—வியாழமா
யிட்டுருக்கச் சத்து இன்பமா யுருகுமென
பட்டுமே நல்ல பதமிதுகாண்—கட்டும் கூ0கசு

உபரசங்க ளெல்லா முருகுமே மூசைதனில்
அவசரத்தில் செய்து அலையாதே—வசமாய்
ஒன்றைவிட் டொன்று வுறுதியாய்ச் செய்து
யென்றைக்குநின் றலைந்து மேங்காதே—நின்றே கூ0கஎ

வுருக்குமுகம் பாரு வுருக்கினத்தைத் தானெடுத்துப்
பெருக்கவே கீழே பிலமாக—இருக்க
எடுக்கபிலே கோலாடு இன்பமா யொன்றாக
திடுக்கிட் டெடுத்தூது செயமாகும்—அடுத்து கூ0கஅ

ஈரத்தி லூத்தாதே யினியவே ஆறி
பாரமா கவெடுக்கப் பக்குவமாய—கோரமாய்
உடைத்து அரைத்து வுண்மையாய்த் தானுருக்கு
படைத்தமணி யாகிப் பலிக்கும்—திடத்தை கூ0ககூ

அயிந்துமே செய்து அறிவாகச் சத்தெடுநீ
பிரிந்து போகாது பெருமையாய்—நரிந்து

மூசைதான் சொன்னேன் மூதன்மையாய்க் கேளும்
தாளாக மூசை தனைவைத்து—வாழாக ௧௦௨௦

பஞ்சபூதக்குகை.

இருக்கவல்லோ சொன்னே னின்பரச வாதிகளே
பெருக்கபஞ்ச பூதக் குகைசொல்வேன்—இருக்கக்
கடல்நுரையு மஞ்சு கனக்கவே கற்சுன்னம்
திடமாக நீர்விட்டு திரமாக—படவரைத்து ௧௦௨௧

அரைத்துவில்லை காயவைத்து அன்பாக்கரியில்வைத்து
பரைத்துடனே யூதப் பதமாக—நிறைத்துக்
கடுஞ்சுன்ன மாகும் கடுமையாய்ச் சாரந்தான்
படுமுன் னிடைக்குப் பதமாக—இருவாக ௧௦௨௨

அரைத்துசுன்ன நீர்விட்டு அன்புடனே யூதி
தெரிபடவே யெடுத்து சிராக—பரிவுடனே
யெடுத்துமே பாதி யியல்பானக் கல்லுப்பு
அடுத்துடனே சேத்து அரைத்தாது—படுத்து ௧௦௨௩

ஊதக் கடுஞ்சுன்ன மூண்மையாய்ச் சீனம்
பாதவே யூதிடவே பதிவாக—சேதப்
படாமலே சேத்துப் பாங்காகற் சுன்னநீ
நடைவாக சேத்து அரைத்தாது—திடமாகும் ௧௦௨௪

பஞ்சபூதச் சுன்னம் பதிவாய்க் குகைபண்ணி
தஞ்சமாய் தார மதில்வைத்து—நெஞ்சே
புடம்போட நீறும் பேருய்க் குருவாகும்
நடம்போட வெல்லாம் நயக்குமே—படமாக ௧௦௨௫

பாஷாணஞ் சுருக்கிட்டுப் பத்தியாய்த் தானெடுத்து
தாழ்வான யிச்சுன்னந் தாட்டிகமாய்—கோளாக

புடமிட் டெடுக்கப் பெரியகுரு வாகும்
திடமுடனே யெல்லாஞ் சிறப்பதாம்—நடமாடி க0உசு

வாதிகளாய்க் கூடி வகையறியா மற்றுனும்
சேதிகளே கேட்டுச் செய்வோரும்—நாதியாய்
திட்டாமற் கூடித் திரிந்து நகைமூலி
நட்டுமே செய்து நடப்போரும்—முட்டவே க0உஎ

பஞ்சபூதக் குகையைப் பண்ணவே மாட்டாமல்
கெஞ்சி மணியமெனச் செய்வோரும்—மிஞ்சியே
குன்மம்வலி யெல்லாங் கெட்டுமே போகும்
வன்மமெல்லாம் போகும் வகையாக—சின்மயமாம்

உடலுயிரு போலா முண்மையாய்ச் சொல்வேன்
திடமாக மூசைகளைச் செய்து—படமாக
கட்டுஞ் சரக்கையெல்லாங் காதல்ரச வாதிகளே
பட்டுமே போகாப் பதமாகும்—முட்டாக க0உகூ

பூதக் குகையில் பொருந்தவே வைத்து
சேதப் படாமல் செயமாக—வாதமாம்
எரிக்கச் சரக்கு இதமாகத் தான்கட்டும்
பரிக்கக் கரியில் பதிவாக—இருக்கும் க0௩0

கரியில்நின் று ஆடும் காதலாய் வேதை
பரிபாக விக்குகையைப் பண்ணவே—வரிபாக
கேட்க்கு மினிதே சேதமில் லாப்பொருளும்
சீக்கிரமாய் வந்து சேருமே—பார்க்க க0௩க

சரக்குகள்வைத்தெரிக்கக்கடுஞ்சுன்னம்.

பூதக் குகைசொன்னேன் பொருந்தவே பாரு
வேதை கடுஞ்சுன்னம் விளம்பக்கேள்—வாதைப்

படாமல் கடுஞ்சுன்னம் வண்மையாய்க் கேளு
தடாதகல் லுப்பைவைத்துத் தானெரிக்க—திடமாய்
தாளகத்தைத் தானெரிநீ சாத்தவே கட்டு [பாய்
மளமளென வெடியடங்கும் வண்மையாய்—தளதளப்
உருகி மணியாட வுண்மையாய்ச் சொல்வேன்
திருப்பாய் கற்சுன்ன மிரண்டுபடி—பரிவாக ௧0௩௩

அளந்துமே போட்டு ஆண்மையாய்ப் பூநீறு
தளந்துபடி பத்துத் தான்போடு—வளமாய்க்
கறைத்துத் தெளிவிருத்து காச்சவே யுப்பாம்
பறைத்துமே பாணி பதமாகும்—நிறைத்து ௧0௩௪

விட்டுமே காச்சி விருப்பமா யுப்பாகும்
செட்டுபடச் சரக்கு செயமாக—பட்டு
விடுக்கவே தீயி லின்பமாய்த் தானே
குடுகுடென ஓடாது காரியமாம்—படுகுமே ௧0௩௫

மடிக்கும் சரக்கு வண்மையாய்க் கேளு
படியா யிருக்கும் பதமாய்—நொடியாக
ஓடாது வேதைமுகம் ஒத்துமே நிற்கும்
பாடாகப் போகாப் பலனாகும்—ஏடாகும் ௧0௩௬

பஞ்சநீர்.

இப்படியே செய்து இதமாய் முடித்துநீ
முப்படியே வேதை முடிவுமாம்—தப்படிய
அஞ்சுநீர் சொல்வேன் அடைவாக வெண்கருவும்
கொஞ்ச மூலப்பாலும் கொள்கைபாய்—மிஞ்சுமே
புகைநீரு மாகும் பேர்பெரிய சுண்ணம்பு
வகையான நீராகும் வண்மைகேள்—தகையாக

வெளுமிச்சம் பழமாகு மின்பமா யஞ்சுநீர்
பலுகவே விட்டனாக்கப் பாக்கியமாம்—வலுவாக

சுருக்கிட் டெரிக்க சுகமாகக் கட்டும்
இருக்கி யிருக்கு மிதில்வேதை—பெருக்கவே

சொன்னசொல் தப்பாமல் சுருதியை யாராய்ந்து
பின்னே யுலாவைப் பிரியமாய்—கன்னபமாய் ௪0௩௬

பாத்துமே யெச்சரக்கும் பாகமாய்ச் சுருக்கிட்டு
சேத்துமே சுன்னமிடு சிர்பெறவே—பாத்துமே

எரிக்கக் குருவாகு மின்பமாய்ச் சரக்கும்.
பரிசிக்க வேதைமுகம் பாருமே—தெரிசிக்க ௪0௪0

பிறிந்தாலோ சாருவரும் பேதைமட வாதியரே
அறிந்தாலோ சரக்கை யடைவாக—தெரிந்துமே

சரக்கை யிருக்கும் சலதி படவாதம்
பெருக்கவே யேவ லதுகேட்கும்—உருகும் ௪0௪௧

சிந்தூரமாக.

எனவே தெரிந்து மேன்மையுடன் மாத்து
கனல்போல் சரக்குக் கருணையாய்—இனமாக

சேத்துமே சிந்தூரம் சேரவே ஆகப்
பாத்துமே யிச்சரக்குப் பகருவேன்—நேத்தியாய்

உபரச பாஷாணம் ஒக்கவே சிந்தூரம்
பவமாக வுப்புப் பதிவாக—நவமாக

காரசாரத் தோடு கனக்கவே சிந்தூரம்
பாரமா யாகப் பதிவாக—நேராக ௪0௪௯

ஆகாமல் தேளி அழகாம் சிவகெந்தி
பாகமா யப்ரோகம் பதமாக—நேராக

சிவமயம்.

விஷய அகராதி.

பாயிரம் ௧
ரசசிந்தூரம் ௨
வெடியுப்புதிராவகம் ௩
வீரச்சிந்தூரம் ௪-௨௯
ரசகற்பூர சிந்தூரம் ௬
குடவன்செம்பு ௭
அயச்செம்பு ௭-௧௦௧
அயச்செம்புக்கு அய
முருக்க ௮
துருசுக்களங்கு ௮
பேதிமாத்திரை ௯
லிங்கசிந்தூரம் ௧௦
வீராசசிந்தூரம் ௧௧-௩௭
கெந்திசுத்தி ௧௩-௨௧
கெந்தகத்தைலம் ௧௪-௯௮
ஷ்டி பலன் ௯௮
செம்பு அயம் காரீய
ம் சேர்ந்து கரிசெ
ய்து செம்பெடுக்க ௧௫
பித்தளைச்செம்பு ௧௭
பித்தளைச் செம்பொ
டு அயம்சேர்க்க ௧௯
களங்குகளுக்குச் சே
ர்க்கத்தாளகக்கட்டு ௨௦
காரீயக்கரி ௨௧
கல்லுப்புக் கட்டு ௨௧-[illegible]
சங்கத்திராவகம் ௨[illegible]
லிங்கரசபதங்கம் ௨[illegible]
கட்டுவகைதிராவகம் ௨௪
சாரக்கட்டு ௨௫
கல்லுப்புதிராவகம் ௨௬
பொன்னுக்கு மாத்
துயர ௨௬
நீத்தன்சங்கத்திராவ
கம் ௨௭
தாளகசுத்தி ௨௯
மடக்கு ரசசிந்தூரம் ௩௩
உலகவாதிகள்புற
ட்டு ௩௪-௭௩
லிங்கரச சிந்தூரம் ௩௫
லிங்கரசவேதை ௩௬
ரசிதக்களங்கு ௩௯
தங்கக்களங்கு ௪௧
வாத யோகத்திற்கு
சபாநாதர்திபாரம் ௪௩
செம்புக்களங்கு ௪௫
தங்கச் செம்பு நொ
றுக்கு வெள்ளியி
ல் கொடுக்க ௪௬

சுன்னங் கடுஞ்சுன்னம் சூட்சமா யாகும்
பன்னகமாய்ப் சயநீரில் பரிவாகும்—முன்னமே

பாகமுறையும் நூல்வந்தவிபரமும்

வாழ்த்தும்.

ஒன்றைவிட் டொன்று வுண்மையாய்ச் செய்தால்
நன்றி பலனில்லை நாடாது—பன்றி

வுழதது போலாகு முற்றரச வாதம்
எருதுசிவ மத்ததொரு யின்பமாம்—பழுதாகும்

ஊத்துவந்த தானிடத்தில் ஊதி யெடுத்திடுநீ
பாத்து யெடுக்கப் பதமாகும்—நேத்தியாம்

அந்தந்த வினத்தில் அடைவாக வைத்தெடுநீ
முந்தவே தங்கமா முக்கியமாய்—சிந்தை ௧0௫௨

தடுமாற லாகா தாட்டிகமாய்த் தான்கேட்டு
படுவாத மெல்லாம் பலனில்லை—திடமாக [யாம்

சொன்னதுபோல் வைத்தால் சொற்பெரிய வேதை
அன்னதுபோல் நின்று அலையாதே—முன்னமே

வடகிரந்தந் தன்னை வளமாகப் பாத்து
திடமாக வேசிவனுஞ் சித்தமாய்—நடமாடி

தமிழால் பிரித்து சத்தியமாய்ச் சொன்னார்
மகனார் பார்பதிக்கிக் காட்டினார்—திடமாக ௧0௫௪

நந்திபக்கல் கேட்டு நலமான தன்மந்ரி
சிந்தையுடனே சொன்னேன் தீர்க்கமது—முந்தவே

அகத்தியருங் கேட்டு ஆதியா பூகிமுனி
தகத்துடனே சொன்னார்கள் தண்மையாம்—இகத்தில்

வாழ்ந்து இருப்பீர் வகையான வாதவுலா
சேந்துமே பாரு சிவமருள்வீர்—நீந்து

வாழி செப்பறிய நந்தியுமே
தன்மந்ரி தாங்கவனும்—கவனும் க0௫௬
ரியும் வாழி ஆதி புலத்தியரும்
னியும் வாழி விரும்பியே—பகபாச
த்தியரும் வாழி அருள்பெறுகும் பேர்வாழி
—த்துடனே வாழி கருணைகலைவாழி—மிகப்பெருகும்
யூகிமுனி வாழி யுற்றதொரு நூறுதி
பாதியாய்த் தேரையர் பதிவாழி—தோழர்
உலகத்தோர் வாழி யுண்மை ரசவாதி
கலகப் படாமல் கருணையாய்—பலகற்றோர் க0௫அ
வாழிமகா செல்வம் வாழி யுலாவாழி
பாரித் துலகத்தில் பார்வையாய்—வாழி
எல்லாரும் வாழி யேழை ரசவாதி
சொல்லால் பெரியோர் துதிவாழி—எல்லாம்
ஆயிரமும் வாழி ஆதிபதம் பெற்றோர்கள்
பாயிரமு மெல்லாப் பதம்வாழி—யோயா
ரசம்வாழி நவின்ற கல்லுப்பு வாழி
வசமாக வாழி வலுமையாம்—நலமாக க0௬0
துரிசுதான் வாழி துடியான திராவகமும்
பரிசுதான் வாழி பதமாக—பெரிய
தங்கமென்றும் வாழி தாம்பூரந் தான்வாழி
யுங்கள்குல நாக மெனவாழி—எங்கும் க0௬க
வடிவாக வாழி வலுமைபெற வெல்லோரும்
முடிவாக வாழி முடிந்து. க0௬௨

யூகிமுனி வாதவைத்திய உலா—க000
முற்றிற்று.

ச் சினம் விருப்பமாய்ச் சேர்ந்தால்
துசிவக்கும் பாகமாம்—துடியாக ௧0௪௪
ச் சிவக்கும் செயவேதை யாகும்
மாய் லோகம் பழுக்குமே—இப்புவியில்
தி யறிய வகைசொன்னேன் புத்தி
சதி யறிந்தால் செயமாகும்—நீதியாய் ௧0௪௫
சேர்த்து முடித்து செயமா யிருந்துநீ
பாத்துக் குப்பியதனைப் பதிவாக்கு—நேத்தியாய்
வர்ணமின்னங் கேளு வகையான கல்லுப்பு
தன்னுடனே நாகமுடன் தங்கமாம்—பின்னே ௧0௪௬
இரும்பு கெவுரி யினிய நிமிளையுடன்
அரும்பான சூதம் அதில்வர்ணம்—திரும்பாது
கெவுரியுட னெல்லாங் கெடியான வர்ணயினம்
தபிரியமாய்ச் செய்தால் தனுவாகும்—பவுரிகமாம்
செம்பு பழுக்குஞ் செப்பமாய் ரசவாதம்
தெம்பாக வந்து செயப்படுங்காண்—நம்பாகேள்
சேத்தால் செயமாம் செயமான தங்கமாம்
பரத்துமே செய்து பலனறிநீ—நேத்தியாம் ௧0௪௮

நீத்தினத்திற்காதிசரக்குகள்.

நீத்தனத்துக் காதி நேரவே சொல்லுகிறேன்
பாத்துப் புழுகு பதிவீரம்—சேர்த்தால்
பச்சைகற் பூரம் பதிவாங் குருவண்டு
இச்சையுடன் சூட னின்பமாம்—தச்செயலாய் ௧0௪௯
கீத்துவந்த தானிடத்தில் நேராகச் சேத்தால்
பாத்துப் பொருமி பதமாகும்—நேத்தியாய்